# எல்லை தாண்டா அகதிகள்

மாத்தளை சோமு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவல்


44, 3ம் மாடி
மத்திய கூட்டுச்
சந்தைதொகுதி,
கொழும்பு-11.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லை தாண்டா அகதிகள்

(நாவல்)

S C
10537

மாத்தளை சோமு

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

தமிழ்க்குரல் பதிப்பகம்
(சிட்னி – சென்னை – கொழும்பு)
26, தஞ்சாவூர் குளத் தெரு,
சின்னக்கடைவீதி,
திருச்சி – 620 002.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லை தாண்டா அகதிகள்

© மாத்தளை சோமு
(உரிமை – பதிவு)

முதற்பதிப்பு – 1994, டிசம்பர்.

இது ஒரு தமிழ்க்குரல் வெளியீடு.

தயாரிப்பு : வே. கருணாநிதி

இலங்கையில் வெளியீடும் விற்பனை உரிமையும் :
குறிஞ்சி வெளியீடு
129/25, ஜெம்பட்டா வீதி,
கொட்டாஞ்சேனை,
கொழும்பு – 13.

விலை. 40 /-

ஓவியம் : ஜீவா

அச்சும் அமைப்பும் :
இளவழகன் பதிப்பகம்
4, இரண்டாவது தெரு, ஆண்டவர் நகர்,
கோடம்பாக்கம், சென்னை – 600 024.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BIBLIOGRAPHICAL DATA



| | | |
|---|---|---|
| Title of the book | : | *Ellai Thanda Agathigal* |
| Language | : | Tamil |
| Written by | : | *Mathalai Somu* |
| Copyright of | : | Author |
| Published by | : | *Tamil Kural Pathipakkam*<br>Tiruchi - 3. |
| First Edition | : | *December, 1994* |
| Types used | : | 10 point |
| Number of Pages | : | 208 |
| Number of Copies | : | 1200 |
| Printed at | : | Kannappa Art Printers,<br>Madras - 5. |
| Wrapper desinged by | : | Jeeva |
| Subject | : | *Noval* |
| Price | : | *Rs. 40.00 (India)* |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாத்தளை சோமுவின் இதர படைப்புகள்

1. நமக்கென்றொரு பூமி
   – சிறுகதைத் தொகுதி, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.

2. அவன் ஒருவனல்ல
   – சிறுகதைத் தொகுதி, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.


3. இலங்கை நாட்டுத் தெனாலிராமன் கதைகள்
   – மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.

4. அந்த உலகத்தில் இந்த மனிதர்கள்
   – இலங்கை சாகித்திய விருது பெற்ற நாவல்.
   தமிழ்க் குரல் பதிப்பகம், திருச்சி.

5. அவர்களின் தேசம்...
   – நாவல், தமிழ்க் குரல் பதிப்பகம், திருச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எனது இலக்கிய முயற்சிகளின்
முழுமையைப் பார்ப்பதற்குள்
பிரிந்து போய்விட்ட
தாய் தந்தையருக்கு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர்களின் பார்வையில்...

*(ஏனைய நாவல் பற்றிய கருத்துக்கள்)*

'அந்த உலகத்தில் இந்த மனிதர்கள்' என்ற நாவலைப் படித்தது எனக்கு ஓர் இனிமையான அனுபவம். இலங்கையில் பொருளாதாரத்தின் அடிமட்டத்தில் உள்ளவர்களின் வாழ்க்கையின் ஒரு பகுதியை யதார்த்தமாக வடித்துள்ளார். அவர்களின் அன்றாட வாழ்வு, அதிலுள்ள துயர்கள், துயர்களை மறக்க அவர்கள் ஆடுகின்ற விளையாட்டுக்கள், பின்னர் வாழ்க்கை அவர்களை விழுங்கிவிடும் முறை யாவும் இங்கு அப்பட்டமாக வருணிக்கப்படுகின்றன. கதைச் சுவையை அதிகரிப்பதற்காக அதில் ஒரு நாடகத் தன்மையைக் கற்பனையாகத் தோற்றுவிக்காமல் வாழ்க்கையின் நடப்புக்களையே சத்தியமாக எழுதி, அதிலுள்ள இயற்கையான நாடகங்களை நாமாகக் காண விடுகிறார் சோமு.

பாத்திரங்களிடையே நல்லவை எண்ணல், பொதுமை, மனம், மனிதாபிமானம் இவையே முக்கிய பண்புகளாக இருக்கின்றன. இந்தப் பொருளாதாரப் போராட்டத்தில் முதலாளி கூட நல்லவனாக இருக்கிறான். படிப்பவர் மனதில் துயர் தோய்ந்த, ஆனால் வெறுப்பைத் தோற்றுவிக்காத சம்பவங்களைப் பதியவிடும் சரளமான எழுத்து.

நல்ல இயற்கையான முடிவு. கதை நயத்திற்காக அல்லாமல் வாழ்க்கையின் இயற்கைப் போக்கைச் சுட்டிக்காட்டி வாசகனை ஒரு சோகத்துடன் பெருமூச்சு விடவைக்கிற முடிவு.

கதையில் எழுத்தாளரின் சிந்தனைகளில் ஒரு அப்பாவித்தனம் தெரிவது போலத் தோன்றினாலும், இறுதியில் புத்திசாலியான வாசகனைப் பொருளாதாரத்தையும், அரசியலையும், ஆன்மீகத்தையும் சிந்திக்க வைக்கின்ற அரசியல் இது.

21.11.1994

**Professor R. Karthigesu** Ph.D.,
Chairman Film & T.V. Section
Communication Programme,
University Sains Malaysia,
1/800, Penang, Malaysia.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அந்த உலகத்தில் இந்த மனிதர்கள்' என்ற தங்களின் நாவலைப் படித்தேன். கலுகங்கை வட்டாரத்தில் மாணிக்கம் தோண்டி எடுக்கப்படுவதை தங்களது நாவல் மூலம்தான் அறிந்தேன். இது அருமையான உயிரோட்டமுள்ள கதை. நொண்டி முத்துவை என்னால் மறக்க முடியவில்லை. முடிவில் கண்ணீர் விட்டுக் கதறினேன்.

தங்களது அடுத்த வெளியீடான 'எல்லை தாண்டா அகதிகள்', 'அவள் வாழத்தான் போகிறாள்' – வெற்றிபெற இறைவனை வேண்டுகிறேன்.

23.12.1994

– எஸ். சௌந்தர பாண்டியன்
ஆட்டோ டிரைவர்,
29, முனியப்ப செட்டித் தெரு,
பெரம்பூர், சென்னை.

(சிறுகதைகள் பற்றிய கருத்து)

'ஒரு கேமராவின் மூலம் பார்ப்பது போல் அந்த ஜன்னல் காட்சிகள் அழகாக இருந்தன' என்று ஒரு கதையில் மாத்தளை சோமு எழுதுகிறார். அத்தகைய ஜன்னல் காட்சிகளை – வாழ்க்கைக் கூறுகளை – உயிரோவியங்களை – மெய்ம்மை குன்றாத வகையில் தீட்டிக் காட்டுகின்றார்.

மாத்தளை சோமுவின் 'நாய்கள் மனிதராவதில்லை', 'லயத்துப்பயல்' என்னும் இரு கதைகளிலும் தோட்டத்துரைமார்களின் மனோபாவம், செயல் ஆகியவற்றின் மூலம் வர்க்க முரண்பாடுகளும் அவற்றினடியாக எழும் கருத்தோட்டங்களும், பெறுமதிகளும், உணர்வுகளும் நுண்ணயத்துடன் தீட்டப்பட்டுள்ளன.

'தோட்டக் காட்டினிலே' என்ற சிறுகதைத் தொகுதியின்
முன்னுரையில் பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மலையகத் தமிழிலக்கியமும் மாத்தளை சோமுவின் இந்த நாவலும்

ஈழத்து இலக்கியம் அனைத்துத் தமிழிலக்கியத்தினதும் ஒரு முக்கிய கூறு எனில், அந்த முக்கியத் தொகுதியினுள், மலையகத்து மக்கள் எனக் குறிக்கப்படும் பெருந்தோட்டப் பொருளாதார முறைமையையும் அதனைச் சார்ந்தவையையும் உள்ளடக்கி நிற்கும் இந்திய வம்சாவழித் தமிழரின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் "மலையக இலக்கியம்" எனப்படும் அலகு முக்கியமான ஓர் இடத்தைப் பெறுகின்றது. வாழ்க்கை முறை, சமூக பொருளாதாரப் பிரச்சினைகளின் தன்மை ஆகியனவற்றில், மலையகத் தமிழருக்கும் இலங்கையின் பாரம்பரிய தமிழருக்குமிடையே முக்கியமான வேறுபாடுகள் காணப்படுவது உண்மை. இவை காரணமாக இம்மக்கள் எதிர்நோக்கும் சவால்களும், அவற்றின் இலக்கிய வெளிப்பாடுகளும், இலங்கையின் மற்றைய தமிழ் வாழ்க்கை முறைகளிலிருந்து வேறுபடுவனவாகவே உள்ளன.

மலையகத் தமிழ் மக்களை எதிர்நோக்கும் பிரச்சினைகள் மிக உன்னிப்பாக நோக்கப்படல் வேண்டும். சர்வதேசிய முதலாளித்துவத்தின் அமைப்பொன்றினுள், அந்த அமைப்பின் சுரண்டல் முறைகளுக்கு இயைந்த முறையில் ஒதுக்கு நிலையில் வைக்கப்பட்டிருந்த ஒரு புலம் பெயர் கூட்டமே இந்தப் பெருந்தோட்டத் துறைத் தொழிலாள மக்கள். தென்னிந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட இவர்கள் தம்மிடையே உள்ள பல வேறுபாடுகளிடையேயும் "தமிழர்" என்ற மொழிப் பொதுமை கொண்டு சுட்டப்பட்டனர்.

இவர்கள் ஒரே நேரத்தில் உலக முதலாளித்துவத்தின் கொடூரமான பொருளாதார ஒடுக்கு முறைகளுக்கும் அந்த முதலாளித்துவம் அவர்கள் மீது திணித்த சமூக – பண்பாட்டு ஒதுக்கு முறை காரணமாகவும், சிங்கள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன ாத வளர்ச்சிப் போக்கில் காணப்பட்ட பண்புகள் காரணமாகவும் ஏற்பட்ட அரசியல் ஒடுக்கு முறைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டிய நிலையிலிருந்தனர்.

அந்தப் பொருளாதார ஒடுக்குமுறை அவர்களை நிரந்தரமான குறைவூதியக்காரர்களாக "லயங்களில்" (பெருந்தோட்டத்துத் தமிழ்த் தொழிலாளர் வசிப்பதற்கென நிறுவப்பட்ட சிறிய வதிவிடங்களின் வரிசை (Line) லயம் எனப்பட்டது) முடக்கியது. தாம் வாழும் நாட்டின் பொதுவான சமூக – பொருளாதார வாழ்க்கை மட்டத்தோடு இயைந்து கொள்வதற்கு இவர்களுக்கு வசதிகள் மறுக்கப்பட்டன.

இந்தச் சமூக – பொருளாதார ஒதுக்கற்பாட்டுக்கு மேலாக அவர்கள் இரண்டு வகையான அரசியல் ஒடுக்கு முறைகளுக்கு ஆளாயினர். முதலில் இந்நாட்டினைச் சாராத "அந்நியர்" என்று ஒதுக்கப் பெற்று, அரசியல் உரிமைகள் எதுவுமற்றவர்களாக வாழ்ந்தனர். இந்த அரசியல் நிலைமை அவர்களிடையே ஒரு குறிப்பிட்ட முறைமையான "தொழிற்சங்க" வளர்ச்சி முறைமைக்கும் அதன் மேலாண்மைக்கும் இடம் கொடுத்தன. கால அடிப்படையில் நோக்கும் பொழுது இந்த ஒடுக்கு முறையே முந்தியதாகும். இந்த ஒடுக்கு முறை மேலோங்கி நின்ற காலகட்டத்தில் இவர்களின் "மொழிக்குழும" அமிசம் முக்கியப்படுத்தப்படவில்லை. அதாவது இவர்களின் அரசியல் ஒடுக்குமுறைக்கெதிராக இலங்கையின் பாரம்பரியத் தமிழர்கள் சிரத்தை காட்டாத நிலையொன்றிருந்தது. பின்னர் காலம் செல்லச் செல்ல, குறிப்பாக 1948 முதல் இவர்கள் "தமிழர்கள்" என்கின்ற வகையிலும் அடக்கு முறைகளை எதிர்நோக்கத் தொடங்குகின்றனர்.

பொருளாதார ஒடுக்குமுறை பிரதானமாக பெருந்தோட்டத் தொழிலாளரையே பாதிக்க, அரசியல் அடக்குமுறையானது பெருந்தோட்டத் தொழிலாளரையும், பெருந்தோட்டப் பிரதேசங்கள் சார்ந்த நகரங்களைச் சேர்ந்த இந்திய வமிசாவழித் தமிழரையும் (இவர்கள் பெரும்பாலும் வணிகர்களாயிருந்தனர்) பாதித்தது.

இதனால் இவர்கள் இருநிலைப்பட்ட சமூகப் பிரச்னைகளைக் கொண்டிருக்க வேண்டிய நிலையேற்பட்டது. அதாவது ஒரு மட்டத்தில் பொருளாதார அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட ஒரு குழுமம், இன்னொரு மட்டத்தில் ஒரு குறிப்பிட்ட மொழிப் பண்பாட்டினைச் சேர்ந்த ஒரு குழுமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக, இரண்டு ஒடுக்கு முறைகளுக்கு ஆட்படுத்தப்பட்டனர். ஆனால் இதிலுள்ள சோகம் என்னவெனில் மொழிநிலை ஒடுக்கு முறையைப் பொறுத்த வரையில், இலங்கையின் பொதுவான தமிழின உணர்ச்சி வளர்ச்சியின் அரசியல் வரலாற்றினுள் இவர்களுடைய நிலை அதிகம் துன்புறுத்தப் படவில்லை. பெருந்தோட்டங்களிலிருந்து வெளியேறி இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்குச் செல்லத் தொடங்கியதன் பின்னரே அந்தப் பிரக்ஞை அரசியல் யதார்த்தமாகிற்று.

இவ்வாறாக இந்த மலையகத் தமிழர், தொழிலாளர் என்ற வகையிலும் தமிழர் என்ற வகையிலும் ஒடுக்கு முறைகளுக்கு ஆட்படுத்தப்பட்டனர்.

இந்த அமிசம் உக்கிரமான வளர்ச்சியைப் பெற்றுக் கொண்டு செல்லும் அதே வேளையில், இன்னுமொரு தவிர்க்க முடியாத உறவும் ஏற்பட்டது. அதுதான் பெருந்தோட்டத் தொழிலாளருக்கும் அவர்களுக்கு அயலிலே இருந்த சிங்களக் கிராமங்களுக்கும் ஏற்பட்ட உறவாகும். இங்கும் ஒரு மட்டத்தில் அரசியற் குரோத உணர்வும், இன்னொரு மட்டத்தில் அடிநிலை வர்க்க இணைவும் காணப்பட்டன. இவை குறிப்பாக 1960 களில் படிப்படியாக வளரத் தொடங்கின.

மலையகத்தின் இந்த "வளர்ச்சிக் கட்டத்தில்" ஏற்பட்ட சமூக – பொருளாதார முரண்பாடுகளின் மனிதாயத வெளிப்பாடுகளை மாத்தளை சோமுவின் இந்த நாவல் சித்திரிக்கின்றது.

1958 முதல் இலங்கையில் ஏற்பட்ட இனக் கலவரங்கள் தமிழர்களை அகதிகளாக்கின. இது இரண்டு படி நிலைகளில் நடந்தேறியது. முதலிற் சிங்களப் பெரும்பான்மைப் பிரதேசங்களில் வாழ்ந்த தமிழ் மக்களை அவர்களின் வாழிடங்களிலிருந்து அகற்றி இலங்கையின் வட – கிழக்குப் பிரதேசத்திற்கு செல்லுமாறு நிர்ப்பந்தித்தது. அடுத்து வடக்குக் கிழக்குப் பிரதேசமும் தாக்குதலுக்குட்பட, தமிழர்கள் பெருந்தொகையாகப் பிறநாடுகளுக்குச் செல்லத் தொடங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது "பெயர்ச்சி" நடந்த பொழுது இலங்கையின் பாரம்பரியத் தமிழர் தங்கள் பாரம்பரிய வாழிடங்களுக்கு (வடக்கு – கிழக்குக்கு) செல்ல, இந்திய வமிசாவழித் தமிழரோ எல்லோரும் தங்களது பாரம்பரிய வாழிடமான தமிழகத்துக்குச் செல்ல முடியாதும், அதே வேளை இலங்கையின் வடக்கு – கிழக்குக்குச் செல்ல முடியாதும் தத்தளித்தனர். இந்திய வமிசாவழியினர் தமிழகத்துக்கு திருப்பியனுப்பப்பட்ட வரலாறும், அது ஏற்படுத்திய துன்பங்களும் தனியானவை.

இனக்கலவரம் தோன்றிய பொழுது இந்திய வமிசாவழியினரின் நிலை சிக்கல் நிறைந்ததாகவே இருந்தது. பெருந்தோட்டங்களுள் "உறைநிலை வாழ்க்கை முறையில்" வாழுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள், இருந்த இடங்கள் அழிக்கப் பெற்று அகதிகளாக்கப்பட்ட பொழுதும் தாம் அதுவரை வாழ்ந்த வாழிட எல்லைகளுக்கு அப்பால் செல்ல முடியவில்லை. "எல்லை தாண்டா அகதிகள்" என்ற தலைப்பின் அரசியல் உட்பொருள் இதுவேயாகும்.

✂ ✂ ✂ ✂

இந்த மலையக மக்களின் வாழ்க்கை முறைகள், பிரச்சனைகளை மையமாகக் கொண்டு எழும்பிய இலக்கியங்கள் ஒரு தனிப்பட்ட இலக்கிய அலகாகக் கொள்ளப்படும் ஒரு மரபு வளர்ந்து வந்துள்ளது. இந்தத் தனித்துவம், அரசியல், சமூக – பொருளாதார ரீதியாக இந்தக் குழுமம் இலங்கையின் பாரம்பரியத் தமிழர்களுடன் இணையாதும், இணைய விடாதும் வைக்கப்பட்டிருந்த ஒரு வரலாற்றின் விளைவு ஆகும்.

பெருந்தோட்டத் தொழிலாளர் என்ற நிலையில் இவர்கள் குழுமமாக வாழ்ந்து வந்த நிலைமையிலிருந்து, "மலையகத்தவர்" என்று இனங் காணப்படும் இன்றைய நிலைவரை இக்குழுமத்தின் சுய பிரக்ஞையை உருவாக்குவதில், இலக்கியம் முக்கிய பங்கு வகித்துள்ளது. இந்த இலக்கிய வரலாற்றுக்கான தரவுகள் நிறைய உள்ளனவெனினும், இவை வரன்முறையான இலக்கிய வரலாறாக இன்னும் எழுதப்படவில்லை. ஆயினும் மலையகத்து ஆக்க இலக்கியப் பாரம்பரியம், ஈழத்து இலக்கியவாதத்தினை ஆழ, அகலப்படுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10537



மலையக மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளையும், ஆக்க இலக்கியங்களாக இருநிலைப்பட்டவர்கள் வடித்துத் தந்துள்ளனர். ஒரு பிரிவினர், மலையகத்தோடு இறுக்கமான தொடர்புகள், உறவுகள் கொண்டிருந்த மலையகம் சாராத எழுத்தாளர்கள். மறுபிரிவினர், மலையகத்தில் தோன்றி, அந்த வாழ்க்கை முறையினூடாகவே மேற்கிளம்பிய எழுத்தாளர்கள். முதலாவதற்கு உதாரணமாக நந்தி, பொன்சேகரன், புலோலியூர் சதாசிவம் போன்றோரை உதாரணமாகக் கொண்டால், என். எஸ். எம். இராமையா, தெளிவத்தை ஜோசப், சி. வி. வேலுப்பிள்ளை, ஏ. வி. பி. கோமஸ், சாரல்நாடன், அந்தனி ஜீவா போன்றோர் மலையகத்து மண்ணின் மைந்தர்களாவர். இந்தப் பட்டியலில் மாத்தளை சோமு முக்கியமான ஒருவராவார்.

மாத்தளை சோமு ஏற்கனவே நாடறிந்த புனைகதை எழுத்தாளராவா அவரது படைப்புத்தான் இந்த 'எல்லை தாண்டா அகதிகள்'.

✂ ✂ ✂ ✂

படைப்பிலக்கியத்துக்கான முன்னுரை, அப்படைப்பினை வாசிப்பதற்கான பின்புலத்தை தரவேண்டுமேயன்றி, வாசிப்பதற்கு முன்னரே விமர்சனத்தைத் தருவதாக அமைதல் பொருத்தமற்றது என்பது எனது கருத்து. விமர்சனம் பின்னுரையாகவே அமைய வேண்டும். அந்த வரையறைக்குள் நின்று கொண்டே இந்த அறிமுகத்தைச் செய்ய வேண்டியுள்ளது.

1983 இல் இலங்கை மாத்தளைப் பிரதேசத்திலுள்ள மக்குவாரித் தோட்டத்தில், இனக்கலவரத்தால் ஏற்பட்ட நிலைகுலைவை இந்த நாவல் சித்தரிக்கின்றது.

சிங்காரம் என்ற செயல் திறனுடைய ஒரு தோட்டத்து இளைஞனதும், அவனது மனைவியான மாலினி என்ற சிங்களப் பெண்ணினதும் "பாடு"களினூடாக, தோட்டத் தொழிலாள மக்கள் இனக்கலவரத்தினாற் பாதிக்கப்பட்ட முறைமை இங்கு எடுத்துக் கூறப்படுகிறது. இனக்கலவரம் தாம்பத்திய உறவிறுக்கத்தில் ஏற்படுத்தக்கூடிய விரிசல்களை ஒருபுறமாகவும், இனக்கலவரம் ஏற்படுத்தும் இன்னல்கள் சகலமட்டத் தமிழர்களையும் பாதிக்கின்ற முறைமை இன்னொரு புறமாகவும் நாவலில் இடம் பெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமகால மலையகம் என்பது தோட்டத் தொழிலாளர் மாத்திரமன்று, மலையக நகரங்களின் இந்தியத் தமிழ் வணிகர்கள் மற்றும் துறைகளிலுள்ள இந்திய வமிசாவழியினரையும் உள்ளடக்கும் எனும் உண்மை நன்கு புலனாகின்றது. "மலையகம்" என்ற ஒருமை நோக்குக்குள்ளே காணப்படும் வர்க்க வேறுபாடுகள் நன்கு புலனாகின்றன.

அகதி வாழ்க்கையின் தன்மைகள், அகதி முகாமின் நடைமுறைகளை துல்லியமாக்குகின்றன.

இந்த நாவல் "கதையோட்டத்தையே" பிரதான அமிசமாகக் கொண்டுள்ளது. கதையோட்டம், சம்பவத் தொடரை எடுத்துரைப்பதாகவும், மீள் நினைவுக் காட்சிகளாகவும் அமைந்துள்ளது. மீள்நினைவுக் காட்சிகள் நாவலின் "ரஸச்" சமநிலையைப் பேணுவதற்குப் பயன்படுத்தப் பட்டுள்ளதென்பது நன்கு தெரிகிறது.

ஒரு சிறு கதைத் திருப்பம் இந்த நாவலின் அச்சாணியாக அமைகிறது.

பாத்திர வார்ப்பு, மலையகத்தின் சமகாலச் சமூக அசைவியக்க மாதிரியங்களை எமக்குக் காட்டுகிறது. பிச்சைக்கிழவன், சின்னாயி, எழுத்தாளர் பாலா மறக்க முடியாதவர்களாகி விடுகின்றனர்.

மாலினியுடனான தனது உறவின் இறுக்கங்கள் பற்றிய சிங்காரத்தின் சிந்தனைகள், மாலினி பால் எமது அனுதாபத்தை அதிகரிக்கவே செய்கின்றன.

இனத்துவத்தின் உணர்வேயில்லாது போகுமளவுக்கு ஒடுக்கப்பட்டு வாழ்ந்த மக்கள் இனத்துவத்தின் பேராலும் ஒடுக்கப்படும் பொழுது, அவர்கள் செயல்முறைகளிலும், சிந்தனையோட்டத்திலும் ஏற்படும் "உணர்வு" மாற்றங்கள் நாவலில் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளன. அந்த அளவில் இந்த நாவல் மிக முக்கியமான ஒரு சமூக வரலாற்று ஆவணமாகியுள்ளது.

2/7, 58, 37–வது ஒழுங்கை
கொழும்பு – 6.
27.12.1994.

கார்த்திகேசு சிவத்தம்பி
பேராசிரியர் – தலைவர்,
நுண்கலைத்துறை,
யாழ்ப்பாண பல்கலைக் கழகம்,
யாழ்ப்பாணம், இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

இலங்கை இனப் பிரச்சனை உங்களுக்கு நன்கு தெரியும் என்று நினைக்கிறேன். ஆயினும் இந்நாவலோடு அப்பிரச்சனை சம்பந்தப் பட்டிருப்பதனால் ஒரு சில வார்த்தைகள் மாத்திரம் சொல்லி வைக்க விரும்புகிறேன். அது கூட இந்நாவலைப் படிக்கும் முன்பு படிக்க வேண்டிய அவசியம் இருப்பதனால்...

இலங்கை என்ற ஸ்ரீலங்கா 1948ல் சுதந்திரம் அடைந்தது. 1949ல் இரண்டு தலைமுறைகளாக தேயிலை, ரப்பர், கொக்கோ, மிளகு, கோப்பி தோட்டங்களில் உழைத்து – பிறந்து – வாழ்ந்த இந்திய வம்சாவழித் தமிழர்கள் சுமார் 10 லட்சம் பேரை இரவோடு இரவாக குடியுரிமை அற்றவர்களாக்கிய கொடூர சட்டத்தை அப்போதைய சிங்கள அரசு அமுலாக்கியது. அதன் விளைவாக இன்றும் அவர்களின் சோகக் கதை ஒலிக்கின்றது. நீலக் கடலைப் பார்த்திராத, பிறந்த நாட்டிலேயே உரிமை மறுக்கப்பட்ட இந்த மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி உலக அரங்கிற்கு எடுத்துச் செல்லப்படவில்லை. ஏன் சத்தம் போட்டுக்கூட சொல்லவில்லை!

மேற்படி சட்டம் அமுலாக்கப்பட்ட பின்னர் இலங்கையில் இருந்த தமிழர்கள் இலங்கைத் தமிழர்கள் என்றும் இந்தியத் தமிழர்கள் என்றும் பிரிக்கப்பட்டார்கள். இதில் சிங்கள அரசியல்வாதிகள் வெற்றியும் கண்டார்கள். தமிழ்த் தலைவர்கள் சிலர் பதவி சுகத்திற்காக இதற்கு ஆதரவாக நின்றார்கள். (எஸ். ஜே. வி. செல்வநாயகம் போன்ற தலைவர்கள் இச்சட்டத்தை எதிர்த்து மலையக மக்களின் உரிமைக்காக குரல் கொடுத்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது).

1958ல் 'சிங்களம் மட்டும்' என்கிற அரச மொழிச் சட்டம் வந்தது. இதனைத் தொடர்ந்து தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மொழிக்காக அஹிம்சாவழியில் போராடினார்கள். தாக்க எதிர்த்தாக்கங்களைப் போல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள அரசுகளும் படிப்படியாக தமிழ் மக்களுக்கு எதிரான கொள்கையைக் கடைப்பிடித்தன. தமிழ்ப்பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள் அரசு ஆசியுடன் பெருகலாயின.

தமிழர்களுக்கு எதிரான முதல் இனக்கலவரம் 1958ல் நடந்தது. மேலும் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் சாத்வீக நெறியில் நடந்த போராட்டத்தினால் ஏனோ சிங்கள இன வெறியர்கள் ஆத்திரமடைந்தார்கள்?. அதனால் பிறமாகாணங்களில் வாழ்கின்ற அப்பாவித் தமிழ் மக்களை குறிப்பாக தோட்டங்களில் வாழ்கிற அப்பாவித் தமிழ் மக்களை தாக்கும் 'நாகரீகம்' புகுந்தது. இதுவே தொடர்ந்து 1977, 1981, 1983 ஆம் ஆண்டுகளில் தமிழர்களுக்கு எதிரான இனக்கலவரங்களாக வளரலாயின.

இக்கலவரங்களின் போது தமிழர்கள் உயிரோடு கொளுத்தப்பட்டார்கள். தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்பட்டார்கள். தமிழர்களின் சொத்துக்கள் பஸ்பமாக்கப்பட்டன. இக்கலவரங்களுள் 1983ம் ஆண்டு மூண்ட கலவரம் புதிய பரிமாணம் கண்டது.

நான் 1977ம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரத்தினால் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டதை நேரில் பார்த்தேன். அப்போது நான் மாத்தளை மாநகரில் உள்ள முத்துமாரியம்மன் கோயிலில் இருந்த அகதிகள் முகாமில் அகதியாக அல்ல. ஒரு தொண்டனாய் இருந்தேன். அந்தத் தொண்டன் 1983ம் ஆண்டில் அகதியாகவும் நேர்ந்தது.

இந்த இரு அகதி முகாம்களிலும் நான் கண்டதை, பார்த்ததை, அனுபவித்ததை அவை உணர்த்திய உண்மைகளை இந்நாவலில் எழுதியிருக்கிறேன். இந்நாவல் அரசியல் பேசவில்லை. ஆனால் கதாபாத்திரங்கள் பரிமாறும் அரசியலுக்கு நான் தடை விதிக்கவும் இல்லை.

வீடு, வாசல் இழந்து அகதிகளாக ஓரிடத்தில் குவிக்கப்பட்ட நிலையிலும் சாதி, மேன்மை, அந்தஸ்து, பெருமை என்கிற வெறிபிடித்து ஆடிய நபர்களை நேருக்கு நேர் பார்த்தேன்.

வெள்ளைக்காரன் காலத்தில் 'ஒன்றாய்' இருந்தவர்கள், 'ஒன்றாய்' படித்தவர்கள் - சுதந்திரம் வந்ததும் 'சண்டை' போட்டுக் கொண்டார்கள். இனப்பிரச்சனையைத் தீர்க்க இனங்களிடையே ஒற்றுமை தேவை என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர்கள் 'சத்தம்' போட்டார்கள். சில 'தலைகள்' கலப்புத் திருமணம் செய்து கொண்டால் பிரச்சனை தீரும் என்று கூட 'மருத்துவம்' கூறினார்கள்.

உண்மையில் ஒரு தமிழனும் சிங்களத்தியும் அல்லது ஒரு சிங்களவனும் தமிழச்சியும் திருமணம் செய்து கொண்டால் பிரச்சனை தீருமா?

அந்தக் கலப்புத் திருமண ஜோடி ஒன்றையும் நான் இந்த முகாமில் சந்தித்தேன். மாலினி, சிங்காரம் – நான் அவர்களுக்குச் சூட்டிய பெயர்கள்... இந்த தமிழ் – சிங்கள ஜோடியை வைத்தே இந்நாவல் எழுதப்பட்டுள்ளது. இது என் மூன்றாவது நாவல். என்னைப் பொறுத்தமட்டும் என் மனத்தினை நெடுங்காலமாக அழுத்திக் கொண்டிருந்த ஒரு சுமையை உங்கள் மத்தியில் இறக்கி வைத்த திருப்தி உண்டு.

இந்நாவல் சர்வதேச ரீதியாக இனங்களிடையே ஒற்றுமை ஏற்படுத்த உதவினால் அது என் பாக்கியமே.

இலங்கையின் இனப்பிரச்சனை உச்சக்கட்டத்தில் இருக்கிற இக்காலகட்டத்தில் நடந்து முடிந்து போன இனக்கலவரத்தை – வரலாற்று நிகழ்வாகக் காட்டுகிற இந்நாவல் இனம், மொழி, மதம் என மனிதனே போட்டுக் கொண்ட கோடுகளைக் கடந்து, நேசம் கொள்கிற மனிதாபிமானத்தை – நேசிக்கிற மனித உயிர்களை சுற்றி வருகிறது. இந்தக் கதையின் 'கரு' நாலு வரிகளில் எழுதப்படக்கூடிய ஒன்றுதான்... அதனால்தான் இந்த நாவலை மனதுக்குள் உருவகப்படுத்தி வைத்திருந்த நான் ஒரு சிறுகதைப் போட்டிக்காக – ஒரு சிறுகதையாகவும் எழுதி வெற்றியும் கண்டேன். அந்தச் சிறுகதையில், கதையைச் சொன்னேன். ஆனால் இந்நாவலில் அந்தக் கதையோடு வரலாற்று நிகழ்வுகளையும் சொன்னேன்.

இது இலங்கை நாவல் உலகில் புதிய களத்தை அறிமுகம் செய்கிறது. வழக்கமாக தமிழுக்கு புதிய களத்தை – புதிய உலகத்தை அறிமுகம் செய்ய வேண்டும் என்று விரும்புகிற எனக்கு இந்த நாவல் ஒரு நம்பிக்கை நட்சத்திரமே!

இந்நாவல் லண்டன் மாநகரில் இருந்து வெளியாகிற 'ஈழகேசரி' எனும் தமிழ்ச் செய்தி இதழில் தொடர் நாவலாக வெளிவந்து சர்வதேச தமிழ் வாசகர்களின் இதயங்களைத் தொட்டது!.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நேரத்தில், இந்நாவலைத் தொடராகப் பிரசுரித்த பிரபல பத்திரிகையாளரும், ஈழகேசரி ஆசிரியருமான திரு. ராஜகோபால் அவர்களை நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறேன். அவரின் தூண்டுதலால்தான் இந்நாவல் 'ஈழகேசரி'யில் தொடராக வந்தது.

பல்வேறு பணிகளுக்கு இடையிலும் இந்நாவலுக்கான முன்னுரை வழங்கிய யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பேராசிரியர், ஈழத்தின் தலைசிறந்த விமர்சகர் திரு. கா. சிவத்தம்பி அவர்களுக்கும், இந்நாவலுக்கு பின்னுரை வழங்கிய தமிழகத்தின் பழம்பெரும் எழுத்தாளர் திரு. வல்லிக்கண்ணன் அவர்களுக்கும், நூலுக்கான அட்டைப் பட ஓவியத்தை அழகுற வரைந்த ஓவியர் திரு. ஜீவா ஆகியோருக்கும், இதனை நூலாக்க உதவிய சென்னை இளவழகன் பதிப்பகம் வே. கருணாநிதி மற்றும் தண்டபாணி அவர்களுக்கும், இந்நாவலின் இலங்கை விற்பனை உரிமையை ஏற்றுக் கொண்ட நண்பர் திரு. மாத்தளை கார்த்திகேசு அவர்களுக்கும் எனது அன்பு கலந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். இறுதியாக எனது எழுத்துப் பணிகளுக்கு வழக்கமான ஆதரவை நல்கிவரும் தமிழ் வாசக நெஞ்சங்களுக்கு எனது அன்பான நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

மீண்டும் யாவருக்கும் நன்றி, வணக்கம்!

அன்புடன்,
மாத்தளை சோமு

திருச்சி.
30.12.1994.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது வாக்குமூலம்

### இந்த நாவலுக்கும் – சிறுகதைக்குமான

# ஒரு முன்னுரை...

வழக்கு நடக்கும் நீதிமன்றத்தில்தான் வாக்குமூலம் பரிமாறப்படும். அது ஒரு தேவைக்காக... ஆனால் இந்த சமூகத்தில் சாதாரணமாக சந்திக்கிறவர்கள் பேசும்போதுகூட வாக்குமூலங்களைப் பரிமாறிக் கொள்கின்றார்கள். இது அவர்கள் அறியாமலேயே நடக்கின்றது. வாக்குமூலங்கள் எதற்காகப் பெறப்படுகின்றன? ஒரு நிஜத்தைக் கண்டு பிடிப்பதற்காக... சிலவேளை வாக்குமூலங்கள் பொய்யாய் போவதும் உண்டு. ஆனால் மனசாட்சியை நம்புகிற எவரும் பொய் வாக்குமூலம் கொடுக்க முடியாது. அவன் நீதிபதியைச் சந்திக்கும் முன்னரே தன் நெஞ்சுக்குள் இருக்கிற நீதிபதியை சந்திக்கின்றான். நான் இந்த வாக்குமூலத்தை எவரும் கேட்காமலேயே கொடுக்கின்றேன். அதுவே ஒரு நிஜத்தை தேடும் செயல்தான். மேலும் இந்த வாக்குமூலம் கொடுப்பதற்கு காரணங்கள் உண்டு.

இன்று சமூகத்தின் எல்லாத்துறைகளிலும் பரவிக் கிடக்கிற போலி, ஏமாற்று, லஞ்சம், துரோகம் என்பன பத்திரிகைத் துறையிலும் உண்டு. இதனை உள்ளிருந்தும், வெளியிலிருந்தும் சாதிப்போர் உண்டு. பத்திரிகைத்துறை சமுதாயத்தின் கண்கள் எனச் சொல்வர். ஆனால் அந்தக் கண்களே நோயுற்றுப் போயிருக்கின்றன. இத்தகைய நிலையினால் இந்த நாவல் சம்பந்தமான உண்மை சிலரின் உரத்த குரலினால் நசுங்கிப் போய்விடும். எனவேதான் என்வசம் இந்த நாவல் சம்பந்தமாக இருக்கிற உண்மைக்கு உயிரூட்ட இந்த வாக்குமூலத்தை தருகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுதான் அந்த வாக்குமூலம்...

'எல்லை தாண்டா அகதிகள்' என்ற இந்நாவல் 1977ல் நடந்த இனக்கலவரத்தை முன்நிறுத்தி எழுத நினைத்த நாவல்... 1982ல் இந்த நாவலின் பாதி அத்தியாயங்களை எழுதினேன். 1983ல் இன்னொரு இனக்கலவரம் வந்தது. நாவலில் சிறு மாற்றங்களைச் செய்தேன். இதனிடையே வீரகேசரியில் மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் சிறுகதைப் போட்டி வைத்தது. நான் பொதுவாக போட்டிகளில் கலந்து கொள்வதில்லை. ஆனால் இந்தப் போட்டியில் கலந்து கொள்ள முயன்றேன்.

இந்த நாவலையே ஒரு சிறுகதையாக மாற்றி எழுதினேன். இது எனக்கு சுலபமான வேலை. அப்போதுகூட நாவலை எழுதி முடிக்கவில்லை. நாவல் சுமார் 20 அத்தியாயங்கள் எழுதப்பட்டிருந்தன. முழுவதும் எழுதி முடிக்காததற்கு காரணம், நாவலை எந்தப் பத்திரிகையில் பிரசுரிப்பது? பொதுவாக நாவலை இலங்கையில் பிரசுரித்த பத்திரிகைகள் மிக மிகக் குறைவு... ஆனால் சிறுகதைக்கு வாய்ப்புகள் அதிகம். இதே நேரத்தில் போட்டியில் சிறுகதை பரிசில் பெற்றது. முதல் பரிசை இன்னொரு சிறுகதையோடு பகிர்ந்தது. சிறுகதை பரிசு பெற்றதும் என்னிடம் கேட்காமலே 'கொழுந்து' என்ற சஞ்சிகையில் பிரசுரித்து விட்டார்கள். அதில் 'பரிசு பெற்ற சிறுகதை' என்று கூடப் போடவில்லை. இது ஏன் என்பதுகூட தெரியவில்லை.

'கொழுந்து' இதழில் சிறுகதை வந்ததும் அதனை கனடாவில் இருந்து வரும் தாயகம், தேடல் போன்ற இதழ்கள் மறுபிரசுரம் செய்தன. 'தேடல்' இதழில் வந்த சிறுகதை 'கணையாழி' என்ற மாத இதழில், மறுபிரசுரம் அழகாகச் செய்யப்பட்டது. சிறுகதை என்பதால் இவையெல்லாம் இலகுவாகிப் போய்விட்டது. நாவல் அப்படியல்ல...

நாவலைச் சென்ற ஆண்டில்தான் முடித்தேன். அது லண்டனில் இருந்து வரும் 'ஈழகேசரி' இதழ் தொடராக பிரசுரித்தது. இப்போதுகூட ஈழகேசரியில் வந்ததற்கும் புத்தகமாகிய நாவலுக்கும் சிறுசிறு மாறுதல்கள் இருக்கின்றன. சில பத்திகள் சுருக்கப்பட்டன; சில விரிவாக்கப்பட்டன.

இப்போது நாவல் புத்தகமாக வருகிறது. இந்த நேரத்தில் இந்த நாவல் சிறுகதையில் இருந்து பிறந்தது என்று சொல்வதற்கு சிலர் இருக்கிறார்கள். அவர்களின் குரலில் எனக்கு நம்பிக்கை இல்லை. ஆனால் நான், "நாவலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்துதான்" சிறுகதை பிறந்தது என்ற நிஜத்தை சொல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றேன்... இது எனது நிஜத்துக்கான வாக்குமூலம்.

இதனை நிரூபிக்கவே நாவலை மட்டும் பிரசுரிக்க நினைத்த நான் தற்போது அந்தச் சிறுகதையையும் பிரசுரிக்கின்றேன். ஒரே புத்தகத்தில் இது தமிழில் முதல் முயற்சி! என நம்புகின்றேன். இனி எந்தக் கூச்சலும் இங்கு செல்லாது. ஒரு வகையில் இந்த முயற்சி தமிழுக்கு புதுமையாகவும் இருக்கிறது.

இந்தப் புதுமையை ரசிக்க விரும்புகிறவர்கள் நாவலைப் படித்து விட்டு சிறுகதையைப் படிப்பதே நல்லது. சிறுகதையை முதலில் படித்துவிட்டு நாவலைப் படிப்பதற்கு நான் தடை இல்லை. ஆனால் நாவலைப் படித்துவிட்டு சிறுகதையைப் படித்தால்தான் ஒரு வரலாற்று நிகழ்வும், ஒருகதையும், ஒரு இனத்தின் போராட்டமும், ஒரு மனிதனின் போராட்டமும் தெளிவாகத் தெரியவரும்.

நாவல் ஒரு சிறிய கதையை மையமாக வைத்தே எழுதப்பட்டுள்ளது. சிறுகதையை மட்டும் படித்தால் ஒரு கதை மட்டுமே தெரியவரும். நாவலைப் படித்து, சிறுகதையைப் படித்தால் ஒருகதையோடு ஒரு இனத்தின் கதையும் தெரியவரும்.

இந்த நாவல் – நாவலுக்கு முன்னேயே சிறுகதை – வெளிவந்தது ஒரு தற்செயல் நிகழ்ச்சி. ஆனால் அதனை புத்தகவடிவில் பார்க்கும்போது அது ஒரு புதுமையின் தொடக்கம் என்பது உறுதியாகின்றது. இதற்கு என்னால் ஆன முயற்சி கைகூடியதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். அந்த நல்ல முயற்சிகளுக்கு வாசகர்கள் ஆதரவு தருவீர்கள் என நம்புகின்றேன்.

அன்புடன்,

மாத்தளை சோமு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே....

எல்லை தாண்டா அகதிகள் 23
– நாவல்

எல்லை தாண்டா அகதிகள் 189
– சிறுகதை

பின்னுரை...! 202
– திறனாய்வாளர் வல்லிக்கண்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லை தாண்டா அகதிகள்
## – நாவல்

ஒரு பெரிய குடையை விரித்து வைத்தது போன்று அதோ அந்த மாமரம், அந்த லயத்திற்குப்[1] போகிற பாதையருகே நின்று கொண்டிருந்தது. அது ஆடிமாதம். ஆடி மாதமென்றால் அதிலும் ஆடிமாதக் காற்றென்றால், ஆடாத மரமும் அசையும் என்பார்கள். ஆனால் இந்த மாமரம் அசைவதாகத் தெரியவில்லை. காற்று வீசுவதையே உணரமுடியவில்லை. காலா காலத்தில் நடப்பது ஏன் நடக்கவில்லை? எல்லாமே மாறிவிட்டதோ! உலகமே ஏன் இந்த மனிதர்களே மாறி நடக்கிறபோது, நாமும் மாறி நடந்தால் என்ன என்று இந்த காலமும் மாறி நடக்கின்றது போலும். காலம் மாறியதோ இந்த நாடு மாறியதோ தெரியவில்லை, ஆனால் இந்த லயத்தில் மட்டும் ஏதோ ஒன்று மாறி நடந்து விட்டது போல் தெரிகின்றது. அதனால் தான் போலும் இத்தனை பெரிய கூட்டம் இந்த லயத்தில்....

மேட்டில் இருப்பதால் 'மேட்டுலயம்' என அழைக்கிறார்கள். அந்த மேட்டு லயத்தின் நாலாவது காம்பராவில்[2] உள்ளேயும் வெளியேயும் ஒரு பெரிய கூட்டம் கூடியிருந்தது. உள்ளே அந்தக் காம்பராவின் நடு அறையில் அந்த லயத்திலுள்ள பெண்களும், அவர்களிடையே தங்கள், தங்கள் தாயின் சேலையைப் பிடித்துக் கொண்டு குழந்தைகளும் கால தேவனின் அழைப்புக்குக் காத்திருக்கிற கிழவிகளும், ஆசைக்கனவுகளை நெஞ்சில் தேக்கி வாழ்க்கை அழைப்புக்குக் காத்திருக்கிற இளம் பெண்களும் இருந்தார்கள். வெளியே வராந்தாவில் ஆண்களும் வாலிபர்களும் கிழவர்களும் அவர்களிடையே அப்பா, பிள்ளைகளாக இருக்கும்

1. வரிசையான வீடு 2. அறை 3. திண்ணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாண்டுகளும் இருந்தார்கள். அந்த இரு பகுதியினருக்கும் இடையே அதாவது நடு அறைக்கும் வராந்தாவுக்கும்[3] மத்தியில் அந்தக் காம்பராவைச் சேர்ந்த சுப்பனும் அவன் மனைவி வள்ளியும் இருந்தார்கள். அவர்கள் எல்லோரும் எதற்காக அங்கே கூடியிருக்கிறார்கள்? என்ன விசேடம்? அந்தக் காம்பராவில் இன்று கல்யாண வைபவமா? கல்யாண வயதில் அந்தக் காம்பராவில் எவருமே இல்லையே! பின் சடங்கு சம்பிரதாயமா? சுப்பனுக்குத் தான் பிள்ளைகள் இல்லையே! சடங்காவது சம்பிரதாயமாவது... அப்படி என்றால் என்ன நடந்திருக்கிறது அங்கே... இப்போது என்ன நடக்கிறது...! அந்த லயத்திலுள்ள அத்தனை பேரும் அங்கே கூடி விட்டார்களே ஏன் எதற்கு? ஒன்றை மட்டும் நிச்சயமாகச் சொல்லலாம். அங்கே ஏதோ ஒன்று நடக்கக் கூடாதது நடந்திருக்க வேண்டும்.... அதனால் தான் அப்படி கூடியிருக்கிறார்கள். அதைத்தான் அவர்களின் முகங்களும் படம் பிடித்தாற்போல் காட்டுகின்றன.

ஓ... மனித முகங்கள் தானே நெஞ்சங்களின் தரிசனங்கள். உள்ளே இருப்பது தானே வெளியே தெரியும்! அவர்கள் முகங்களைப் பார்க்கின்ற போது அந்த அத்தனை பேரின் முகங்களும் சொல்லி வைத்தாற் போல் ஒரு விதமான இருள் படிந்து ஒரு பயம் கவ்வியது போல் தெரிகின்றன... என்ன நடந்து விட்டது அங்கே?

கடந்த சில நாட்களாக, காற்றில் பரவி வந்த செவி வழிக் கதைகளும் தந்தியை விட வேகமாகப் போய்ச் சேர்கிற வதந்திகளும், தணிக்கையை மீறி எட்டிப் பார்க்கிற பத்திரிகை செய்திகளும் அவர்களை யோசிக்க வைத்ததோடு கலங்கவும் கவலைப் படவும் வைத்து விட்டன.

நாட்டில் எங்கோ நடக்கிற அந்த கலவர சம்பவங்களுக்காக அவர்கள் பயந்து போயிருந்தாலும், தாங்கள் இருக்கிற அந்த மாவட்டத்தில் அந்த நிமிடம் வரை, அந்த மாதிரியான ஒரு சிறு சம்பவமும் நடக்காததால் அப்படி எதுவும் இங்கே நடக்காது என்ற ஒரு குருட்டு தைரியத்தில் இதுவரை இருந்தார்கள். ஆனால் இரண்டு நாட்களுக்கு முன்னர் கண்டி நகருக்கு அப்பால் போயிருந்த இந்த சுப்பனும் வள்ளியும் சற்று முன்னர் திரும்பி வந்தபோது அவர்களின் அனுபவக் கதைகளைக் கேட்ட மாத்திரத்தில் அவர்களின் அந்தக் 'குருட்டு தைரியமே' ஆடிப் போய் விட்டது....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் காலமாக அந்த தோட்டத்தில் உழைத்து அங்கேயே தங்கள் உலகத்தை அமைத்துக் கொண்டு வாழ்கின்ற அவர்களுக்கு அந்த மாதிரியான தைரியம்தான் மிகப் பெரிய ஆயுதம்... அந்த ஆயுதமே ஒடிந்து போன பின்னர் அவர்களால் என்ன செய்ய முடியும்? யுத்த களத்தில் ஆயுதம் இழந்த வீரர்களாக இருந்தார்கள் அவர்கள்.....

சற்று முன்னர் சுப்பனும் வள்ளியும், உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு, அந்த லயத்திற்கு ஓடி வந்தார்கள். அவர்கள் வருவதற்கு முன்னர் ஏதேதோ வதந்திகளைக் கேள்விப்பட்டிருந்த அந்த லயத்தவர்கள் அவர்களைக் கண்டதும், இவர்களுக்கு எதுவும் நடக்கவில்லை, தப்பிவிட்டார்கள் என்று நினைத்தவாறு அந்தக் காம்பராவிற்குள் பரபரப்புடன் நுழைந்தார்கள். அவர்களின் மனமோ அந்த இருவரைக் கண்டதும் நிம்மதியடைந்தது. செவிகளோ அவர்கள் எப்படி தப்பி வந்தார்கள் என்ற கதை கேட்கிற ஆர்வத்தில் இருந்தன. ஆனால் சுப்பனும் வள்ளியும் எதுவுமே பேசாது தங்களைக் கூடி இருப்பவர்களைப் பார்த்தவாறு 'மௌனி' களாக இருந்தார்கள்.

அவர்களின் முகங்கள் 'கறுத்து'ப் போய் இருந்தன. இன்னமும் அவர்களின் இதயம் நடுங்கிக் கொண்டிருந்தது... கால்கள் நடுக்கத்தில் ஆடிக் கொண்டிருந்தன... இருவருக்கும் மேல் மூச்சு கீழ்மூச்சு சத்தமாய் வாங்கியது. அவர்கள் இருவரையும் 'லயத்தவர்கள்' சூழ்ந்து கொண்டிருந்தார்கள். அதனால் அவர்கள் நிம்மதியாக மூச்சு வாங்க முடியாமல் தவித்தார்கள். அவர்களுக்கு இப்போது காற்று தேவைப்பட்டது...

அப்பன் மெதுவாக பேசினான்... "ஓடி ஓடி வந்தோம்... அதனால வேர்த்து கொட்டுது. மூச்சு வேற வாங்குது... காத்து வேணும்... காத்தை மறைக்காம நில்லுங்க..."

"கதை கேக்கிற ஆசையில இப்படி மறைச்சிகிட்டு இருந்தா எப்படி? காத்து வேணும்... எல்லாரும் கொஞ்சம் வெலகி நில்லுங்க...! விசிறி இருந்தா விசிரலாம்... யாருகிட்ட இருக்கு? இருந்தா கொண்டு வாங்கப்பா..."

சுப்பனுக்கு ஆதரவாக சத்தம் போட்டுக் கத்தினான் பிச்சைக்கிழவன். அடுத்த சில நிமிடங்களில், எங்கிருந்தோ ஒரு விசிறி வந்தது. கிழவன் அதை வாங்கி விசிறினான்... இதற்கிடையில் அந்தக் கூட்டத்தினர் காம்பரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வராந்தாவில் இருந்து இரண்டாகப் பிரிந்து நிற்கவே, வெளியே தேயிலைச் செடிகளின் மீதாக நடந்து வந்த காற்று சுப்பனையும் வள்ளியையும் தொட்டு குசலம் விசாரிக்கத் தொடங்கியது... அது அவர்களின் உடம்பிற்கும் மனதிற்கும் இதமாக இருந்தது.... மெள்ளமெள்ள சுப்பன் இழந்து போன தைரியத்தை மீட்டவனாய் ஆகி வந்தான்...

சிறிது நேரத்திற்குப் பின்னர் 'விசிறு' வதை நிறுத்திய பிச்சைக்கிழவன் சுப்பனைப் பார்த்துக் கேட்டான்... "இப்ப எப்படி இருக்கு?"

"எனக்கு ஒன்னும் இல்ல... ஓடி ஓடி வந்ததுனால மூச்சு வாங்கிச்சி... இப்ப சரி..." என்ற சுப்பன், "குடிக்கத் தண்ணி வேணும்"என்று இழுத்தான்.

பிச்சைக்கிழவன் "தண்ணி கொண்டு வாங்கப்பா" என்று சத்தம் போடும் முன்பே ஒருத்தன் ஒரு சொம்பு நிறைய தண்ணீரும் ஒரு கிளாசும் கொண்டு வந்தான்.

சுப்பன் தண்ணீரை கிளாசு கிளாசாக உள்ளே தள்ளிவிட்டு அந்தக் கதையை சொல்லத் தொடங்கினான்...

"ரெண்டு நாளைக்கி முந்தி மாமனாருக்கு சீரியஸ்ன்னு தந்தி வரவே நானும் வள்ளியும் மாமனாரைப் பார்க்க போனோம்... மாமனார் இருக்கிற தோட்டம் கண்டிக்கெல்லாம் அங்கிட்டு கலஹா பக்கத்தில் இருக்கு... நம்ம தோட்டத்தில இருந்து சரியான தூரம்... ரோடும் மோசம்... அன்னைக்கி காலையில நேரத்தோட மாத்தள டவுனுக்கு நடந்து போயி கண்டிக்கு பஸ் புடிச்சி போனோம். கண்டிக்கு போன நேரம் கலஹாவுக்கு பஸ் இருந்திச்சி. அதில போயி கலஹாவுல இறங்கி தோட்டத்துக்கு நடந்து போனோம். லயத்துக்கு போற நேரம் நல்லா இருட்டிரிச்சி.... நாங்க போற நேரம் மாமனாரு உசுரு அந்தா – இந்தான்னு இழுத்துகிட்டு இருந்திச்சி... எங்கள பார்த்தாரு... என்னமோ சொல்ல வாயை தொறந்தாரு... பேச்சு வரல்ல... அன்னைக்கி ராத்திரி பூராவும் அவர் பக்கத்திலேயே இருந்தேன். விடியிற நேரம் கண்ணை மூடிட்டாரு... அதுக்கு பொறகு நானும் மச்சானும் சாவு வீட்டு காரியங்களை பார்த்தோம்... இதுக்கெடையில அந்த தோட்டத்து ஆளுக எல்லாம் அங்க கொழப்பம் – இங்க கொழப்பம்னு குசுகுசுன்னு பேசிக்கிட்டாங்க... எனக்கு என்ன செய்யிறதுன்னு தெரியல்ல... என் நெனவெல்லாம் இங்கதான் இருந்திச்சி... ஒடனே திரும்பவும் முடியாது. அப்பறம் வர்ரது வரட்டும்னு இருந்தேன்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்கு சற்று இளைத்தது... கொஞ்ச நேரம் மௌனமாக இருந்தான். இந்த மௌன நேரத்தில் இரண்டு தடவை தண்ணீர் குடித்தான். பிறகு பேசினான்...

"சாவு வீட்டு காரியம் மறுநா முடிஞ்சோன்ன நா புறப்பட்டேன். ஆனா நம்ம மச்சான் இப்ப போவாதீங்க... நாலா பக்கமும் கொழப்பமா இருக்கு... ரெண்டு நா கழிச்சி போவலாம்னு சொன்னான்... நான் ஒடனே ரெண்டு நாள்ல கொழப்பம் நிக்காது. கொழப்பம் பெருசாக முந்தி போறதுதான் நல்லதுன்னு சொல்லிட்டு கெழம்பிட்டேன். கடவுள் புண்ணியத்தில கண்டிக்கு போக ஒரு பஸ் இருந்திச்சி... நானும் வள்ளியும் அந்த பஸ்ஸுல ஏறி ஒக்காந்தோம். கொஞ்ச நேரத்தில எங்களுக்கு பக்கத்தில ஒரு முஸ்லீம் ஆளு ஒக்காந்தாரு... என்னயவே பார்த்தாரு... என் மூஞ்சியில தமிழன்னு எழுதி இருக்கோ என்னமோ! அவரு மெல்ல தமிழ்ல எங்க போறீங்க?... கண்டிக்கான்னு கேட்டாரு... நான் கண்டிக்கு போயி மாத்தளைக்கி போவனும்ணு சொன்னேன்... அப்பதான் அவரு கண்டிக்கு போற வழியில பஸ்கள மறிச்சி தமிழ் ஆளுக இருக்கான்ணு பாக்கிராங்களாம்னு சொன்னாரு. எனக்கு உசிரே இல்ல... அப்ப வள்ளி பேசாம திரும்பி போவம்ணு சொன்னா... நான் அதுக்கு சம்மதிக்கல்ல... டிக்கட் வேற வாங்கியாச்சி... நடக்கிரது நடக்கட்டும்ணு பஸ்லயே இருந்தோம். அப்ப அந்த முஸ்லீம் ஆள் எனக்கு தைரியம் கொடுத்தாரு... நீங்க பயப்பட வேணாம்... யாரும் வந்தா நான் ஒங்கள என் தம்பின்னு சொல்ரேன். முடியும்னா தலையில லேஞ்சில்[1] கட்டுங்க... சம்சாரத்தை முஸ்லிம் பொம்பள மாதிரி முக்காடு போட சொல்லுங்கன்ணு சொன்னாரு... நல்ல நேரம் நானும் லேஞ்சி கொண்டு போயிருந்தேன். முஸ்லீம் ஆளுக மாதிரி தலையில லேஞ்சில் கட்டினேன். வள்ளியும் முக்காடு போட்டா. இப்ப எங்கள பார்த்தா முஸ்லீம் ஆளுக மாதிரிதான் இருக்கும்... நானும் சாரம்தான்[2] கட்டியிருந்தேன்..." என்றவன் வள்ளியைப் பார்த்துவிட்டு அந்த லயத்தவர்களைப் பார்த்தான்...

"அப்பறம்.... அப்பறம்..." என்றார்கள் ஆவல் உந்த அங்கிருந்த சிலர்...

அப்புறம் நடந்ததையும் அவன் ஒரு கதையாக சொல்லத் தொடங்கினான்.

1. கைக்குட்டை 2. லுங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2

கண்டி நகரை நோக்கி அந்த பஸ் புறப்பட்டது. சுப்பன் அந்த பஸ்ஸில் இருந்தவாறே உள்ளே தன் பார்வையை முன்னும் பின்னும் நீட்டி இழுத்து 'எதையோ' தேடினான். எப்போதும் அந்த வழியே பஸ்ஸில் கண்டிக்குப் போகிற தோட்டத் தொழிலாளர்கள் தமிழ்க் கலாசார உடையில் பிரதிபலிக்க, தமிழ் மொழி வாயில் நடனமாட போவார்கள் – வருவார்கள்... இன்றோ அந்தக் கலாசாரத்தைக் காணவே இல்லை. தமிழ் மொழியையும் கேட்கவில்லை. எங்கே போனார்கள் அந்த தமிழர்கள்? எவரைப் பார்த்தாலும் வழக்கத்திற்கு மாறான உடுப்பான சாரத்தோடுதான் இருந்தார்கள். வேட்டியை காணவில்லை... அவர்களைப் பார்க்கும்போது தான் மாமனார் வீட்டிலிருந்து வேட்டியோடு புறப்பட்டபோது மச்சான் ஓடிவந்து, "வேட்டி கட்டிகிட்டு போவாதீங்க... வேட்டி கட்டுன ஆளுகள அடிக்கிராங்களாம். சாரத்த கட்டிகிட்டு போங்க..." என்று சொன்னதும் அதன் பின்னரே வேட்டியை அவிழ்த்துவிட்டு ஒரு சாரத்திற்குள் நுழைந்ததும் அவனுக்கு ஞாபகத்தில் நின்றது.

ஒரு பாரம்பரிய சமூகம் கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மொழி பேசுவதாக 'தம்பட்டம்' அடிக்கும் தமிழ்ச் சாதி இங்கே 'கலவரம்' என்றதும் தனது கலாசாரத்தை உதறிவிட்டு ஏதோ ஒன்றுக்குள் நுழைகிறதே ஏன்? எல்லாம் இந்த உயிரைக் காப்பாற்றத்தான்...

உயிர் இருந்தால்தான் உலகம்... உலகில் உயிர்கள் இல்லாவிட்டால் அது உலகம் இல்லை... இந்த உயிரைக் காப்பாற்றத்தான் இங்கே விஞ்ஞானமும் மெய்ஞானமும் அரசியலும் பேசப்படுகிறது... ஆனால் அரசியல், விஞ்ஞானத்தையும் மெய்ஞானத்தையும் மீறிய சக்தியாக பரிணமிக்கும் போது ஒரு இனம் தாழ்வுற்று இன்னொரு இனம் மேல் எழுகிறது... இவ்வாறு மேல் எழும் இனம் மற்ற இனத்தை 'விலை' பேசுகிறது... விலை மறுக்கும் பட்சத்தில் இனக்கலவரங்கள் வருகின்றன... அழியப் போகிற ஒரு இனம் இன்னொரு இனத்தை அழிக்கப் போகிறது... அப்போது இந்த உயிர் வேடிக்கையாகி விடுகிறது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுப்பனின் நெஞ்சில் எண்ண அலைகள் மோதிக் கொண்டே இருந்தன...

அந்த பஸ் சிறிது தூரம் போயிற்று. ஒரு இடத்தில் அது நின்ற போது ஒரு கிழவனும் ஒரு கிழவியும் ஏறினார்கள். முழு பஸ்ஸே அவர்களை ஒரு மாதிரியாகப் பார்த்தது. கிழவன் வேட்டியோடு இருந்தான். கிழவி தங்கத் தோடுகள் காதில் தொங்க, குங்குமப் பொட்டுடன் இருந்தாள். எந்தத் துணிவோடு இந்த நேரத்தில் இவர்கள் 'தமிழர்களாக' ஏறினார்கள்? அவர்களைப் பார்த்த சுப்பன் முதலில் மனதுக்குள் கோபப்பட்டாலும் பின்னர் அனுதாபப்பட்டான். ஏழ்மையின் ஆழத்தில் இருக்கிற அவர்களை குறை சொல்ல முடியாது. இருப்பதே ஒரு வேட்டியும் சேலையும்தான்... அதைத்தானே உடுத்த முடியும்? உடையில் என்ன இருக்கின்றது...! வேற்று உடை உடுத்தினால் அவர்கள் வேற்று இனமாக மாறிவிட முடியுமா? அவர்கள் முகத்தில்தான் தமிழர்கள் என்று எழுதி ஒட்டப்பட்டிருக்கிறதே! கிழவனுக்கு இரண்டு காதும் குத்தி நெற்றியில் 'பச்சை' பொட்டும் வைத்திருக்கிறார்களே! கிழவிக்கு காதைக் கிழித்து தோடுகளைத் தொங்க விட்டிருக்கிறார்கள்... இந்த இரண்டுமே 'தமிழர்கள்' என்று அடையாளம் காணப் போதுமே!...

சுப்பனின் பக்கத்தில் இருந்த அந்த முஸ்லீம் அன்பர் மெள்ளமாய் அவனிடம் 'முணுமுணு'த்தார்... "இந்த கெழவனுக்கும் கெழவிக்கும் ஊர் உலகத்தில நடக்கிரது தெரியாதா? எங்க பார்த்தாலும் கரச்சல்... கொழப்பம்.. பஸ்ஸில, கார்ல, வேன்ல போறவங்ள வேட்டி கட்டியிருக்காங்களா – காது குத்தியிருக்காங்களான்னு பார்த்து பார்த்து அடிக்கிறாங்களாம்! இந்த நேரத்தில இப்படி போவலாமா?..."

சுப்பன் பொதுவாகச் சொன்னான். "நம்ம ஆளுகளுக்கு புத்தி சொல்ல முடியாது... ஏட்டிக்கு போட்டியாதான் நடப்பாங்க.."

ஒரு தைரியசாலியாக அவன் பேசினாலும் உள்ளூர நடுங்கினான். மெள்ள தன் இடது காதை, வலது கையால் யாருக்கும் தெரியாமல் தொட்டுப் பார்த்துக் கொண்டான்... ஆம்! அவனுக்கும் 'காது' குத்தப்பட்டிருக்கிறது. சின்ன வயதில் கதிர்காமத்தில் 'பிறந்தமுடி' எடுத்து குத்திய காது! இன்னமும் அடையாளம் இருக்கிறது... காது குத்திய தாய், தந்தையைத் திட்டினான் தனக்குள்... "'வேல மெனக்கெட்டு' காதை குத்தி வைச்சிருக்காங்க. அவங்க காதை குத்திட்டு போயிட்டாங்க... இங்க நாங்க இல்ல படாதபாடு படரோம்!'". அவனுக்குள் அப்போது ஒரு ஞாபகம் நெஞ்சில் கிளர்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1958ல் தமிழர்களுக்கு எதிரான முதல் கலவரம் இலங்கையில்... சுதந்திரம் அடைந்த பின்னர் நடந்தது. அவனுடைய சித்தப்பா கொழும்பிற்கு பஸ்ஸில் போகும்போது இனவெறியர்களால் தாக்கப்பட்டு சாக பிழைக்க ஆஸ்பத்திரியில் கிடந்தார். அவருக்கு காது குத்தப்பட்டிருந்ததோடு மூக்கும் குத்தப்பட்டிருந்தது. சாகும்போது "இனிமேல் எந்த புள்ளகளுக்கும் காது, மூக்கு குத்தாதீங்கப்பா" என்றுதான் சொன்னாராம்...

அவன் தன்னை நினைத்தான்... 'காது குத்தப்பட்டிருக்கிறதே! என்ன செய்வது? தான் ஒரு முஸ்லீம் என்று சொன்னாலும் – பக்கத்தில் உள்ள முஸ்லீம் அன்பர் தன்னை தம்பி என்றாலும் தன் காதுகளைப் பார்த்துவிட்டால் போதுமே தான் யார் என்பது தெரியுமே!' பயந்து போனான் அவன்.

அப்போதுதான் அவன் கிழவனைப் பார்த்தான். இத்தனை வயதாகியும், ஒரு அடி கொடுத்தால் சாகப் போகிற உடம்போடு இருக்கிற அந்தக் கிழவனும், கிழவியும் பயப்படாமல் அந்த பஸ்ஸில் போகும்போது, தான் மட்டும் ஏன் நடுங்க வேண்டும்?... தனக்குத்தானே ஒரு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு தெம்போடு இருந்தான் அவன். ஒரு மணித்தியால ஓட்டத்திற்குப் பின்னர் ஒரு இடத்தில் பஸ் நின்றபோது அந்தக் கிழவனும் கிழவியும் இறங்கிப் போய் விட்டார்கள்.

அவர்கள் பத்திரமாக இறங்கிவிட்டதில் நிம்மதியடைந்த சுப்பன், வேறு யாரும் பஸ்ஸில் ஏறி வருகிறார்களா என்று பார்த்தபோது வேட்டி சட்டையோடு நடுத்தர வயதில் ஒருத்தன் வருவது தெரிந்தது.... பக்கத்தில் இருந்த அந்த முஸ்லீம் அன்பர் அவனையே பார்த்தார். 'கிழவனும் கிழவியும் போய் குமரன் வந்திருக்கான்' என்று சொல்வது போல் இருந்தது அந்தப் பார்வை... சுப்பன் அந்த மனிதனை அனுதாபத்தோடு பார்த்தவாறு இருந்தான்...

அந்த பஸ் ஓடியது... வெளியே வீதியில் மக்களின் நடமாட்டமே இல்லை... ஆங்காங்கே கூட்டமாகக்கூடி பேசிக் கொண்டிருந்தார்கள்... சிலர் அந்த பஸ்ஸையே உற்றுப் பார்த்தார்கள்... இது வழக்கத்துக்கு மாறான காட்சி என்பதை சுப்பன் உறுதி செய்து கொண்டான்... அவனுக்குள் குடியிருந்த தைரியம் நழுவிக் கொண்டே இருந்தது.

சுமார் அரை மணித்தியாலம் ஓடியிருக்கும். திடீரென்று பஸ்ஸுக்குள் ஒரே சத்தம்... அவன் எட்டிப் பார்த்தான் வெளியே... தூரத்தில் ஒரு கோஷ்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தி, கோடாரி, வாள், கம்பு போன்றவைகளோடு அந்த பஸ் போகிற பாதையை மறித்துக் கொண்டு நின்றது. அவனுக்கு உயிரே இல்லாதது போன்ற உணர்வு... நாக்கு ஒட்டி உலர்ந்தது. கால்கள் நடுங்கின. பஸ் பலாத்காரமாக நட்ட நடுவீதியில் நிறுத்தப்பட்டது. நின்ற பஸ்ஸின் இருபக்க கதவாலும் அந்த கோஸ்டியினர் ஏறினார்கள்... அவர்களுக்கு முன்பாக அந்தக் குரல்கள் சாவு சத்தமாக ஒலித்தன... "தெமழு இன்னவாதே?" (தமிழன் இருக்கிறானா?), "பரத்தெமழு இன்னவாதே?" (பறத்தமிழன் இருக்கிறானா?).

ஓ! தமிழன் இவர்களுக்கு ஏன் இந்த நாட்டிற்கு என்ன 'தீங்கு' செய்து விட்டான்? அவனை 'எத்தனை' மரியாதையோடு தேடுகிறார்கள் இவர்கள்... சுப்பன் உலகத்திலுள்ள தெய்வத்தை எல்லாம் 'வேண்டிக்' கொண்டான். வள்ளி தன் முகம் சரியாக தெரியாதவாறு 'முக்காடை' போட்டுக் கொண்டாள்.

அவர்கள் – அந்த வெறியர்கள், அந்த பஸ்ஸின் உள்ளே தமிழர்களைத் தேடினார்கள். அவர்களின் கண்களில் 'ரத்தம்' குடியிருந்தன; முகங்களில் 'மனிதத்தன்மை' கரைந்துபோய் விட்டது... சுப்பன் நடுங்கிக் கொண்டிருந்தான். அப்போதுதான் அது நடந்தது. அந்த வெறியர் கூட்டம் வேட்டி கட்டியிருந்த அந்த நடுத்தர வயது தமிழனை எட்டிப் பிடித்திழுத்து வேட்டிச் சட்டையைக் கிழித்து வெளியே இழுத்தது.

நடுவீதியில் விழுந்த அந்த தமிழனை அந்தக் கூட்டம் மிதித்து, அடித்து தன் வெறியைத் தணித்துக் கொண்டிருந்தது. அப்புறம்? அந்த சம்பவம் நடக்க வேண்டும் என்பது போல் காத்திருந்த அந்த பஸ்ஸும் புறப்பட்டது.

"அதுக்கு பொறகு என்ன நடந்திச்சி" பிச்சைக் கிழவன் ஆர்வத்தோடு கேட்டான்.

"என்ன நடந்திச்சோ தெரியல்ல... சில நேரம் ஆளை காலி பண்ணியிருப்பாங்க... அந்த ஆள் யாருன்னு தெரியல்ல.. பஸ் வந்திருச்சி... அதுக்கு பொறகு பஸ்ஸை ரெண்டு எடத்தில நிறுத்தினாங்க... ஆனா டிரைவர் நல்ல மனுசன்... பஸ்ஸை நிறுத்திற மாதிரி பாவனை காட்டி வேகவேகமாக ஓட்டிகிட்டு வந்திட்டாரு..."

அந்தக் கதையை சொல்லி முடித்தான் சுப்பன்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எப்படியோப்பா கடவுள்தான் ஒன்னய காப்பாத்திருக்காரு... நாளைக்கி ஏன் இன்னைக்கி ராத்திரி என்ன நடக்குமோ தெரியல்ல... மாத்தளை முத்து மாரிதான் நம்மள காப்பத்தணும்..." என்று பிச்சைக் கிழவன் இந்தக் கூட்டத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பது போல் தன் கவலையைக் கொட்டினான்.

வெளியே நின்று கதை கேட்டிருந்தவர்கள் கவலையுடன் அந்த காம்பராவை விட்டுப்போக ஆரம்பித்தார்கள். காம்பராவின் உள்ளே இருந்தவர்கள் அசையவில்லை. அப்படியே இருந்தார்கள். அவர்களுக்கு யாரும் ஏதாவது சொல்ல மாட்டார்களா என்ற ஆர்வம்...! என்ன கதை சொல்லப் போகிறார்கள்?... எத்தனை தடவை பேசினாலும் அது ஒரே ராகம்தான்... 1958ல் நடந்தது... இப்போது திரும்பவும் நடக்கத் தொடங்கிவிட்டது... தமிழர்களின் வீடுகளுக்கும் கடைகளுக்கும் நெருப்பு வைத்து சிரித்தது இன வெறி பிடித்த கோஷ்டி... தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்பட்டார்கள். சில இடங்களில் சித்ரவதையும் கொலையும் நடந்திருக்கிறது. எங்கு பார்த்தாலும் அடிதடி, குத்து வெட்டு அத்தனையும் தமிழர்களுக்கு எதிராக.

"எல்லாம் நம்ம தலையெழுத்து... தாய் நாட்டை வுட்டுட்டு வெள்ளக்காரன நம்பி இங்க கால் வச்சதில இருந்து படாதபாடு படுரோம்.. என்னக்கி அகதியா நாங்க வந்தோமோ அன்னயில இருந்து இங்க அகதியாதான் இருக்கிரோம்... காலம் காலமா, பரம்பரை பரம்பரையா ஒழைச்சி குடுக்க வேண்டியதுதான்... ஒழைச்சி குடுத்தாலும் பரவாயில்ல... ஒழைச்சி குடுத்திட்டு ஒதையும் இல்ல அப்பப்ப வாங்குரோம்.... சே... என்ன பொழைப்பு! ஒண்ணு மட்டும் சொல்ரேன்... தமிழனா மட்டும் பொறக்கக் கூடாது... தமிழனுக்கு ஒரு நாடும் இல்ல... ஊருமில்ல.. அவனுக்கு என்னான்னு கேக்க இந்த ஒலகத்தில ஒரு நாதியும் இல்ல!...."

சுப்பனின் காம்பராவிற்கு அடுத்த காம்பராவில் இருக்கிற முத்தையா 'அலுத்துக்' கொண்டு தன் காம்பராவிற்குள் நுழைந்தான்.

"சரி... சரி... எல்லாரும் போங்க... இந்த நேரத்தில நாம கூட்டமா இருக்கக்கூடாது... கூட்டமா இருக்கிரதை நாட்டாளுக[1] பாத்தா பெரிய கரச்ச[2]... ம்... போங்க..."

1. தோட்டத்துக்கு பக்கத்தில் வாழ்கிற சிங்கள மக்கள். 2. தொந்தரவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த தோட்டத்திற்குப் பக்கத்தில் இருக்கும் சிங்கள கிராமத்தை மனதில் வைத்துக் கொண்டு பிச்சைக் கிழவன் சத்தம் போட்டான்.

அந்த சத்தத்திற்குப் பின் கூடியிருந்தவர்கள் மெல்லமெல்ல கலையத் தொடங்கினார்கள். கிழவன் பேச்சிற்கு மறு பேச்சில்லை... அங்கே அவன் அவர்களுக்குத் தெரிவு செய்யப்படாத தலைவன்.

அவர்கள் யாவரின் மனதிலும் தாங்க முடியாத சுமை. அங்கேயும் கலவரம் வெடித்தால்? 1958ல் எங்கெங்கோ நடந்த கலவரம்... அந்த பகுதியின் எல்லையைக் கூட நெருங்கவே இல்லை. இந்த தடவை எப்படியோ? அவர்களுக்கு இப்போதும் அந்த சுப்பனின் கதையைக் கேட்ட பின்னரும் இங்கே எதுவும் நடக்காது என்ற நம்பிக்கை... அந்த நம்பிக்கையோடு அவர்கள் தங்கள் இருப்பிடத்திற்கு போகத் தொடங்கினார்கள்... அந்த நேரத்தில்தான் டவுனுக்குப் போயிருந்த ஜோசப் பதறியடித்துக் கொண்டு லயத்தின் படிக்கட்டுகளில் ஓடோடிவந்து காம்பராவின் வாசலில் நின்றான்... அவன் கழுத்தில் சிலுவை இருந்தபோதும் பேசுவது தமிழ்... இனி அவனும் தமிழன்தானே... அவன் முகமெங்கும் அச்ச ரேகைகளின் ஆட்சி...

அவனைக் கண்டதும் காம்பராவிற்குள் நுழைந்தவர்கள், திரும்ப வந்து விட்டார்கள். அவர்கள் மனதில் ஆயிரமாயிரம் கேள்விகள்... என்ன நடந்து விட்டது? மாத்தளை நகரிலும் கலவரமா? எதுவும் புரியவில்லை அவர்களுக்கு... அவன் மௌனமாய் இருந்தான். அவனுடைய மௌனத்தைப் பார்த்தபோது அவர்கள் அத்தனை பேரின் நெஞ்சிலும் ஏதோ நடக்கக்கூடாதது – நடந்திருக்க வேண்டும்!... என்ன நடந்ததோ? என்ற அச்சமே விசுவரூபமாய் மேல் எழுந்து நின்றது.

## 3

"யட்டவத்தை தோட்டத்தில உள்ள லயத்தையெல்லாம் அடிச்சி நொருக்கிட்டானுகளாம்... நாட்டுல உள்ள சிங்கள பொம்பளைகளும் புள்ளைகளும் லயத்தில இருந்த சாமன்கள தூக்கிட்டுப் போயிட்டாங்களாம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லயத்தில இருந்த நம்ம ஆளுக புள்ள குட்டிகளோட காட்டுக்குள்ள ஓடி மறைஞ்சாங்களாம்... தோட்டத்து தொர எந்த நடவடிக்கையும் எடுக்கலியாம்... எல்லாம் முடிஞ்ச பொறகு தோட்டத்து லொறியில ஆள்கள ஏத்தி மாத்தள அம்மன் கோயில்ல இருக்கிற அகதி முகாம்ல எறக்கிவிட்டானாம். இம்புட்டும் செஞ்சது யார் தெரியுமா? யட்டவத்த தோட்டத்துக்கு போற வழியில இருக்கிற கடைக்காரன்தான்..."

ஒரே மூச்சில் மூச்சு இளைக்க ஜோசப் நடந்ததை நேரில் பார்த்தது போல் சொன்னான்... உண்மையில் அவன் நேரில் பார்க்கவில்லை... என்றாலும் அவன் சொன்ன அத்தனையும் நிஜம்... காலையில் டவுணுக்குப் போன அவன் அம்மன் கோவில் அருகே பஸ்ஸைவிட்டு இறங்கியபோது கோயிலில் ஒரு கூட்டம் கூடியிருப்பதைக் கண்டு கோயிலுக்குள் நுழைந்தான்... அங்கே மாயாண்டியைச் சந்தித்தான்.

அந்தக் கோயில் இப்போது ஒரு அகதி முகாமாக மாறியிருந்தது...

மாயாண்டி யட்டவத்தை தோட்டத்து தொழிலாளி... அவனுக்கு நன்கு தெரிந்தவன். எப்படி இருந்தவன் இப்படி ஆகிவிட்டானே!... நாட்கள் ஒன்றாயினும் நெஞ்சில் இருந்த நம்பிக்கை தளர்ந்து போய்விட்டதில்தான் அவன் தளர்ந்து விட்டான்... முகத்திலும் உடலிலும் சிறுசிறு காயங்கள்... ஜோசப்பைப் பார்த்ததும் அழுதுவிட்டான் மாயாண்டி. ஜோசப் அவனைத் தேற்றினான்.

மாயாண்டி குமுறிக் கொண்டிருந்த அழுகையை அடக்கிக் கொண்டே பேசினான்... "ஜோசப்! நாங்க உயிர் தப்பியது யார் செஞ்ச புண்ணியமோ தெரியல்ல... நாங்க இப்புடி நடக்கும்ணு எதிர்பார்க்கவே இல்ல... 1958ல நம்ம தோட்டத்துல ஒண்ணும் நடக்கல்ல... இந்த மொறையும் ஏதும் நடக்காதுன்னு நெனைச்சிக்கிட்டு இருந்த நேரத்தில இப்புடி நடந்திருச்சி... சாமான் சட்டு போனத பத்தி கவலைப்படல்ல... ஆனா நம்ம பிரசாவுரிமை கொப்பி (Citizenship Certificate) எரிஞ்சி போச்சி... அதான் ஒரே யோசனையா இருக்கு..."

ஜோசப்புக்கு அந்த நாட்டின் மீது கோபம் கோபமாய் வந்தது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மனுசன மனுசன் அடிச்சி கொல்றானுக. பிரசாவுரிமையாவது மண்ணாங்கட்டியாவது...? அதை வுடுங்க, ஆள் தப்பினதே போதும்! பிரசாவுரிமை இருந்துதான் இப்ப என்ன பிரயோசனம்? நமக்கு ஒரு பாதுகாப்பு உண்டா? நானும் நீங்களும் பிரசாவுரிமையை எடுத்துகிட்டு இங்க அடிபட்டுகிட்டு இருக்கோம்... நல்ல மனுசங்க நேரங்காலத்தோட இந்தியாவுக்கு போய்ச் சேர்ந்திட்டாங்க..."

மாயாண்டிக்கு சித்தப்பாவின் நினைவு வந்தது. அவர் தன் குடும்பத்தோடு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியா போவதற்காக தலைமன்னாரில் கப்பல் ஏறினார். அப்போது அவர் சொன்னது.... "இந்த நாடு போற போக்கு சரியில்ல... தமிழ் ஆளுக இனி இங்க நிம்மதியா வாழ முடியாது. பேசாம ஊரோட வந்து சேரு... கஷ்டமோ நஷ்டமோ தாய் நாட்டிலயே கெடப்போம்..."

பல ஆண்டுகள் இந்த நாட்டில் உழைத்து வாழ்ந்தவர் சொன்ன வார்த்தைகள். கப்பல் ஏறும்வரை இலங்கையைத் தாய் நாடாக நினைத்தவர்தான்...! நினைத்ததோடு நிற்காது உழைத்தவர்... ஆனால் இந்த நாடு அவருக்கு கொடுத்த பரிசு... நாடற்றவன்... 58ல் கலவரத்தில் அடி வாங்கினார்... அதற்கு காரணம் அவர் தமிழனாம்...! அப்போது இந்தியா போக முடிவெடுத்தார். மாயாண்டிக்கும் அவரைப் போலவே இந்தியா போக வேண்டும் என்ற எண்ணம் வந்தது. ஆனால் நாள் செல்லச் செல்ல எல்லாம் மறந்து போய் 'இதுதானே நம் நாடு – இங்கே தான் உழைக்கிறோம்... ஏன் போக வேண்டும்?' என்று வந்த ஒரு அசுர பலத்தில் இலங்கை குடியுரிமைக்கு விண்ணப்பித்து குடியுரிமையும் எடுத்தான்...

வெகு நேரம் பேசிக் கொண்டிருந்த ஜோசப் பிறகு தன் கையில் இருந்த இரண்டு பத்து ரூபாவை மாயாண்டி கையில் 'திணித்து' விட்டு அவசர அவசரமாகத் தோட்டத்துக்குத் திரும்பினான்.

ஜோசப் சொன்னதைக் கேட்டு அத்தனைபேரும் பயந்து போய்விட்டார்கள்... எவருக்கும் என்ன செய்வதென்று தெரியவில்லை. ஒருத்தர் முகத்தை ஒருத்தர் பார்த்துக் கொண்டிருந்தார்கள்... இந்த தடவை நிச்சயம் அந்தப் பகுதியில் கலவரம் வெடிக்கும் என்பது நிச்சயமாய் நெஞ்சில் நின்றது அவர்களுக்கு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது அவன் சொன்னான்... "அடிக்க வருவானு பயந்து ஓடுரதுல அர்த்தமில்ல... கொஞ்ச பேராவது துணிஞ்சி எதுத்து நின்னாதான் இதுக்கு முடிவு கட்டலாம்..."

அத்தனை தைரியமாகப் பேசியது யார் என்று எல்லோரும் பார்த்தார்கள்... அப்படிச் சொன்னது – சிங்காரம்!... ஓ... அவனா?... என்று சிலரின் பார்வை 'சுருங்கியது' – வேறு சிலர் அவன் முகத்தை வெறுப்புடன் பார்த்தார்கள். "பெருசா புத்தி சொல்ல வந்திட்டாரு!" என்பது இன்னும் சிலரின் கணிப்பு... ஆனால் எவரும் சிங்காரத்தின் பேச்சுக்குப் பதில் கொடுக்கவில்லை... சில விநாடிகள் மௌனம் நீடித்தது... அந்த மௌனத்தை கலைத்தான் அவன்.

"நான் மொத ஆளா எதித்து நிக்கரேன்! மத்தவங்க ரெடியா?..."

அவனுடைய அந்தப் பேச்சு மற்றவர்களுக்கு சவால் விடுவது போலிருந்தது.

"வீட்டுக்குள்ள சிங்களத்த வைச்சிகிட்டு வெளிய சிங்களவன எதுக்க போராராக்கும்... இத நம்ப முடியுமா?" அந்தக் கூட்டத்தில் இருந்து ஒரு குரல் வந்தது.

சிங்காரத்திற்கு நெஞ்சில் கத்தியால் குத்தியதைப் போலிருந்தது. அவன் தலை குனிந்தவாறு நின்றான். தான் ஒரு சிங்களப் பெண்ணைத் திருமணம் செய்திருப்பதைத்தான் அந்தக் குரல் 'குத்தி'க் காட்டுகிறது என்பது அவனுக்குப் புரிந்தது. பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் காதல் விவகாரத்தில் வெற்றி கண்ட அவன், தான் விரும்பிய அவளை – அந்தச் சிங்களப் பெண்ணைக் கூட்டிக் கொண்டு லயத்திற்கு வந்து விட்டான். அதன் பிறகு அவனோடு ஒருத்தரும் பேசவில்லை... ஆனாலும் அவன் துணிந்து அந்த லயத்தில் இருந்தான்... நாட்கள் செல்ல ஒவ்வொருத்தராக அவனோடு பேசத் தொடங்கினார்கள்.... இப்போது சிலரைத்தவிர எல்லோருமே பேசுவார்கள் என்றாலும் அவன் மீது வேறு சிலருக்கு இன்னமும் ஆத்திரமும் இருந்தது.

பிச்சைக் கிழவன் அங்கு உருவாகிய சூழ்நிலையையிட்டு கவலை கொண்டு, இதனை நீடிக்க விடக்கூடாது என்பதாய் சிங்காரத்திற்காகப் பேசினான்... ஒரு வகையில் அது சரியானதும் கூட.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவன் சிங்களத்திய கல்யாணம் செஞ்சு ஒரு வருசமாச்சி... இப்ப ஏன் அந்தக் கத?... அதோட நம்ம சிங்காரத்தோட வந்தவ இப்ப சிங்களத்தி மாதிரியா இருக்கா?... அசல் தமிழச்சி மாதிரி மாறிட்டா... அவளும் இவனை நம்பி – இவனை நம்பின்னா, தமிழ் ஆள்கள நம்பி – தாயி, தகப்பனை எல்லாம் ஒதறி தள்ளிப்புட்டு வந்திருக்கா! இப்ப போயி அதைப் பற்றி பேசலாமா?..."

வெள்ளைவெளேரென்று தன்னைப் போலவே முதுமையடைந்திருந்த மீசையை விரல்களால் தடவி விட்டுக் கொண்டான் பிச்சைக்கிழவன். அவனுக்கு வயது அறுபதுக்கு மேல் இருக்கும். தோட்ட நிர்வாகம் மாதாமாதம் கொடுக்கிற பென்ஷன் காசும், பல லயத்தில் இருந்து அவ்வப்போது வருகிற உணவும்தான் அவர் வாழ்க்கையை ஓட்டுகிற சக்கரங்கள்... தோட்டத்தில் தொழிற் சங்கத்திற்கு – கோயிலுக்கு தலைவராக இருந்த அவர் இன்றும் ஒரு தலைவருக்குரிய மரியாதையோடுதான் இருக்கிறார்... லயங்களில் முளைக்கிற பிரச்னைகள் எல்லாம் அவர் காம்பராவில்தான் விடியும்... அவர் பேச்சுக்கு மறு பேச்சு இதுவரை அங்கு உருவாகவே இல்லை.

ஒரு மௌனம் நிலவியது... அந்த மௌனமே பிச்சைக் கிழவன் வைத்த சட்டமாய் பரிணமித்தது. அதை எவரால் மீற இயலும்?...

"இப்ப பழைய கதையெல்லாம் வேணாம்... இப்ப என்ன செய்யல்லாம்ணு சொல்லுங்க... தம்பி சிங்காரம் சொல்ர மாதிரி தைரியமான ஆளுகள சேர்க்கணும். எனக்கெல்லாம் மனசில வலு இருக்கு... ஆனா ஒடம்புல சக்தி இல்ல... இருக்கிற இளந்தாரிக[1] ஒண்ணு சேரணும்... கத்தி, கோடாலி தயார் பண்ணனும்... லயத்தில உள்ள பொண்டு, புள்ளகள ஒரு எடத்தில வைக்கணும்... ஆம்பள் ஆளுங்க ராத்திரியில மாறிமாறி காவ காக்கணும்... பயந்து ஓடினா ஓடிக்கிட்டே இருக்க வேண்டியதுதான்..."

பிச்சைக் கிழவனின் பேச்சு சிங்காரத்திற்கு தைரியத்தைக் கொடுத்தது. நன்றியுணர்வோடு அவனின் முகத்தைப் பார்த்துக் கொண்டான்...

"பொண்டு, புள்ளகள எங்க வைக்கிறது?" நியாயமான ஒரு கேள்வி எழுந்தது.

---

1. இளைஞர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழவன் யோசித்தான்... பாதுகாப்பான இடம் இந்த தோட்டத்தில் எங்கே இருக்கிறது? அவன்தன் முடிவை நன்கு சிந்தித்து சொன்னான்...

"யாரும் எங்கயும் போவ வேணாம்... எல்லாரும் லயத்திலேயே இருக்கட்டும்... லயத்தில பொறந்தோம்... லயத்திலேயே சாவுவோம்..."

பிச்சைக் கிழவன் நெஞ்சில் பழைய நினைவுகள் ஒரு விநாடி ஓடி மறைந்தன.

வெள்ளைக்காரன் தோட்டத்தில் 'துரை'யாக இருந்தபோது தொழிலாளர்களின் நியாயத்திற்காக எதிர்த்துப் போராடியவன்... அவனுக்கு இந்த போராட்டங்கள் புதிதல்ல. ஆனால் இப்போது அவன் வகுத்த போராட்டம் புதியது. உலகில் எந்த ஒரு நாடும் – எந்த ஒரு இனமும் தமக்கென்று ஒரு எல்லைகளை வைத்துக் கொண்டுதான் தன்னினத்திற்காகப் போராடும்... ஆனால் இங்கே இந்த நாட்டில், தான் வாழும் இடத்திற்காக – எட்டேஎட்டு அடி காம்பராவிற்காக அதனைப் பாதுகாப்பதற்காக – போராடுகின்றது இந்த இனம்...

கிழவனின் வார்த்தைகளுக்குப் பிறகு ஒரு கோஷ்டி சேர்ந்தது. அந்தக் கோஷ்டியை இரண்டாகப் பிரித்து ஒன்றை லயத்தைச் சுற்றியும், லயத்திற்கு வெளியே மற்றதையும் இரவில் காவல் காக்க நியமித்தான் அவன். சிங்காரம் லயத்தைக் காக்கும் கோஷ்டியில் சேர்க்கப்பட்டான். அப்போதே அந்த கோஷ்டியினர் காட்டுப் பக்கம் கிளம்பினார்கள்... அவர்களோடு பிச்சைக் கிழவனும் புறப்பட்டான். அடுத்த சில மணி நேரத்தில் கம்புகள், கத்திகள், கோடாலிகளுக்கான 'பிடிகள்' மரங்களிலிருந்து வெட்டப்பட்டன. இளைஞர்கள் சிலர் காம்பராக்களில் இருந்த வெற்றுப் போத்தல்களைத் தேடிப் பிடித்து அவைகளுக்குள் மண் அடைத்து வைத்தார்கள்... காம்பராக்களில் உள்ள குடும்பத் தலைவர்கள் முக்கியமானவைகளை ஒரு 'பொட்டலமாகக்' கட்டிக் கொண்டு விட்டார்கள். லயத்தைத் தாக்கினால் தூக்கிக் கொண்டு ஓட, அதற்குள் என்ன முக்கியமானவைகள் இருந்தன தெரியுமா?... குடியுரிமைப் பத்திரங்கள், வேட்டி, சட்டை, கடிதங்கள் என்பனதான்.

சிலர் கடலில் மூழ்கும் கப்பல் பயணிகளைப்போல் தவித்தார்கள்; வேறு சிலர் எதை எடுத்துக் கொண்டு ஓடுவது என்று யோசித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்காரமும் வேறு சிலரும் காம்பரா, காம்பராவாகச் சென்று, "ராத்திரி நேரத்தில மணி அடிப்போம்! சத்தம் கேட்டதும் தப்பி ஓடப் பாருங்க..." என்று எச்சரிக்கை கொடுத்தார்கள். சிலர் தோட்டத்து துரையைச் சந்தித்து தங்களுக்கு பாதுகாப்பு தர ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொண்டார்கள். துரை அவர்களின் பாதுகாப்பில் ரொம்ப அக்கறை உள்ளவர்போல் காட்டிக் கொண்டதோடு, தான் ஏற்கனவே பொலீஸுக்கும், எம்.பி. க்கும் டெலிபோன் செய்து விட்டதாக சொன்னார். அவர் சொன்னது அத்தனையும் பொய்... தோட்டத்து டெலிபோன் கடந்த சில தினங்களாக வேலை செய்யவில்லை... பிறகு அவர் எப்படி 'போன்' செய்வார்?... அதில் அவரின் குறுகிய அரசியல் இருந்தது... அவ்வப்போது அந்தத் தோட்டத்து தொழிலாளர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்து, சங்கம் மூலமாகப் போராட்டம் செய்ததை அவர் 'இன' ரீதியாகப் பார்த்தார். தான் ஒரு சிங்களவன் அந்தத் தோட்டத்தில் துரையாக இருப்பது பிடிக்காமல்தான் அந்த தமிழ்த் தொழிலாளர்கள் போராடுகிறார்கள் என்று தப்புக் கணக்கு போட்டுக் கொண்டார். அவர் படித்த ஒரு மொழிக் கல்வியில் அப்படித்தான் எண்ண முடியும்...?

## 4

அன்றைய பகல் பொழுது அமைதியாய் கரைந்தது. வழக்கமாக மேற்குத் திசைக்குப் போகிற கதிரவனை வாழ்த்துகிற பறவைகளின் வாழ்த்தொலிகளைக் கூட இன்று கேட்க முடியவில்லை... எங்கும் அமைதி... வானில்... மண்ணில்... தேயிலைச் செடிகள் இருக்கிற பூமியில்... அமைதி... யார் சொல்லிக் கொடுத்தது இந்த அமைதி...? இந்த அமைதிதான் இந்த தோட்டத்து மக்களை பயமுறுத்தியது... இரவு வந்தது. அந்த இரவு அந்த மக்களுக்கு முந்திய இரவுகளைப் போன்றதாக இல்லை... எதனையோ எதிர்பார்க்கும் இரவாக தங்கள் வாழ்க்கைப் பயணத்தில் முக்கிய இரவாக இருந்தது. எவரும் காம்பராக்களை விட்டுப் போகவே இல்லை. வழக்கமாக இந்த இரவு நேரத்தில் காம்பராக்களில் இருந்து விதவிதமான வெளிச்சங்கள் தெரியும்! சிலர் பெட்ரோல் மெக்ஸ், சிலர் லந்தாரம், சிலர் குப்பிலாம்பு என்று பல விளக்குகளைக் கொளுத்தி தங்கள் காம்பராக்களில் வைத்திருப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி எல்லாக் காம்பராக்களில் இருந்தும் கிளம்புகிற வெளிச்சம் அந்த லயத்து வாசலையே வெளிச்சம் போட்டு வைக்கும்... இது போதாதென்று பெட்டரி ரேடியோக்கள் பாடிக் கொண்டிருக்கும்... சின்னையா வாத்தியார் பேப்பர் படிப்பது சத்தமாகக் கேட்கும். சிலர் 'குசுமுசா' என்று பேசுவதும் கேட்கும்...

இன்றோ போர்க் களத்தில் இருக்கிற வீரர்களின் கூடாரங்களாக அந்தக் காம்பராக்கள் இருந்தன. எந்தச் சத்தமும் இல்லை... மூச்சு விடுவதுகூட ஒரு சத்தமாய் கேட்கும் என்றோ என்னவோ மூச்சைக்கூட சத்தமில்லாமல் விட்டுக் கொண்டிருந்தார்கள்.... சில காம்பராக்களில் சிலர் பிடிக்கிற பீடி நெருப்புத்தான் ஒரு வெளிச்சமாகத் தெரிந்தது...

பிச்சைக் கிழவன் யாருமே வெளிச்சமோ, சத்தமோ போடக் கூடாதென்று சத்தம் அல்ல சட்டம் போட்டு வைத்தான்.

தினமும் பூவரச மரத்தடியில் இருக்கிற பிள்ளையாருக்கு விளக்கேற்றும் முத்தையா, பிச்சைக் கிழவன் போட்ட சட்டம் மனிதர்களுக்கு மட்டும்தான் கடவுளுக்கு இல்லை என்பது போல் பூவரச மரத்தருகே போனான்.

அப்போது அந்தப் பிச்சைக்கிழவன் போட்டானே ஒரு சத்தம்...

"மனுசனுக்கே வெளிச்சம் இல்ல... நீ புள்ளயாருக்கு வெளிச்சம் போட போறியாக்கும்... வௌக்கு போடாதே! ஒரு நா, ரெண்டு நா இருட்டுல இருந்தா புள்ளயாரு கெட்டுப் போக மாட்டாரு..."

முத்தையா கையில் எண்ணைய் போத்தலையும்[1] நெருப்புப் பெட்டியையும்[2] பிள்ளையாருக்குப் பக்கத்திலேயே வைத்துவிட்டுப் போய்விட்டான்.

கிழவன் தொடர்ந்து 'முணுமுணு'த்தான்... "விழுந்து விழுந்து சாமி கும்புடுர எங்களத்தான் கடவுள் சோதிச்சிகிட்டு இருக்கான்... நாங்க யாருக்கு என்னா அநியாயம் செஞ்சோம்? எங்கள ஏன் இப்படி சோதிக்கிரான்?"

அவனுடைய அந்த 'முணுமுணு'ப்பிற்குப் பின்னர் மௌனம் தான் அங்கு நிலவியது. பகலெல்லாம் தூங்கி இரவில் 'தொணதொணக்கிற' ஜேம்ஸ்

1. பாட்டில். 2. தீப்பெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்காணி – அங்கும் இங்கும் ஓடுகிற வாண்டுகள் – ஊர் வம்பு அளக்கிற வடிவு – பாப்பாத்தி கோஷ்டி என்று யாவருமே அடங்கிவிட்டார்கள்... இல்லை அடக்கப்பட்டார்கள்... மற்றவர்கள் படுக்கையில் தூங்காமல் கிடந்தார்கள். வாண்டுகள் பயத்தில் தூங்கிப் போயிருந்தன.

லயத்தையும் லயத்துக்கு வெளியேயும் காவல் செய்யத் தெரிவு செய்யப்பட்ட கோஷ்டியினர் த்னியாக கூடி இரவு ஒன்பது மணிக்கு மேல் தங்கள் 'கடமை'களை தொடர்வதாக தீர்மானித்து காம்பராக்களுக்கும் போய் விட்டார்கள்...

வெளியே நாய்கள் அவ்வப்போது ஊளையிட்டுக் கொண்டிருந்தன... நாய்கள் ஊளையிடுவது கடைசிக் காலத்திற்குத்தான் என்று சொல்வார்கள்... அப்படியென்றால் யாருக்கு கடைசிக் காலம்?

சிங்காரத்திற்கு எதுவுமே புரியவில்லை? ஆனால் தான் வாழ்க்கையில் ஒரு பயங்கரமான கட்டத்தில் நிற்பது மட்டும் புரிந்தது... அவன் மனதுக்குள் கம்பளிப் பூச்சியாய், ஆயிரம் எண்ணங்கள் ஊர்ந்தன...

சிங்காரம் தன் காம்பராவிற்குப் போனான்... அங்கு வெகுநேரமாக அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்தாள் மாலினி.

உள்ளே போன சிங்காரம் மாலினியையே பார்த்தான். குப்பிலாம்பு வெளிச்சத்தில் தெரிந்த அவளின் முகம் அவனிடம் ஏதோ ஒரு கேள்வியைக் கேட்பது போலிருந்தது... அவன் சற்று யோசித்தான்... வெளியில் நடந்த அந்தச் சம்பவம் – அங்கே நடந்த பேச்சு – அவளுக்குத் தெரிந்திருக்குமோ! தெரிந்துதான் இருக்கும்... அது காதும் காதும் வைத்து நடந்தது அல்லவே! அந்த லயத்திலுள்ள அத்தனைபேர் முன்னேதான் அது நடந்தது... அவளின் முக கோணல்களில், அவளின் இதயத்தை தரிசித்த அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை... ஒரு நாளும் பார்க்காத முகமாக இன்று அவள் முகம் இருக்கின்றது... சிங்காரம் தன்னையே வெகுநேரம் பார்க்கும் பார்வை மாலினிக்கு சந்தேகத்தை உண்டு பண்ணியது. வெளியே நடந்த பேச்சுக்கும் அவனுடைய இப்போதைய பார்வைக்கும் ஒரு முடிச்சு போட்டுப் பார்க்கத் தொடங்கினாள்... சிலந்தி வலை பின்னுவது போல் இந்த நெஞ்சமும் என்னஎன்ன விதமாய் எண்ண வலைகள் பின்னுகின்றன...! ஏதேதோ நினைவுகள் எரிநெருப்புப் புகையாய் கிளம்பியது... எதனையோ இழந்துவிடப் போவது போல் தோன்றியது அவளுக்கு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்காரத்திற்காக தன் தாயை, தந்தையை, சகோதரர்களை, ஏன் தன் உறவினர்களை தன் இனத்தையே பிரிந்து வந்தவள் அவள்... இனி என்ன இழக்கப் போகிறாள்? அவள் கண்கள் கலங்கிக் கொண்டு வந்தன...

"ஏன் ஒரு மாதிரியா இருக்க மாலினி?"

மாலினியின் அருகே போய் மெள்ளமாய், தமிழிலேயே கேட்டான் சிங்காரம். தமிழ் அவளுக்குத் தெரியும் – புரியும்... தமிழ், பேச புரிய படித்துக் கொடுத்ததே அவன்தான்...

"ஒண்ணுமில்லே..." ஒரே வரியில் அத்தனையையும் அடக்கிக் கொண்டு பொய் சொன்னாள் அவள்...

"நீ ஒண்ணுமில்லேன்னு சொல்ற... ஆனா ஒன் முகம் சொல்லுதே, ஒன் நெஞ்சுக்குள்ள ஏதோ இருக்குன்னு..."

அவள் மௌனங்களையே வார்த்தைகளாக உதிர்த்தாள். அந்த மௌனம் அவன் நெஞ்சைக் குடைந்தது.

அவன் மறுபடியும் பேசினான்.... "நீ ஏன் கவலைப்படுரேன்னு எனக்குத் தெரியும்...! கொஞ்ச முந்தி வெளியில ஆளுக, என்ன பாதி சிங்களவன் – பாதி தமிழன்னு சொன்னதைக் கேட்டுத்தானே இப்புடி இருக்கே! இது புதுக்கதையா? நானும் நீயும் இந்தக் காம்பராவுக்கு வந்ததில இருந்து கேக்கிறதுதானே...! அதை ஏன் பெருசா எடுத்துக்கிரே?..."

அந்தக் காம்பராவின் கீழே வெறுந்தரையில் உட்கார்ந்திருந்த அவளை அப்படியே எழுப்பி அணைத்துக் கொண்டான் சிங்காரம். மாலினி அவன் நெஞ்சில் முகத்தைச் சாய்த்துக் கொண்டு விம்மினாள். அவன் அவள் முகத்தை நிமிர்த்தி வைத்து சொன்னான்... "நான் தமிழன்னு தெரிஞ்சுதானே உன்ன கட்டிகிட்டு வந்தேன்; நீயும் என் மனைவியா வந்த... இனி யாரு எதைச் சொன்னாதான் என்ன? நீ ஏன் பயப்படுரே?"

அவளுக்குத் தெளிவாகப் புரியட்டும் என்று சிங்களத்தில் சொன்னான். அவள் அதற்கு சிங்களத்திலேயே பதில் கொடுத்தாள்.

---

1. சமையலறை. 2. குழம்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்கள் மேல் உள்ள நம்பிக்கையில்தான் வந்தேன். நீங்கள்தான் எனக்கு எல்லாமே!..."

சிங்காரத்திற்கு எதுவும் புரியவில்லை. இன்று ஏன் அவள் ஏதேதோ பேசுகிறாள்?... 'உங்களை நம்பித்தான் வந்தேன்' என்கிறாளே! இப்போது என்ன நடந்துவிட்டது? கல்யாணமாகி ஒரு வருடத்திற்கு மேலாகிறது. இன்று ஏன் அவளுக்கு இந்தப் பேச்சு?...

"அபி தென்னம எக வுன்னம் பஸ்ஸ வென கதாவ மொகட்டத?" (நாங்கள் இருவரும் ஒன்றான பின்னர் இப்போது ஏன் வேறு கதை?) வா... சாப்புடுவோம்... எனக்கு நிறைய வேல இருக்கு?"

அவளோடு குசினிக்குள்[1] நுழைந்தான் அவன்... சோறும் ஏதோ ஒரு கறியும்[2] கருவாட்டுப் பொரியலும் செய்திருந்தாள் மாலினி... இருவரும் ஒன்றாக சாப்பிட்டுக் கைகழுவினார்கள்... சிங்காரம் அவளிடம் சொல்லிவிட்டு வெளியே போனான்.

மாலினி நடுக்காம்பராவில் பாய் விரித்துப் படுத்தாள். தூக்கம் வரவில்லை. தூக்கம் இன்று எங்கே வரப்போகிறது? கண்களை மூடிக் கொண்டே கனவு காணப் புறப்பட்டாள்... தூங்கினால் தானே கனவு வரும்? ஆனால் அவளுக்குத் தூக்கம் வராமல் கனவு ஒரு நினைவுகள் போல மலர்ந்தன மூடிய கண்களுக்குள்...

சிங்காரத்தை முதன் முதலில் சந்தித்தது ஒரு கதை போலத் தொடர்ந்தது... தோட்டத்து மாரியம்மன் கோயில் தேர்த் திருவிழா. சிங்காரம் கோயில் கமிட்டி உறுப்பினர். அன்னதானத்திற்கு அரிசி சேகரிப்பு, தேர் ஜோடனை, கோயில் அலங்காரம் யாவற்றிலும் அவன் முன் நின்றான்... தோட்டத்திலுள்ள காம்பரா காம்பராவாக அன்னதானத்திற்கு அரிசியும், தேருக்கு பண வசூலும் சேகரித்தான். அவனோடு வேறு சிலரும் போனார்கள். பக்கத்தில் உள்ள சிங்களக் கிராமத்திற்கும் அவர்கள் போனார்கள். எல்லா வீட்டுக் கதவையும் தட்டினார்கள்... ஒரு சிலர்தான் காசு கொடுத்தார்கள். மீதிப் பேர்கள் அரிசிதான் கொடுத்தார்கள்.

அந்த வீட்டிற்கும் போனார்கள்... கையில் தேர்த் திருவிழா நோட்டீசுடன் சிங்காரம்தான் முதலில் நின்றான். வீட்டு முகப்பில் எவரையும் காணோம். அந்த வீட்டுக்காரர் யார்? என்பது அவனுக்குத் தெரியும். அவரைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டத்திலுள்ள அத்தனைபேரும் 'மாமா' என்றுதான் அழைப்பார்கள். அவருக்கு ஒரு பலசரக்கு கடை இருக்கிறது. அந்தக்கடையில் அவர்களில் பலர் பற்றுவரவு செய்பவர்கள். அவசரத்திற்கு அரிசி மாவு அங்கேதான் வாங்குவார்கள்.

"மாமே! மாமே!" (மாமா – மாமா) சிங்காரம் குரல் கொடுத்தான்.

பதில் இல்லை...

சிங்காரம் அந்த வீட்டின் முன் அறையில் இருந்து அடுத்த அறைக்குள் நுழைந்து 'வீட்டில் யாரும் இல்லையா?' என்று சிங்களத்தில் கேட்டான்... அப்போதுதான், அவள் முகத்தில் புன்னகைப் பூ மலர வெளியே வந்து அவர்களைப் பார்த்தாள்... ஒரு விநாடி அவர்கள் இருவரின் கண்களும் உறவுப் பாலம் அமைத்தன. அந்த ஒரு விநாடியே மாலினியின் முகம் அவன் நெஞ்சுக்குள் பதிந்தது. என்ன அழகான முகம். அவள் முகம் மட்டுமல்ல அகமும் அழகாகத்தான் இருக்க வேண்டும். முகத்தின் லஷ்மிகரம் அதைச் சொல்கிறது. பிரமன் அவளைப் படைக்கும்போது அன்போடு காதலோடு அமைதியோடு படைத்திருக்க வேண்டும். அவன் படைக்கும்போது ஒரு உயிர்... அடையாளத்திற்கு பெண்... பூமிக்கு வந்து சிங்களம் பேசியதால் சிங்கள்த்தியாகி விட்டாள்... சிங்காரம் மீண்டும் பேசினான். "மாமா இல்லையா?..."

"ஏன் நான்தான் இருக்கேனே!" என்றாள் அவள்.

அவளின் குறும்புப் பேச்சை ரசித்துக் கொண்டே கையில் இருந்த நோட்டீசுகளில் ஒன்றை அவளிடம் நீட்டினான். அவள் அதை வாங்கிப் பார்த்துவிட்டு 'நான் என்ன செய்ய வேண்டும்?' என்பது போல் பார்த்தாள்.

"இதற்குத்தான் மாமாவைத் தேடினேன். அவர் இருந்தால் அவருக்குத் தெரியும்... மாரியம்மன் கோயில் தேருக்கு ஏதாவது நிதி உதவி செய்வார்..."

பேச்சு சிங்களத்திலேயே தொடர்ந்தது. "ஏன் என்னால் கொடுக்க முடியாதா?" என்ற அவள் உள்ளே போய் ஒரு உண்டியலை எடுத்து வந்து அவனிடம் கொடுத்து விட்டு சொன்னாள்.

"இதில் உள்ளதை எண்ணி பாருங்கள்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அப்படியே அசந்து போனான். அவளுக்கு என்னமாய் அப்படியே ரோஷம் வந்து விட்டது! உண்டியலையே உடைத்து எடுக்கச் சொல்லி விட்டாளே! உண்டியலை உடைத்து எண்ணிப் பார்த்தபோது ஐம்பது ரூபாவுக்கு மேல் இருந்தது. அதை எடுத்துக் கொண்டு அந்தப் பணம் பெற்றுக் கொண்டதற்கு ரசீது எழுதப் போனான் அவன். அப்போது ஒரு சந்தேகம் அவனுக்கு. யார் பெயருக்கு ரசீது எழுதுவது? அவளிடம் அதனைப் பற்றிக் கேட்டான். அவள் தன் தந்தை பெயருக்கு எழுதச் சொல்லிட அவனும் எழுதி ரசீதை அவளிடம் கொடுத்து விட்டு அவளையே பார்த்தான். அவளும் பார்த்தாள். ஓ... அந்த இருவரின் பார்வை வேகமும் ஆழமும் இருவரின் நெஞ்சிலும் மாறிமாறி தொடர்ந்து ஓடியும்...

அப்போது அந்தப் பார்வை சிங்காரத்தின் நெஞ்சில் ஆழமாகப் பதிந்தது. அவளின் நெஞ்சிலும் அதே கதை தான். அவள் ஓரக்கண்ணால் சிங்காரத்தின் அழகை ரசித்தாள். எடுப்பான முகம். கறுப்பும் வெள்ளையும் இல்லாத கலவை நிறம், சுருள் சுருளான முடி... நல்ல உயரம், விரிந்த மார்பு இதற்கெல்லாம் மேலான களங்கமற்ற முகம். இயல்பான பேச்சு. அவளைப் படைத்த கடவுள்தான் இவனையும் படைத்திருக்கின்றான். அவளைப் படைக்கும் போது என்ன உணர்வு இருந்ததோ அதே உணர்வுதான் இவனைப் படைக்கும் போதும் இருந்திருக்க வேண்டும்.

அங்கிருந்து போவதற்கு முன்னர் அவளின் பெயரை அறியத் துடித்தான். ஆனால் எப்படி அறிவது? நேரில் கேட்க முடியாது. கேட்டால், கூட வந்திருப்பவர்கள் 'ஏதும்' நினைப்பார்கள். ரசீது போடும் போது அவள் பெயரைக் கேட்டிருக்கலாம். ஒரு கணம் யோசித்து நின்ற போது அந்த வீட்டின் உள்ளே இருந்து ஒரு குரல் வந்தது. "மாலினி.... மாலினி....."

ஓ...! அவள் பெயர் மாலினி...

அவளிடம் கேட்காமலேயே பெயரைத் தெரிந்து கொண்டாயிற்று.

ஒரு வாழைத்தாரைக் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு வெளியே வந்தாள் மாலினியின் அம்மா.... மாலினி ஓடிப் போய் ஒரு பக்கமாய் வாழைத் தாரை தாங்கினாள்.. பிறகு இரண்டு பேரும் சேர்ந்து மெதுவாக வாழைத் தாரைத் தூக்கி சிங்காரத்தின் அருகே இறக்கி வைத்தார்கள். கோயில் அன்னதானத்திற்கு அந்த வாழைத்தாரை வைத்துக் கொள்ளச் சொன்னாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலினியின் அம்மா.... சிங்காரத்தோடு கூட வந்தவர்கள் வாழைத்தாரைத் தூக்கிக் கொண்டார்கள். சிங்காரம் நன்றி தெரிவிக்கும் நோக்கில் மாலினியையே பார்த்தான். அவளும் அவனையே பார்த்தாள். அப்புறம்? அந்தப் பகுதியில் போகும் போதும் வரும் போதும் பார்த்து பார்த்து பார்வையிலேயே பேசிக் கொண்டார்கள்.

## 5

அன்று தேர்த்திருவிழா. வீட்டில் சொல்லிவிட்டு பக்கத்து வீட்டுக்காரர்களுடன் தோட்டத்துக்கு வந்திருந்தாள் மாலினி. கோயில் வெளிவீதியில் தேர் பவனிக்குத் தயாராக நின்று கொண்டிருந்தது. தேரின் மேலே கலசத்திலும் கலசத்திற்கு கீழேயும் பூட்டப்பட்டிருந்த கலர் பல்புகள் அவளைப் பார்த்துவிட்டு 'கண்' அடித்துக் கொண்டே இருந்தன.

தேர் அலங்காரம் இந்த தடவை விஷேசம் என்று கூடியிருந்தவர்கள் பேசிக் கொண்டார்கள். அது சிங்காரத்தின் காதிலும் விழுந்தது. தான் மேற்கொண்ட தேர் அலங்காரத்திற்கு கிடைத்த பரிசாக அதை நினைத்தான். இம்முறை அந்தத் தேரை அலங்கரித்தவனே அவன்தான்.

கோயிலைச்சுற்றி ஒரு கூட்டம் கூடியிருந்தது. மூலஸ்தானத்தில் இருக்கிற அம்மனுக்கு அர்ச்சனையும் பூஜையும் செய்ய ஒரு கூட்டம் வரிசையில் நின்றது. கடவுளுக்குக் கூட திருவிழாக் காலத்தில் மட்டும்தான் மதிப்பு போலும்! ஏனைய நாட்களில் கூட்டமே இருக்காது. இன்றோ பொது மக்கள், தவறு பக்தர் கூட்டம் அவளைத் தரிசிக்க முட்டி மோதியது. தேர் பவனிக்கு இன்னமும் அம்மன் தயாராகவில்லை. ஆனால் அதற்குள் வாத்தியக்குழுவினர் தேர் பவனி நடப்பது போன்ற ஒரு பிரமிப்பை ஏற்படுத்தினர். கோயில் கோபுரத்தில் பொருத்தப்பட்டிருந்த ஒலிபெருக்கி நாதஸ்வர இசையை வெளியே விட்டுக் கொண்டிருக்க இங்கே கோயிலுக்கு வெளியே வேறுவேறு முழக்கங்கள் – இசைகள் கிளம்பிக் கொண்டிருந்தன. விதவிதமான வாத்தியங்கள்... ஆட்டங்கள்... ஒவ்வொரு ஆட்டக்குழுக்களும் தங்கள் கடமையைச் செய்து கொண்டிருந்தன. திருவிழா பார்க்க வந்தவர்கள் தங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரசனைக்கு ஏற்றதைப் பார்த்தும் கேட்டும் இருந்தார்கள். ஆங்காங்கே சிறு பெரு வட்டங்கள் ஏற்பட்டிருந்தன. அந்த வட்டத்திற்குள் காவடி, கரகங்கள், பொய்க்கால் குதிரை ஆட்டம், உறுமி மேளம், கிளாரினட், அனுமார் ஆட்டம் இப்படி பல நடந்து கொண்டிருந்தன.

சிங்காரம் எல்லாக் கோஷ்டியின் ஆட்டங்களையும் பார்த்து விட்டு பொய்க்கால் குதிரை ஆட்டம் நடக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தான். அங்கு தான் கூட்டம் அதிகம். அதற்கு காரணம் என்ன என்பதை அங்கு நின்ற சில விநாடிகளிலேயே புரிந்து கொண்டான். பொய்க்கால் குதிரைகளில் ஆணும் பெண்ணும் ஆடிக் கொண்டிருந்தார்கள். இரண்டு ஜோடிக் குதிரைகள் ஆடின. குதிரைகளுக்குள் இருக்கிற அவர்களின் கால்கள் என்னமாய் நிலத்தில் ஆடுகின்றன! அவர்களின் உடைகள் – அலங்காரங்கள் சரித்திரக்கதைகளில் வருகின்ற ராஜா – ராணிக்குப் போன்று இருந்தன. லைட் வெளிச்சத்தில் அவர்கள் உடைகள், முகங்கள் மின்னின. சிங்காரம் – அவன் மட்டுமா? அந்தக் கூட்டமே பொய்க்கால் குதிரையில் ஆடுகிற பெண்களை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தது. ஓ... என்ன அழகு?... என்ன உடல் கட்டு?... சின்ன இடை பெருத்த மார்பகம்... அரை குறை துணிகள்... அந்தப் பெண்கள் ஆடும்போது அந்த மார்பகங்களும் ஆடின...

சிங்காரம் தன்னை மறந்து அந்த ஆட்டத்தையே ரசித்துக் கொண்டிருந்தவன், திடீரென்று அந்த ரசனையில் இருந்து விடுபட்ட அந்த ஒரே ஒரு விநாடியில் அங்கே பெண்ணாய் ஆடுபவர்கள் நிஜமான பெண்கள் அல்ல பெண்வேஷம் போட்ட ஆண்கள் என்பது நினைவுக்கு வரவே சோர்ந்து போனான்.

அந்த ஆண்கள் பெண்களாய் வேஷம் போட்டு ஆடும் போதும் அவர்களைப் பார்க்கிற போதும் அவர்கள் பெண்களை விட அழகானவர்கள் என்று தான் நினைத்தான். அந்த நினைப்பு அவன் நினைப்பு மட்டுமல்ல அந்தக் கூட்டமே அப்படித்தான் நினைத்தது!.

சிங்காரம் அந்தப் பொய்க்கால் குதிரைக்காரர்களையே பார்த்துக் கொண்டிருந்தான்.... அவ்வப்போது அந்தக் குழுவினர் சோடா குடிக்கவும் – ஆடிய களைப்பில் முகங்களில் வியர்த்த வியர்வைகளைத் துடைக்கவும் – 'மேக்கப்' போடவும் சிறிது நேரம் ஓய்வு எடுத்தார்கள். அந்த நேரத்தில் அவர்களுக்குப் பார்க்க வேண்டுமே ராஜமரியாதையை! சிலர் அவர்கள் குடிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோடா வாங்க ஓடினார்கள். சிலர் அவர்கள் இடுப்பில் இருந்த குதிரை உருவ பொம்மையை கழட்டியதும் அதை தூக்கி வைத்துக் கொள்ள ஓடினார்கள்... சிலர் அவர்கள் அழகை கிட்ட இருந்து ரசிக்கப் போனார்கள்.

பெண்களாய் வேஷம் போட்டிருப்பவர்களைக் கூட்டமாய் நெருங்கவும் உரக்க சத்தம் போட்டான், ரங்கையா... "தள்ளி நில்லுங்க... தள்ளி நில்லுங்க..."

அந்த ரங்கையா அந்தக் குழுவினர் ஆடி முடியும் வரையில் அவர்கள் ஆடவும் வீதிகளில் நகரவும் சத்தம் போட்டு வசதி செய்பவன்... ஆடுபவர்களின் தாகத்திற்கு தெரிந்தவர்களைப் பிடித்து குளிர்பானம் வாங்கிக் கொடுப்பவன் இந்தக் குழுவினர் ஆடிமுடியும் வரை அவர்கள் பின்னாலேயே சம்பளம் இல்லாமல் சேவை செய்பவன்..அவர்கள் ஆடும்போது அவனும் ஆடுவான். சில நேரத்தில் குதிரைப் பொம்மை இல்லாமல் ஆடும் பெண் வேஷக்காரர்களோடு சேர்ந்து ஆடுவான். அந்த வட்டாரத்தில் அவர்கள் எந்த திருவிழாவுக்கு வந்தாலும் அவன் அவர்களோடு தான் இருப்பான்.

குதிரை இல்லாமல் நின்ற பெண் வேஷம் போட்டவன் ' மேக்கப்' முடித்துக் கொண்டு நின்றபோது ரங்கையா அவன் அருகே நெருங்கி அவள் கழுத்தைச் சுற்றி தன் இருகரங்களைப் போட்டு அவளின் மார்பகங்கள் அவன் நெஞ்சைக் குத்திட நின்றான். அவனைப் பொறுத்த வரையில் அவன் ஆண் அல்ல நிஜமான பெண்!.

ரங்கையாவின் அந்த வேடிக்கையைப் பார்த்துக் கூட்டமே 'ஊய்' என்று விசில் அடிக்கவே சிங்காரம் சிரித்துக் கொண்டே பக்கத்தில் திரும்பிப் பார்த்தான். பக்கத்தில் மாலினி நின்று கொண்டிருந்தாள். அவனைப் பார்த்த மாத்திரத்தில் அவள் முகத்தில் ஒரு பிரகாசமும் புன்னகையும் போட்டி போட்டுக் கொண்டு குடியேறின. பதிலுக்கு புன்னகைத்தான் சிங்காரம். மறுபடியும் பொய்க்கால் குதிரை ஆட்டம் தொடங்கியது. குதிரைக்குள் இருந்தவர்கள் சினிமாக் காதலர்கள் போல் கொஞ்சியவாறு ஆடினார்கள். அவர்களோடு சேர்ந்து ரங்கையாவும் ஆடினான்.

சிங்காரம் மெள்ள அவள் காதுக்குள் விழும்படியாக சிங்களத்தில் சொன்னான். "ஓ...! என்ன அழகு! பொம்பளையாக ஆடுபவன் நிஜமான பெண்ணாக இருந்தால் அவளத்தான் கல்யாணம் கட்டுவேன்!".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது அவள் மெல்லக் கேட்டாள். "என்ன விடவா அந்த வேஷம் போட்டவன் அழகா இருக்கிறா?" அவன் எதிர்பார்க்கவே இல்லை. அந்தக் கேள்வியை அவள் கேட்டதன் உள் அர்த்தத்தைப் புரிந்து கொண்ட அவன், தனக்கு அவன் மீது ஏதோ ஒரு உணர்வு தோன்றியிருப்பது போல் அவளுக்கும் அவன் மீது ஏதோ ஒரு உணர்வு தோன்றியிருக்கவே செய்கிறது என்பதை உணர்ந்தான். தேர்த்திருவிழா வசூலுக்கு போனபோது பார்த்த அன்றே அவள் முகத்தை தன் நெஞ்சுக்குள் பதித்துக் கொண்டான்.

அதன் பின்னர் அவளோடு பேச வேண்டும் – அப்படியே பேசியே தன் நெஞ்சைக் காட்ட வேண்டும் என்று நினைத்தான். ஆனால் எப்படி பேசுவது? எப்போது போவது என்பது மட்டும் அவனுக்குத் தெரியவில்லை. இப்போதோ அவளே அதற்கு பச்சை விளக்கு காட்டிவிட்டாள். அவன் அவளுக்கு பதில் சொன்னான். "அட நான் ஒரு ஜோக்குக்கு சொன்னேன்".

அவள் மெல்ல அவனைப் பார்த்து புன்னகைத்து விட்டு மறுபடியும் அந்த ஆட்டத்தில் லயித்தாள்.

அவன் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு அவளுடைய தோளை தன் கையால் தடவி 'கண் சாடை' காட்டி விட்டு அந்தக் கூட்டத்தை விட்டு வெளியே நகர்ந்தான். அவனுடைய அந்த செய்கையின் அர்த்தத்தைப் புரிந்து கொண்ட அவள் அந்தக் கூட்டத்தைவிட்டு மெல்ல வெளியே வந்தாள்.

சிங்காரம் மெல்ல பகல் அன்னதானம் நடந்த இடத்திற்குப் போய் அன்று இரவு அன்னதானம் சமைக்க அமைத்திருந்த கொட்டகைக்குள் நுழைந்தான். மாலினியும் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு அவன் பின்னே போனாள். இப்போது இருவரும் அந்த கொட்டகைக்குள்....

சிங்காரம் அவளின் கைகளைத் தடவியவாறு சொன்னான்... "நான் உன்னை காதலிக்கிறேன்".

மாலினி "நானும் தான்" என்றாள்.

இருவரும் ஒருத்தரை ஒருத்தர் கட்டிப்பிடித்துக் கொண்டபோது தேரில் இருந்த ஒலிபெருக்கி அவனை அழைத்தது. அவன் அவளிடம் சொல்லிவிட்டு கொட்டகையை விட்டு வெளியே வந்து சிறிது தூரம் நடந்து ஓடினான். மனதுக்குள் பெரும் வேதனை... அவளோடு நன்றாக பேசவில்லை. அவளைக் கட்டிப்பிடித்து... அதற்குள் பிரிவு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று முழுநாளும் அவளை மறுபடியும் தனியே சந்திக்க முடியவில்லை. அன்று மட்டுமல்ல அதன் பின்னர் பலநாட்கள், பல மாதங்கள் தனியே சந்திக்க முடியவில்லை. அதற்கான சந்தர்ப்பமும் கிடைக்கவில்லை. ஏங்கிப் போன அவன் அவளைப் பார்வைகளால் சந்தித்து திருப்தியடைந்தான். பல மாதங்கள் இந்தக் கதை தொடர்ந்தது.

அப்போதுதான் வெசாக்[1] வந்தது. தோட்டத்துக்குப் பக்கத்தில் இருக்கிற சிங்கள கிராமத்தில் ஒரு பௌத்த விகாரை இருந்தது. அந்த விகாரையில் வெசாக்கிற்கு புத்தர் பெருமானின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் சித்திரங்கள் அடங்கிய பந்தல் போடப்பட்டிருந்தது. பந்தலை கலர் பல்புகள் வெளிச்சம் கொடுத்து ஜொலிக்க வைத்தன. அந்தப் பந்தலைப் பார்க்க அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் கூட்டமாக கூடியிருந்தார்கள். மாலினியும் வந்திருந்தாள். சிங்காரமும் வந்திருந்தான். மாலினியோடு அம்மாவும் வந்திருந்தாள். சிங்காரம் பந்தலை ரசிக்காமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு சந்தர்ப்பம் வாய்க்கும் போது மெல்ல அவளைக் கூப்பிட்டான்.

அவள் மெல்லக் கேட்டாள்... "ஏன் கூப்பிட்டீங்க?".

ஏன் கூப்பிட்டான் என்பது அவளுக்குந்தான் தெரியும். பதில் சொல்லாமல் புன்னகைத்தான். அவள் அவசரப்பட்டாள், "நான் அம்மாவோடு வந்திருக்கிறேன்."

"அப்படியென்றால் என்மேல் விருப்பம் இல்லை போலும்!..."

"விருப்பம் இல்லாவிட்டால் வருவேனா?"

அவன் மெல்ல நகர்ந்தான் அவள் அம்மாவுக்குத் தெரியாமல் நழுவிப்போனாள்.

இருவரும் பௌத்த விகாரைக்குப் பின்புறம் போனார்கள். அந்த பௌத்த விகாரை கற்பாறைகளுக்கு இடையே அமைக்கப்பட்டிருந்தது. புராதன காலம் சம்பந்தப்பட்ட விகாரை என்பதால் பல இடங்களை நவீனப் படுத்தாமல் அப்படியே வைத்திருந்தார்கள். சாதாரண வெளிச்சம் தரும்

1. புத்தமதப் பண்டிகை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்புகளே எரிந்து கொண்டிருந்தன. அவர்கள் அங்கே போனபோது எவரும் அங்கே இல்லை. ஏகாந்தமான ஒரு . தனிமை நிலவியது. அது அவர்களை எங்கோ அழைத்துச் சென்றது.

மாலினியின் முகத்தை உற்றுப் பார்த்த சிங்காரம் தன்னையே மறந்தவனாக மாலினியை அணைத்து முத்தமிட்டான். ஆனால் மாலினி அந்த சுகானுபவத்தில் இருந்து திடீரென்று தன்னை விடுவித்துக் கொண்டு ஒரே ஓட்டமாக ஓடிப் போனாள். அவனுக்கு அப்போது கிடைத்த அந்த சொர்க்கானுபவம் நீண்டு நிலைக்காமல் கனவாகப் போய்விட்டது.

✂ ✂ ✂ ✂

"மாலினி தூக்கமா?"என்று கேட்டபடியே சிங்காரம் மீண்டும் உள்ளே வந்தான். அவள் தான் 'தூங்கவில்லை' என்று சொல்வது போல் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள். சிங்காரம் அவள் அருகே வந்து அவளை நெருங்கி உட்கார்ந்து சொன்னான்.

"நான் எவ்வளவோ சொல்லியும் நீ கேக்கலியே!... எவனோ எதையோ சொன்னதுக்காக நானும் நீயும் ஏன் கவலப்படணும்?...".

அவன் அவள் மொழியில் பேசினான்.. பிறகு அவளையே பார்த்தான். அவனுடைய பார்வை அவள் மீது படப்பட அவனுள்ளே ஓர் உணர்வு கிளர்ந்தது. அவளின் முகமும் அந்தக் கவர்ச்சி கண்களும் சீத்தை துணிகளுக்குள்ளே விம்மி பெருத்துக் கிடக்கிற மார்பகங்களும் அவனை என்னமோ செய்தது. அவள் கவுன்தான் உடுத்தியிருந்தாள். அனால் அவன் தன்னை அடக்கிக் கொண்டு அவளுடைய கன்னத்தை 'லேசாகத்' தட்டினான். அவன் கைகள் பட்டதுமே அவளின் முகம் 'சிவப்'பெடுத்தது, அந்த குப்பிலாம்பு வெளிச்சத்தில் நன்றாகத் தெரிந்தது. ஓ....!அந்தக் கன்னத்தில் எத்தனை இரவுகள் எத்தனை முறை தன் இதழை பதித்து உடலோடு உடலாய் ஒன்றிப் போயிருந்தான்.

அவனுடைய பார்வையின் அர்த்தத்தைப் புரிந்து கொண்ட மாலினி அதற்கு இதுவல்ல நேரம் என்பதாய் அவனை விட்டு விலகி 'என்ன விசயம்?' என்பது போல் பார்த்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நா காவல் காக்க போறேன் உன்னால முடியும்னா ஒரு கேத்தல்[1] நெறைய டீ ஊத்தி தா... எல்லாரும் குடிக்கணும்"

மாலினி அடுப்பு பற்ற வைக்கப் போனாள்.

சிங்காரம் அந்த அறையில் கிடந்த பழைய டிரங்க் பெட்டியைத் திறந்து டிரான்ஸிஸ்டர் ரேடியோவை கையில் எடுத்துக் கொண்டு, அது வேலை செய்கிறதா என்று சரிபார்த்துவிட்டு, அது வேலை செய்யவும் வெளியே புறப்பட்டான். புறப்படும் முன்னர் மாலினி காதில் விழுகிற மாதிரி சொன்னான்.

"மாலினி! நா முத்தையா காம்பராவுல இருக்கிறேன். நீ டீயை ஊற்றி எடுத்துட்டு வா...."

காம்பரா வாசலில் காவல் காக்கத் தெரிவு செய்யப்பட்டவர்கள். பிச்சைக்கிழவன் என்று சிறு கூட்டமே கூடியிருந்தது. சிங்காரத்தின் டிரான்ஸிஸ்டர் ரேடியோ வேலை செய்தது.

அப்போது இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன தமிழ்ச் சேவை ஒன்றில் முஸ்லீம் நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது. ஒன்பது மணிக்கு இன்னும் ஐந்து நிமிடமே இருந்தது. அங்கிருந்த அத்தனை பேரும் காதை ரேடியோவில் வைத்துக்கொண்டிருந்தார்கள்.

## 6

சிங்காரத்தின் டிரான்ஸிஸ்டர் ரேடியோ செய்தி சொல்லத் தொடங்கியது.

"நேரம் ஒன்பது மணி. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் செய்திகள் வாசிப்பவர் நடராஜன். தென்னாப்பிரிக்காவில் பெரும்பான்மை மக்களான கறுப்பர்களுக்கு எதிராக சிறுபான்மை வெள்ளையர் அரசு காட்டி வருகிற இனவெறிக் கொள்கையைக் கண்டித்து இலங்கை, ஐக்கிய நாடுகள் சபையில் பேசியது. புத்தர் பெருமானின் தர்மத்தின் அடிப்படையில் இலங்கை வாழ்

1. Kettle

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல இன மக்களின் பிரச்சனைகளையும் இந்த அரசாங்கம் தீர்த்து வைக்கும் என்று ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தனா நேற்று கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கொன்றை ஆரம்பித்து வைத்தபோது குறிப்பிட்டார். இந்தியாவில் பீகார் மாநிலத்தில் ஹரிசனங்கள் பலர் அங்கு இடம் பெற்ற இனக் கலவரத்தில் உயிர் இழந்தனர் என்று புதுடில்லி செய்தியொன்று கூறுகிறது..."

"சிலோன்ல நடக்கிறத சொல்லாம தென்னாப்பிரிக்காவுக்கும் பீகாருக்கும் போரானுக... கள்ளப் பயலுக... இங்க ஊரே எரியுது... அத பத்தி சொல்ல மாட்டானுகளே!"

எதிர்பார்த்த செய்தி இல்லாததால் பொறுமித் தள்ளியது ஒரு குரல்.

"அட யாரது? செய்தி போற நேரம் குறுக்க பேசுறது.... என்னதான் சொல்றான்னு பார்ப்போம். அது வரைக்கும் யாரும் பேசாதீங்கப்பா...."

பிச்சைக் கிழவன் சத்தம் போட்டான்.

"அட நீ ஒன்னு 1958 லேயே இப்புடித்தான் நடந்த கலவரத்த பத்தி மூச்சு விடல்ல இப்பவும் அப்புடித்தான் இருக்கும். தமிழன் அடிபட்டு செத்தா சொல்லவா போறான்?.... அவன் ஆளுக செத்தா விடிய விடிய சொல்லுவான்..."

பேச்சி முத்து தன் அனுபவத்தை சொன்னான்.

1958 ல் தமிழர்களுக்கு எதிராக, இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் ஒரு பெரிய இனக்கலவரம் நடந்தது. இன்று போல் அன்றும் ரேடியோவில் காதை வைத்துக் கேட்டான் பேச்சிமுத்து. அன்றும் செய்தியில் எதுவுமே சொல்லவில்லை.

சிங்காரம் அந்த விவாதத்தை முடிப்பது போல் சொன்னான்... "கொஞ்சம் பொறுங்க.... கடேசியில சொன்னாலும் சொல்லுவான்." அதற்கு பிறகு யாவரும் மௌனமாக இருந்தார்கள். செய்தி போய்க் கொண்டிருந்தது.

தென்னாப்பிரிக்காவைத் தொட்டு பீகாரை எட்டிப் பிடித்து அமெரிக்காவில் நடந்து, ரஷ்யாவில் முடிந்தது செய்தி. அவர்கள் எதிர்பார்த்த செய்தியே வரவில்லை. கடைசியில் செய்தி முடிந்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்காரம் அந்த மீட்டரை நகர்த்தப் போனபோது தான் அது கேட்டது. அவன் மீட்டரை நகர்த்தவில்லை. "அரசாங்கம் விடுத்திருக்கும் அறிவித்தல்... அரசாங்கம் கண்டி, மாத்தளை, கேகாலை, அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் இன்று நள்ளிரவு 12 மணி முதல் ஊரடங்கு உத்தரவை அமுல் படுத்துவதென தீர்மானித்துள்ளது. மேற்படி மாவட்டங்களில் நாளை முதல் இரவு 9 மணி தொடக்கம் அதிகாலை 6 மணி வரை ஊரடங்கு உத்தரவு அமுல் செய்யப்படும். நாட்டின் சில பகுதிகளில் கலவரங்களை நடாத்த சில விஷமிகள் திட்டமிட்டிருப்பதாக அரசுக்கு தகவல் கிடைத்ததையிட்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இதுவரை அரசாங்கம் விடுத்திருக்கும் அறிவித்தலைக் கேட்டீர்கள்".

"பார்த்தீங்களா... இப்புடிதான் உண்மையை சொல்லாம முழுங்குவானுக" என்றான் பேச்சிமுத்து.

"ஈந்தியா நியூஸ்ல ஏதாவது சொன்னானா?"அது ராமசாமி. அவனுக்கு எப்போதும் இந்தியா மீது ஒரு பாசம். நாடற்றவர் பிரச்சனையில் இந்தியா போகத் தீர்மானித்தவன்.

"சிலோன் ரேடியோவிலேயே சொல்லல்ல. இந்தியா ரேடியோவிலயா சொல்ல போறானுக!" இது ஒரு குரல்...

ஒரு மௌனம் தற்காலிக முற்றுப் புள்ளியாய் அங்கே விழுந்தது.

மாலினி ஒரு கேத்தல் நிறைய 'டீ' ஊற்றிக் கொண்டு வந்தாள். 'டீ' குடிக்க கிளாஸ்களும் வந்தன. எல்லோரும் 'டீ' குடித்தபோது நாய்கள் ஆங்காங்கே சத்தம் போட்டுக் கொண்டே இருந்தன.

கறுப்புத்துணியை விரித்தது போன்ற இருட்டு. வானத்தில் எண்ணிப் பார்க்கக் கூட நட்சத்திரங்கள் இல்லை.

தூரத்தில் எவரோ நடந்து வருவது போன்று இருந்தது. காம்பராவில் இருந்தவர்கள் கவனம் வெளியே கிளம்பியது. அந்த லயத்துக்கு வருகிற படிக்கட்டுப் பகுதியில் டோர்ச் லைட் வெளிச்சம் கீழே இருந்து மேலே ஆடி வருவது தெரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாரோ வர்ராங்க..."

சிங்காரம் வெளியே போய் நின்றான். கையில் டோர்ச் லைட் இருந்தது. அந்த டோர்ச் லைட் டைக் குறிப்பாக அந்தப் படிக்கட்டு மேலே வருகிற இடத்தில் அடித்தான். சில விநாடிகளில் டோர்ச் லைட்டோடு பணிய லயத்து ஆறுமுகம் வருவது தெரிந்தது. சிங்காரம் தன் டோர்ச்சை லைட்டை அணைத்துவிட்டு ஆறுமுகத்தின் அருகே போய் அவனோடு சேர்ந்து நடந்தவாறு கேட்டான்.

" என்ன திடீர்னு இந்த நேரத்தில..."

"உங்களயெல்லாம் பார்த்து நடப்பு என்னான்னு விசாரிக்கவும் வந்தேன்." ஆறுமுகம் பதில் கொடுத்தான்.

அவர்கள் இருவரும் அந்தக் காம்பராவிற்குள் நுழைந்தார்கள். பிச்சைக்கிழவன் ஆறுமுகத்தை வரவேற்றான்.

"வா... ஆறுமுகம்! நல்ல நேரத்திலதான் நீ வந்திருக்கே?" என்று சொல்லிவிட்டு காம்பராவில் இருந்தவர்களைப் பார்த்து சொன்னான் அவன்... "நம்ம ரிப்போர்டர் வந்திருக்காரு.... அவரை கேட்டா விசயம் தானா வருது! சிங்காரம் ரேடியோவை நிப்பாட்டப்பா!....."

சிங்காரம் டிரான்ஸிஸ்டரை நிறுத்திவிட்டு ஆறுமுகத்தைப் பார்த்தான். ஆறுமுகத்தின் முகத்தில் தெளிவில்லை. கவலை ரேகைகள் மிதந்தன.

ஆறுமுகம் சுற்றும் முற்றும் பார்த்து விட்டு மெள்ளமாய் பேசினான்...

"ஏழரை மணிக்கு பிலிப்பைன்கிற நாட்டுல இருந்து ஒரு நியூஸ் தமிழ்ல வருது... அதை தெனம் நான் கேப்பேன். நேத்து கேட்டேன். இங்க நடக்கிறதை அப்படியே சொன்னான். நேத்து ரத்தினபுரி, பலாங்கொடை, நீர் கொழும்பு, காவத்த - இந்த ஊர்கள்ல இருக்கிற தமிழ் கடைகளை, வீடுகளை கொள்ளையடிச்சி நெருப்பு வைச்சிட்டானுகளாம். அம்பலாங்கொடங்க ஊர்ல ஒரு பஸ்ஸ நீப்பாட்டி அதில இருந்த ரெண்டு தோட்டத்து தமிழ் ஆள்கல வெளியே இழுத்து அவங்க தலையில பெட்ரோல் ஊத்தி நெருப்பு வைச்சானுகளாம்.. ஆயிரக்கணக்கானவங்க அகதிகளா கண்டி, பண்டாரவள, கொழும்பு ஆகிய ஊர்கள்ல கோயில்ல ஸ்கூல்ல இருக்கிறாங்களாம்....."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிச்சைக்கிழவன் கவலைப்பட்டான். "அப்ப இது லேசில நிக்காது போல இந்த கலவரம்."

"எல்லாம் இந்த யாழ்ப்பாணதான்களால தான் இந்த கலவரம்...! அவனுக நாட்டை பிரிச்சி கேக்க போயி இங்க சும்மா இருக்கிற அப்புராணி மக்கள புடிச்சி கொல்றானுக..."

ராமசாமி தனக்கு தெரிந்த அரசியலை ஆவேசமாகவே கக்கினான்.

ஆறுமுகம் உடனே அவனைக் கண்டித்தான். "வெவரம் தெரிஞ்சு பேசு ராமசாமி... 58 ல நாட்டை பிரிச்சா கேட்டாங்க? அப்ப ஏன் கலவரம் வந்திச்சி? சரி... ஒரு பேச்சுக்கு... அவங்க நாட்டை பிரிச்சி கேட்டா நம்மள ஏன் அடிக்க வரணும்? நம்மள அவங்களுக்கு யாருன்னு யாழ்ப்பாணத்தானா – மலைநாட்டானான்னு அடையாளம் தெரியாதா? 49 ல பிரசாவுரிமை சட்டம்[1] கொண்டாந்த நேரம் யாழ்ப்பாணத்தான் யாரு மலைநாட்டு தமிழன் யாருன்னு அடையாளம் தெரிஞ்சி சிட்டிசன் இல்லாம செஞ்சானுக. இப்ப தெரியலியோ?..."

அப்போது ஒரு குரல் ஆவேசமாக குறுக்கிட்டது. "இந்த பிரசாவுரிமை சட்டத்தை யாழ்ப்பாணத்தான் தானே சிங்களவனுக்கே சொல்லி கொடுத்தான்?"

ஆறுமுகம் பதிலுக்கு பதில் கொடுக்க வேண்டியதாயிற்று.

"எல்லா யாழ்ப்பாணத்து ஆள்கலயும் அப்படி சொல்லக்கூடாது. இந்த பிரசாவுரிமை சட்டத்த மந்திரி பதவிக்காக ஜி.ஜி. பொன்னம்பலமும் வேற சிலரும் சப்போட் பண்ணினாங்க... ஆனா அன்னைக்கே இந்த சட்டத்த தீவிரமா எதுத்தாரு செல்வநாயகம். அவர் யாரு? அவரும் யாழ்ப்பாணம்தான்... இதெல்லாம் அரசியல்... பொன்னம்பலம் செஞ்சது பெரிய துரோகம்தான்... அதுக்காக எல்லாரையும் குறை சொல்ல முடியுமா?... இதெல்லாம் அரசியல்! இதுக்கு ஒரு கதை சொல்றேன் கேளுங்க...!" என்ற ஆறுமுகம் அந்தக் கதையைச் சொல்லத் தொடங்கினான்.

---

1. 1949ல் சுமார் பத்துலட்சம் தோட்டத்து இந்தியத் தமிழர்களின் குடியுரிமை பறிக்கப்பட்ட சட்டமே பிரசாவுரிமைச் சட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு ஊர்ல ஒரு பெரிய காடு இருந்திச்சி. அந்த காட்டுல அழகான பெரிய மரங்கள் இருந்திச்சாம். ஒரு நா ஒருத்தன் அந்த காட்ட சுத்தி சுத்தி பார்த்தானாம். அப்ப எல்லா மரமும் ஒண்ணும் புரியாம கசமுசான்னு பேசிச்சாம். ஏன் இவன் சுத்தி சுத்தி வாரான்? அப்ப ஒரு வயசான மரம், அவன் கையில் ஒண்ணுமே இல்ல... அதனால பயப்பட வேணாம்ணு சொல்லிச்சாம்... அடுத்த நா அவன் மறுபடியும் அந்தக் காட்டுக்குப் போனானாம். இப்ப அவன் கையில கோடாலி இருந்திச்சாம். இதப் பார்த்த மரங்கள் நடுநடுங்கிச்சாம்... அப்ப அந்த வயசான மரம் இப்பவும் பயப்படாதீங்க... அவன் கையில கோடாலி மாத்திரம்தான் இருக்கு... இன்னமும் நம்ம சாதிக்காரன் அவனுக்கிட்ட இல்ல... அதாவது கோடாலி மாத்திரம்தான் இருக்கு... கோடாலிக் காம்பு இல்ல... அதனால பயப்பட வேணாம்... எப்ப நம்ம சாதிக்காரன் அதாவது கோடாலிக்கு காம்பு அவனுக்கிட்ட இருக்குதோ அப்பதான் நாம பயப்படணும்னு சொல்லிச்சாம்..."

"அடுத்த நா அவன் கையில கோடாலி காம்பு இருந்திச்சி. அப்ப அந்த வயசான மரம் இப்பதான் பயப்படணும்! நம்ம சாதிக்காரன் கோடாலியோட சேர்ந்திட்டான்... இனி நமக்கு கெட்ட காலம்ணு சொல்லி அழுதிச்சாம்... அப்புறம் அவன் வேகமா மரங்கள வெட்ட ஆரம்பிச்சான்... அத மாதிரிதான் அரசியல்ல ஒரே சாதி எதிரும் புதிருமா பிரிஞ்சி இருக்கிறது நல்லதில்ல... ஒரே சாதியில உள்ளவன வைச்சுதான் அந்தச் சாதியவே மட்டம் தட்டுவானுக..."

"வெள்ளக்காரன் ஆண்ட நேரம் நல்ல சாதி – மேல் சாதி – தாழ்ந்த சாதின்ணு பிரிஞ்சி இருந்ததை வைச்சி பிரிச்சி ஆண்டான். இப்ப சுதந்திரம் வந்தோன்ன தமிழ் பேசுகிற நம்மள யாழ்ப்பாண தமிழன் – மட்டக்களப்பு தமிழன் – மலைநாட்டு தமிழன் – வன்னி தமிழன் – கொழும்பு தமிழன்ணு பிரிச்சி அரசியல் நடத்திரானுக! ஒருத்தருக்கெதிரா இன்னொருத்தன தூண்டி விடுராங்க... இதல்லாம் ஆளும் வர்க்கத்தின் வேல... இது புரியாம நாம சண்டை போடுரோம். நீங்க நல்லா பாத்தீங்கன்னா இது தெரியும்... பதவிக்கு வர்ர கட்சியும் ஓட்டு வாங்கிரதைத்தான் பார்க்குது. பிரச்சனையை நிரந்தரமா தீர்க்க முன்னுக்கு வர்ரதே இல்ல... இந்த விசயத்தில எல்லா கட்சியும் ஒண்ணுதான்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிட்டிசன்சிப் சட்டத்த சேனநாயக்கா கொண்டு வந்தாரு. சிங்களம் மட்டும் சட்டத்த பண்டாரநாயக்கா கொண்டு வந்தாரு... இந்த ரெண்டுமே நாட்டை பிரிச்சிருச்சி...!"

ஆறுமுகம் ஒரு நீண்ட அரசியலை கதையாகச் சொல்லி முடித்தான். .. அதனை பிச்சைக் கிழவன் மனதால் ஏற்றான். ஆறுமுகத்தைப் பற்றி அவனுக்கு நன்றாகத் தெரியும். பத்தாம் வகுப்பு வரைதான் அவன் பள்ளியில் கற்ற கல்வியின் எல்லை... ஆனால் வெளி உலகில் உலக அறிவை விரித்துக் கொண்டவன். தினமும் பத்திரிகைகளை பார்ப்பான். நல்ல அறிவு நூல்களைத் தேடிப் பிடித்துப் படிப்பான். சகல தொழிற் சங்கங்களும் அரசியல் கட்சிகளும் வெளியிடுகிற பிரசுரங்கள், பத்திரிகைகள் யாவற்றையும் தேடிப் பிடித்து வாங்கிப் படிப்பான்... ஆனால் எந்தக் கட்சியென்றுதான் எவருக்கும் தெரியாது...

"இந்தக் கரச்சல் வேணாம்னுதான் இந்தியாவுக்கு போயிருவோம்னு பார்த்தேன்..." இது ஒருத்தன்.

"அட நீ ஒண்ணு! ஏதாச்சும் கலவரம் அது இதுண்ணு வந்ததும் இந்தியாவுக்கு போயிருவோம்னு சொல்ராங்க. கலவரம் கொறைஞ்சதும் இங்கயே இருப்போன்ணு சொல்வாங்க... ஒரு நெலையான பேச்சு இல்ல... நம்ம ஆளுகளுக்கு... அதனாலதான் இந்த கஷ்டம்..."

பிச்சைக்கிழவன் இப்படி சொல்லிவிட்டு தன் மகனை நினைத்துப் பார்த்தான். கிழவனுக்கு இந்தியாவுக்குப் போக வேண்டும் என்ற ஆசை... தன் மகனிடம் அதைப் பற்றி சொன்னான்... அவனோ இந்தியாவில் போய் என்ன செய்வது? இங்கேயே இருப்போம் என்று சொல்லிவிட்டான். கிழவன் அவன் விருப்பப்படியே தலையாட்டினான். பின்னர் 58ல் கலவரம் வந்ததும் இந்தியாவுக்குப் போய் விடுவோம் என்றான்... பிறகு கலவரம் முடிந்ததும் கலவரக் கதை மறந்து இங்கேயே இருப்போம் என்றான் மகன். அதை மனதில் நினைத்துக் கொண்டுதான் அவன் அவ்வாறு சொன்னான்.

"யாரையும் கொறை சொல்லி பிரயோசனம் இல்ல. என்னைக்கி வெள்ளக்காரன நம்பி இந்தியாவில இருந்து வந்தோமோ அன்னையில இருந்துதான் இந்த பிரச்சனை. வெள்ளக்காரனும் நமக்கு ஒரு முடிவு கட்டாம தனக்கு வேண்டியதை சுரண்டிகிட்டு சீமைக்கு போயிட்டான். அந்த நேரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்ம தலைவர் மாருக ஒண்ணும் பேசல்ல. சிங்களவனும் சொதந்திரம் கெடைச்சா போதும்ணு பேசாம இருந்திட்டு, சொதந்திரம் கெடைச்சதும் நம்ம கழுத்தில கத்திய வைச்சிட்டானுக. நம்ம ஆளுக இந்த நாட்டுல உசுரை குடுத்துப் பாடுபட்டாங்க... எத்தனையோ பேரு அதில செத்துப் போனாங்க. இங்க கார், பஸ், ரோடு, ரயில் ரோடு போட்டது யாரு? எல்லாம் நம்ம ஆளுகதான். அதில எத்தனையோ பேரு பலியாயிட்டாங்க. சிங்கமலை சொரங்க பாதையில போய் பார்த்தா தெரியும். செத்துப் போனவங்க பேரை அந்த சொரங்கத்தில எழுதி வைச்சிருக்காங்களாம்... முப்பது நாப்பது வருசம் தொடந்தாற்போல ஒரு கட்டிடத்திலோ ஒரு காணியிலோ இருந்தா அது இருக்கிறவங்களுக்கே சொந்தமாம்... ஆனா இந்த நாட்டுல 150 வருசத்துக்கு மேல இருந்த நம்ம ஆளுகள நாடற்றவனாக்கிட்டாங்க..."

ஆறுமுகம் உணர்ச்சிகரமாக ஆனால் உண்மையைத்தான் பேசினான். அவனுடைய தாத்தா கண்டிக்கும் – கொழும்பிற்கும் இடையே ரயில்பாதை வெட்டியபோது வெடி விபத்தில் செத்தார். அவரின் கதையை அப்பா சொல்லக் கேட்டவன் அவன்.

"சரி... சரி... பழச பத்தி பேசிப் பிரயோசனம் இல்ல... இனி நடக்கிரத பார்ப்போம்!"

பிச்சைக் கிழவன் அந்த அரசியல் கதையை முடித்து வைத்தான்.

## 7

இருட்டில் ஆங்காங்கே பதுங்கிக் கிடந்த நாய்கள் தங்களுக்குள்ளே ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டது போல தொடர்ச்சியாக ஊளையிடத் தொடங்கின... நாய்கள் ஊளையிடுவது வழக்கமானதுதான். ஆனால் மனித மனம் இன்று மட்டும் அதற்கு புது அர்த்தத்தை வரைந்து கொண்டது...

"சனியன் புடிச்ச நாய்க, ஏன்தான் ஊளையிடுதோ தெரியல்ல..." ராமசாமி அலுத்துக் கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிச்சைக் கிழவன் கேட்டான், சிங்காரத்தைப் பார்த்து... "நேரம் என்னப்பா?"

"ஒம்பதே முக்காலுக்கு இன்னும் அஞ்சு நிமிஷம் இருக்கு..." சிங்காரம் தன் கையில் இருந்த கைக்கடிகாரத்தில் மணி பார்த்துச் சொன்னான்.

"ஒம்பதே முக்காலுக்கு லண்டன் பி.பி.சி. யின் நியூஸ் கேக்கணும் மீட்டரை புடிங்க..." அவசரப்படுத்தினான் ஆறுமுகம்.

அங்கிருந்தவர்கள் சுறுசுறுப்பானார்கள். பிலிப்பைன்ஸ் ரேடியோவில் வந்த செய்திதான் பி.பி.சி. யிலும் வரப்போகிறது. ஒரே செய்திதான்... ஆனாலும் அவர்களுக்கு அதைக் கேட்பதில் ஒரு ஆத்ம திருப்தி. சிங்காரம் டிரான்ஸிஸ்டரை போட்டு மீட்டரைப் பிடித்தான். அச்சமயம் வேறு மொழியில் ஒலிபரப்பு நடந்து கொண்டிருந்தது. அதுவும் முடியும் நேரம் நெருங்கி விட்டதை அறிவிப்பாளரின் குரலில் காண முடிந்தது... சிலர் 'கசமுச'வென்று பேச ஆரம்பித்தார்கள். அவர்களின் பேச்சுச் சத்தம் டிரான்ஸிஸ்டரின் ஜீவநாடியை அமுக்கியது.

பிச்சைக்கிழவன் வழக்கம் போல கத்தினான்... "அது யாரப்பா பேசரது? கொஞ்ச நேரம் கம்னு இருக்க மாட்டீங்க! பேசி பேசிதானே நம்ம ஆளுக பொழப்பு இப்படியா போச்சி... இன்னுமா பேசிகிட்டு இருக்கணும்?"

கிழவனின் சத்தத்திற்குப் பின்னர் எவரும் வாய் திறக்கவில்லை. இப்போது டிரான்ஸிஸ்டரின் சத்தம் மட்டுமே கேட்டது. அந்த சின்னஞ்சிறு டிரான்ஸிஸ்டருக்குள்ளே லண்டன் பி.பி.சி. யின் தமிழோசை கிளம்பியது. அங்கிருந்தவர்கள் யாவருக்கும் 'லண்டன்ல பேசறது இதில எப்படி கேக்குது... வெள்ளக்காரன் மூளையும் மூளைதான்' என்று வியந்து கொண்டார்கள்.

நாதஸ்வர ஓசையைத் தொடர்ந்து கம்பீரமான ஒரு குரல்...

"இது லண்டன் பி.பி.சி. யின் தமிழோசை...". அடுத்தது குறள் இடம் பெற்றது. பின்னர் அன்றைய லண்டன் நாளேடுகளின் செய்திகளை வாசித்தார்கள். அதற்குப் பிறகு இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற கலவரங்களைப் பற்றிய ஒரு கண்ணோட்டம் நடந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இலங்கையின் பல மாவட்டங்களில் தமிழர்களுக்கு எதிரான கலவரம் நடந்திருக்கிறது. தமிழர்களின் வர்த்தக நிறுவனங்கள், வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டு நெருப்பு வைக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான தமிழர்கள் குடும்பம், குடும்பமாக அகதிகளாக ஆங்காங்கேயுள்ள அகதிகள் முகாமில் இருக்கிறார்கள். அரசாங்கம் கலவரத்தை அடக்க நடவடிக்கை எடுத்துள்ளது. பல மாவட்டங்களில் இப்போது ஊரடங்குச் சட்டம் போடப்பட்டுள்ளதாம். இத்துடன் இலங்கை கலவரங்களைப் பற்றிய கண்ணோட்டம் முடிந்தது...'

"சிலோன்ல நடக்கிற கலவரம் லண்டன் வரைக்கும் போயிருச்சா?" ராமசாமி வியந்தான்.

"மணி என்னா?" பிச்சைக் கிழவன் கேட்டான். 10537

"மணி சரியா பத்து..." ஆறுமுகம் சொன்னான்.

"சரி நேரமாச்சு..." என்ற கிழவன் சிங்காரத்தையும் மற்றவர்களையும் பார்த்து "நீங்க போயி மத்த வேலைகளைப் பாருங்க..." என்றான்.

சிங்காரம் டிரான்ஸிஸ்டரை நிறுத்தி, காம்பராவில் வைத்துவிட்டு வந்தான். ஆறுமுகம் எல்லோரிடமும் சொல்லி விட்டு பணிய லயத்தை நோக்கிப் புறப்பட்டான்...

பிச்சைக்கிழவன் "நான் காம்பராவுல படுத்திருக்கேன். முந்தி மாதிரி இல்ல... இப்ப வயசாகி போச்சி... நீங்க உசாரா இருங்க..." என்று சொல்லிவிட்டுப் போனான்.

சிங்காரமும் மற்றவர்களும் இரண்டாக பிரிந்தார்கள். ஒரு கோஷ்டி லயத்துக்கு வெளியே ரோட்டோரமாக காவல் காக்க, டோர்ச் லைட்டோடு கம்பு, கத்தி சகிதம் புறப்பட்டது. சிங்காரமும் மற்றவர்களும் லயத்தைச் சுற்றி காவல் காக்கத் தொடங்கினார்கள். வெகு நேரம் லயத்தைச் சுற்றி காவல் காத்த அவர்கள் சிறிது ஓய்வு எடுப்பதற்காக சிங்காரத்தின் காம்பரா வராந்தாவில் போய் உட்கார்ந்தார்கள்.

"காலெல்லாம் வலிக்குது... குளிர் காத்து வேற வீசுது... டீ குடிச்சா நல்லா இருக்கும். டீ கெடைக்குமா?" ராமசாமி தன் ஆசையை வெளியே அவிழ்த்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எல்லாத்துக்கும் டீதானே வேணும்" என்ற சிங்காரம் காம்பராவின் உள்ளே போனான்.

மாலினி படுக்கையில் கிடந்தாள். ஆனால் தூங்கவே இல்லை. அவனைக் கண்டதும் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள்.

"மாலினி! எல்லாரும் டீ குடிக்கணுமாம். ஒரு கேத்தல் டீ ஊத்தி தர முடியுமா?..."

மறுபேச்சே சொல்லவில்லை... "ஓ..." என்றவாறு மாலினி எழும்பி, அடுப்பறைக்குப் போனாள்.

சிங்காரம் அவளைப் பற்றி பெருமிதமாக எண்ணிக் கொண்டு வராந்தாவிற்கு வந்தான். மற்றவர்கள் குளிருக்கு இதமாக பீடியைப் பற்ற வைத்து 'தம்' அடித்துக் கொண்டார்கள். சிங்காரத்திடம் புகைக்கும் பழக்கம் இல்லை. அதனால் அவன் அவர்களை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

மனம்... தனக்குள் பேசிக் கொண்டது 'மாலினி ஒரு சிங்களப் பெண்ணாய் இருந்தாலும் இன்று அவன் மனதுக்கு ஏற்றவாறு நடக்கிறாள்... தன் தாயை, தகப்பனை, உறவினர்களை ஏன் சமூகத்தையே மறந்து இவனே எல்லாம் என்று வந்துவிட்டாள்... எத்தனையோ பிரச்னைகள் வந்த போதும் அவைகளை தாங்கி மறந்து, மனதுக்கு இதமாக நடக்கின்றாளே! எவ்வாறு தன்னை இப்படி மாற்றிக் கொண்டாள்? சிங்காரம் மேல் கொண்ட காதல்தான் காரணம்... அன்பு என்பது உள்ளத்தை மாத்திரம் நேசிப்பது. காதல் என்பது உள்ளத்தையும் உடலையும் நேசிப்பது... மாலினி சிங்காரத்தின் உள்ளத்தையும் உடலையும் நேசித்தாள்... அந்த நேசிப்புதான் அவனே எல்லாம் – அவனே உலகம் என அவளை நினைக்க வைத்து விட்டது... சிங்காரம் மாலினியை நேசித்தது உண்மைதான்... ஆனால் அந்த நேசிப்புக்காக சொந்தம், பந்தம் யாவற்றையும் உதறிவிடுகிற தைரியம் மட்டும் அவனுக்கு திட்டமிட்டு வரவே இல்லை... அதனை வெளிக் கொணர்ந்தது அப்பாதான்...'

ஒரு நாள்... மாலினிக்கும் சிங்காரத்திற்கும் ஏற்பட்டிருக்கிற காதல் விவகாரம் அவனுடைய அப்பாவிற்கு எட்டியது. அதனை எட்ட வைத்தது தோட்டத்து காவல்காரன் வீரையா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நெசமாத்தான் சொல்ரியா?... நம்ப முடியலியே...!"

"அவன் மற்ற புள்ளக மாதிரி இல்லியே... பீடி கூட குடிக்க மாட்டானே!... அவனா சிங்களத்திய..."

அன்று அவன் லயத்திற்குப் போனபோது அப்பா 'நெருப்பெடுத்து' க் கொண்டு நின்றார். சிங்காரம் அப்பாவிடம் மாலினியைக் காதலிப்பது உண்மையென்றும் – அவளைத்தான் திருமணம் செய்யப் போவதாகவும் சொல்லிவிட்டான்... ஒரு துணிச்சலில். அந்தத் துணிச்சல் எங்கிருந்து வந்ததோ?...

"அப்படீன்னா இந்த வீட்டுக்குள்ள நீ வரக்கூடாது... எங்கயாவது தொலைஞ்சி போ... என் மூஞ்சியில முழிக்காதே..." கோபத்தில் சத்தினார் அவர்.

சிங்காரம் மறுபேச்சு பேசாமல் அந்தக் காம்பராவை விட்டுப் போய்விட்டான். அதன் பின்னர் தோட்டத்து துரையிடம் சொல்லி, வேறு காம்பரா கேட்டு வாங்கி தனியாகக் குடியேறினான். அதன்பிறகு அப்பாவை சந்திக்கவே இல்லை. சரியாக ஆறு மாதத்திற்குப் பின்னர் அப்பாவை பிணமாகத்தான் சந்தித்தான் அவன்.

லயத்தை விட்டு வெளியே வந்தான் சிங்காரம். "சிங்காரம்! மத்தவங்களையும் கூப்புட்டா எல்லாருமா ஒண்ணா டீ குடிக்கலாமே!" பீடி குடித்தவாறே ஒருத்தன் யோசனை சொன்னான்...

"நானும் அதைத்தான் நெனைச்சேன்..." என்றவாறே டோர்ச் லைட் அடித்துக் கொண்டே லயத்துக்கு வெளியே காவல் காப்பவர்களைக் கூப்பிடப் போனான்... அவர்கள் ரோட்டோரமாக இருக்கிற ஒரு மரத்தடியில் லந்தாரத்தோடு நின்று கொண்டிருந்தார்கள். அவர்களை டீ குடிக்க கூப்பிட்டு அவர்களோடு சிங்காரம் லயத்திற்கு திரும்பினான். அவர்கள் லயத்திற்கு வந்தபோது ஒரு 'கேத்தல்' நிறைய டீயும் சில கிளாஸ்களும் இருந்தன... சிங்காரம் அங்கிருந்த கிளாஸ்களில் எல்லோருக்கும் 'டீ' ஊற்றிக் கொடுத்தான். பிறகு கடைசியாக தானும் ஒரு கிளாஸில் ஊற்றிக் கொண்டு அதைக் குடித்தவாறே சொன்னான் அவன், "நாங்க லயத்த சுத்திக்கிட்டு இருப்போம்... ஏதாவது பிரச்சனையின்னா விசில் குடுங்க... நாங்க பதில் விசில் குடுத்து வர்ரோம்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'டீ' குடித்து முடிந்ததும் மற்ற கோஷ்டி ரோட்டோரத்திற்குப் போயிற்று. அடுத்த கோஷ்டி லயத்தைச் சுற்றிக் கொண்டு இருந்தது. லயத்தைச் சுற்றிய கோஷ்டியில் எட்டு பேர் இருந்தார்கள். திடீரென்று சிங்காரம் அந்தக் கோஷ்டியை இரண்டாகப் பிரித்து எதிரும் புதிருமாக லயத்தைச் சுற்றச் சொன்னான். அந்த ஏற்பாடு மற்றவர்களுக்குப் பிடித்திருந்தது. சிங்காரம் ஒரு பக்கத்தில் இருந்து காவல் காத்தான்.

அந்தக் கோஷ்டியினர் லயத்தைச் சுற்றிச்சுற்றி வந்தபோது காம்பராக்களில் எரிகிற குப்பி லாம்புகளின் வெளிச்சங்கள், மூடப்பட்டிருக்கும் கதவுகளில் உள்ள சிறுசிறு ஓட்டைகள் வழியாக நட்சத்திரங்களாக உருவெடுத்து மின்னின.

நாய்கள் ஊளையிட்டுக் கொண்டிருந்தன. நாய்களின் ஒற்றுமையை ஊளையிடுவதில் காண முடிந்தது. ஒரு நாய் ஊளையிட்டதும் மற்ற நாய்கள் ஒவ்வொன்றாக ஊளையிடத் தொடங்கின.

"நாய்க ஊளையிடுவது சரியல்ல... நாய்க ஊளையிட்டா ஏதோ ஒரு கேடு வரப்போவுதுன்னு அர்த்தம்... அப்படித்தான் நம்ம பாட்டி சொல்லும்...!"

லயத்தைச் சுற்றிக் கொண்டே சொன்ன ஒருத்தன், கோபத்தில் லயத்து வாசலில் கிடந்த கல்லைத் தூக்கி ஊளையிடுகிற நாயொன்றின் மீது வீசினான்... கல்லடிபட்ட நாய் "வாள்.. வாள்..." என்று கத்திக் கொண்டே ஓடியது.

"நாயை ஏன் அடிக்கிர? நாயை அடிச்சா ஊளையிடுரது நின்னுருமா? இந்த நாய்க இங்க இருக்கிரது மனசுக்கு தைரியமா இருக்கு..." நாயை அடித்தவனைப் பார்த்துச் சொன்னான் சிங்காரம்.

'கல்'லடித்தவன் தன் செய்கைக்கு வருந்துவதைப் போன்று மௌனமாக இருந்தான். 'கல்'லடிப்பட்ட நாய் இன்னமும் கத்திக் கொண்டே இருந்தது.

சிங்காரம் வானத்தை நிமிர்ந்து பார்த்தான்... வானம் ரொம்பவே கறுத்துக் கிடந்தது. நிலவும் நட்சத்திரங்களும் சொல்லி வைத்தாற்போல் வேலைநிறுத்தம் செய்திருந்தன. மழை வரும் போலிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மழை பெஞ்சா நல்லதுதான்... எவனும் வரமாட்டான்..." சிங்காரம் சொல்லிக் கொண்டிருக்கும் போதே லேசாகத் தூரத் தொடங்கியது – பன்னீர் தெளிப்பது போல்... அவர்கள் அந்த மழையைப் பொருட்படுத்தாமல் நனைந்து கொண்டே நடந்து கொண்டிருந்தார்கள்.

"மணி என்னா இருக்கும்?" ஒருத்தன் சிங்காரத்தைக் கேட்டான்.

"பன்னெண்டு இருக்கும்..." சிங்காரம் சொன்னான். அவன் சொன்னதை ஆமோதிப்பது போல் தோட்டத்து ஸ்டோர் காவல்காரன், மணி அடிக்கும் சத்தம் கேட்டது. ஒவ்வொரு மணிக்கும் ஒவ்வொரு மணி அடித்தான். அவர்கள் எத்தனை மணியென்று எண்ணினார்கள். சிங்காரம் சொன்னதுபோல் அப்போது பன்னிரெண்டுதான்...

அவர்கள் மௌனமாக ஆனால் தங்களுக்குள் ஏதோதோ நினைத்துக் கொண்டே நடந்து கொண்டிருந்தார்கள்.

சிங்காரத்தின் நெஞ்சில் மாலினி... ஒரு சின்ன சம்பவத்திற்காக அவள் மனம் என்ன பாடுபட்டதோ! கல்யாணமாகி இத்தனை நாளில் ஒருநாள் கூட இருவரும் சண்டை போட்டுக் கொண்டதே இல்லை. அவள் எதைச் செய்தாலும் அவன் விருப்பப்படியே செய்வாள்... எதிர்வார்த்தை எதுவுமே பேசமாட்டாள்... அவனும் அப்படியே... இன்று இந்த இரவு நேரத்தில் இரண்டு தடவை டீ ஊற்றிக் கேட்டான். அவள் மறுக்காமல், சலிக்காமல் டீ ஊற்றிக் கொடுத்தாள். இனியும் ஊற்றிக் கொடுப்பாள்... தனக்கும் அவளுக்கும் இருக்கும் நெருக்கத்தைப் பிளவுபடுத்துவதைப் போல் இன்றைய சம்பவங்கள் நடந்ததோ என்று தீவிரமாக யோசித்தான் அவன்.

வெளியே மழை பெய்வது நின்று விட்டது.

பொது நூலகம் ... விசேட சேர்க்கைப் பகுதி

3

திடீரென்று விசில் சத்தம் கேட்டது. அவர்கள் ஒரு கணம் நடுங்கியவாறு நின்றார்கள். சிங்காரம் அந்த நடுக்கத்திலிருந்து தன்னை மீட்டு, மறுகணமே பதில் விசில் கொடுத்தவாறு பூவரச மரத்தருகே ஓடிப்போய் கைக்கு எட்டுகிற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரத்தில் தொங்குகிற பிள்ளையாரின் மணியை அடித்தான். இதற்கிடையில் வெளியே காவல் காக்கப் போயிருந்தவர்கள் அலறி அடித்துக் கொண்டு ஓடி வந்தார்கள்.

"பெரிய கூட்டம் பந்தத்தோடு வருது! எப்படி எதுக்கிறது?" ஓடி வந்தவர்களில் ஒருத்தன் வாய் உதிர்த்த சொல்...

சிங்காரம் கோபமாகப் பேசினான்... "ஆயிரம் பேர் வரட்டுமே... அதுக்கு பயந்து ஓடுரதா?... முடிஞ்சவரைக்கும் பார்ப்போம்..."

சிங்காரம் பேச்சோடு நிற்காமல் கைக்கு அகப்பட்ட கம்பையும் கத்தியையும் தூக்கிக் கொண்டு 'ஒரு கை பார்ப்போம்' என்பதுபோல் தயாரானான். அவனைப் பார்த்து சிலர் துணிந்து நின்றார்கள்.... சில இளைஞர்கள் மண் அடைத்த போத்தல்களை தயாராக வைத்திருந்தார்கள்.

காம்பராவில் இருந்தவர்கள் பதறியவாறு அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டு ஓடத் தயாரானார்கள். சில நிமிடங்களில் அங்கே எங்கு பார்த்தாலும் ஒரே சத்தம்... அலறல்... கூச்சல்... எவருக்கும் என்ன செய்வதென்றே தெரியவில்லை. எல்லோரும் தப்பி ஓடினால் போதுமென்ற மனநிலையில் இருந்தார்கள்.

மனித சமுதாயத்திற்கு இப்படியும் ஒரு கொடுமையா?... மிருகங்கள்தான் ஒன்றை ஒன்று அடித்துக் கொல்லும். அதுவும் பசிக்கிறபோது மட்டுமே! மனிதன் மிருகத்தைவிட ஓரறிவு அதிகம் படைத்தவனாம் – மொழி, கலாசாரம், நீதி கண்டவனாம். அவனுக்குள்ளே ஏன் இந்த பிரிவினைகள்? பிளவுகள்? எல்லாம் இந்த மொழியால் வந்த பிளவு...! மனிதனுக்கு ஏன் பேசும் சக்தியைக் கொடுத்தானோ இறைவன்? பேசுவதால்தானே தான் பேசும் மொழியை பெரிதென நினைக்கின்றான் – கோடிப் பிரிவினைகள் பேசுகின்றான்.

தூரத்தில் தீப்பந்தங்களுடன் ஒரு கோஷ்டி அந்த லயத்தை நோக்கி சத்தம் போட்டவாறு வந்து கொண்டிருந்தது.

எல்லா நாய்களும் ஏக காலத்தில் சத்தம் போட்டன. அந்த நாய்களின் சத்தத்தையும் மீறி அந்த இருட்டில் அந்த கோஷ்டியின் சத்தம் மேலோங்கி வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தெமழு மரமு! தெமழு மரமு!" (தமிழனைக் கொல்வோம் – தமிழனைக் கொல்வோம்) இது அவர்களின் போர்ப் பரணியாய் பீறிட்டது.

அவர்களின் சத்தத்தையும் தீப்பந்தங்களையும் பார்த்ததுமே சற்று சிங்காரம் பயந்து விட்டான். ஒருவரா – இருவரா? சுமார் இருநூறு பேர்கள்... எல்லாவகை வயதினரும், எல்லா வகையான ஆயுதங்களுடன் வருகிறார்கள். அவர்களை எப்படி எதிர்ப்பது? இருநூறு பேரை இருபது பேர் எப்படி எதிர்க்க முடியும்... ஆனாலும் அவன் எதிர்த்துப் பார்ப்பது என்ற முடிவுக்கு வந்தான். அதே நேரத்தில் அவனோடு சேர்ந்து போராட விரல் விட்டு எண்ணக் கூடியவர்களே இருந்தார்கள். அவர்கள்கூட எதிர்த்துப் போராடுவதா இல்லையா என்ற எண்ணத்தில் தவித்தார்கள். எதிரே வருகிற கூட்டம் அவர்களைப் பயப்படுத்திவிட்டது.

அந்த நேரத்தில்தான் மாலினி அலறியடித்துக் கொண்டு ஓடிவந்து,

அவனைப் பிடித்து இழுத்தாள். சிங்காரத்திற்கு எங்கிருந்துதான் கோபமும் வேகமும் வந்ததோ? அவளை ஒரு நெருப்பு பார்வை பார்த்து விட்டு அவளைப் பிடித்து தள்ளினான். கீழே விழப்போன அவள் சமாளித்துக் கொண்டு மறுபடியும் அவனருகே வந்து கெஞ்சினாள்.

"எல்லாரும் போயிட்டாங்க... நீங்க மட்டும் ஏன் நிக்கணும்?..."

தன் புருஷனை பாதுகாக்க வேண்டும் என்ற வெறி அவளுக்கு. சிங்காரம் சுற்றும் முற்றும் பார்த்தான். அவனோடு ஒன்றிரண்டு பேர் மட்டுமே நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள்கூட அங்கே நிற்பதா?, போவதா? என்ற எண்ணத்தில் இருந்தார்கள். மற்றவர்கள் கைக்கு கிடைத்ததை அள்ளிக் கொண்டு ஓடிக் கொண்டிருந்தார்கள். அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. வெறியர்கள் லயத்து வாசலில் கால் வைக்கும் முன்னரே அவர்கள் காட்டில் கால் வைத்துவிட்டார்கள். இனி எப்படி போராடுவது?

தன்னைவிட்டு மற்றவர்கள் ஓடிவிட்டதையும் இப்போது மாலினியும் வேறு சிலர் மாத்திரம் நிற்பதையும் நினைத்துப் பார்த்தான். எவ்வளவு ஆழமாக எடுத்துச் சொல்லியும் அவர்கள் ஓடிவிட்டார்களே! லயத்திலுள்ள அத்தனைபேரும் ஒன்றாக நினைத்திருந்தால் நிச்சயமாக ஒரு எதிர்ப்பைக் காட்டியிருக்கலாம். இப்போது தனியாக...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் யோசித்துக் கொண்டிருக்கும்போதே எதிரிகள் போர்ப் பிரகடனம் செய்வதைப் போல் ஒரு கைக்குண்டு வீசப்பட்டு அது வெடித்துச் சிதறியது. சிமெண்டினால் செய்யப்பட்ட அந்தப் பிள்ளையார் உருவம் வெடித்துச் சிதறியது. அங்கே ஒரே புகை மண்டலம். அதன் பின்னர் சிலரின் அலறல். அந்தக் குரலெல்லாம் அவனுக்குத் தெரிந்ததுதான். ஆனாலும் அச்சமயத்தில் அவனால் குரலை அடையாளம் பண்ணிக் கொள்ள முடியவில்லை.

லயத்தின் பின் பக்கமாக உள்ளே புகுந்தவர்கள் காம்பராவில் கிடந்ததைத் தூக்கிக் கொண்டார்கள். எதைஎதையோ எதிர்பார்த்து வந்தார்கள். ஆனால் அவர்களுக்கு பெருத்த ஏமாற்றம்தான் மிச்சம்... காம்பராக்களில் கிடந்த வெள்ளைக்காரன் காலத்து இரும்பு டிரங்க் பெட்டிகளை அடித்து உடைத்தும் பார்த்தபோது அவர்களுக்கு ஆத்திரம்தான் வந்தது. இந்திய தபால்களும் சில கடிதங்களும் தான் அதில் திணிக்கப்பட்டிருந்தன. பெறுமதியான பொருட்கள் எதுவும் அவர்களுக்கு கிடைக்கவில்லை. எல்லாவற்றையும் தூக்கிக் கொண்டு ஓடிவிட்டார்களா?... நல்ல வேடிக்கை. அவர்களிடம் இருந்தால்தானே தூக்கிக் கொண்டு ஓட!... அவர்கள் வாழ்ந்ததே அன்றாடம் காய்ச்சிபோல... தினமும் தேயிலை மலைமேல் கால் வைத்தால்தானே சம்பளம்... வாரத்தில் மூன்று நாள்தான் வேலை... வெளி வேலையும் இல்லை... மொத்தத்தில் மாதம் 12 நாள் அல்லது 15 நாள் வேலையும் அதற்குரிய சம்பளமும்தான் கிடைத்தது... இதில் சாப்பிட – உடுத்த, சில்லறை செலவு என்றே பட்ஜெட் போட்டு சமாளிப்பார்கள். வருவதற்கும் போவதற்கும் சரியாக இருக்கும். இதில் என்ன மிச்சம்?... மிச்சம், மீதி இருந்தால் தானே ஏதாவது வாங்கலாம்?...

லயத்துக் காம்பராக்களில் பெறுமதியானது எதுவும் இல்லையென்றதும் ஏமாற்றமடைந்த அந்தக் கோஷ்டியினரின் வெறித்தனம் அதிகமாகியது. காம்பராக்களில் கிடந்த 'சட்டிமுட்டி'களை அடித்து நொருக்கினார்கள்.

சிங்காரத்தின் கண் முன்னாலேயே எல்லாம் நடந்தது. கைகள் கட்டப்பட்டதைப் போன்ற நிலையில் இருந்த அவன் அதைப் பார்த்துக் கொண்டிருந்தபோது அவன் பின்னால் வந்த ஒருத்தன் பெரிய தடியினால் அவனைத் தாக்கப்போனபோது குறுக்கே பாய்ந்தாள் மாலினி. அவனுக்கு வைத்த குறி அவள் மீது விழுந்தது... "அய்யோ!... அம்மே!..." என்று தமிழிலும் சிங்களத்திலும் சத்தம் போட்டவாறு கீழே விழுந்தாள் மாலினி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்காரம் தன் கைகளில் இருந்தவைகளைக் கீழே போட்டுவிட்டு அடித்தவனை எட்டிப் பிடிக்கப் பார்த்தான். அது முடியாமல் போய்விடவே அவன் யாரென்று பார்த்தான். தீப்பந்த வெளிச்சத்தில் அவனை அடையாளம் கண்டு அதிர்ச்சியடைந்தான். அவன் வேறு யாருமில்லை. மாலினியின் அப்பாவின் கடையில் வேலை செய்கிறவன். அவன் கணிப்பு சரிதான். 'சட்'டென்று சுற்றும் முற்றும் பார்த்தான். மாலினியின் அண்ணனும் வந்திருக்கிறான். அவன் முகம் தெரிந்தது. ஓ! அவன்தான் இந்த லயத்து தாக்குதலுக்குத் தலைவனோ!

அந்த ஒரு கணத்தில் நெஞ்சில் நினைவுகள் மின்னலென வெட்டி வெளிச்சம் போட்டு மறைந்தன. அப்பாவோடு கோபித்துக் கொண்டு தனிக்குடித்தனம் போன சிங்காரம் ஒரு நாள் மாலினியோடு பொலீஸ் ஸ்டேசனுக்குப் போய் இன்ஸ்பெக்டரிடம் தாங்கள் இருவரும் திருமணம் செய்ய விரும்புவதாக மனு கொடுத்துக் கையெழுத்திட்டு வெளியே வந்தார்கள்.

வெளியே மாலினியின் அண்ணனும் அவனுடைய குழுவினரும் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்ததும் மாலினியின் அண்ணன் சிங்காரத்தையும் மாலினியையும் இணைத்து அவர்களின் உறவைக் கேவலமாக குறிப்பாக மாலினியை, 'அடியே! உனக்கு இவன் தானா இந்தப் ..... கிடைத்தான்' என்பதை ரவுடிகள் பாணியில் திட்டினான். இன்ஸ்பெக்டரிடம் சிங்காரம் மாலினியைக் கடத்திக் கொண்டு போய்விட்டான் என்று கொடுத்த புகார் நிராகரிக்கப்பட்ட கோபம் வேறு... சிங்காரத்தை படுகேவலமாக, குறிப்பாக தமிழன் என்பதை இழிவுபடுத்திப் பேசினான். கடைசியில் அவன் சபதம் எடுத்ததைப் போன்று கத்தினான்... 'என்றாவது உன்னைப் பழிவாங்காமல் விடமாட்டேன்'.

அன்று சொன்னதை இன்று செய்து காட்டிவிட்டானோ!

சிங்காரத்தோடு இருந்தவர்கள் ஒரு முடிவுக்கு வந்தார்கள்.... 'இனிமே இங்க நிக்கரதில புரயோசனம் இல்ல... மத்தவங்களோட போவோம்...

சிங்காரம் மாலினியைப் பார்த்தான். அவள் இன்னமும் மயங்கியே இருந்தாள். அவளை அப்படியே தூக்கிக் கொண்டு லயத்துப் படிக்கட்டுகளில் மெதுமெதுவாக இறங்கினான். அவன் போனது இந்த இருட்டில் எவருக்கும்

1. சிங்கள பொப் பாடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியவில்லை... எப்படியாவது அந்த இடத்தை விட்டுப் போய்விடவேண்டும் என்று முடிவெடுத்தான்... அவனுக்குப் பின்னால் மற்றவர்கள் இறங்கினார்கள். லயம் எரியத் தொடங்கியது.

"நாம பரம்பரை பரம்பரையா பொறந்து வாழ்ந்த லயத்தை சிங்களவனுக நெருப்பு வைச்சிட்டானுகளே! நாம அவனுக்கு என்னா தீங்கு செஞ்சோம்! ஏன்தான் இந்த மாதிரி அநியாயம் செய்யிரானுகளோ?..." அவர்களில் ஒருத்தன் மெதுவாக 'முணுமுணு'த்தான். சிங்காரம் மாலினியைத் தூக்கிக் கொண்டு நடக்க முடியாமல் தவித்தான். அவனுக்கு மற்றவர்கள் உதவி தேவைப்பட்டது. கூட வந்தவர்களில் இருவர் சிங்காரத்தின் கஷ்டத்தை உணர்ந்து கைகொடுத்தார்கள். லயம் எரியத் தொடங்கியது... வானை நோக்கி நெருப்பின் ஜுவாலைகள் கரிய புகையுடன் எழுந்தன. அந்த நெருப்பின் உஷ்ணம் தாளாது லயத்துப் பக்கம் இருந்த மரங்களில் இலைகள் சுருண்டு வதங்கின.

சிங்காரமும் மற்றவர்களும் ஒரு நிமிடம் லயத்தைத் திரும்பிப் பார்த்தார்கள்... கார்த்திகை தீபத்தன்று எரிகிற சொக்கப்பனைப் போல் வெளிச்சம் போட்டு அந்த லயம் முழுவதும் எரிந்தது. சிங்காரத்திற்கு கண்கள் கலங்கின.

"இந்த லயம் அவர்களுக்கு என்ன செய்தது? கற்களாலும் மணலாலும் உருவான ஒரு கட்டிடம்... வாய் பேசாது... எந்த மொழியும் தெரியாது... பின் ஏன் நெருப்பு வைத்தார்கள்?... தமிழ் பேசும் நாங்கள் இருந்ததாலா?..."

நெருப்பு வைத்த அந்த கோஷ்டி தாங்கள் வந்த காரியம் முடிந்த மகிழ்ச்சியில் பைலா[1] பாட்டு பாடிக் கொண்டு போக ஆரம்பித்தார்கள்....

## 9

குறுக்குப் பாதையில் மாலினியைத் தூக்கிக் கொண்டு சிங்காரமும் மற்றவர்களும் அப்படியே நடந்து அந்தக் குறுக்குப் பாதையில் ஓரிடத்தில் இருக்கிற ஒரு பள்ளத்தில் ஒதுங்கினார்கள். அந்த இடம் எப்போதோ பெய்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழையில் ஏற்பட்ட மண் சரிவினால் பள்ளமான ஒரு கிடங்காக உருவெடுத்திருந்தது. அந்தப் பள்ளத்தில் இருந்தால் குறுக்குப் பாதையிலிருந்தோ, ரோட்டோரத்தில் இருந்தோ பார்க்கவே முடியாது... பகலிலும், இரவிலும் மறைந்து கொள்ள தோதுவான இடம்!... அந்த இடம் அந்தத் தோட்டத்தில் பிரசித்தமானது... எத்தனையோ காதல் ஜோடிகளின் லீலைகளுக்கு மறைவிடமாகவும் புகழ் பெற்றது. இந்த சிங்காரம் கூட குளிக்கவந்த மாலினியைக் கூட்டிக் கொண்டு அந்தப் பள்ளத்திற்கு வந்து காதல் லீலைகள் நடத்தியிருக்கிறான். அவளைக் கட்டியணைக்கவும் முத்தமிடவும் அந்த இடம் ரொம்ப உதவியாக இருந்தது. ஒரு நாள் மாலினியைக் கட்டிப் பிடித்துக் கொண்டு இருந்தபோது எங்கிருந்தோ பேச்சுக் குரல்கள் கேட்கவும் மாலினி பயந்து தன்னை விடுவித்துக் கொண்டு, 'நான் ரோட்டுக்கு போறவரைக்கும் வெளிய வர வேணாம்' என்று ஒரு சட்டம் போட்டுவிட்டு ஓடிப் போனாள்... அவன் ரொம்ப நேரம் பள்ளத்தில் இருந்து விட்டு வெளியே வந்தான்.

சிங்காரம் மாலினியை அந்தப் பள்ளத்தின் நடுவில் படுக்க வைத்தபோது அந்த நினைவுகள் ஒரு விநாடி மனதில் ஓடி மறைந்தன. அன்று காதலுக்காக இந்தப் பள்ளத்திற்கு வந்தான். இன்றோ அவளின் உயிரைக் காப்பாற்ற அந்தப் பள்ளத்திற்கு வந்திருக்கிறான்.

சிங்காரம் கீழே நிலத்தில் படுக்க வைத்திருக்கிற மாலினியைப் பார்த்தான். அந்த இருட்டிலும் அவன் விழிகளுக்கு அவளைப் பார்க்க முடிந்தது... முதலில் அந்த வெறும் நிலத்தில் அவளைப் படுக்க வைக்கத் தயங்கினான் அவன்... வெறும் நிலத்தில் எப்படி? சுற்றும் முற்றும் பார்த்தான். எதுவும் சரியாகத் தெரியவில்லை... ஆனால் தன் கால்களால் அந்தப் பள்ளமெங்கும் காய்ந்த சருகுகள் ஒரு விரிப்புத் துணியாக – ஒரு பாயாக பரவிக் கிடந்ததை உணர முடிந்தது. ஓ!... அது போதும்... அகதிகளுக்கு மண்மாதாவின் உடம்புதானே அடைக்கலம் கொடுக்கிற வீடு என்ற உணர்வுடன் அவளைப் படுக்க வைத்தான். பிறகு அலங்கோலமாகக் கிடந்த அவள் சேலையை சரி செய்தான்... அதனை தடவித் தடவித்தான் செய்தான். வெளிச்சம் இல்லை... அவனோடு வந்தவன் நிலத்தில் உட்கார்ந்தவாறு யோசித்துக் கொண்டிருந்தான்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே வானத்தில் மேகத்திடையே மறைந்திருந்த நிலா இப்போது மெள்ளமெள்ள வெளியே வந்தது... அந்த நிலவுக்குக்கூட அந்த லயம் எரியப்போவது தெரியும் போலும்... அதனால்தானோ அந்த நிலவு, அந்த லயத்தை எரிக்கப்போகிற அநியாயத்தை – அக்கிரமத்தைப் பார்க்கத் தெம்பில்லாமல் இத்தனை நேரமும் மறைந்திருந்தது? நிலவின் ஒளிக் கரங்கள் அந்தப் பள்ளத்தை எட்டிப் பிடித்தன. அது சிங்காரத்திற்குப் பெரும் உதவியாக இருந்தது. அந்த நிலவு வெளிச்சத்தில் மாலினியின் முகத்தையும் அவளுக்கு என்ன நடந்தது என்பதையும் பார்க்க முடிந்தது அவனால்... மாலினியை நன்றாக உற்றுப் பார்த்தான். முகத்தில் எவ்வித காயமுமில்லை. முகத்தில் மட்டும்தானா? அவன் அவசரமாக அவளின் கைகளை – கால்களைப் பார்த்தான். காயங்கள் இல்லை... பின் எங்கே காயம்? ஏன் அவள் நினைவிழந்திருக்கிறாள்? ஏதோ நினைத்து அவளை ஒரு பக்கமாக சரித்து அவள் ரவிக்கையின் முதுகுப்புற பொத்தான்களைப் பிரித்துப் பார்த்தபோது... பெரிய காயம் இருப்பது தெரிந்தது. ஓ! எவ்வளவு பெரிய காயம்?... அவன் முதுகில் விழவேண்டியது, அவள் முதுகில் விழுந்திருக்கிறது! சுமார் அரையடி நீளத்திற்கு கம்பியால் சுட்டதுபோல் ரத்தக் கருஞ்சிவப்பாய் தடித்துப் போயிருந்தது முதுகில்... ஊமைக் காயம்... இன்னமும் லேசாக ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. அடியில் ஏற்பட்ட அதிர்ச்சியில் அதைத் தாங்க முடியாமல் மயங்கிப் போயிருக்கிறாள் மாலினி.

அவள் முகத்தைப் பார்த்த சிங்காரத்திற்கு ஒருகணம் மீண்டும் அந்தக் காட்சி நெஞ்சில் உருவெடுத்து ஓடியது... எந்தக் காட்சி? விடிய விடிய ராமாயணம் ஓதியது போல் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் மற்றவர்கள் ஓடிவிட்டபின்னர் மாலினி தன்னைக் காப்பாற்றுவதற்காகக் குறுக்கே பாய்ந்தாளே அந்தக் காட்சிதான்!

அவள் மீது அவனுக்கு புதிதாக இனம் புரியாத ஒரு பாசம் – ஒரு பிடிப்பு மெள்ள மலரத் தொடங்கியது. அந்த லயத்தில் எத்தனையோ பேர் மனைவியை விட்டும் – கணவனை விட்டும், தான் மட்டும் தப்பினால் போதும் என்று ஓடியபோது, மாலினி ஒரு சிங்களத்தியாய் இருந்தும் தன்னோடு நின்று போராடி தன்னைக் காத்தது அவனைச் சிந்திக்க வைத்தது. அவன் மீது கொண்ட காதலினால் தானே அவள் தன் தாயை – தந்தையை – சகோதரர்களை – உறவினர்களை ஏன் இனத்தையே பிரிந்து பிறிதொரு இனத்தவனான சிங்காரத்தோடு சங்கமித்தவள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளை அப்படியே உச்சி முகர்ந்து கட்டிப் பிடித்து முத்தமிட வேண்டும் என்று ஒரு நினைப்பு அவனுள் எழுந்து பார்த்தது. ஒரு நன்றியுணர்வுக்காக... ஆனால் அதற்கு இது தருணமில்லை... என்று அறிவுக் கண்கள் விழித்துச் சொல்லவே மௌனமாக அவளையே பார்த்தான்.

ஓ! அப்போதுதான் அந்த நினைவும் அதனோடு கூடவே அந்த உருவமும் கண்ணில் நின்றது. என்றாவது பழிவாங்காமல் விடமாட்டேன் என்று சொன்னானே மாலினியின் அண்ணன்... அவன் சொன்னதை இன்று செய்து விட்டான்.

சற்று முன்னர் லயம் எரிந்ததையும் அந்த லயத்தை எரித்தவர்களையும், அவர்களோடு வந்த மாலினியின் அண்ணனையும் மாறிமாறி நினைத்துக் கொண்டே இருந்தான் சிங்காரம். கம்யூட்டரின் பட்டன்களை அழுத்தினால்தான் ஸ்கிரீனில் அடுத்தடுத்து விபரங்கள் வரும். ஆனால் மனிதனின் மனத்திரையில் பாதக சாதகமானவைகள் இல்லாதது பொல்லாதது எல்லாம் உருவங்களாய், காட்சிகளாய் மிகவேகமாக வந்து விடுகின்றன. சில நிமிடங்களில் விஞ்ஞானத்தை தோற்கடிக்கும் மனிதஞானம்!... புத்தியை மழுங்கடிக்கக் கிளம்புகிற தப்புக் கணக்குகள்! தப்புக் கணக்கில் சிக்கினான் சிங்காரம்...

முதன் முதலாக மாலினியின் மீது ஒரு கசப்புணர்வு 'கரு'க் கட்டியது... அந்த 'கருவை' உருவமாக்கிப் பார்த்தன அவன் நெஞ்சில் ஊறி வருகின்ற எண்ணங்கள்...

'தன்னை மட்டும் பழி வாங்கியிருந்தால் கவலைப்பட்டிருக்க மாட்டான்... ஆனால் தன்னைப் பழிவாங்குவதற்காக அந்த லயத்தையே எரித்து, அந்த லயத்தவர்களையும் அகதிகளாக்கி விட்டதை எண்ணிப் பார்த்தான் அவன்... இந்த லயம் எரியத் தானும் ஒரு வகையில் காரணமாக இருந்து விட்டோமோ என்ற உணர்வு அவன் நெஞ்சைக் குடையத் தொடங்கியது ஒரு பக்கம்; இன்னொரு பக்கம் எல்லாம் இந்தக் காதலால்... இவளை மணக்கப் போய் வந்ததோ? என்றது ஒரு உணர்வு...'

சிங்காரம் தலைகுனிந்தவாறு இருந்தான். அவனுக்கு இப்போதுதான் முதல்முறையாக மாலினியின் முகத்தைப் பார்க்க என்னவோ போல் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலினி முனகுவது அவனுக்குக் கேட்டது. அவளுக்கு நினைவு திரும்பத் தொடங்கிவிட்டது. அவன் ஏனோ எதுவும் கேட்காதது போல் – எதிவும் தெரியாதது போல் இருந்தான்... பக்கத்தில் இருந்தவன் அவன் கவனத்தைத் திருப்பினான். "மயக்கம் தெளிஞ்சிருச்சி... என்னான்னு பாருங்க..." சிங்காரம் அப்போதுதான் மாலினி மயக்கம் தெளிந்ததை தெரிந்து கொண்டதைப் போல் காட்டிக் கொண்டு, இனியும் பேசாமல் இருப்பது பொருத்தமல்ல – தனக்கும் இவளுக்கும் இருக்கிற – அவ்வப்போது ஏற்படுகிற உணர்வுகளும் அடுத்தவனுக்குத் தெரிய வேண்டுமா என்ற உணர்வில் மாலினியைப் பார்த்தான்.

மாலினி மெள்ள தன் கண்களை ஒரு தடவை விரித்து அவனைப் பார்த்துவிட்டு மூடிக் கொண்டாள். சிங்காரம் அந்த ஒரு கணத்தில் எல்லா வகையான மன உணர்வுகளையும் துறந்துவிட்டு பயந்துபோய் அவளைக் கூப்பிட்டான்...

"மாலினி... மாலினி..."

அவள் மறுபடியும் கண்களை அகல விரித்துப் பார்த்தாள். அப்போதுதான் அவளுக்குத் தான் எங்கோ தோட்டத்தில் ஒரு நிலத்தில் இருப்பது தெரிந்தது. லயம் எங்கே?... லயத்தில் இருந்தவர்கள் எங்கே?...

அவள் மெள்ள எழுந்து உட்கார்ந்தாள்... "லயம்" என்று அவள் வாய் 'முணுமுணு'த்தது...

"லயமே எரிஞ்சி போச்சி..." அவன் சொன்னான்.

"உங்களுக்கு ஒண்ணும் இல்லியே?..."

'இல்லை' என்பது போல் தலையாட்டினான் சிங்காரம். ஆனால் அவன் மனமோ வேறுவிதமாகப் பேசியது.

"எனக்கு ஒண்ணும் இல்ல... ஆனா லயமே எரிஞ்சி போச்சி... லயத்தில உள்ளதெல்லாம் எரிஞ்சி போச்சி... எல்லாம் எரிஞ்சி சாம்பலா போச்சே!..."

"மத்தவங்க எங்க?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவங்க எங்கேன்னு தெரியல்ல... ஆளுக்காள் பிரிஞ்சி ஓடிட்டாங்க..."

மாலினி தன் தாய் மொழியில் லயம் எரித்ததை – எரித்தவர்களைத் திட்டித் தீர்த்தாள்... அவனுக்கு அது புரிந்தாலும் ஏனோ மௌனமாக இருந்தான். அந்த லயத்திற்கு நெருப்பு வைக்க வந்தவர்களில் தன் அண்ணனும் இருந்தான் என்பது மாலினிக்குத் தெரிய நியாயமில்லை... அதைப் பற்றிப் பேசவும் அவன் விரும்பவில்லை... அந்த அண்ணனுக்கும் அவளுக்கும் தொடர்பே இல்லாதபோது அவனைப் பற்றி ஏன் பேச வேண்டும்? சிங்காரம் இவ்வாறு சிந்தித்தபோதுதான் மாலினியைத் தான் இன்னமும் விசாரிக்காதது நினைவுக்கு வந்தது.

"மாலினி உனக்கு எப்படி இருக்கு?..." வெறும் வார்த்தைகள் மட்டும் வந்தன அவனிடமிருந்து...

"எனக்கு ஒன்னும் இல்ல... முதுகில அடிபட்டதனால அதிர்ச்சியில மயங்கி விழுந்திட்டேன். இப்ப பரவாயில்ல... நீங்க மத்தவங்கள போயிப் பாருங்க..."

சிங்காரம் அதற்கு மேல் எதுவும் பேசாமல் அந்தப் பள்ளத்தில் ஆங்காங்கே 'குந்தி'யிருந்தவர்களை மெள்ளக் கூப்பிட்டான். அவர்கள் யாவரும் அவனருகே வந்ததும் சிங்காரம் பேசினான்...

"மாலினி! இங்கயே இருக்கட்டும்... இப்ப பரவாயில்ல... நாம போயி மத்தவங்கள பார்ப்போம்... வாங்க!"

சிங்காரம் சொன்னதோடு நிற்காமல் புறப்பட்டான். ஆனால் மற்றவர்கள் அவனைத் தடுத்து விட்டார்கள்.

"நீங்க ரெண்டு பேரும் இங்க... இருங்க! நாங்க போயி பார்த்திட்டு வாரோம்...". அவர்கள் சொல்லிக் கொண்டே நடக்கத் தொடங்கினார்கள்.

சிங்காரமும் மாலினியும் மட்டுமே அந்தப் பள்ளத்தில் இப்போது இருந்தார்கள். மாலினி சிங்காரத்தைப் பார்த்தவாறு உட்கார்ந்திருந்தாள். சிங்காரம் யோசித்தவாறு இருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலினியின் கவலையெல்லாம் அந்த லயத்தில் இருந்தவர்களைப் பற்றித்தான்! அவர்கள் எங்கே போனார்கள்? பிச்சைக் கிழவன் எங்கே போனானோ? அவனால் நடக்கக் கூட முடியாதே! எப்படி ஓடுவான்? ஓடியிருப்பான்?...

சிங்காரத்திற்கும் அவர்களைத் தேடிப் பார்க்கவேண்டுமென்ற எண்ணமே மேலோங்கி இருந்தது. ஆனால் மாலினியை தனியே விட்டுவிட்டு எப்படி போவது என்று அங்கேயே இருந்தான்.

"நான் இங்கேயே இருக்கிரேன். நீங்க போயி மத்தவங்கள பார்த்திட்டு வாங்க..." மெல்லிய குரலில் மாலினி சொன்னாள். சிங்காரம் திரும்பி அவளைப் பார்த்தான். ஒரு விநாடி அவள் சொல்வதுபோல் அவளை அங்கேயே விட்டுப் போவோமா என்று நினைத்தான். மறுகணம் அது அவ்வளவு உசிதமானதல்ல என்று பட்டது அவனுக்கு...

"மத்தவங்க போயிருக்காங்க.. அவங்க வரட்டும்..." அவள் மௌனமாக இருந்தாள். தன்னை விட்டுப் போக யோசிக்கின்றான் அவன் என்பது அவளுக்குப் புரிந்தது. தனக்கு ஏதும் நடக்காமல் இருந்தால் இருவருமே மற்றவர்களைத் தேடப் போயிருக்கலாம் என்று கவலைப்பட்டபோது அவளின் முதுகில் லேசாய் வலிக்கத் தொடங்கியது...

"சிங்காரம்! ஓடிவா... நம்ம பிச்சக் கெழவன நாசமாப் போனவங்க அடிச்சி ரோட்டோரத்தில போட்டிருக்காணுக..." ஒரு குரல் அந்த இருளைக் கிழித்துக் கொண்டு வந்தது.

அந்தக் குரலுக்கு உரியவன் நாகப்பன். அவனுக்குப் பின்னால் இரண்டு பேர்... தரையில் கிடக்கிற சருகுகளை, காய்ந்த இலைகளை மிதித்துக் கொண்டு அவர்கள் ஓடிவருவது கேட்டது. சிங்காரத்தின் நெஞ்சம் நடுங்கியது... மாலினியிடம் சொல்லக்கூட நினைக்காமல் எழுந்து வெளியே ஓடினான்.

ரோட்டோரமாக நாகப்பன் நின்றான். அவன் கையில் சிறு டோர்ச்லைட் இருந்தது. அதன் வெளிச்சத்தில் அவர்களை கண்டான் சிங்காரம். "சரி போவோம்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டோர்ச் லைட் அடித்தவாறு நாகப்பன் வேகமாக நடக்க சிங்காரம் பின்னால் போனான். அவனுக்குப் பின்னால் மற்றவர்கள்...

அவர்கள் ஒரு குறுக்குப் பாதையில் இறங்கி மேல் ஏறி தேயிலைச் செடியருகே நின்றார்கள்.... அங்கே எந்த செடிகளுக்கு உரம் போட்டானோ அதே செடிகளின் அருகே விழுந்து கிடந்தான் பிச்சைக் கிழவன். சிங்காரம் அவனருகே போய்ப் பார்த்தான். கிழவன் மல்லாக்க நிலத்தில் கிடந்தான். அவன் வாய் 'முணுமுணு'க்கிற சத்தம் மட்டுமே கேட்டது.

நாகப்பன் கிழவன் மீது டோர்ச்லைட்டை அடித்தான். அதன் மங்கலான ஒளியில்... கிழவனின் தலையில் கிளம்பிய ரத்தம் அவன் முகத்தை சிவப்பாக்கி உடுத்தியிருந்த சட்டையை, வேட்டியை, சிவப்பாக்கிவிட்டது. தலையில் அடி விழுந்திருக்கிறது....

சிங்காரமும் மற்றவர்களும் பிச்சைக் கிழவனையே பார்த்தார்கள் ... ஓ! இந்தக் கிழவன் என்ன தவறு செய்தான்? எதற்காக இவனை பழி வாங்க வேண்டும்? இவனை அடித்ததில் அவர்களுக்கு என்ன கிடைத்து விட்டது?... இந்த நாட்டிற்காக இந்த தேயிலைத் தோட்டத்தில் ரத்தத்தை வியர்வையாய் சிந்தி உழைத்து, உழைத்து ஓடாகிப் போன இந்தக் கிழவனுக்கு இந்த நாட்டின் தேசிய பிரஜைகள் - முதல் பிரஜைகள் - மண்ணின் மைந்தர்கள் என்று தாமாக சொல்லிக் கொள்கிறவர்கள் கொடுத்த பரிசு இதுதானா?...

சிங்காரத்தின் மனதைக் கிழவன் கரைத்து விட்டான். அவனுடைய ஒரே ஒரு நம்பிக்கைத் தூண் இன்று இப்படி நிலத்தில் சாய்ந்து கிடக்கிறதே!

மாலினியைக் கைப்பிடித்தபோது, சொந்தம் பந்தம் யாவும் உதறிவிட்ட போது சிங்களத்தியைத் திருமணம் செய்து விட்டான் என்பதைக் கேவலப்படுத்தி அவச் சொற்களை அவன் மேல் அள்ளி வீசிய போது இந்தக் கிழவன் தானே ஆறுதல்படுத்தினான்; நம்பிக்கையைக் காட்டினான்... இன்று அவன் இப்படி கிடக்கிறானே! அவனுக்கு அவர்களை பழிவாங்க வேண்டும் என்ற நினைவு வந்தது.

"தாத்தாவ என்ன செய்யிரது?" ஒருத்தன் கேட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்காரம் சில விநாடிகள் யோசித்துவிட்டு "குறுக்கு ரோட்டு பள்ளத்துக்கு கொண்டு போவோம்... ஆளுக்கொரு பக்கமா புடிங்க..." என்றான். எல்லோரும் ஆளுக்கொரு பக்கமாகக் கிழவனைத் தூக்கிக் கொண்டு அந்தப் பள்ளத்தை நோக்கி நடந்தார்கள்.

கிழவன் 'முணங்கி'க் கொண்டே இருந்தான். அவனுக்கு ஏதோ பேசவேண்டும் போல் இருந்தது. ஆனால் பேச்சு வரவில்லை...

## 10

பிச்சைக் கிழவனை அந்த குறுக்கு ரோட்டுப் பள்ளத்தில் கீழே நிலத்தில் படுக்க வைத்தார்கள். மாலினி அதைப் பார்த்துவிட்டு அழுதாள்... சிங்காரம் அவளை சத்தம் போட்டு அதட்டினான்.

"சும்மா ஒப்பாரி வைக்க வேணாம்! இங்கயும் அவனுக வந்தாலும் வருவானுக..."

அதற்கு மேலேயும் 'உன் இனத்துப் பயல்களால் ஏன், உன் அண்ணனால்தான் இத்தனையும் வந்தது' என்று சொல்லலாம் என்று எண்ணிவிட்டு மௌனமானான். மாலினி தன்னை அடக்கிக் கொண்டு அழுதவாறு அந்தக் கிழவனைப் பார்த்தாள்... 'இவர் என்ன செய்தார்? இவரை ஏன் அடித்தார்கள்....?'

மாலினியின் மனதில் மெல்லமாய் ஒரு சம்பவம் படம் போட்டு நின்றது...

ஒரு நாள்... சிங்காரத்தோடு அவள் லயத்துக்கு குடி வந்த பின்னர்... லயத்துப் பைப்படியில் தண்ணீர் பிடிக்கப் போனாள் மாலினி. தண்ணீர் பைப்படியில் அனாதையாகக் கிடந்த ஒரு குடத்தைச் சற்றுத் தள்ளி வைத்துவிட்டு தன் குடத்தில் தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்தாள். சிறிது நேரத்தில் பைப்படிக்கு வந்த ராமன் மனைவி, மாலினியோடு 'சண்டைக்கு' வந்து விட்டாள். மாலினி அமைதியாகப் பேசினாள்.. அவள் விடவில்லை... மாலினியையும் அவள் இனத்தையும் இழுத்து கேவலமாகப் பேசினாள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலினி அழுதுவிட்டாள். அப்போது அந்த வழியாகப் போன பிச்சைக் கிழவன் மாலினியை ஆறுதல்படுத்தி ராமன் சம்சாரத்தைக் கண்டித்தான். ஆனாலும் மாலினி அழுது கொண்டே இருந்தாள்...

பிச்சைக் கிழவன் மாலினி அருகே வந்து தேற்றி தைரியப்படுத்தினான்... "சே! இதுக்குப் போயி அழுவுறியே...! சிங்காரத்தோட வாழத் துணிஞ்சி வந்துட்ட... இனி போராடித்தான் வாழணும்... சின்ன விசயத்துக்கெல்லாம் அழலாமா?... பயப்படாதே! நான் இருக்கேன்... நீ என் மவ மாதிரி... தைரியமா இரு...." என்று அவர் கொடுத்த தைரியம் - அந்த நம்பிக்கை அவளுக்கு ரொம்ப உதவின. அதன் பின்னர் மறைமுகமாக அவள்மீது தொடுக்கப்படுகிற தாக்குதல்களுக்கு அவள் பதில் கொடுப்பதும் இல்லை... செவி மடுப்பதும் இல்லை...

அந்த நம்பிக்கை கொடுத்த கிழவனா இன்று இப்படி... அவளுக்குள் சத்தம் போட்டு அழ வேண்டும் போன்ற ஒரு உணர்வு எழுந்து அடங்கியது. 'ஒரு இனம் சங்காரம் செய்வதற்காக இன்னொரு இனத்தைத் தேடி அலைகிறபோது இதோ நான் இருக்கிறேன் என்று இருக்குமிடத்தைக் காட்டலாமா?' இது உணர்ச்சிகளைக் கட்ட வேண்டிய காலம்... மூச்செடுப்பதுகூடத் தெரியாத நேரம்!...

"தாத்தாவுக்கு சீரியசா இருக்கும்போல தெரியுது... என்ன செய்ய?" ஒருத்தன் கேட்டான். அவனுடைய கேள்வி சிங்காரத்தை சிந்திக்க வைத்தது. ஒரு விநாடி யோசித்தான்...

"எனக்கு என்ன செய்யிரதுன்னு தெரியல்ல... இந்த நேரத்தில எங்கயும் போவ முடியாது... விடிஞ்சாதான் எதையும் சொல்லலாம்...." சிங்காரம் பதில் சொன்னான்.

அவன் சொல்லி முடிப்பதற்குள் நாலைந்து பேர் சருகுகளை மிதித்துக் கொண்டு ஓடி வருகிற சத்தம் கேட்டது. சிங்காரம் உட்பட அங்கிருந்த அத்தனை பேரும் பயந்து விட்டார்கள்... இங்கேயும் வந்து விட்டார்களா அந்த வெறியர்கள்? அவர்களுக்கு மூச்சே நின்று விடும் போல் இருந்தது. சிங்காரம் தவித்தான்... என்ன செய்வது? அங்கிருந்து ஓடிவிடலாமா? அவன் ஒரு முடிவு எடுப்பதற்குள் அவர்கள் பள்ளத்தில் இறங்குகிற சத்தம் கேட்டது. சிங்காரத்தின் இதயம் படுவேகத்தில் இயங்கியது... காலும் ஓடவில்லை; கையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடவில்லை... மாலினி பயத்தில் சிங்காரத்தை கட்டிப்பிடித்தாள்... எதுவுமே தெரியாத கிழவன் 'முணங்கிக்' கொண்டே இருந்தான்....

"பயப்படாதீங்க நாங்க தான்..." என்ற வார்த்தைகள் பாதியும், மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்குகிற சத்தம் பாதியுமாக சத்தம் போட்டுக் கொண்டே ஒருத்தன் முன்னால் வந்தான்... நிலவு வெளிச்சத்தில் அவனை அடையாளம் கண்டான். "அட நம்ம ஆள்க தான்...".

லயத்தில் இருந்தவர்கள்தான்... உயிரைக் காப்பாற்ற ஓடி வருகிறார்கள். அவர்களில் முன்னே வந்தான் காத்தமுத்து. அவனுக்குப் பின்னால் சின்னாயி. அவளுக்குப் பின்னால் ராமன், மாயாண்டி, முத்தையா, சுடலை என இன்னும் சிலர்... சிங்காரத்தின் அருகே வந்து நின்ற சின்னாயி மூச்சு இளைக்கவே எதுவும் பேச முடியாமல் அப்படியே நின்றாள். சிங்காரம் அவளையே பார்த்தான்.

வெகு நேரத்திற்குப் பின்னார் சின்னாயி பேசத் தொடங்கினாள். "சிங்காரம்! எல்லாம் போச்சி... ஸ்கூல் போச்சி... மாரியம்மன் கோயில் போச்சி... லயம் போச்சி... எல்லாத்தையும் கொள்ளை அடிச்சி நெருப்பு வைச்சிட்டானுக... நம்ம ஆளுக எல்லாம் புல்லு மலையில ஒழிஞ்சிருக்காங்களாம்... நாங்க கொஞ்ச பேர் தேயிலை செடிகளுக்குள்ளே மறைஞ்சி இங்க ஓடிவந்தோம்... பெரிய அக்கிரமம்! அவனுக நாசமாப் போக... ஒரு நாளும் அவனுக உருப்படமாட்டானுக! இந்த மாதிரி அக்குரும்பு அநியாயம் செய்யிறானுகளே... ஏ! மாரியாத்தா... நீ கண்ணெடுத்து பார்க்க மாட்டியா? நீ நெனச்சா ஒரே ராத்திரியில அவனுகள வாரிகிட்டு போவலாமே!..." சின்னாயி சாபம் கொடுத்தாள்.

மாலினியின் உள்ளம் நடுங்கியது... 'இவர்களின் அடிவயிற்றில் எரிகிற நெருப்பு நிச்சயம் என்றாவது அவர்கள் வாழ்க்கையில் குறுக்கிடும்... என்பது அவளுக்குத் தெரியும். அவள் பௌத்த விகாரையில் இளவயதில் புத்த தர்மம் படித்தவள். புத்த பெருமான் ஒரு நொண்டி ஆட்டுக்குட்டிக்காக இரக்கப்பட்ட சம்பவம் அவள் படித்த ஒரு கதை... செய்கிற பாவங்களுக்கு இன்றில்லாவிட்டாலும் என்றாவது தண்டனை அனுபவிக்கவே வேண்டும்.... இது புத்தர் பெருமான் சொன்ன அருளுரை... அந்த கௌதம புத்தர் வழி நடப்பவர்களா இம்மாதிரி நடக்கத் தொடங்கி விட்டார்கள்...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலினி மனசாட்சியை ஏதோ உறுத்த அவர்களின் முகத்தில் விழிக்கத் தைரியம் இல்லாமல் தலையைக் குனிந்து கொண்டே இருந்தாள். சின்னாயி அப்போதுதான் அந்த இருட்டில் அவளைக் கவனித்தாள்... அவளைப் பார்த்ததுமே சின்னாயிக்கு அந்த வெறியர்களையும் பார்த்தது போலிருந்தது. இவளை... இவளை... ஒரு விநாடி தன்னை அடக்கிக் கொண்டு சிங்காரத்தைக் கவனித்தாள்...

சிங்காரம் தனியாக மௌனமாக ஆனால் உள்ளக் குமுறல்களுடன் இருந்தான். அவன் கண்களுக்கு லயம், கோயில், ஸ்கூல் எல்லாம் மாறிமாறி தெரிந்தன. ஓ! இந்தக் கட்டிடங்கள் இவர்களுக்கு என்ன செய்தன?... தமிழர்களைத்தான் பழிவாங்கி சந்தோஷப்படுகிற இவர்கள் இந்தக் கட்டிடங்களை எரித்து என்னதான் காணப் போகிறார்கள்?... குடியிருப்புகள், படிப்பகங்கள், கோயில்கள் என்பனவற்றின் மீது குண்டு போடக் கூடாதென்பது சர்வதேச யுத்த விதிமுறை... அதனைக்கூட இவர்கள் கடைப்பிடிக்கவில்லையே...

கீழே நிலத்தில் படுக்க வைக்கப்பட்டிருக்கிற பிச்சைக் கிழவனை அப்போதுதான் சின்னாயி பார்த்தாள். "அவனுக தலையில இடிவிழ... நம்ம தாத்தாவயே அடிச்சிட்டானுக... இவரு அவனுகளுக்கு என்ன தீங்கு செஞ்சாரு?..." நெஞ்சுக்குள் பீறிட்ட வார்த்தைகள் சின்னாயினால் அடக்க முடியாமல் வெளியே வந்தன.

"தாத்தாவுக்கு எப்புடி இருக்கு சிங்காரம்?" இருட்டில் தெளிவாக எதுவும் தெரியாததால் சின்னாயி கேட்டாள். மங்கலான வெளிச்சம்தான் இருந்தது... நல்ல வெளிச்சத்திலேயே அவளுக்குப் பார்வை தெரியாது.

"தாத்தாவுக்கு சீரியசாத்தான் இருக்கு... என்ன செய்யிரதுன்னு தெரியல்ல... இந்த நேரத்தில எங்கதான் போறது?..." சிங்காரத்தின் வார்த்தைகளில் கவலை மிதந்தன.

சின்னாயி மாலினியைப் பார்த்து ஏதோ சொல்ல வாயெடுத்து, பிறகு அதைத் தவிர்த்துக் கொண்டு அந்த நினைப்பின் சாரத்தை – காரத்தை தன் பார்வையில் காட்டினாள்.... அந்தப் பார்வையில் மாலினியை எரித்து விடுகிற கனலின் சாயல் இருந்தது. மாலினிக்கு அந்தப் பார்வையின் அர்த்தம் புரிந்தது. ஆனால் எதுவும் புரியாதது போல் இருந்து விட்டாள். சின்னாயி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணம் அவளுக்குத் தெரியும். சிங்காரத்தோடு லயத்துக்கு குடித்தனமாய் வந்ததிலிருந்து சின்னாயி எதிரியாகத்தான் இருந்தாள். அதற்கு அவள் ஒரு சிங்களத்தி என்பதைவிட வேறு ஒரு காரணமும் இருந்தது... நீண்ட நாட்களாக தன் ஒரே மகளை சிங்காரத்திற்கு மனைவியாக்க வேண்டும் என்று நினைத்திருந்தாள். அந்த நினைப்பில் மண்ணைப் போட்டது மாலினி என்று தீர்க்கமான முடிவுக்கு வந்தாள். கூடவே அவள் ஒரு சிங்களத்தியாய் இருந்தது எரிகிற அவள் நெஞ்சில் எண்ணெய் வார்த்தது போலாகி விட்டது... மாலினியைப் பார்க்கும் போதெல்லாம் தன் ஆத்திரத்தை திரட்டி ஏதோ ஒரு வழியில் கொட்டித் தீர்ப்பாள்.

"நம்ம தோட்டத்து லயம், ஸ்கூல், கோயில் எல்லாம் எரியிரதுக்கு யாரு காரணம் தெரியுமா?" என்று சின்னாயி ஒரு விடுகதையைப் போட்டது போல் கேட்டபோது அந்தக் கேள்வி சிங்காரத்திற்கும் மாலினிக்கும் மற்றவர்களுக்கும் விதவிதமான எண்ணங்களை அவரவர்கள் நெஞ்சங்களில் ஏற்படுத்தியது.

மாலினிக்கு 'பட்'டென்று சின்னாயி எண்ணம் புரிந்துவிட்டது. தனக்கும் இவர்களுக்கும் இந்த இடத்தில் எப்படியாவது மோதல் ஏற்படுத்தவே அவள் அப்படிக் கேட்கிறாள்! சிங்காரமோ தான் வாய்விட்டுச் சொல்ல முடியாததை இவள் சொல்லப் போகிறாள் என்பதை உணர்ந்தான். மற்றவர்களோ சின்னாயி 'வாய்' சும்மா இருக்காது. ஏதோ பிரச்னையை இழுக்கப் போகிறாள் என்று புரிந்தது.

ஆனால் அவர்கள் எல்லோரும் ஏதோ ஒரு முடிவு எடுக்கும் முன்னர் சின்னாயி சொன்னாள் - சொல்லியே விட்டாள். "நம்ம சந்திக்கடை மொதலாளி மவன் ஆரிய ரத்னாதான். லயத்த எரிச்சத நான் என் ரெண்டு கண்ணால பார்த்தேன். அவன் குடும்பம் நாசமா போக!... நாசமா போக!..." சின்னாயி சாபம் போட்டாள்.

சிங்காரம் மாலினியைப் பார்த்துவிட்டு வேறு பக்கமாக பார்வையைத் திருப்பினான். மாலினிக்கு இப்போது முதுகுவலியோடு மனவலியும் சேர்ந்து கொண்டது.

சின்னாயி ஏதோ பேச வாயைத் திறந்தாள்... ராமன் அப்போது சத்தம் போட்டான், "சின்னாயி! சும்மா இருக்க மாட்டே! தேவையில்லாத பேச்சு வேணாம்... நம்ம லயத்த மட்டும் எரிக்கல்ல... சிலோன் பூராவுள்ள தோட்டங்கள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– தமிழ் ஆள்க வீட்ட – கடைய எரிச்சிருக்காங்க... இப்ப நடக்கிறது தமிழ் சிங்கள கலவரம்...! இந்த நேரத்தில வேற கதை வேணாம்... பேசாம இருந்தா போதும்..."

சில நிமிடங்கள் அங்கு மௌனம் நிலவியது.... அப்புறம் மறுபடியும் பேசத் தொடங்கினாள் சின்னாயி... அவள் வாய் சும்மா இருக்காது போலும்! எங்கே இருந்தாலும் ஏதாவது பேச வேண்டும்...

"யாரைச் சொல்லி என்ன செய்யிரது? எல்லாம் நம்ம தலையெழுத்து... நம்ம ஆள்களதான் குத்தம் சொல்லணும். எப்ப இந்தியாவுல இருந்து வந்தோமோ அப்ப இருந்து ஒரே கரச்சதான்... நாம இந்த தோட்டத்தில எம்புட்டு கஷ்டப்பட்டு இருக்கோம்... காடா கெடந்ததை தோட்டமாக்கினது நம்ம ஆளுக... அதையாவது நெனைச்சி பாத்தானுகளா இவனுக?... அவனுக நாசமா போக..." மறுபடியும் ஒரு சாபம்....

சின்னாயியை இப்படியே பேசவிட்டால் பிரச்னை கட்டாயம் வரும் என்பதை உணர்ந்து கொண்ட ராமன் மறுபடியும் சத்தம் போட்டான். இம்முறை சிறிது கண்டிப்புடன்...

"இந்தா சின்னாயி! சும்மா தொண தொணக்காம பேசமா இரு! நீ போடுர சத்தத்தில அவனுக இந்த பள்ளத்துக்கு வந்தாலும் வருவானுக. தயவுசெஞ்சு பேசாம இரு... உனக்கு கோடிப் புண்ணியம் சேரட்டும். நம்ம இப்ப மூச்சு வுடுரது கூட யாருக்கும் கேக்கக் கூடாது..."

சின்னாயி அதற்குப் பிறகு வாயைத் திறக்கவே இல்லை, மௌனமாய் இருந்தாள். அந்தப் பிச்சைக் கிழவன் அருகே போனாள். அதுவரை கிழவன் பக்கத்தில் இருந்த மாலினி ஏனோ விலகிக் கொண்டாள்.

சின்னாயி தன் சேலை முந்தானையைக் கிழித்து கிழவனின் முகத்தில் படிந்திருந்த ரத்தக் கறையைத் துடைத்தெறிந்தாள்.

சிங்காரம் யோசித்துக் கொண்டிருந்தான். அவனுடைய கவலையெல்லாம் கிழவனையே சுற்றியது. கிழவனுக்கு ஏதாவது மருத்துவ சிகிச்சை செய்ய வேண்டும். ஆனால் இந்த நேரத்தில் அதற்கு எங்கே போவது? ஊரடங்குச் சட்டம் போடப்பட்டிருக்கிறதாம். விடிந்துதான் எதுவும் செய்யலாம். அவன் விடிய மட்டும் காத்திருந்தான்... அதே நேரத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழவனுக்கு எதுவுமே நடக்கக் கூடாது என்று பிரார்த்தித்தான். கூடவே சீக்கிரம் விடியட்டும் என்று எண்ணினான்.... அவனைப் போலவே மற்றவர்களும் விடிவை எதிர்பார்த்தார்கள். விடிவு?... சரியான வேடிக்கை...! நிரந்தர ஒரு விடிவை எதிர் நோக்கி, அதற்காக உழைத்துப் போராடி ஏங்கிக் காத்துக் கிடக்கிற அவர்கள் இன்று இப்போது ஒரு தற்காலிக விடிவை எதிர்பார்ப்பது வேடிக்கைதானே?

அன்று இரவு முழுவதும் அந்தப் பள்ளத்தாக்கில் இருந்தார்கள்... எவரும் அன்று இரவு முழுமையாகத் தூங்கவில்லை. எப்படித்தான் தூக்கம் வரும்? தூங்கிற மாதிரியான ஒரு இடத்திலா அவர்கள் இருந்தார்கள்? ஆயினும் சிலருக்கு 'கோழி'த் தூக்கம் வந்தது. சில நிமிடம் தூங்கித் தூங்கி 'விழி'த்தார்கள். விடிகிற பொழுதாகையால் லேசாக குளிரத் தொடங்கியது. சின்னாயியும் மாலினியும் வெளிப்படையாக குளிரில் நடுங்கத் தொடங்கினார்கள்...

விடியத் தொடங்கியது. அதனை அறிவிப்பது போல் பறவைகள் தங்கள் மொழியில் பேசத் தொடங்கின. எங்கோ சில சேவல்கள் விடிகிறதை அறிவிக்கும் உரிமை, தமக்கு மட்டுமே உரியது போன்று விட்டுவிட்டு கூவிக்கொண்டிருந்தன. அதுவரை ஆட்சி செய்த இருட்டு மன்னர் பின்வாங்கத் தொடங்கியதை அடுத்து ,வெள்ளை வேட்டி மகாராஜாவான வெள்ளையன் மெள்ளமெள்ள ஆட்சியைப் பிடிக்கத் தொடங்கி விட்டான்.

சிங்காரம் இரவு முழுவதும் தூங்கே இல்லை. வெளிச்சம் வந்த பிறகு தாத்தாவை நன்றாகப் பார்த்தான். தூங்கிக் கொண்டிருந்தார். ஆயினும் இன்னமும் ரத்தம் காயத்தில் இருந்து கசிந்து கொண்டிருந்தது.

இந்தப் பள்ளத்திலேயே எவ்வளவு நேரம் தான் இருப்பது? ஒரு முடிவுக்கு வந்தான் சிங்காரம்... மற்றவர்களைப் பார்த்து ஒரு யோசனை சொன்னான். "நான் எப்படியாவது டவுணுக்கு போயி சங்க பிரதிநிதியப் பார்த்து விசயத்த சொல்லி தாத்தாவ ஆஸ்பத்திரியில சேர்க்கிறதுக்கு ஒரு ஏற்பாடு செஞ்சுட்டு வாறேன்... நீங்க எல்லாரும் புல்லுமலையில இருக்கிற நம்ம ஆளுகள ரோட்டோரமா வந்து நிக்கச் சொல்லுங்க..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தாத்தாவ என்னா செய்யிரது?" ராமன் கேட்டான்.

"தாத்தா இங்கயே இருக்கட்டும். தாத்தாவுக்கு துணையா சின்னாயி இருக்கட்டும்... நான் டவுனுக்கு போயிட்டு எம்புட்டு வெரசா வரமுடியுமோ வந்திர்ரேன்..." சிங்காரம் தன் யோசனையை சொன்னான்.

மாலினி சிங்காரத்தைப் பார்த்துவிட்டு சொன்னாள்... "நானும் தாத்தாவோட இருக்கிரேன்....". தன்னைத் தாத்தா அருகே இருக்கச் சொல்லாதது மாலினிக்கு வேதனையைத் தந்தாலும் அவள் அதைக் காட்டிக் கொள்ளவில்லை.

மாலினி இங்கேயே இருக்கப் போகிறேன் என்றது சின்னாயிக்குப் பிடிக்கவில்லை. அவள் முகத்தில் கோணல்கள் விழுந்தன. அதைக் கவனித்த ராமன் இவர்கள் இருவரையும் தனியே விட்டுப் போனால் 'நிச்சயம் பிரச்னை வரும்' என்று எண்ணியவாறு திடீரென்று "தாத்தாவோட இவங்க ரெண்டு பேரும் இருந்தாலும் எதுக்கும் நானும் இருக்கிரேன். ஏதும் ஒன்னுன்னா பொம்பள ஆளுக மட்டும் என்னா செய்வாங்க..." என்றான்.

சிங்காரமும் மற்றவர்களும் அதற்கு ஒத்துக் கொண்டார்கள். சிங்காரம் அப்போதே புறப்பட்டான். மற்றவர்கள் புல்லுமலை பக்கமாய் போனார்கள்.

பொழுது நன்றாக விடிந்து விட்டிருந்தது...

## 11

ஒரு ராணுவ வண்டி அந்த தோட்டத்திற்குள் நுழையும் போது காலை மணி பத்திருக்கும்.... அந்த வண்டியின் முன் சீட்டில் துப்பாக்கியுடன் ராணுவ வீரர்கள் இருந்தார்கள். சங்கப் பிரதிநிதியும் சிங்காரமும் வண்டியின் பின்னால் இருந்தார்கள்.

ராணுவ வண்டி குறுக்கு ரோட்டுக்குப் போகிற பாதையருகே நிறுத்தப்பட்டது. சிங்காரம் முதலில் குறுக்குப் பள்ளத்தை நோக்கிப் போனான். அவனைத் தொடர்ந்து பிரதிநிதியும் போனார். அடுத்த சில நிமிடங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழவனைத் தூக்கிக் கொண்டு சிங்காரம், ராமன், பிரதிநிதி, ஆகியோர் வந்தார்கள். அவர்களின் பின்னால் மாலினி, சின்னாயி ஆகிய இருவரும் வந்தார்கள்.

கிழவனை ராணுவ வண்டியின் உள்ளே ஒரு ஓரமாகப் படுக்க வைத்தார்கள். கீழே சின்னாயி, மாலினி மட்டுமே நின்று கொண்டிருந்தார்கள். சின்னாயியை சிங்காரம் வண்டியில் ஏறச் சொன்னான். முதலில் யோசித்த சின்னாயி பிறகு தானாக வண்டியில் ஏற முயற்சி செய்தாள். முடியவில்லை... கடைசியாக சிங்காரம் ஒரு கை கொடுத்து சின்னாயியை லொறியில் ஏற்றினான். இப்போது மாலினி மட்டுமே கீழே நின்று கொண்டிருந்தாள். சிங்காரமோ அவளை ஏறச் சொல்லவே இல்லை. அவள் முகத்தை ஒரு தடவை பார்த்துவிட்டு பேசாமல் இருந்தான்.

மாலினியின் மனதில் எண்ணங்கள் கொப்பளித்தன... தன்னை சிங்காரம் ஏன் லொறியில் ஏறச் சொல்லவில்லை? அவளுக்கு அது புரியவே இல்லை. ஆனால் ஒன்று மட்டும் மெள்ளமாய் அவளுக்கு புரியத் தொடங்கியது.

சின்னாயியும் மற்றவர்களும் தன்னால்தான் – தன்னை சிங்காரம் கைப்பிடித்ததால்தான் – தோட்டத்தில் கலவரம் வந்தது என்று 'சாடைமாடை'யாகப் பேசியதும், அதற்கேற்றாற்போல் அண்ணன் ஆரிய ரத்னா இந்த வெறியாட்டத்தை முன்னின்று நடத்தியதை நேரில் பார்த்ததும், தனக்கும் சிங்காரத்திற்கும் ஒரு கசப்பை – பிளவை இப்போது ஏற்படுத்தியிருக்கிறது என்பதை மட்டும் நன்கு உணர்ந்து கொண்டாள்.

மாலினி வண்டியில் ஏறாமல் அப்படியே நின்றாள். தனியே எப்படி அந்த வண்டியில் ஏறுவது? யார் கை கொடுப்பார்? சொந்தக் கணவனே கை கொடுக்காமல் நழுவி நிற்கின்றானே!

மாலினியை லொறியில் ஏறச் சொல்லி அவசரப்படுத்தினார் பிரதிநிதி. சிங்காரம் அந்த நேரம் பார்த்து வண்டியின் கதவருகே இருந்தவன் உள்ளே கிடக்கிற கிழவனைப் பார்ப்பது போல் வண்டியிலேயே உட்கார்ந்து விட்டான். கடைசியில் மாலினி தனியாக தட்டுக் கெட்டுத் தடுமாறி ஏறப்போனபோது ராமன் கை கொடுத்தான். சிங்காரம் மனதில் எதையோ வைத்துக் கொண்டு ஒதுங்குகிறான் என்பது அவனுக்குப் புரிந்துவிட்டது. வண்டியில் ஏறி உட்கார்ந்த மாலினியை சின்னாயிக் கிழவி எரித்து விடுவதைப் போல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தாள். மாலினி நெஞ்சுக்குள் குமுறி வந்த துயரத்தை அடக்கிக் கொண்டு இருந்தாள் அவள்.

வண்டியின் முன் பக்கத்தில் டிரைவருக்குப் பக்கத்தில் உட்காரப் போன சங்கப் பிரதிநிதி தன்னோடு சிங்காரத்தையும் உட்கார அழைத்தார். சிங்காரம் ஒரு விநாடி யோசித்தான். வண்டியின் முன்னால் இருந்து போனால் என்ன – பின்னால் இருந்து போனால் என்ன! அகதி முகாமிற்குத் தானே போகிறோம்... இதிலென்ன முன்பக்க சவாரி?... அவன் வண்டியின் பின்பக்கமே இருந்து விட்டான்.

அப்போது அவன் அருகே வந்த ராமன் மெதுவான குரலில் அவனுக்கு மட்டும் கேட்கக் கூடியதாக சொன்னான்...

"நீங்க செய்யிரது சரியா? உங்களையே நம்பி வந்தவளை ஒதுக்கிற மாதிரி நடக்கிறீங்க... நான் எல்லாத்தையும் பார்த்துக்கிட்டுதான் வர்ரேன்...'

சிங்காரம் பதிலேதும் பேசாமல் மௌனமாக இருந்தான்.

அந்த வண்டி புறப்பட்டது. அடுத்த சில நிமிடங்களில் புல்லுமலையில் ஒளிந்திருந்தவர்களையும் ஏற்றிக் கொண்டு அகதிகள் முகாமை நோக்கி ஓடத் தொடங்கியது அது...

இரவெல்லாம் காட்டுக்குள் பயிரோடு பயிராக, தேயிலையோடு தேயிலையாக உயிரைக் காக்க பதுங்கி இருந்தவர்கள் ராணுவ வண்டியில் அகதி முகாமுக்குப் பாதுகாப்பாக போவதையிட்டு நிம்மதியாய் இருந்தார்கள். ஆனால் அந்த அகதிகளில் மாலினி மட்டும் தனித்து விடப்பட்ட அகதியாக போய்க் கொண்டிருந்தாள்...

அந்த ராணுவ வண்டி மாத்தளை முத்து மாரியம்மன் கோயிலின் பிரதான 'கேட்'டைத் தாண்டி ராஜகோபுரத்தின் முன்னால் பரந்து கிடக்கிற மைதானத்தில் ஓடி நின்றது. வண்டியின் உள்ளே உட்கார்ந்திருந்தவர்கள் யாவரும் எழுந்து நிற்கத் தொடங்கினார்கள். இதுவரை மௌனமாக இருந்த அவர்கள் மத்தியில் இப்போது அவசியம் இல்லாமல் கூச்சலும், சத்தமும் கிளம்பியது. அவர்கள் அத்தனை பேருக்கும் வண்டியில் இருந்து அவசர அவசரமாக இறங்குகிற ஆர்வம். அவர்கள் இறங்குவதற்கு முன்னரே அவர்களின் விழிகள் வண்டியில் இருந்து இறங்கிவிட்டன. சிங்காரம் அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிகளோடு தானுமாய் ஆளுக்கு முதல் வண்டியில் இருந்து குதித்தான். அவன் இறங்கியதுதான் தாமதம், அடுத்தடுத்து ராமன், முத்தையா, சுப்பன் ஆகியோரும் இறங்கினார்கள். அவர்களைத் தொடர்ந்து வேறு சிலரும் இறங்க முயன்றபோது வண்டியின் முன்பக்கத்தில் இருந்து இறங்கிய சங்கப் பிரதிநிதி ஓடிவந்து தடுத்தார்.

"ஒருத்தரும் எறங்காதீங்க! ஒங்க எல்லாருட்டும் பேர் பதியணும். முந்தி ஒரு லொறி நிறைய ஆளுக வந்திருக்காங்க... அவங்கள இப்பதான் கணக்கெடுத்து எழுதுராங்க. அது முடிஞ்சி எழுதுர வரைக்கும் யாரும் எங்கயும் போவாம லொறியிலேயே இருங்க..."

எவரும் லொறியில் இருந்து இறங்கவில்லை. வண்டிக்கு கீழே இருந்த மற்றவர்கள் சிங்காரத்தை 'நாங்க என்ன செய்ய?' என்பது போல் பார்த்தார்கள். சிங்காரம் 'அவர்கள் கீழேயே இருக்கட்டும்' என்பது போல தலையசைத்தான். பிறகு பிரதிநிதியைப் பார்த்து கேட்டான்.

"நாங்க மட்டும் கீழேயே இருக்கிரோம். ஏதும் உதவின்னா செய்யிரோம். சொல்லுங்க..."

பிரதிநிதி அதற்கு தலையசைத்துவிட்டு "நான் கோயில் ஒப்பீசு வரைக்கும் போயிட்டு வர்ரேன்..." என்றவாறு நடையைக் கட்டினார். அவர் சிறிது தூரம் போன பின்னர்தான் சிங்காரத்திற்கு வண்டியின் உள்ளே கிடக்கிற பிச்சைக் கிழவனின் நினைவு வரவும், பிரதிநிதியிடம் ஓடி விஷயத்தை சொல்லி அவரை அழைத்தான்... அவரும் வண்டியருகே வந்து கிழவனைப் பார்த்துவிட்டு, கிழவனை கீழே இறக்கச் சொல்லிவிட்டு, இப்போது வேறு எங்கோ போனார்...

சிங்காரமும் மற்றவர்களும் மறுபடியும் வண்டிக்குள்ளே ஏறி கிழவனை கீழே இறக்கிக் கொண்டு வந்தார்கள்.

சின்னாயி கிழவி மாலினியின் காதில் விழுகிற மாதிரி "இந்த மனுசன போயி அடிச்சிருக்கானுங்களே... அவனுக உருப்படுவானுகளா? நாசமாக போக" என்று "முணுமுணு"த்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராமன் இந்த முறையும் சின்னாயியைப் பார்த்து முறைத்தான்... 'கெழவி வாய ஊசியால தைச்சாத்தான் சரிவரும்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

பிரதிநிதி அப்போது தூக்குக் கட்டிலோடு வந்தார். கிழவனை இப்போது அந்தக் கட்டிலில் படுக்க வைத்தார்கள்.

சிங்காரம் பிரதிநிதியின் முகத்தைக் கேள்விக் குறியோடு பார்த்தவாறு, "கவுருமென்ட் ஆசுபத்திரிக்கு கொண்டு போறது நல்லது. பேச்சு, மூச்சு இல்ல..." என்று இழுத்தான்.

"மொதல்ல கோயில்ல இருக்கிற சிகிச்சை நெலையத்தில இருக்கிற டொக்டருக்கிட்ட காட்டுவோம். அவரு என்ன சொல்வாருன்னு பார்த்திட்டு அப்பறம் மத்ததை பார்ப்போம்..." என்ற பிரதிநிதி சிங்காரத்திடமும் மற்றவர்களிடமும் தன் பார்வையால் கிழவனைத் தூக்கிக் கொண்டு வரும்படி 'சாடை' காட்டிவிட்டு சிகிச்சை நிலையத்தை நோக்கி நடந்தார்.

சிங்காரமும் மற்றவர்களும் அந்த கட்டிலைத் தூக்கிக் கொண்டு அவர் பின்னால் நடந்தார்கள்.

சிகிச்சை நிலையம் அங்கிருக்கிற அகதிகளுக்கு தற்காலிக உதவி செய்வதற்காக அமைக்கப்பட்டிருக்கிறது. அகதிகளான டாக்டர்களும் நர்சுகளும் பணி புரிந்தார்கள். மருந்துகள் கூட நன்கொடையாக வந்து சேர்ந்தன.

பிச்சைக் கிழவனை சிகிச்சை நிலையத்தில் இருந்த டாக்டர் நன்கு பரிசோதனை செய்து விட்டு காயங்களுக்கு மருந்து போடவும், ஊசி போடவும் ஏற்பாடு செய்தார்... பிறகு கிழவனைப் பற்றிய விபரங்களைக் கேட்டு எழுதி வாங்கிக் கொண்டு, யாரையாவது பொறுப்பாளராகக் கையெழுத்து போடச் சொன்னார். பிரதிநிதியும் மற்றவர்களும் யோசித்தார்கள். சிங்காரம் அதற்குள் அவர்களுக்கு முன்னே தானாகவே வந்து கையெழுத்திட்டுக் கொடுத்தான்.

பிரதிநிதி அவர்களைப் பார்த்து, "நீங்க எல்லாரும் லொறிகிட்ட போய் நில்லுங்க...! நான் கோயில் ஒப்பீசுக்கு போயிட்டு வர்ரேன்..." என்று சொல்லிவிட்டு போனார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின்னர் மற்றவர்கள் சிகிச்சை நிலையத்தை விட்டு வெளியே வந்தார்கள். சிங்காரம் சிகிச்சை நிலையத்தில் படுத்துக் கிடந்த கிழவனையே பார்த்தான். கிழவன் கண்களை மூடியபடி படுத்துக் கிடந்தான். சிங்காரத்தின் கண்கள் கலங்கின. கண்ணீர்த் துளிகள் இமையோரத்தை நனைத்தன. மெள்ள அங்கிருந்து நடந்த அவன் டாக்டரிடம் சென்று விசாரித்தான்.

"தாத்தாவுக்கு எப்படியிருக்கு டொக்டர்?"...

டாக்டர் அவனை ஒரு தடவை பார்த்துவிட்டு ஆறுதலாய் வார்த்தைகளை உதிர்த்தார்... "நெஞ்சில் நல்லா அடிபட்டிருக்கு... வெளிக் காயங்களுக்கு மருந்து போட்டாச்சி... உள் காயத்துக்கு மாத்திரை குடுத்திருக்கோம்... ஊசியும் போட்டிருக்கோம்... பயப்பட வேணாம்... நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்..."

டாக்டரின் அந்த பதிலில் திருப்தியடைந்ததைவிட எப்படியோ இத்தனை பிரச்னைக்கு மத்தியில் பிச்சைக் கிழவனை ஆஸ்பத்திரியில் சேர்த்துவிட்டோம் என்பதே அவனுக்கு நம்பிக்கையின் பெரிய திருப்தி! அந்த திருப்தியில் சிகிச்சை நிலையத்தை விட்டு வெளியே வந்த அவன் அந்த கோயில் மைதானத்தில் தன் விழிகளைச் சுழல விட்டான்....

அந்த மைதானத்தில் ஆங்காங்கே சில லொறிகளும், கார்களும் நிறுத்தப்பட்டிருந்தன. அகதிகளான மக்கள் சில இடங்களில் குவியலாகவும், சில இடங்களில் நாலைந்து பேராகவும் நின்று கொண்டிருந்தார்கள். பலர் கூட்டமாக நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். எல்லோரின் முகத்திலும் மகிழ்ச்சி அழிந்து போயிருந்தது. ஒரே சோகத்திரைதான் அவர்கள் முகத்தில் பரவிக் கிடந்தது. இது இன்று.... ஆனால் அன்று?!... அதுவும் மாசி மகத்தன்று அந்த மைதானத்தில்....

மாசி மாதத்தில் வருகிற மகத்தன்று அந்த மைதானம் தேவலோகமாக மாறியிருக்கும். மைதானம் முழுக்க மக்கள்.... எங்கும் மனிதத் தலைகள் அசைந்து கொண்டும், நின்று கொண்டும் இருக்கும். அந்த மக்களிடையே உலகில் உள்ள எல்லா நிறங்களிலும் உருவான உடைகள் ஜொலிக்கும்...!

அந்த மக்கள் கூட்டத்திடையே காவடி, கரகம், பொய்க்கால் குதிரை, மாறுவேடப் போட்டி, அனுமார் ஆட்டம் போன்ற கோஷ்டிகள் வட்டம் போட்டு அந்த வட்டத்திற்குள்ளே தங்கள் 'ஆட்சியை' நடத்திக் கொண்டிருந்தன...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வட்டத்துக்குள்ளே இருந்தவாறு முழங்கிய வாத்தியங்களின் இசை வானத்தையே முட்டுமாப்போல எழுந்தன... இத்தனை முழக்கத்திற்கும் இடையேயும் தனியே கேட்கிற பக்தர்களின் பஜனை முழக்கங்கள்... பல்வேறு ஒளி ரூபத்தில் நடனமாடும் மின்சாரத்தின் கவர்ச்சி... திருமணத்திற்கு தயாரான மணமக்களாய் நிற்கிற பஞ்ச ரதங்கள்... சுருக்கமாகச் சொன்னால் புராணத்தில் வர்ணிக்கிற தேவலோகம் போலிருக்கும் அந்த மைதானம். ஆனால் இன்று?...

ஒரு மயானம் போல் சோகம் ததும்பிக் கிடக்கிறது அந்த மைதானம்...

சிங்காரத்தின் கண்களில் மாசிமகத் தேர்த்திருவிழாக் காட்சிகள் ஒரு திரைப்படமாய் ஓடுகின்றன. எத்தனையோ ஊரில் எத்தனையோ தேர் பார்த்திருக்கின்றான் அவன். ஆனால் அவனுக்குப் பிடித்தது, மறக்க முடியாதது அம்மன் சித்திரத் தேரில் பவனி வருகிற மாத்தளை தேர்தான்[1]...! ஆண்டு தோறும் அவன் அந்த தேர்த்திருவிழாவைப் பார்த்திருக்கிறான். எங்கிருந்தாலும் தேர் ஓடுகிற நாளில் ஊருக்கே வந்து விடுவான். ஒரு வருடம் தேர் பார்க்காவிட்டால், அவன் அந்த வருடம் முழுவதும் எதையோ இழந்து விட்டது போன்ற உணர்வில் இருப்பான். அந்த தேர்த்திருவிழா அவனுக்கு மாத்திரமல்ல – அந்த ஊரில் உள்ள யாவருக்கும் ஒரு சமய வைபவமாக அல்லாமல் அதற்கு மேலேயே ஒரு புனித வைபவமாக மனதுக்கு இதமூட்டும் கலாசார வைபவமாக நாலு பேரைச் சந்திக்கிற நாளாக முக்கிமடைந்திருக்கிறது...

அம்மனுக்கு தமிழர்கள் மட்டுமல்ல சிங்களவர்களும் பக்தர்களாக இருக்கின்றார்கள்... ஆனால் அந்த அம்மன் ஆலயம் இப்போது அகதிகள் தஞ்சமடையும் ஒரு இடமாக – முகாமாக மாறி விட்டது...

---

1. இந்நாவல் 1977ல் நடந்த தமிழர்களுக்கு எதிரான கலவரங்களை மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. 1983ல் நடந்த தமிழர்களுக்கு எதிரான கலவரத்தில் அந்த சித்திரத் தேரை இனவெறியர்கள் தீக்கிரையாக்கினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையில் குறிப்பாக மலைநாட்டுப் பகுதியில் மாத்தளை மாநகரத் தேர்த்திருவிழா புகழ் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12

தேர்த் திருவிழா நினைவுகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட சிங்காரத்தின் கண்கள் அந்த கோயில் ராஜகோபுரத்தருகே போயின. ராஜகோபுரத்தின் கீழே இரும்பிலான ஜன்னல் கதவுக்கு அப்பால் பதிவு செய்து கொண்ட அகதிகள் – இப்பால் பதிவு செய்ய வேண்டிய அகதிகள் கூட்டமாக நின்று கொண்டிருந்தார்கள். உள்ளே இருப்பவர்களுக்கு வெளியே போகிற ஆர்வம்; வெளியே இருப்பவர்களுக்கு உள்ளே போகிற ஆர்வம்; அவர்களுக்கு இடையே பூதாகரமாக உருவெடுத்த ஒரு இரும்புக் கதவு... அந்தக் கதவில் சங்கமித்திருக்கிற சின்னஞ்சிறு கதவு... அந்தக் கதவு வழியாக ஒரே நேரத்தில் ஒரு ஆள்தான் போகலாம்... அந்தக் கதவு எந்த நேரமும் திறப்பதற்கும் தயாராக உள்ளது. ஆனால் அதற்கு முன்னால் ஒரு காவல்காரன் நிற்கின்றான்...

நேற்று அகதியானவர்களை இன்று அகதியானவர்கள் பார்க்கிறபோது மனதில் கிளம்பும் உணர்வுகளோடு துயரத்தோடு அந்த அகதிகளைப் பார்த்தான் சிங்காரம்...

திடீரென்று கோயிலின் உள்ளே போய் அவர்களை அருகில் பார்க்க வேண்டும் – பேச வேண்டும் என்று நினைத்தவாறு அவன் ராஜகோபுரத்தருகே போய் காவல்காரனைப் பார்த்து ஒரு புன்னகையை மலர்த்திவிட்டு அவனருகே போய் அவன் காதில் மட்டும் கேட்கக் கூடியதாகக் கேட்டான்.... "கதவ தொறக்கிறீங்களா? உள்ள போய் பார்த்திட்டு வாறேன்..."

காவல்காரன் அவனுடைய புன்னகைக்கு மயங்காமல் ஒரு புராணத்தையே பதிலாக படித்தான்.

"கதவ தொறந்தா பெரிய பிரச்சனை எல்லாரும் உள்ள போறேன் வெளிய வாறேன்னு வருவாங்க... கதவ மூடுரதும் தொறக்கிரதுமே ஒரு வேலயா போயிரும்! அதோட பகல் சாப்பாடு போடுற நேரம், சரி... இன்னும் கொஞ்ச நேரத்தில சாப்பாடு கொடுப்பாங்க... அப்பறம் அவங்கள திரும்பவும் உள்ள எடுக்கிரது பெரிய கஷ்டமாகும்!..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் காவல்காரன் மீது முதலில் சிங்காரத்திற்கு அநாவசியமாக கோபம் வந்தாலும், பிறகு அவன் சொன்ன காரணங்களில் உண்மை இருப்பதை உணர்ந்து எதுவுமே பேசாது மறுபடியும் உள்ளே பார்த்தான். அவன்தான் உள்ளே போக முடியாதாம்! அவன் கண்கள் போகத் தடையா என்ன?...

அவன் அந்த கதவுகளுக்கு அப்பால் இருக்கிற அந்த உள் மண்டபத்தை பார்த்தான். அந்த உள் மண்டபம்தான் வசந்த மண்டபம். அங்கே தான் உற்சவ மூர்த்திகள் எழுந்தருளியிருக்கிறார்கள்... அவர்களைத் தரிசிக்க மாசிமகத் திருவிழாக் காலங்களில் ஒரு பெருங் கூட்டமே கூடும்... இன்றோ அங்கே உயிரைக் காப்பாற்றுவற்காக ஓடிவந்த அகதிகள்தான் இருக்கிறார்கள்... பக்தர்களை மாத்திரம் பார்த்துப் பார்த்துப் பழகிப்போன உற்சவ மூர்த்திகள் அகதிகளைப் பார்க்கக் கூடாது என்றோ என்னவோ அந்த மூர்த்திகளைத் திரையிட்டு மறைத்திருக்கிறார்கள். அகதிகளை ஆண்டவன் பார்க்கக் கூடாதென்று 'ஆசாரம்' சொல்கிறதோ என்னவோ?...

"கொஞ்சம் வெலகி நில்லுங்க... ஆளுக வர்ராங்க..." கோயில் காவல்காரன் கத்தினான்.

இப்போது கதவருகே கூடியிருந்த கூட்டம் விலகி நிற்கவே அவன் அந்தக் கோபுர வாசலில் பெரிய கதவுக்குள்ளே இருக்கிற சிறிய கதவைத் திறந்தான். ஒரு ஆள் போக முடியும். அதன் வழியாக அப்போதுதான் பெயரைக் கொடுத்தவர்கள் உள்ளே போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களை மனதுக்குள் அளந்தான்... சிங்காரம் கேள்விகள் பனை மரமாய் எழுந்து நின்றன... இவர்கள் அகதிகளா?... எப்போதும் போலத்தானே அவர்கள் இருக்கிறார்கள்! எப்போதும் இப்படியென்றால் எப்போதும் அவர்கள் அகதிகள் தானோ?... ஆம்! எப்போதும் அவர்கள் இந்த வாழ்க்கைக்கு ஏங்குகிற வாழத் துடிக்கிற அகதிகள் – நிரந்தர அகதிகள்... அவர்களுக்கு இந்த நாடு வகுத்த எல்லையே அகதிகள் வாழ்கிற எல்லைதான்... உலகில் உள்ள அகதிகளுக்கு இருக்க இடம், உடுத்த உடை, உண்ண உணவு இலவசமாக கிடைக்கின்றது...! ஆனால் இந்த 'அவர்கள்' உழைத்தால்தான் இடம், உடை, உணவு கிடைக்கிறது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கோபுரத்தின் அருகே, வெளிவாசல் பக்கமாய், ஒரு மேஜைக்காரர் திறந்த வெளியில் கணக்கெடுத்து எழுதிக் கொண்டிருந்தார். இதுவரை அவரின் எண்ணிக்கைப்படி அந்த அகதி முகாமில் 4440 பேர் பதிந்திருக்கிறார்கள். இன்று இரவுக்குள் அந்த எண்ணிக்கை 6000 த்தை தாண்டிவிடும். அவரின் முன்னே தற்போது வரிசை குறுகிப் போய் விட்டது. இன்னும் சிலரே, சுமார் இருபது பேரே நின்று கொண்டிருந்தார்கள்... அவர்களையெல்லாம் இன்னும் பத்து பதினைந்து நிமிடத்தில் பதிந்து விடுவார்கள். அதன் பிறகு வேறு அகதிகள் பதிய வரலாம்... இதையெல்லாம் கவனித்த சிங்காரம் அந்த சிகிச்சை நிலையத்தருகே இருக்கிற தேர்க் கொட்டகையை மனதில் உசுப்பிய ஒரு உணர்வில் பார்க்கப் போனான்.

அந்த தேர்க் கொட்டகை ராஜகோபுரத்தைவிட உயரமானது. சென்ற வருடம்தான் கட்டி முடிக்கப்பட்டது. அந்தக் கொட்டகைக்குள்ளேதான் சித்திரத்தேர் இருக்கின்றது. வருடத்தில் இருபத்தைந்து நாட்களைத் தவிர மற்ற நாட்களில் அந்த சித்திரத் தேரை வெளியே முழுமையாகப் பார்க்க முடியாது; கொட்டகைக்குள்ளேயே இருக்கும்.

சிங்காரத்தின் மனக்கண்ணில் அந்த சித்திரத்தேர் அப்படியே நின்றது... எத்தனை அழகானது! எத்தனை சிறப்பானது! பாரம்பரிய தமிழர்களின் கலாசார சின்னமான அந்த சித்திரத் தேரை எல்லோரும் தூரத்தில் நின்றும், பக்கத்தில் மேலோட்டமாகவும் மட்டுமே பார்த்து ரசித்திருக்கின்றார்கள். அவனோ மிக அருகில் சென்று அந்த சித்திரத் தேரில் ஆங்காங்கே மரங்களில் செதுக்கப்பட்ட மரச்சிற்பங்களை பார்த்தும், தொட்டும் மனதால் ரசித்தும் ஆனந்தம் பெற்றவன்...! அதன் அழகில், கலை நுணுக்கத்தில் மனதைப் பறிகொடுத்தவன்...

•

அந்த சித்திரத் தேரைப் பார்க்கிற போதெல்லாம் சில நேரத்தில் இந்த மனிதன் உருவாக்கும் செயற்கை இந்த இயற்கை படைத்த அழகை மிஞ்சி விடுகின்றதோ என்ற எண்ணம் வந்து போகும் அவனுக்கு... வெறும் மரங்கள் சிற்பங்களாய், சித்திரங்களாய், சிலைகளாய் – சித்திரத் தேராய் ஜொலிக்கின்றது. அந்தக் கோயிலுக்கு வருகிற மேலைநாட்டு உல்லாசப் பயணிகள் அந்த சித்திரத் தேரை அடிமுதல் நுனிவரை ரசித்து ஞாபகச்சின்னமாய் சிறிய, பெரிய 'கமரா'வில் – 'வீடியோ கமரா'வில் பதித்து படங்களாய் அள்ளிக் கொண்டு போகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்கு மெல்லமாய் மூன்றாம் பிறையாய் ஒரு நினைவு நெஞ்சில் பூத்தது...

அப்போது மாலினியைக் காதலித்துக் கொண்டிருந்த காலம்... ஒரு தடவை அந்தக் கோயிலுக்கு வந்த சிங்காரம் தான் மாலினியை மணக்க 'அருள்' கிடைத்தால் அவளோடு பொங்கல் வைக்க வருவதாக 'நேர்த்தி' வைத்தான். பிறகு எத்தனையோ எதிர்ப்புக்கு மத்தியில் அவளைக் கைப்பிடித்தது அம்மன் அருள் என்று நினைத்தான்; நம்பினான். அந்த ஆண்டு மாசி மகத் திருவிழாக் காலத்தில் மாலினியோடு கோயிலுக்கு வந்து 'பொங்கல்' வைத்து 'நேர்த்தி'யை நிவர்த்தி செய்தான். பிறகு இருவரும் சித்திரத் தேரைப் பார்க்க தேர்க் கொட்டகைக்குப் போனார்கள்.

மாலினி அந்தத் தேரைப் பார்த்து வியந்து போனாள். சிங்காரம் அவளுக்கு அந்தத் தேரில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்களைக் காட்டி அவைகளோடு சம்பந்தப்பட்ட 'புராணக் கதைகளை' சொன்னான்.

மாலினி ஒரு சின்னக் குழந்தை பொம்மைகளைப் பார்க்குமாப்போல அந்த தேர்ச் சிற்பங்களைப் பார்த்தவாறு இருந்தாள்.

சிங்காரம் சித்திரத் தேரில் தொங்குகிற சிறுசிறு மணிகளை ஒவ்வொன்றாக ஆட்டினான். அந்த மணிகள் மெல்ல அசைந்து, 'கிணிங் – கிணிங்' என்று இனிய நாதத்தை உதிர்த்தவாறு இருந்தன. சொற்ப நேரம் அந்த இனிய நாதம் கேட்டுக் கொண்டே இருந்தது. பிறகு அந்த மணிகள் அசையாமல் நின்றன. மாலினிக்குத் திரும்பவும் அந்த மணி சத்தத்தைக் கேட்க ஆசை... கைகளை மேலே நீட்டி அந்த மணிகளை ஆட்டப் போனாள். ம்... அந்த மணிகள் அவள் கைக்கு எட்டவே இல்லை. ஒரு அடி இடைவெளியாக இருந்தது. முகம் ரோசாப்பூவாய்ச் சிவக்க வெட்கத்துடன் சிங்காரத்தைப் பார்த்தாள். சிங்காரம் பதில் புன்னகை விரித்தவாறு அவள் கையை தன் கையோடு இணைக்க வைத்து அந்த மணிகளை மீண்டும் அசைத்தான். ஓ! அந்த மணிகள் மறுபடியும் இனிய சங்கீதம் பேசின... அதன் அசைவில் கிளம்பிய நாதம் ஒரு சங்கீதமாய் செவியில் இனித்தன.

அப்போது சிங்காரம் சொன்னான், "நான் தனியா இந்த மணிகளை அசைக்கிற போது வந்த சத்தத்தைவிட இப்போது இனிமையான சத்தம் வருகிறதே!..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன்?..." மாலினி அறியாப் பெண்ணாய் கேட்டாள்.

"இப்போது உன் கையும் என் கையும் இணைந்து அல்லவா அந்த மணிகளை அசைத்தன. அதனால்தான் இனிய சத்தம்...!"

மாலினி முகத்தில் மறுபடியும் ரோசாப்பூ சிவப்பு... வெட்கம் தலையைச் சாய்க்க, சித்திரத் தேரின் சக்கரத்தைப் பார்த்தாள் அவள்.

ராஜ கோபுரத்தில் கட்டப்பட்டிருந்த ஒலிபெருக்கியில் வெளியான தொண்டர் சம்பந்தமான அறிவிப்புகள் சிங்காரத்தை நினைவுகளிலிருந்து திரும்ப வைத்தன. தேர்க் கொட்டகையில் திறந்திருந்த சிறுகதவு வழியாக உள்ளே போய் அந்த மணிகளை அசைத்தான்... அந்த மணிகள் அவன் கரம் பட்டதுமே வழக்கம்போல அசைந்து அசைந்து பேசின. ஆனால் அவனுக்கு அந்த மணிகள் நாதம் முன்னர் போல மனதுக்கு இதமாக இருக்கவில்லையே ஏன்?... தனக்குத் தானே கேட்டுக் கொண்டான் அவன். அதற்குப் பதிலாக அவன் நெஞ்சில் நின்றது மாலினியின் உருவம்தான்.

தனக்கும் மாலினிக்கும் ஏற்பட்டிருக்கிற விரிசல் – பிளவுதான் அந்த மணிச்சத்தம் வழக்கம் போல் இனிக்காததற்குக் காரணம். அது அவனுக்குப் புரிந்தது. வாழ்க்கையே அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும்போது ரசிக்க – சந்தோஷிக்க – உணர்வுகள் வருமா என்ன?...

தேர்க் கொட்டகையிலிருந்து வெளியே வந்த சிங்காரம் மேஜை அருகே இருந்தவர்களின் எண்ணிக்கை ஒன்றிரண்டாக குறுகியிருக்கவே அவசரமாக ராணுவ வண்டியருகே வந்தான். வண்டியருகே அவனுக்காக சங்கப் பிரதிநிதி காத்துக் கொண்டிருந்தார்.

"சிங்காரம்! எல்லாத்துட்டு பேரையும் பதியப் போறாங்க! நீ கொஞ்சம் அதுக்கு ஒதவியா இரு, நா கோயில் ஒப்பீசு வரைக்கும் போயிட்டு வர்ரேன்..." சிங்காரத்தைப் பார்த்து சொல்லிவிட்டு பதிலுக்குக்கூட காத்திராமல் பிரதிநிதி போய்விட்டார். சிங்காரம் வண்டியில் இருந்தவர்களை கீழே இறங்கச் சொல்லி எல்லோரையும் அந்த மேஜைக்கு முன்னால் வரிசையாக நிற்க வைத்தான். வரிசையில் முதலில் சின்னாயிதான் நின்று கொண்டிருந்தாள். அவளுக்குப் பின்னால் சில பெண்களும் ஆண்களும் நின்று கொண்டிருந்தார்கள். அந்த வரிசையில் மாலினியைக் காணவில்லை. அவளைத் தேடினான் அவன். அவள் வரிசையில் இணையாமல் தனியே நின்று கொண்டிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்காரத்தைக் கண்டதும் அவனருகே வந்து கேட்டாள், "தாத்தாவுக்கு எப்படி இருக்கு?"

"தெரியாது..." ஒரே வார்த்தையில் முகத்தில் அடித்ததுபோல் பதில் சொன்னான் அவன்.

மாலினிக்கு அவன் பதில் சொன்னவிதம் கவலையைக் கொடுத்தது. தன்னிடம் ஏன் இப்படி, இப்போது நடந்து கொள்கிறான்? என் மீது என்ன கோபம்?... அவளுக்கு ஒன்று மட்டும் புரிந்தது. அவனுடைய இந்த மாற்றம் – கோபம் – புறக்கணிப்பு எல்லாம் அந்த 'லயம்' எரிப்புக்குப் பின்னர்தான்...

அந்த மேஜைக்காரர் எழுதத் தொடங்கினார். சின்னாயி 'மளமள'வென்று பெயர் விவரங்களைக் கொடுத்துவிட்டுப் போனாள். இப்போது அந்த வரிசையில் நின்று கொண்டிருந்தவர்களில் மூவரைத்தவிர மற்ற எல்லோரும் பெயர் விவரம் பதிந்து விட்டார்கள். மேஜைக்காரக்கு எழுதிஎழுதி கைகள் வலிக்கத் தொடங்கின. கைகளை நீட்டி மடக்கியவர், "வெரசா விபரம் சொல்லுங்க... ஒங்க விபரங்களை எழுதிட்டு நா டீ குடிக்கப் போவணும்?" என்று அவசரப்படுத்தினார்.

சிங்காரம் அவரைப் பார்த்துவிட்டு ஏதோ ஒரு யோசனையில் எங்கோ போனான்... அடுத்த சில நிமிடங்களில் திரும்பிவந்த அவன் கையில் ஒரு கப் டீ இருந்தது. மேஜைக்காரர் அதைப் பார்த்துவிட்டு "கடையிலயா டீ வாங்கினீங்க? ஏன் வாங்கினீங்க?... இங்க கோயில்லயே டீ இருக்கே?..." என்று சொன்னார்.

சிங்காரம் "சரி... சரி குடிங்க... எவ்வளவோ எரிஞ்சி போச்சி. இந்த ஒரு டீ, கடையில வாங்கினதிலயா நஷ்டம் வரப்போவுது?" என்றவாறு அந்த கப் டீயை அவர் முன்னே வைத்தான்.

மேஜைக்காரர் பதில் சொல்லாமல் அவனை நன்றியுடன் ஒரு தடவை பார்த்துவிட்டு டீயைக் குடித்தார். பிறகு எழுதத் தொடங்கினார்.

இப்போது மாலினி மேஜையின் முன்னால் நின்றாள். அவளைப் பார்த்த மேஜைக்காரர் அவள் 'விழி'ப்பதைக் கணக்கெடுத்துக் கொண்டே கேட்டார், "நீ மட்டும் தனியாவா? வேற யாரும் இல்லயா?..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலினி பதில் சொல்லாது சிங்காரத்தின் முகத்தைப் பார்த்தாள். சிங்காரம் எதுவும் செய்ய முடியாதவனாய் நின்றான்... மேஜைக்காரர் அவசரத்தில் நின்றார்.

"எனக்கு நிறைய வேல இருக்கு...! பதில் 'டக்டக்'ணு சொல்லுங்க..."

அப்போது சிங்காரம் பேசினான், "அது என் சம்சாரங்க..."

"அப்படியா?" என்ற மேஜைக்காரர் அவர்கள் இருவரையும் மாறிமாறிப் பார்த்துவிட்டு 'இவர்களுக்கிடையில் ஏதோ ஒரு கசப்பு இருக்க வேண்டும்' என்று நினைத்தவாறு எழுதத் தொடங்கினார். முதலில் சிங்காரம் தன் விபரங்களைப் பதிந்தான். அவனுக்கு அடுத்ததாக மாலினி தன் விபரங்களைப் பதியத் தொடங்கினாள்.

"பேரு..."

தன் பெயரைச் சொன்னாள் அவள்.

"அப்பா பேரு..."

சிங்காரத்தின் முகத்தைப் பார்த்துவிட்டு சொன்னாள்... "ரத்னசிரிசேன..."

மேஜைக்காரர் புருவத்தில் வியப்பு 'குந்தியது'... மெல்ல சாடையாக சிங்காரத்தைப் பார்த்தார். சிங்காரம் தலையசைத்தான். அந்தத் தலையசைப்பு மாலினியின் நெஞ்சில் பால் வார்த்ததைப் போன்றிருந்தது. ஒரு கசப்பில் தன்னைவிட்டு சிங்காரம் விலகி நின்றாலும் தன்னை மனைவியாக இன்னமும் நினைக்கின்றானே... அதுபோதும். மெல்லிசான ஒரு துணியாய் புன்னகை நீண்ட நேரத்திற்குப் பிறகு அவள் முகத்தில் மலர்ந்தது.

மேஜைக்காரருக்கு சிங்காரம் ஒரு சிங்களப் பெண்ணைத் திருமணம் செய்திருப்பது புரிந்தது. 'இந்த நாட்டில் இனப்பிரச்சனை நிரந்தரமாக தீரவேண்டுமானால் சிங்களவர் தமிழரையும் – தமிழர் சிங்களவரையும் திருமணம் செய்ய வேண்டும். இத்தகைய கலப்பு திருமணங்கள்தான் இனப்பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்கும்' என்று ஒரு அரசியல்வாதி எங்கோ முழங்கியதைப் பத்திரிக்கை ஒன்றில் படித்த ஞாபகம் வந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு... சிங்காரத்தின் உள்வாழ்க்கையில் நுழைந்து பார்க்க ஆசைப்பட்ட அவர் மாலினியின் விபரங்களை பதிந்து விட்டு சிங்காரத்திடம் சொன்னார், "எல்லாருட்டு பேரும் விபரம் பதிஞ்சாச்சி! இப்ப எல்லாத்தையும் கூட்டிக்கிட்டு கோயிலுக்குள்ள போங்க... நேரம் இருந்தா என்ன வந்து பாருங்க...!"

தன்னை எதற்காக இவர் சந்திக்க சொல்கிறார் என்பதற்கு பதில் கண்டுபிடிக்க முடியாமல் தவித்த சிங்காரம் அவர்களை கோயிலுக்குள்ளே போகச் சொன்னான். அவர்கள் அத்தனை பேருழ் அந்த கோயிலுக்குள்ளே பத்தர்காளக அல்ல, தஞ்சம் தேடி வந்த அகதிகளாக நுழைந்தார்கள். அவர்களின் பின்னால் சிங்காரம் நடந்தான்...

## 13

சிங்காரம் அந்தக் கோயிலுக்குள்ளே கால்வைத்த போது, கோயிலின் உள்ளே இருக்கிற அந்த வசந்த மண்டபத்தை நிறைத்துக் கொண்டு இருக்கிற கூட்டத்தையும், அவர்களின் தோற்றத்தையும், கேள்விக் குறிகளாய் இருக்கிற அவர்களின் முகத்தையும் பார்க்கிறபோது அவனுள் அழுகையும், ஆத்திரமும்தான் கிளம்பியது. ஆனால் மறுகணமே தன்னை அடக்கிக் கொண்டு தனது இந்த வெறும் அழுகையும், ஆத்திரமும் என்னதான் சாதித்து விடப் போகிறது...? என்பதாய் மனதுக்குள் நினைத்தவாறு நடந்தான். கை இல்லாதவன் எழுத ஆசைப்பட்டது போலவும் – கால் இல்லாதவன் ஓட எத்தனித்தது போலவும் அவன் உணர்வும் அடங்கிப் போயின அவனுக்குள்ளே...

அந்த மண்டபத்தின் உள்ளே அவன் நடக்கும் போது கண்ணுக்கு எதிர்ப்படுகிற அகதிகள் அவனை ஒருவித ஏக்கத்துடன் பார்ப்பதாய் அவனுக்குப் புரிந்தது. சிங்காரம் பதிலுக்கு என்ன செய்வதென்று தெரியாமல் தானே ஒரு அகதியாக இங்கே வந்த பின்னர், தான் எப்படி இவர்களை ஆறுதல்படுத்த முடியும்?... அப்படி ஆறுதல் படுத்தினாலும் அது ஆறுதல் தருமா?... என்பது போன்ற எண்ணங்கள் நெஞ்சில் குவிய தலையைக் குனிந்தவாறே வேகமாக நடக்க முயற்சித்தான். ஆனால் அவனால் அந்தக் கூட்டத்தை விலக்கிக் கொண்டு போக முடியவில்லை... அத்தனை கூட்டம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெரிசல்... நெருக்கடி... சிங்காரம் அந்தக் கூட்டத்தில் அவர்களைக் கடந்து போகிறபோது துணி அவித்த நாற்றம் போன்ற ஒரு விதமான நெடி மூக்கைத் துளைத்தது. அவன் அப்படியே நின்றான். அப்போதுதான் ஒரு அறிவிப்பு அந்த மண்டபத்தில் கேட்டது.

அது கோயில் ஒலிபெருக்கியில் இருந்து ஒலிபரப்பான அறிவிப்பு... ஆனால் அந்த மண்டபத்தில் இருந்து கிளம்புகிற சத்தத்தில் அந்த அறிவிப்பு சரியாகவே கேட்கவில்லை. பிறகு அறிவிப்பாளர் "உஸ்.. உஸ்..." என்று சத்தம் போட்டு, "அமைதியா இருங்க! அமைதியா இருங்க...!" என்று சொல்லி மண்டபத்தில் கிளம்புகிற சத்தத்தைக் குறைக்க முயன்றார்... சத்தம் படிப்படியாகக் குறைந்தது. பிறகு தன் அறிவிப்பைத் தொடர்ந்தார் ஒலி பெருக்கியாளர்.

"அனைவருக்கும் வணக்கம்!... இது முத்து மாரியம்மன் கோயிலின் நிர்வாக சபையின் அறிவித்தல்...".

சிங்காரம் தன்னோடு வந்தவர்களைப் பார்த்தான். அவர்கள் அவனுக்கு முன்னால் உட்கார இடம் தேடிக் கொண்டிருந்தார்கள். அவனும் தன் கண்களால் இடம் தேடினான். தூரத்தில் சற்று பிள்ளையார் கோயில் அருகே இருந்த பூக்கட்டும் இடத்தருகே கொஞ்சம் இடம் இருப்பதைக் கண்டான்.

"எல்லாரும் பூக்கட்டும் இடத்துகிட்ட போங்க... அங்க ஒரு மாதிரி சமாளிச்சி ஒக்காரலாம்..." சிங்காரம் சிறிது சத்தமாய்ச் சொன்னான்.

அவர்கள் நடக்கத் தொடங்கினார்கள். சிங்காரம் அவர்களுக்கு முன்னர்ல் போக முயன்றான், முடியவில்லை. ஆனாலும் அவன் விடவில்லை. கூட்டமாய் நின்று பேசிக் கொண்டிருந்தவர்களைப் பார்த்து வழிநெடுக படுத்திருந்தவர்களைப் பார்த்துக் கொண்டே சிலரை எழுப்பி, நின்றவர்களை நகர்த்தி நடந்து போனான் அவன்.

பூக்கட்டும் இடத்திற்குப் போன அவன், அங்கு படுத்தவர்களைத் தள்ளித் தள்ளிப் படுக்கச் சொல்லி ஒரு வெற்றிடத்தை உருவாக்கியபோது மற்றவர்களும் வந்தார்கள். அந்த இடம் அவர்கள் நிற்க உட்கார போதுமானதாக இருந்தது. அவர்கள் ஒவ்வொருவராக அங்கே உட்காரத் தொடங்கியதும் அவன் சொன்னான்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாரும் இந்த இடத்தை விட்டு போக வேணாம்! வெளியில எங்கயாவது போனாலும் இங்கயே வந்திருங்க.. இடம் மாற வேணாம்...!"

அப்போது கடைசியாக வந்து சேர்ந்த மாலினி சிங்காரத்தைப் பார்த்து விட்டு அங்கே ஒரு பக்கமாக உட்காரப் போனாள்...

"நீ ஏன் இங்க வாற? சனியன் மாதிரி தொரத்திகிட்டு... எங்கயாவது இருக்க வேண்டியதுதானே?... ஒன்னால தான் இந்த கரச்ச! எங்க லயம் எரிஞ்சதுக்கு நீதானே காரணம்... ஒன் குடும்பம்தானே எங்கள இப்ப நடுத்தெருவில நிப்பாட்டிருச்சி..." என்று ஆத்திரத்தில் சின்னாயி கத்தினாள். பார்வையால் எரித்தே விடுவதைப் போல் மாலினியைப் பார்த்தாள் அவள்.

மாலினி கண்கள் கலங்க நின்றாள், உட்காரவில்லை... சிங்காரம் இத்தனையும் கேட்டுக் கொண்டு மௌனமாகவே இருந்தான்.

"இந்தா! சின்னாயி! நீ வாய் வைச்சிகிட்டு சும்மா இருக்க மாட்டே? நான் மொதல்லயே சொன்னேன். பேசாம இருன்னு... மாலினியால நம்ம லயம் எரிஞ்சிச்சின்னா இங்க வந்திருக்காங்களே இவங்க லயம் – வீடு வாச எல்லாம் ஏன் எரிஞ்சிச்சி?... லயத்துக்குள்ளயே இருக்கிற ஒனக்கு ஊரு ஒலகத்தில என்ன நடக்குதுன்னு தெரியுமா?... பேசமா இரு!" என்று சத்தம் போட்டான் ராமன்.

ராமனின் வார்த்தைகள் மாலினிக்கு ஆறுதல் சொன்னாலும், சிங்காரத்தின் மௌனம் அந்த ஆறுதலையும் மீறி அவள் நெஞ்சைக் குடைந்தது... சிங்காரம் தன்மீது இன்னமும் கோபமாகவே இருக்கிறான் என்பதை இப்போதுதான் உறுதியாக உணரத் தொடங்கினாள். சிங்காரத்தின் மௌனத்திற்கு வேறு என்ன அர்த்தம்? சின்னாயி சொன்னதை ஆமோதிப்பதாகவே அவன் மௌனம் காட்டுகிறது!

மாலினிக்கு அழ வேண்டும் போலிருந்தது... ஆனால் அங்கே எப்படி அழுவது? அழுதால் மனச்சுமைகள் இறங்கும் போல் இருந்தன... ஆனால் அவள் அழுதால் பலரும் 'ஏன்' என்று கேட்பார்கள்; பார்ப்பார்கள்... அதற்கு கட்டாயம் பதில் சொல்ல வேண்டும். பிறகு அவள் கதையை அந்த முகாமே பேசும்.. ஒரு கணம் அந்தக் காட்சியை சிந்தித்துப் பார்த்துவிட்டு கலங்கிய கண்களை தன் சேலை முந்தானையால் துடைத்தாள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாலினி! ஏன் நிக்கிற?... ஒக்காரு!... யாரு என்ன சொன்னாலும் காதில வாங்காத... தைரியமா இரு..." ராமனின் அந்த அன்பான வார்த்தைகளுக்குப் பிறகு மாலினி கீழே உட்கார்ந்தாள்.

சின்னாயி முகத்தைக் 'கோணி'க் கொண்டாள். வாய் 'முணுமுணு'த்துக் கொண்டது. அதனைப் பார்த்த ராமன் ஒரு முடிவுக்கு வந்தவனாக சின்னாயி அருகே போய் எச்சரித்தான்... "இந்தா... பாரு சின்னாயி! இங்க எல்லாரும் அகதியா வந்திருக்கோம்... எல்லாத்துக்கும் பல பிரச்சனை இருக்கு... மனுசன் வாழ்க்கையே அந்தரத்தில இருக்கு... நீ இந்த நேரத்தில சும்மா அதை இதை பேசி எரியிற நெருப்புல எண்ணெய் ஊத்தாதே! ஒனக்கு புடிக்கலேன்னா ஒதுங்கி இரு... சரியா!...".

சின்னாயி பதிலே பேசாது மௌனமாக தலையை கீழே குனிந்து கொண்டாள்.... ஆனால் அவள் மனசு மட்டும் 'அந்த சிங்களத்திய சொன்னா இவனுக்கு ஏன் கோபம் பொத்துக்கிட்டு வருது?' என்று கேட்டுக் கொண்டது.

வெகு நேரமாய் எண்ணங்கள் நெஞ்சில் சுழல சிங்காரம் மௌனமாகவே இருந்தான். இத்தனை நடக்கிறது...! கண் முன்னாலேயே மனைவியையே சின்னாயி திட்டுகிறாள்... கல்லாய் இருக்கிறானே!... என்ன நடந்து விட்டது அவனுக்கு?...

ஒலி பெருக்கி பேசியது... "பகல் உணவு வழங்கப்பட இருக்கிறது மண்டபத்தில் உள்ளவர்கள் எம்மோடு ஒத்துழைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்... கோயிலின் மூன்று 'கேட்' வழியாக உணவு வழங்கப்படும். பிரதான 'கேட்'டைத் தவிர மற்ற 'கேட்'டுகளில் அகதிகள் வரிசையாக நிற்கும்படி கேட்டுக் கொள்கிறோம்".

அந்த அறிவித்தலை அந்த ஒலிபெருக்கி திரும்பத் திரும்ப அறிவித்தது. அதனைத் தொடர்ந்து மண்டபத்தின் உள்ளே பெரும் பரபரப்பு ஏற்பட்டது. ஆங்காங்கே வெள்ளை வேட்டி உடுத்தியிருந்த இளைஞர்கள் – பெரியவர்கள் சிலர் கைகளை அசைத்து ஆட்டி நின்று கொண்டிருந்தவர்களிடம் ஏதோ சொன்னார்கள்... அடுத்த சில நிமிடங்களில் உட்கார்ந்திருந்தவர்கள், படுத்திருந்தவர்கள் எழும்பி நிற்கத் தொடங்கினார்கள்... பிறகு எழும்பியவர்கள் ஒரு வரிசையாக நிற்க ஆரம்பித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10537



*சிங்காரம் எந்த வரிசையிலும் நிற்காமல் நின்றான். அப்போது அங்கு வந்த ஒரு இளைஞன் சிங்காரத்தைப் பார்த்து, "கியூவுல நில்லுங்க! இல்லேன்னா தள்ளி நில்லுங்க...! என்று சொல்லிவிட்டு போனான்".*

*சிங்காரம் மண்டபச் சுவரோரமாக ஒதுங்கி நின்றான். தன்னோடு வந்தவர்களைப் பார்த்தான். அவர்கள் பகல் சாப்பாட்டுக்குத் தயாராக வரிசையில் நின்று கொண்டிருந்தார்கள். மாலினி அதில் சேராமல் சுவர் ஓரமாக யோசித்தபடி நின்றாள்.*

*"வெலகி நில்லுங்க... வெலகி நில்லுங்க..." என்று ஐந்தாறு பேர் சத்தம் போட்டவாறு ஒரு பெரிய அண்டாவைத் தூக்கிக் கொண்டு கோபுர வாசலை நோக்கி போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து இன்னும் ஒரு கோஷ்டி அண்டாவைத் தூக்கிக் கொண்டு வந்தது. அண்டாவைப் பார்த்ததும் வரிசையாக இருந்தவர்கள் மத்தியில் ஒரு பரபரப்பு – ஒரு சலசலப்பு ஏற்படவே வரிசை அங்குமிங்கும் ஓடி உடையவே, பின்னால் உள்ளவர்கள் இதுதானே சந்தர்ப்பம் என்று முன்னால் போக முயற்சித்தார்கள். இதைக் கண்ட இளைஞர்கள் வரிசையை சரி செய்ய ஓடிவந்தார்கள். வரிசையைக் கட்டுப்படுத்திப் பார்த்தார்கள். அவர்களால் முடியவில்லை. சிங்காரம் அதைப் பார்த்து விட்டு தானாக வந்து, உதவ ஓடிப் போனான்.*

*அப்போதுதான் அந்த இளைஞர்களில் ஒருத்தன் சொன்னான்... "இன்னும் ஆயிரம் கலவரம் வரட்டும்... அப்பகூட இந்தத் தோட்டத்தான்கள திருத்த முடியாது...!"*

*சிங்காரத்திற்கு 'ஜிவ்' வென்று கோபம் கிளம்ப அந்த இளைஞனின் சட்டையைப் பிடித்தான், "என்ன சொன்னே?..."*

*அதற்குள் அங்கிருந்தவர்களில் சிலர் சிங்காரத்தைத் தடுத்தார்கள். சட்டையில் இருந்து கையை எடுத்த சிங்காரம் கத்தினான், "உன்னால கியூவ கட்டுப்படுத்த முடியல்லேன்னா பேசாம இரு! அதை வுட்டுட்டு தோட்டத்தான் அப்படி இப்படின்னு பேசாத... தோட்டத்தான் தோட்டத்தில இருந்து தேயில பறிக்கலேன்னா டவுண்ல மாடியில கால் போட்டு குந்துவீங்களா? தோட்டத்தான்னா எளக்காரமா?... இந்த நாடே இன்னைக்கி தேயில விக்கிற டொலர் நோட்டுலதான் ஓடுது... தெரியுமா?..."*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த இளைஞன் மெதுவாக அந்த இடத்தை விட்டுப் போய்விட்டான்.

இன்னமும் சிங்காரத்தின் கோபம் தணியவில்லை...

"தம்பி..."

அந்தக் குரலில் அன்பு கலந்தது போலிருந்தது.

சிங்காரம் யாரென்று பார்த்தான்; ஒரு வயதானவர் நின்று கொண்டிருந்தார். அரை நூறைத் தாண்டியிருக்கலாம்.

"தம்பி நானும் தோட்டத்தில இருந்து வந்துதான் டவுண்ல இருக்கிரேன். சின்ன பய தெரியமா பேசிட்டான். அத பெருசா எடுக்காதீங்க தம்பி!..." என்ற அந்தப் பெரியவர் மிக மெல்லிசாய் அவன் காதுபட சொன்னார்.

"நம்ம ஆளுக பன்னுரதும் அப்படித்தான் தம்பி!... சொல்ரமாதிரி நடக்க மாட்டாங்க. இது என் அனுபவத்தில கண்டது. சரி... அது போகட்டும்... நீங்களே இவங்கள கியூவில நிக்க வைங்க தம்பி!" அந்தப் பெரியவர் போய் விட்டார்.

அதன்பிறகு சிங்காரம் வரிசையைக் கட்டுப்படுத்தத் தொடங்கினான்... ஆயிரக் கணக்கான யானைகளுக்கு ஒரு அங்குசம் போதுமா என்ன?... அவனால் முடியவில்லை... அப்போது அவனுக்கும் அவர்கள் மீது கோபம்தான் வந்தது. பெரியவர் சொன்னதில் உள்ள உண்மையை நேரிலேயே பார்த்தான்.

"நீங்க நடக்கிரதை வைச்சுத்தான் சின்னப்பய கூட கேலியா – கேவலமா பேசிட்டு போறான். ஒங்கள கெஞ்சி கேக்கிரேன். வரிசையா நிக்கிறீங்களா?" என்று கெஞ்சினான். அதன் பிறகு வரிசையாக அவர்கள் ஒருவாறு நிற்கத் தொடங்கினார்கள்.

ஒரு பெரிய அண்டாவை ஒரு கோஷ்டியினர் தூக்கிக் கொண்டு வந்தார்கள்... அந்தக் கோஷ்டியோடு வந்தவர்களில் ஒருத்தர், "யாராவது வாங்கப்பா... ஒதவி செய்ங்கப்பா..." என்று கேட்டார்.

சிங்காரம் எதுவுமே பேசாது அந்தக் கோஷ்டியோடு இணைந்தான். பெரியவர் அவனைப் பார்த்துச் சொன்னார், "ஓங்க மாதிரி நிறைய பேர் வந்து ஒதவி செஞ்சா நல்லா இருக்கும்!. எல்லாருமே அகதின்னு குந்திகிட்டா யாரு தொண்டரா வேல செய்யிரது?..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் சொன்னதில் உள்ள நியாயம் அவனுக்குப் புரிந்தது. இந்தப் பெரிய கூட்டத்தில் ஓடியாடி வேலை செய்ய நிறையப் பேர் தேவை. அதற்கு வெளியே இருந்து எவரையும் கொண்டு வர முடியாது. இங்கேதான் தொண்டர்களை உருவாக்க வேண்டும்... என்று நினைத்துக் கொண்டான் அவன்.

அந்த அண்டா கோயில் 'கேட்'டருகே போனபோது சிங்காரம் மேலே நடக்காமல் அப்படியே நின்றான். தொடர்ந்து போவதா இல்லையா என்பது அவனுக்குத் தெரியவில்லை. அப்போது பெரியவர் அவனை அழைத்தார்....

"ஏன் நிக்கிறீங்க தம்பி? வாங்க... எங்களோட சேர்ந்து ஒதவி செய்ங்க...!"

சிங்காரம் அவர்களோடு நடக்கத் தொடங்கினான். சிறது தூரம் சென்றதும் சிங்காரம் அந்தப் பெரியவரைப் பார்த்து, "அஞ்சாறு பேரை கூட்டிக்கிட்டு வரட்டுமா?" என்று கேட்டான்.

அந்த நேரத்தில் ஆயிரம் பேர் தொண்டராக இருந்தாலும் போதாது. ஏகப்பட்ட வேலை உண்டு. 5000 பேருக்கு மூன்று நேரச் சாப்பாடு போடுவது லேசான காரியமா?

"ம்... கூட்டிக்கிட்டு வாங்க... எத்தனைபேர் வந்தாலும் வேல இருக்கு..." பெரியவர் உற்சாகத்தில் கூறினார்.

சிங்காரம் அங்கிருந்து அவசர, அவசரமாக பிள்ளையார் கோயில் அருகே போனான். அங்கே வரிசையில் இருந்தவர்களைப் பார்த்து விஷயத்தைச் சொல்லி கூப்பிட்டான்.

சின்னாயி காதிலும் அது விழுந்தது அவள் வாய் 'சும்மா' இருக்குமா?... "அட அகதியா வந்தும் வேல செய்யணுமா?... நல்ல அகதி முகாம்டா இது... மனுசன் நொந்து போய் எல்லாத்தையும் விட்டு வந்திருக்கான். வந்த எடத்திலயும் வேலயா?..."

"சின்னாயி! ஒன் வாயை மூடிக்கிட்ட சும்மா இருக்க மாட்டே! அகதி முகாம்ல வேல செஞ்சா கொறைஞ்சா போவும்? இங்க இருக்கிறது யாரு?... நம்ம ஆளுகதான்... அவங்களுக்காக ஒதவி செய்யிரது தப்பா? ஒன்னால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியலேன்னா சும்மா இரு... சும்மா கத்தாதே!" என்று கத்தினான் என்று சொல்வதைவிட, சின்னாயியை அடக்கினான் சிங்காரம்.

சின்னாயி வாயை மூடிக் கொண்டாள். சிங்காரத்தோடு ராமன், கோபால், சின்னத்தம்பி என மொத்தமாய் ஏழு பேர்கள் புறப்பட்டார்கள். எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு தனித்துப் போய் இருந்தாள் மாலினி...

அந்த மண்டபத்தின் ஒரு பக்கத்தில் இருந்த அறைக்கு அவர்களை அழைத்துப் போனார் அந்தப் பெரியவர். அங்கே அவர்களின் பெயர்கள் கேட்டு எழுதப்பட்டன. பிறகு அத்தனை பேருக்கும் 'தொண்டர்' என்று அச்சிட்ட வட்டவடிவமான சிறிய அட்டை கொடுத்து சட்டையில் 'குத்தி'க் கொள்ளச் சொன்னார்கள். எல்லோரும் 'குத்தி'க் கொண்டார்கள். அப்புறம் அவர்களை அழைத்துக் கொண்டு போனார். அதற்குப் பிறகு அவர்கள் தொண்டரானார்கள்...

## 14

மாலை மூன்று மணியிருக்கும் இன்னமும் பகல் உணவு வழங்கும் வேலை நடந்து கொண்டிருந்தது. தொடக்கத்தில் சாப்பிட்ட பலர் ஆங்காங்கே தலை சாய்த்து படுத்துக் கிடக்கத் தொடங்கினார்கள். உண்ட மயக்கம் யாருக்குத் தான் வராது?...

சிங்காரம் பசியுடன் தொண்டாற்றிக் கொண்டிருந்தான். பெரியவர் அவனை சாப்பிடச் சொன்னார். அவனோ வேலை முடிந்த பின்னர் சாப்பிடுவதாக சொல்லிவிட்டான். தொண்டர்கள் பாதிப்பேர் களைப்பினால் ஆங்காங்கே இருந்துவிட்டார்கள். சில பேர் மட்டுமே அகதிகளில் கொஞ்ச பேருக்கு சாப்பாடு கொடுக்க வேண்டியதால் வேலை செய்தார்கள். அவர்களை உற்சாகப்படுத்தியவாறு வேலை செய்தான் சிங்காரம்...

"மக்குவாரி தோட்டத்தைச் சேர்ந்தவரும், இப்போது அகதி முகாமில் தொண்டராக பணிபுரிபவருமான சிங்காரம் உடனடியாக சிகிச்சை நிலையத்திற்கு வருமாறு அழைக்கப்படுகிறார்..." கோயில் ஒலிபெருக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலதடவை அவனை அழைத்தது. அது சிங்காரத்தின் காதில் விழவில்லை... மண்டபத்தில் இருந்த சத்தம் ஒலிபெருக்கியை அமுக்கிவிட்டது போலும்! அதற்குள் ஒருத்தர் அவனிடம் ஓடிவந்து, "நீங்க தானே சிங்காரம்! உங்கள சிகிச்சை நிலையத்திற்கு வரச் சொல்ராங்க..." என்று சொல்லிவிட்டுப் போனார். சிங்காரத்திற்கு அந்த கணம்தான் பிச்சைக் கிழவனின் நினைவே வந்தது. ஒரு பரபரப்புடன் சிகிச்சை நிலையத்தை நோக்கி ஓடினான் அவன்... சாப்பிட வேண்டும் என்பதைக்கூட மறந்தான்.

சிகிச்சை நிலையத்தில் பிச்சைக்கிழவனைத் தள்ளுவண்டியில் படுக்க வைத்திருந்தார்கள். அவன் பயந்து போனான். கிழவனுக்கு என்னமும் ஆகி விட்டதா?... கிழவனை உற்றுப் பார்த்தான் அவன். பயந்தது போல் எதுவும் இல்லை. கிழவன் நினைவு திரும்பிப் பார்க்கின்றான். அவன் கிழவனருகே போய் நின்றான். கிழவனின் கையைப் பிடித்தவாறு பேசினான், "தாத்தா!".

கிழவனின் கண்கள் நன்றியுடன் சிங்காரத்தைப் பார்த்தன.

"உங்களுக்கு எப்படி இருக்கு?"

"இப்ப நல்லா இருக்கு. ஆனா அப்பப்ப நெஞ்சில வலி வருது!..."

சிங்காரம் கிழவனின் முகத்தைப் பார்த்தான். கிழவன் ரொம்பத் தளர்ந்து போய்விட்டான். ஆனால் அந்தத் தளர்ச்சியையும் மீறி முகத்தில் ஒரு பிரகாசம் மலர்ந்துள்ளது. அது அவனுக்கு சந்தேகத்தை கொடுத்தது. இந்தப் பிரகாசம் பிச்சையின் முகத்தில் இருக்கக் கூடாதே!...

பிச்சைக் கிழவன் சிங்காரத்தின் கைகளைப் பிடித்தவாறு சொன்னான்... "என்ன நடந்தாலும் நீ மாலினிய வுடக் கூடாது. கொஞ்ச நேரத்துக்கு முந்தி மாலினி வந்து அழுதிட்டு போறா... நீ இப்ப திரும்பிக்கூட பார்க்கிறதில்லயாம்... ஏன்?... இந்த மாதிரி செய்யாதே! சிங்காரம்... ஒன்ன நம்பிதான் மாலினி எல்லாத்தையும் விட்டு வந்திருக்கு... இப்ப அவ எங்க போவா?... கடைசி வரைக்கும் அவுள வைச்சி காப்பாத்து..."

சிங்காரம் மௌனமாக இருந்தான்.

"சிங்காரம்! நான் இப்ப கவுருமெண்ட் ஆஸ்பத்திரிக்குப் போறேன். நீ என்ன பத்தி கவலப்படாதே! நம்ம ஆளுகள கவனி... நான் சொகமாகிட்டு வாறேன்..." என்ற பிச்சைக் கிழவன் மீண்டும் அவனுக்கு ஞாபகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊட்டினான்... "மாலினிய வுட்டுட்டு போயிராத! உன்ன நம்பி வந்தவ..." சிங்காரத்திடம் அதற்கு உறுதிமொழி வாங்குவது போல் அவன் கையைப் பிடித்து அழுத்தினான்...

அடுத்த அரை மணித்தியாலத்திற்குப் பின்னர் கிழவனைச் சுமந்து கொண்டு அந்த ஆம்புலன்ஸ் வண்டி அரசாங்க ஆஸ்பத்திரியை நோக்கி ஓடியது.

சிங்காரம் அந்த ஆம்புலன்ஸ் போன பின்னரும் கிழவனின் நினைவு நெஞ்சில் மொய்க்க சில விநாடிகள் அந்த இடத்திலேயே நின்றுவிட்டு கோயிலை நோக்கி நடந்தான். பசி வேறு வயிற்றைக் கிள்ளியது. சாம்பார், காய்வகைகள், ரசம் பற்றாக்குறையினால் மீதமானதை சோற்று அண்டாவில் போட்டு கலந்து 'சாம்பார்' சாதமாய் தயார் செய்திருந்தார்கள். பசிக்கு அது கூட ருசியாய்த்தான் இருந்தது சிங்காரத்திற்கு... சாப்பிடும்போது மாலினி நினைவு நெஞ்சில் மின்னலாய் வெட்டினாலும், அவளை விட்டு சாப்பிடுகிறோமே என்ற எண்ணம் இருந்தாலும் அவள் சாப்பிட்டு இருப்பாள் என்ற எண்ணம் எல்லாவற்றையும் அமுக்கி விட்டது.

சாப்பிட்டு முடித்து தண்ணீர் குடித்துவிட்டு, மணிக்கோபுரத்திற்கு கீழே சாய்ந்தவாறு உட்கார்ந்த சில நிமிடங்களில் தன்னை மறந்து கண்ணை மூடினான் சிங்காரம்... உண்ட மயக்கத்தில் தொண்டர்கள் தூங்குவது வழக்கம், ஆனால் இவனோ தொண்டு மயக்கத்தில் தூங்கினான். அங்கும் இங்கும் ஓடி உழைத்ததில் களைத்துப் போயிருந்தான் அவன். அதனால் தூக்கமே வந்தது இன்று! மற்றபடி பகலில் தூங்குவது அவனுக்குப் பிடிக்காது. இன்றுமட்டும் கொஞ்சநேரம் தூங்குவோம் என்று ஒரு எல்லையை வகுத்துக் கொண்டு தூங்கினான்... ஆனால் அப்போது வந்த தூக்கம் அவனை அந்த எல்லையைத் தாண்டிக் கொண்டு போனது. அவனுக்கு அது தெரியாது....

சிங்காரத்தைத் தேடிக் கொண்டிருந்த பெரியவர் மணிக்கோபுரத்தின் கீழே அவனைக் கண்டுபிடித்து தொட்டு எழுப்பினர்... "மணி அஞ்சாச்சி! எந்திரி தம்பி!..."

சிங்காரம் 'பரபர'வென்று எழும்பிப் பார்த்தான். பெரியவர் தன்னை எழுப்புகிறார் என்பது தெரிந்தது. இன்னும் அதிகமான பரபரப்புடன் 'சடா'ரென்று எழும்பி நின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மூஞ்சி கைகால் கழுவிட்டு, கோயில் ஒப்பீசுக்கு வாங்க தம்பி..." அவர் போய் விட்டார்.

சிங்காரம் கோயிலின் பின்புறத்தில் இருக்கிற நவீன மலசல கூடத்தில் கடன்களை முடித்துக் கொண்டு கோயில் காரியாலயத்திற்கு போனான். காரியாலயத்தில் பெரியவர் காத்திருந்தார்.

"தம்பீ! உங்கள நம்பி ஒரு முக்கிய வேலய பொறுப்பா தரப் போறேன்..."

சிங்காரத்தின் புருவத்தில் கேள்விக்குறி நிழலாய் விழுந்தது.

"அகதிகளுக்கு கொடுக்கிறதுக்காக சாப்பாடு, சாமான், உடுதுணி நெறைய வருது. அதுகள யார், யாருக்கு கொடுத்தது, எவ்வளவு கொடுத்தாங்கன்னு விபரத்தை எழுதி வைக்கணும். அதை நீங்க பொறுப்பா செய்வீங்கன்னு நெனைக்கிறேன்..." அந்தப் பெரியவர் அவனை ஒரு பெரிய பொறுப்பில் வைக்கத் தீர்மானித்தார்.

சிங்காரத்தால் நம்ப முடியவில்லை அந்த வார்த்தைகளை. முன்பின் தெரியாத தன்னை, ஒரு தோட்டத்தைச் சார்ந்த தன்னை – நம்பி ஒரு பெரிய பொறுப்பை தருகிறார்களே! எப்படி இதனை நம்ப முடியும்? ஆனாலும் அவன் நம்ப வேண்டியதாயிற்று...

"தம்பி! ஒங்கள பத்தி நம்ம சங்கப் பிரதிநிதி சொன்னாரு... தைரியமா செய்ங்க..."

அப்போதுதான் சிங்காரத்துக்கு, பிரதிநிதி தன்னைப் பற்றி அவர்களிடம் சொல்லியிருக்கிறார் என்பதை புரிந்து கொள்ள முடிந்தது.

அந்தப் பெரியவருடன் கோயில் காரியாலயத்துக்குப் போனான் அவன். காரியாலயத்தில் இருந்தவர்களிடம் – பரிபாலன சபைத் தலைவர், செயலாளர், உறுப்பினர்கள், கணக்கப்பிள்ளை ஆகியோர்களிடம் சிங்காரத்தைப் பெரியவர் அறிமுகம் செய்து வைத்தார். அப்போதுதான் அந்தப் பெரியவரே யார்? என்பது அவனுக்குத் தெரியவந்தது. அவர் அந்தக் கோயில் பரிபாலன சபையின் உபதலைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்காரத்திடம் ஒரு பெரிய பதிவேடு கொடுக்கப்பட்டது. பதிவேட்டை ஒரு தடவை மேல்வாரியாக பார்த்தான். அதில்தான், இதுவரை அந்த முகாமில் அகதிகளுக்கு கொடுத்த பொருட்களின் விபரங்கள் எழுதப்பட்டிருந்தன. சிங்காரம் அந்த பதிவேட்டுடன் கோயில் காரியாலயத்தில் ஒதுக்கப்பட்டிருந்த அறைக்குள் போனான்.

அந்த அறையை சுற்றும்முற்றும் பார்த்தான். அந்த அறையில்தான் ஒரு பக்கம் உணவுப் பொருட்களும், காய்கறிகளும் மறுபக்கம் உடுதுணிகளும் சட்டி பானைகளும் வைக்கப்பட்டிருந்தன. சிங்காரத்தின் வேலைகளுக்காக ஒரு சிறிய மேஜையும், நாற்காலியும் ஒதுக்கப்பட்டிருந்தது. சிங்காரத்திற்கு அந்த பொறுப்பு கொடுக்கப்பட்ட கொஞ்ச நேரத்தில் ஒரு மனிதர் பெரிய வாழைக் குலையுடன் வந்தார். அவர் பெயரைக் கேட்டு, எழுதப் போனபோது அவர் பெயரைச் சொல்லவும் அவன் ஆச்சரியத்துடன் எண்ணக் கிளர்ச்சியுடன் அவரைப் பார்த்துவிட்டு எழுதினான். அவர் ஒரு சிங்களவர். தன் வாழைத் தோட்டத்தில் வெட்டிய முதல் குலையை அம்மனுக்கு கொடுப்பதாக நேர்த்தி வைத்த அவர் அந்த வாழைக் குலையை தற்போதைய சூழ்நிலையில் அகதிகளுக்கு கொடுக்கத் தீர்மானித்தாராம். என்ன ஆச்சரியம்? ஒரு பக்கம் தமிழர் மீது சிங்களவர் வெறியாட்டம்... இன்னொரு பக்கத்தில் சிலர் தமிழர்களுக்கு உதவி செய்தார்களாம்... எத்தனையோ சிங்களவர்கள் தமிழ்க் குடும்பங்களைப் பாதுகாப்பதாக முகாமில் பேசிக் கொண்டார்கள். சிலர் வெறியாட்டம் ஆடுவதற்கு எல்லோரையும் தவறாக நினைக்க முடியுமா? சிங்காரத்தினால் எந்த முடிவுக்கும் வரமுடியவில்லை; அவனால் எதையும் தீர்மானிக்க முடியவில்லை.

கோயில் கணக்கப் பிள்ளையிடம் சொல்லிவிட்டு டீ குடிக்கப் போனான் சிங்காரம். டீ குடித்துவிட்டு திரும்பியபோது அந்த அறையில் நடப்பதைப் பார்த்து திடுக்கிட்டான். அகதி முகாமில் தொண்டராக வேலை செய்த ஒருத்தன் உள்ளே தன் கைவரிசையைக் காட்டிக் கொண்டிருந்தான். அகதிகளுக்கு கொடுக்க வேண்டிய உடுதுணிகளை பார்த்துப் பார்த்து அதில் தனக்கு தேவையானதை எடுத்துக் கொண்டிருந்தான்.

சிங்காரம் அவனை விசாரித்தான்.... "என்ன செய்றீங்க?" தொண்டர் பதில் பேசாது தெரிவு செய்த உடுப்புகளுடன் நடக்க எத்தனித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்காரம் அவனை வழிமறித்தான். "யாரைக் கேட்டு துணிகள எடுத்தீங்க?"

"யாரைக் கேக்கணும்?" திமிராய் பதில் கேள்வி கொடுத்தார் தொண்டர்.

"கோயில்காரங்கள கேக்கணும்..." சிங்காரம் சாந்தமாகவே பதில் கொடுத்தான்.

"நாங்க கோயில்காரங்க... கேட்டா என்னா கேக்காட்டி என்னா? அதோட என்ன இப்ப நடந்திருச்சி?.... பழைய உடுப்ப போட்டுட்டு அதுக்குப் பதிலா புதுசா சிலத எடுத்தேன். உடுப்புக்கு உடுப்பு இருக்கு... அகதிக்கு பழசு கொடுத்தா என்ன? தப்பில்ல... குத்தமில்ல... நீ பேசாம இரு... உன் வேலய மட்டும் பாரு!..."

"என் வேலயே இதுதானே!" என்ற சிங்காரம் அவரை நகரவே விட வில்லை.

இருவருக்கும் மோதல் ஏற்படவே பக்கத்து அறையில் இருந்தவர்கள் ஓடி வந்தார்கள். சிங்காரம் நடந்ததைச் சொன்னான். வந்தவர்கள் அந்தத் தொண்டரைப் பார்த்தார்கள். அவனைப் பற்றி சிங்காரம் அடையாளம் காட்ட வேண்டியதில்லை. அவன் முகமே வரலாறு சொல்லும்! இப்படியான சில்லறை திருட்டு வேலைகள் செய்வதில் கெட்டிக்காரன்... இதுவரை மாட்டியதில்லை... இன்று மாட்டிக் கொண்டான். ஆனாலும் அதனைப் பெரிது படுத்தாமல் அவனுடைய பழைய உடுப்பை எடுத்து கையில் கொடுத்து வெளியே விரட்டினார்கள். அதனை பெரிதுபடுத்த எவரும் விரும்பவில்லை. இந்தக் கதை வெளியே போனால் சிரிப்பார்கள். தமிழனே தமிழனுக்கு எதிரியாக இருக்கிறானே! ஒரு பக்கம் தமிழர்கள் அகதிகளாக நிற்கும்போது அவர்களுக்கு வந்ததை தமிழனே திருடினான் என்றால் ஊரே கைக்கொட்டிச் சிரிக்கும்! நாட்டில் நடக்கிற இனக்கலவரம் போதாதென்று இது வேறா? அதனை அப்படியே அமுக்கினார்கள். அதனை வேறு எவரிடமும் சொல்ல வேண்டாமென்று சிங்காரத்திடம் சொன்னார்கள்.

சிங்காரம் அவர்கள் சொன்னதில் உள்ள நியாயத்தை உணர்ந்தவனாக மௌனமானான். ஆனால் அவன் நெஞ்சுக்குள் இந்த மனித ஜென்மங்களை நம்பவே முடியவில்லையே என்ற எண்ணம்தான் சுழன்றது... ஊரே எரிகிறது, அந்த நெருப்பில் குளிர்காயத் துடிக்கிறானே இந்த மனிதன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15

அந்தக் கோயில் மைதானத்தில் இருந்து பார்த்தால் மேலே பரந்த வானமும், அந்த வானத்தின் ஒரு பகுதியைத் தாங்கிக் கொண்டு நிற்பது போல் உயர்ந்து இருக்கிற அந்த அழக மலையும் – பெயரே அதுதான் – நன்றாகத் தெரியும். இரண்டு நாட்களாக வெளுத்துப் போய் கிடந்த வானம் இன்று கறுத்து மங்கிப் போய் இருக்கிறது. இரண்டு நாட்கள் சூரியனுக்கு என்ன கோபமோ? கடுமையான வெய்யில்...! அந்த வெய்யிலால் கறுத்துப் போனதைப் போல் ஆங்காங்கே மேகங்கள் இருந்தன. எந்த நேரத்திலும் மழை வரலாம். குளிர்காற்று மெல்லிசாய் அசைந்தது. மைதானத்தில் இருந்தர்வர்கள் அண்ணாந்து, அண்ணாந்து வானத்தைப் பார்ப்பதாய் இருந்தார்கள். மழை வருகிறதா என்று உறுதி செய்யத்தான் அப்படிப் பார்க்கிறார்கள்.

சிலருக்கு மழை பெய்வதில் மகிழ்ச்சி. சிலருக்குச் சலிப்பு. ஒத்த கருத்து எவருக்கும் இல்லை... மனிதனுக்கு எதில்தான் ஒத்த கருத்து உண்டு? சாப்பிட, தூங்க, சாமி கும்பிட என்று எல்லாவற்றிலும் 'கட்சி' கட்டுபவர்கள் ஆயிற்றே!

"கோயில சுத்தி, சுத்தி அசிங்கம் பண்ணியிருக்காங்க. மழை பெஞ்சாத்தான் அதெல்லாம் தண்ணியில ஓடும்... சில எடத்துல மனுசன் கால் வைக்க முடியல்ல... திங்க தெரிஞ்ச ஆள்களுக்கு 'பேலத்' தெரியலியே!..." ஒருத்தன் இன்னொருவனிடம் சொல்லிக் கொண்டிருக்கும்போதே மழை மெல்லிசாய் பெய்யத் தொடங்கியது.

மைதானத்தில் ஆங்காங்கே நின்றவர்கள், இருந்தவர்கள் ஒதுங்கத் தொடங்கினார்கள். பாதிப்பேர் கோயிலுக்குள்ளே ஓடினார்கள். பதிந்து கொண்டிருந்தவர் மேஜையோடு கோயில் பக்கமாய் போனார்.

மழை இப்போது சற்று பலமாகப் பெய்யத் தொடங்கியது. அதைப் பார்த்துக் கொண்டிருந்த ஒருத்தன் வாய்விட்டுக் கத்தினான்... "இப்ப பாரு மழை பெய்யுது. இதே மழை ரெண்டு நாளைக்கி முந்தி பெஞ்சிருந்தா எத்தன வீடு, வாசல காப்பாத்தி இருக்கலாம். எரியிற நேரம் பெய்யாது. மனசு எரிஞ்சி, வயிறு எரிஞ்சி இருக்கிற நேரம் பெய்யுது பாரு!..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனோடு சேர்ந்து இன்னொருத்தனும் சபித்தான்... "நாசமாப்போன மழை இப்பப் பெய்யுது".

அவர்கள் வீடு, வாசல் கலவரத்தில் எரிந்ததில் வந்த கோபம் சாபமாகியது. அவர்கள் என்ன முனிவர்களா? அந்த சாபம் பலிப்பதற்கு... மழை பெய்து கொண்டே இருந்தது.

கோயிலுக்குள்ளே இருந்தவர்களில் பெரும்பாலானோர் ஆங்காங்கே உட்கார்ந்தும், சாய்ந்தும் தூங்கியவாறு இருந்தார்கள். மிகச் சிலரே கதவு வழியாக வெளியே மழை பெய்வதை வேடிக்கை பார்த்தார்கள். அந்த அகதிகளோடு இருந்த மாலினி தான் தனித்து விடப்பட்டவளாக – எவருமே இல்லாத அனாதையாக, இழக்கக் கூடாததை இழந்துவிட்டதாக எண்ணி, எண்ணி நெஞ்சம் நொந்து கொண்டிருந்தாள். அதே முகாமில் இருக்கிற சிங்காரம் எப்போதாவது வந்து பார்த்துவிட்டுப்போவதோடு சரி... எப்படி இருக்கிறாள் – என்ன செய்கிறாள்? என்பதையெல்லாம் கேட்கவே இல்லை.

சிங்காரத்தின் அந்தப் போக்கு மாலினிக்குப் பயத்தையே கொடுத்தது. எப்படி இருந்தவன் – இந்த இனக் கலவரத்தின் பின்னர்தான் இப்படி மாறி விட்டான்...! அல்லது மாற்றப்பட்டான். சாகப் பிழைக்க இருக்கிற பிச்சைத் தாத்தா எவ்வளவோ சொல்லியும் அவன் கொஞ்சமாவது அசைந்து கொடுத்ததாய் தெரியவில்லை. அவளுக்கு அழுகை வரும்போல் இருந்தது. கண்களில் நீர் முட்டிக் கொண்டு வெளியே வரத் துடித்தன. ஆனால் அவள் அழவில்லை. அந்தக் கூட்டத்தில் தான் மட்டும் அழுதால் அது பெரிய கேள்வியாகத்தான் வரும்.. அங்கிருக்கிற அத்தனைபேரும் அழவேண்டியவர்கள். வீடு வாசலை, துணிமணிகளை, பொருட்களை, ஆடுமாடுகளை, கோழிகுஞ்சுகளை என்று எல்லாவற்றையுமே இழந்தவர்கள் அவர்கள். சிலர் உறவினர்களை கலவரத்தில் இழந்தவர்கள். அவர்கள் எல்லாம் அழாமல் இருக்கும்போது, தான் மட்டும் அழுதால் எப்படி இருக்கும்? அட! அழத்தான் முடியவில்லை... மனம் விட்டு பேசக்கூடிய ஒருத்தர்கூட இல்லையே என்று கவலைப்பட்டாள். எத்தனையோ பேர் இருந்தும் எவரோடுதான் பேசுவது? எவர்தான் அவளோடு பேச வருகிறார்கள்?

அந்தக் கோயிலின் பூக்கட்டுகிற இடத்தில் இருக்கிற ஜன்னல் ஓரத்தில் மாலினி தன் இருப்பிடத்தை அமைத்துக் கொண்டாள். உட்கார்ந்திருப்பது, சாய்ந்திருப்பது, தூங்குவது எல்லாமே அந்த இடத்தில்தான்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலினி ஏதோ ஒரு நினைவு வர அந்த ஜன்னல் வழியே தன் பார்வையை வெளியே செலுத்தினாள். மழை பெய்து கொண்டிருந்தது. மைதானம் காலியாகக் கிடந்தது. குடையோடு மட்டும் ஒரு சிலர் போவதும் வருவதுமாக இருந்தார்கள். அந்த மழையிலும் சில திடீர் வர்த்தகர்கள் குடையோடு நடமாடினார்கள். அவர்கள் வெற்றிலை–பாக்கு, பீடி–சிகரெட் விற்பவர்கள். அடாது மழை பெய்தாலும் விடாத வர்த்தகம் – ஊரே எரிந்தாலும் தண்ணீர் விற்பார்கள் போலிருக்கிறதே!.

இன்று மட்டும் ஏன் மழை பெய்கிறது? இங்கே இருப்பவர்களுக்கு கருணையைக் காட்டுகிறதோ!

அந்த மழையைப் பார்த்துக் கொண்டே இருந்தபோது மாலினியின் நெஞ்சில் எண்ணங்கள் உருவாகி ஓடி மறைந்தபோது அந்த மழைக்குப் பின்னால் ஒரு காட்சி ஞாபகமாய் வந்தது.

அன்றும் மழைதான்... டவுணுக்குப் போயிருந்த சிங்காரம் மழையில் நனைந்தவாறு திரும்பி வந்தான். கையில் ஒரு புத்தம் புதுச் சேலை... மாலினிக்காக டவுணில் வாங்கியது.

சேலையை வாங்கிக் கொண்டே மாலினி சொன்னாள்... "இருக்கிற சேலய கட்டிக்க நேரமில்ல... நாளும் இல்ல... எதுக்கு இப்ப புதுச் சேல வாங்கினீங்க?..."

வார்த்தைகள் அவ்வாறு வந்தாலும் அவள் மனதுக்குள் மத்தாப்பு... சேலையைப் பிரித்துப் பார்த்தாள். நீலவர்ணத்தில், சிகப்பு நிறத்தில் பூக்கள் பூத்த நைலோன் சேலை.... அவளுக்குப் பிடித்தமானது நீல வர்ணம். சேலையை பெட்டியில் வைத்தாள் மாலினி. குளித்துத் தலையைத் துவட்டிக் கொண்டே வந்த சிங்காரத்தின் முகம் 'கோணி'ப் போயிருந்தது... அந்தக் கோணலின் அர்த்தம் மாலினிக்குத் தெரியும்... புதுச் சேலை கட்டாததால் வந்தது. புதுச்சேலை வாங்கி வந்தால் கட்டி அவன் முன் நிற்க வேண்டும்.

"சேல கட்டாட்டி என்னா?" மாலினியின் முகம் அவனைக் கவ்வி இழுத்தது. "நீ கட்டிக்கத்தானே வாங்கி வந்தேன். ம்... கட்டிக்க... எப்படி இருக்குன்னு பார்க்கிரேன் கொஞ்சம் நேரம், கட்டிக்கிட்டு வா..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்காக அத்தனை சேலை வாங்கி வரும் இவன் 'தனக்காக' என்ன வாங்கிக் கொள்கிறான்? தன்னை உடுத்தி அழகு பார்க்க விரும்பும் இவன் ஏன் உடுத்தி அழகு பார்ப்பதில்லை? என்றெல்லாம் எண்ணிய மாலினி அதனைக் கேட்டே விட்டாள். "எப்ப பார்த்தாலும் புதுச் சேல வாங்கிட்டு வந்து என்னயவே உடுத்திப் பார்க்க ஆசப்படுறீங்களே, நீங்க ஏன் எதையும் உடுத்திப் பார்க்கக் கூடாது?".

சிங்காரம் சிரித்து விட்டு, பதில் சொன்னான்... "அழகா உடுத்திரதும் பூ சுடுரதும் பொம்பளகதான் செய்யணும்... பொம்பளகதான் எப்பவும் அழகா இருக்கணும்...!"

"அப்படின்னா ஆம்பளக..."

"வீரமா, விவேகமா இருக்கணும்... பொம்பளக அழகும், ஆம்புளக வீரமும் விவேகமும் ஒன்று சேர்ந்தாதான் வாழ்க்க நல்லா இருக்கும்!" என்ற சிங்காரம் மாலினியை எட்டிப் பிடித்திழுத்து, அணைத்தவாறு "நீ அழகா இருக்கனும்னுதான் சேல வாங்கி வந்தேன்... ம்... அத கட்டிகிட்டு வா... பார்க்கணும்..." என்று ஆசை ஊட்டினான்.

மாலினி முகம் சிவந்தவளாக தன்னை விடுவித்துக் கொண்டு புதிய சேலையை எடுத்து, உடுத்திக் கொள்ள பக்கத்து அறைக்குள் போகப் போனாள்...

தன் எதிரே சேலை மாற்றுவாள் என்றுதான் சிங்காரம் எதிர்பார்த்தான். ஏமாற்றம் மேலிட, "நாமதான் கல்யாணம் கட்டிகிட்டோமே! நமக்குள்ள என்ன வெக்கம்!" என்று சொன்னான் அவன்.

மாலினி அதற்குப் பதில் சிங்களத்திலேயே சொன்னாள்... "வெட்கப்படுவதுதான் பெண்களின் பிறவிச் சொத்து! அதில்தான் அவர்களின் அந்தஸ்தே இருக்கிறது..."

சிங்காரம் பதில் சொல்ல முடியாமல் இருந்தான். மாலினி அந்த அறைக்குள் போய்விட்டாள். சில நிமிடங்கள் அப்படியே இருந்த சிங்காரம், திடீரென்று உள்ளே போனான். அங்கே அப்போது மாலினி கட்டியிருந்த சேலையை அவிழ்த்துவிட்டு புதிய சேலையை உடுத்தத் தயாரானாள்... சிங்காரத்தின் கண்களில் இருந்து கிளம்பிய உஷ்ணம் அவளைச் சுட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலினி பாவடை, ரவுக்கையோடு நின்றாள். மார்பகத்தை இரு கைகளால் மறைத்துக் கொண்டாள். அவளின் அந்தத் தோற்றம் அவனை என்னவோ செய்தது... மாலினியின் விழிகள் அவன் நெஞ்சுக்குள் இறங்கின. அவன் அப்படியே அவளைக் கட்டிப்பிடித்து அவள் முகத்தில், உடம்பில் இதழ் பதித்தான். மாலினி தன்னிலை மறந்தாள். அவள் கைகள் தானாக அவனைத் தழுவிக் கொண்டன. அவள் கட்ட வேண்டிய புதுச்சேலை அப்படியே நிலத்தில் கிடந்தது.... சிங்காரம் அவள் உடம்பில் சேலையாக மாறிப் போனான்... அடுத்த சில நிமிடங்களில் அந்த பூமாதேவியின் மடியில் அவர்கள் சங்கமித்துக் கொண்டார்கள்...

அன்று தொடக்கம் சிங்காரம் புதுச் சேலை வாங்கி வந்தால், உடனே அதனைக் கட்டி அவனுக்கு அழகு காட்டிவிட்டுத்தான் அடுத்த வேலை பார்ப்பாள் மாலினி... பட்டப்பகலில் 'அந்த திருவிளையாடல்' நட்க்கக் கூடாதென்ற முன்யோசனைதான்...

'ஓ! அவையெல்லாம் இன்பமயமான காதல் காட்சிகள்... இலக்கிய மொழியில் அகப்புராணம்... நினைக்க, நினைக்க ஒரு மகிழ்வுணர்வை ஏற்படுத்தி மறையும்... அது நேற்று வரை... இன்று தன் வாழ்க்கையே ஒரு கேள்விக் குறியாய் இருக்கிறபோது இந்த நினைவுகள் இனிக்கவா செய்யும்?...

அவள் கண்களில் இருந்து முத்துக்களாய் கண்ணீர்த் துளிகள் உதிர்ந்தன...

சேலை முந்தானையால் கண்ணீர்த்துளிகளை ஒத்தியெடுத்த மாலினி வெளியே பார்த்தாள். மழை மெல்லிசாய் பெய்து கொண்டே இருந்தது. அந்தத் தூரலில் நனைந்து கொண்டே பலர் அங்கும், இங்கும் நடமாடினார்கள்.

## 16

கோயில் காரியாலயத்தில் துணிமணிகளுக்காக புதிய அறை ஒதுக்க வேண்டி வந்துவிட்டது. நகரில் இருக்கிற கிறிஸ்தவ, முஸ்லீம் சில சிங்கள மக்கள் கூட பழைய, புதிய துணிகளைச் சேகரித்துக் கொண்டு வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்துக் கொண்டே இருந்தார்கள். சிங்காரம் அவ்வப்போது அவைகளை கணக்கில் எழுதி வைத்தான். அதுவரை கணக்கெடுத்ததில் பெண்களுக்கான சேலைதான் அதிகமாக சேர்ந்திருந்தது. சிங்காரம் சேலைகளை ஒரு பக்கமாகவும் வேட்டி – சாரங்களை இன்னொரு பக்கமாகவும் இதர துணிகளை ஒரு பக்கமாகவும் வைத்தான். பழைய துணிகளை வேறு ஒரு பக்கமாகவும் வைத்தான். சகல துணிகளின் மொத்தத் தொகையையும் அவனைக் கேட்காமலேயே தெரிந்துக் கொள்ளக் கூடியதாக எழுதி வைத்திருந்தான்.

காரியாலயத்தின் முன்னே ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய ஒரு இளைஞர் சிங்காரத்திடம் ஓடி வந்தார். "கொஞ்சம் உடுப்புச் சேர்த்துக்கிட்டு வந்திருக்கேன் யாராவது வாங்க.. கணக்கெடுத்து எடுத்துக்கங்க..."

சிங்காரம் சுற்றும் முற்றும் பார்த்தான். காரியாலயத்திலும் எவரும் இல்லை. எப்படி போவது? யோசித்தான்.

அப்போது காரியாலயத்திற்கு வெளியே இருந்த ஒருவன் சிங்காரத்தைப் பார்த்துக் கேட்டான்.. "நான் போய் எடுத்துட்டு வரவா?.."

சிங்காரம் தலையசைத்தான். அவனுக்கு வேறு வழி தெரியவே இல்லை.

புதியவன் காரிலிருந்து சேலை–ரவுக்கை வேட்டி, சாரம், பாய், தலையணை, சட்டி, முட்டி எனப் பல பொருட்களை இறக்கி காரியாலயத்தில் கொண்டு போய் வைத்தான். சிங்காரம் இளைஞனிடம் விபரத்தைக் கேட்டு எழுதி, புதியவன் இறக்கி வைத்த பொருட்களை தனித்தனியாக வைக்கத் தொடங்கினான். பிறகு அவைகளை வகை வகையாகக் குறிக்கத் தொடங்கினான். புதியவன் – புதிய தொண்டன் அவனுக்கும் உதவியாக இருந்தான். சிங்காரம் தனக்குள் இந்த புதியவனை உதவியாக வைத்தது நல்லதுதான் என்று நினைத்தான். நெடுநேரம் தலை குனிந்தவாறு அவன் எழுதிக் கொண்டிருந்தான்...

தலையை நிமிர்த்தியபோது அதைப் பார்த்தான். அந்தப் புதியவன் – புதிய தொண்டன் ஜன்னல் வழியாக ஒரு வேட்டியை யாரிடமோ கொடுத்துக் கொண்டிருந்தான். அதற்குள் ஜன்னலருகே இருந்து வேட்டியை வாங்கியவன் தன்னை சிங்காரம் பார்ப்பதைக் கண்டதும் அந்த வேட்டியைப் போட்டு விட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்விட்டான். கீழே விழுந்து கிடந்த வேட்டியை எடுத்துக் கொண்டு உள்ளே வந்து, புதியவன் – புதிய தொண்டன் அருகே போய் அவன் சட்டையைப் பிடித்த சிங்காரம் கத்தினான்.

"இப்படி திருடத்தான் உதவி செய்யிர மாதிரி வந்தியா?.. அகதி முகாமுக்குள் திருட்டு புத்தி ஏன் உனக்கு?...."

அப்போது கோயில் உபதலைவர் அங்கே வந்துவிட்டார். நடந்ததைத் தெரிந்து கொண்டு புதிய தொண்டனை திட்டி அனுப்பிவிட்டு சிங்காரத்திடம் சொன்னார்,

"தம்பி! இவனை வைச்சிகிட்டு விவகாரம் பேசினா நமக்குத்தான் வெக்கம்! ஊர் ஒலகம் தமிழனைப் பார்த்துத்தான் சிரிக்கும். தமிழன்தான் அகதியா வந்திருக்கான்.. தமிழனே அகதிக்கு வந்ததை திருடினா சிரிக்கும் உலகம்.. விடுங்க தம்பி.. நம்ம வேலய பார்ப்போம்,..!"

சிங்காரம் வழக்கம்போல் மௌனமானான்.

"பொது வேலயில இந்த மாதிரி வரும் தம்பி... சும்மா அதட்டி கண்டிச்சி அனுப்பிர வேண்டியதுதான்... இல்லேன்னா வழக்கு வம்பு பேசிக்கிட்டு இருந்தா மத்த வேலய பார்க்க முடியாது!..."

கோயில் உபதலைவர் தனது பலவருட சேவையின் அனுபவத்தை சொன்னார்...

இருவரும் காரியாலயத்தின் உள்ளே போனார்கள். அங்கு குவிந்திருந்த துணிமணிகளைப் பார்த்து வியந்தார் கோயில் உபதலைவர்.

"பரவாயில்லையே தம்பி! தமிழன் அடிபட்டு கிடந்தாலும் அவனுக்கு உதவி செய்ய ஆளுக இருக்கத்தான் செய்யிராங்க!..."

அவரிடம் துணிகளின் மொத்த தொகையை சொன்னான்.

அப்போது வாசலில் எவரோ விம்முகிற சத்தம் கேட்டது. சிங்காரம் நிமிர்ந்து பார்த்தான். மாலினி நின்று கொண்டிருந்தாள். அவன் என்ன செய்வதென்று தெரியாமல் தவித்தான். ஒரு விநாடி இனம் புரியாத வெறுப்பு அவனுள் உருவாகியது. இவள் ஏன் இங்கே வந்தாள்?...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே வந்தான் சிங்காரம், "ஏன் அழுவுற?" ஆத்திரம் கொப்பளிக்கக் கேட்டான்.

"கட்டிக்க சேல இல்ல..." மாலினி.

"சேல இல்லேன்னா நா என்ன செய்யணும்?..."

"எப்படியாவது ஒரு சேல வாங்கிக் குடுங்க... மாத்திக்க அது ஒதவும்..."

"நா யாருக்கிட்ட கேப்பேன்... கையில காசும் இல்ல..."

டவுணுக்குப் போய்வரும் போதெல்லாம் புதுச் சேலை வாங்கிக் கொடுத்தவன் இன்று கேள்விக்கு பதில் கேள்வி தொடுக்கிறான்... மாலினி தவித்தாள். தன்னிடம் உயிரும் அன்பும் வைத்திருந்த சிங்காரமா! இப்படி மாறிப் போனான்?...

"எனக்கு வேல இருக்கு சொல்லு..."

"கோயில்ல சேல குடுக்கிறாங்களாம்... கேட்டு வாங்கித் தாங்க..."

"உனக்குக் கொடுக்கவா அவங்க வைச்சிருக்காங்க?" என்று சத்தமாகவே கேட்டான் சிங்காரம்.

உபதலைவர் சத்தம் கேட்டு வெளியே வந்தார், "என்னப்பா சத்தம்? யாரு நிக்கிரது?..."

தன்னையறியாமல் சொல்லிவிட்டான் சிங்காரம், "என் சம்சாரங்க..."

சிங்காரத்தின் அந்த பதிலில் மாலினிக்கு சிறுநம்பிக்கை... தன்னை இன்னமும் மனைவியென்று நினைத்துக் கொண்டாவது இருக்கிறானே!...

"பேரு..."

"மாலினி...."

உபதலைவர் யோசித்தார். சிங்காரம் மாலினியின் சரித்திரத்தை மெல்லமாய் சொன்னான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அட! இவ்வளவு பெரிய விசயத்தை நீ சொல்லவே இல்லியே! என் தம்பி மகனும் இப்படித்தான் ஸ்கூல்ல மாஸ்டரா இருந்தான். சிங்கள டீச்சரையே கல்யாணம் பண்ணிகிட்டான்... அவங்களும் கலவரத்தில அடிபட்டு இங்கதான் வந்திருக்காங்க... என்னத்த கலப்பு திருமணம் செஞ்சாலும் மொழிப் பிரச்சனை இல்லேன்னாத்தான் எந்த பிரச்சனையும் இருக்காது..." என்று சொன்ன உபதலைவர் சிங்காரத்தை நேருக்குநேர் பார்த்தவாறு சொன்னார், "உன் சம்சாரத்துகிட்ட மாத்து சேலயும் இருக்காது... உன் பேருல எழுதிக்கிட்டு ஒரு சேலய சம்சாரத்துக்கு குடு..."

சிங்காரம் தயங்கினான்... அதனைப் புரிந்து கொண்ட அவர் அவனை தைரியப்படுத்தினார். "இதுக்கெல்லாம் பயந்தா ஒன்னும் செய்ய முடியாது! எல்லாத்துக்கும் துணிமணி குடுக்கத்தான் போறோம்... உன் சம்சாரத்துக்கு முந்தியே குடுத்தாச்சின்னு வைச்சுக்கோயேன்!...."

சிங்காரம் அப்போதும் தயங்கியவாறு இருந்தான். 'இத்தனைபேர் அகதியாக இருக்கும்போது தன் மனைவிக்கு மட்டும் எப்படி இப்போதே கொடுக்க முடியும்?' அவன் மனசு அவனுக்கு ம்ட்டும் கேட்கிற மாதிரி பேசியது.

"உன் தயக்கம் என்னான்னு எனக்கு புரியுது. சரி... இதை நான் கொடுத்ததா வைச்சுக்க... யார் கேட்டாலும் என் தலையில போடு..." என்று சொன்ன உபதலைவர் மாலினி பக்கம் திரும்பி, "நூல் சேல வேணுமா? சில்க் சேல வேணுமா?..." என்று கேட்டார்.

"சில்க்" என்றாள் மாலினி.

உபதலைவர் பச்சைநிறத்தில் ஒரு சில்க் சாரியைத் தேடியெடுத்து மாலினியிடம் கொடுத்தார்.

சிங்காரம் வேறு பக்கமாய் முகத்தை வைத்துக் கொண்டிருந்தான். மாலினி உபதலைவரை நன்றியுடன் பார்த்துவிட்டுப் போனாள்.

உபதலைவர் சிங்காரத்தின் முதுகில் தட்டி, "சிங்கள பெண்ணா இருந்தாலும் முகத்தில லச்சிமி கரம் இருக்கு... கெட்டிக்காரன்... லச்சிமிய விட்டுடாதே! கடைசி வரைக்கும் காப்பாத்தணும்..." என்று சொல்லிவிட்டுப் போனார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் மண்டபத்திற்குள்ளே போன சிங்காரம் மாலினியைத் தேடி பூக்கட்டும் இடத்திற்கு போனான். அவன் முகத்தில் படர்ந்திருந்த கோபத்தைக் கண்டு மாலினி தவித்தாள்....

"உன்னய யாரு அங்க வந்து சேல கேக்கச் சொன்னா?..."

மாலினி தலை குனிந்தவாறு நின்றாள்.

"இத்தன பேரு அகதியா இருக்கிற நேரம். உனக்கு மட்டும் மாற்றுச் சேல வேணுமா?... நீ நடக்கிற முறையில எனக்கு கெட்டபேருதான் வரும்!..."

மாலினியின் பதிலைக்கூட எதிர்பார்க்காமல் சிங்காரம் போய்விட்டான். மாலினிக்கு அழுகையாய் வந்தது. தான் மட்டும் உடுத்திக் கொள்ள ஒரு மாற்றுச் சேலை கேட்டு, வாங்கியதை இப்படி தவறாக எடுத்துப் பேசுவான் என்று அவள் நினைக்கவே இல்லை. அவள் அழுகை தொடர் கதையாய் தொடர்ந்தது.

சிங்காரம் அந்த மண்டபத்தை சுற்றிச்சுற்றி வந்தான். எங்கு பார்த்தாலும் அகதிகளாய் வந்த மக்கள்; உட்காந்தும், படுத்தும், நின்று கொண்டும் இருந்தார்கள். பிள்ளையார் கோயில் அருகே மட்டும் ஒரு சிறிய கூட்டம்... என்னவென்று பார்க்க அங்கே போனான். தொந்தியும் தொப்பையுமாக ஒருத்தர் கையில் தராசுடன் இருந்தார். அது நகை நிறுக்கிற தராசு... தராசின் ஒரு பக்கத்தில் ஒரு சிறிய தோடு இருந்தது. மறுபக்கத்தில் படிக்கல்... சுருக்கமாகச் சொன்னால் அங்கே தங்க வர்த்தகம் நடந்து கொண்டிருந்தது. சிங்காரத்திற்கு முகம் சிவந்தது... கோபத்தில் கத்தினான்.

"ஆள்க வீடு, வாசல் இழந்து சாமான் சட்டுமுட்டு பறிகொடுத்து உயிர்தப்பினா போதும்னு முகாமுக்கு வந்திருக்காங்க. நீங்க இங்க யாவாரம் செய்றீங்க? உங்களுக்கெல்லாம் மனசாட்சி இருக்கா? ஊர் எரியிற நேரம் பீடிக்கு நெருப்பு கேக்கிற மாதிரி இல்ல இருக்கு உங்க வேல...."

"தம்பி நான் ஒன்னும் இவங்கள ஏமாத்தி நகை வாங்கல்ல... இப்ப பவுன் என்ன ரேட்டோ அதையே போட்டு வாங்கிறேன்! அவர்களுக்கும் செலவுக்கு பணம் தேவைப்படுது. வேற யாரும் பணம் கொடுப்பாங்களா?" என்று தன் செய்கையை நியாயப்படுத்தி வாதாடினார் தராசு கையில் வைத்திருந்தவர்... அவர் ஒரு நகை வியாபாரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்க யாவாரத்தை குறை சொல்லல்ல... இங்க இந்த அகதி முகாம்ல யாவாரம் செய்யக் கூடாது. கேட்டுக்கு வெளிய என்ன வேணும்னாலும் செய்ங்க... அதைத்தான் சொன்னேன்...." என்று சொல்லி அவரை மெதுவாக கோயில் 'கேட்' வரை கூட்டிக் கொண்டுபோய் வெளியே அனுப்பினான். அதன் பின்னர் அந்த வர்த்தகக் கூட்டம் கலைந்து ஓடியது.

கோயில் காரியாலயத்தில் சிங்காரம் உட்கார்ந்தபோது "தம்பி" என்று எவரோ அழைக்கிற சத்தம் கேட்டது. நிமிர்ந்து பார்த்தான் அவன்.

ஒரு கிழவி ஒரு பொட்டலத்துடன் நின்று கொண்டிருந்தாள். கால தேவனின் அழைப்புக் கோடுகள் பதிந்து போன முகம்... நடுநடுங்கும் விரல்கள்... குழந்தைகளை ஞாபகப்படுத்துகிற பொக்கை வாய்... வெள்ளைக் கட்சிக்கு மாறிவிட்ட தலை... கிழிந்து போன சேலை... இவைகளை வரிசைப்படுத்தினால் நினைவுக்கு வருகிற ஒரு உருவமே இந்தக் கிழவி.

"தம்பி! இந்த பொட்டலத்தை உங்களுக்கிட்ட ஒரு பொம்பள ஆளு குடுக்கச் சொல்லி சொல்லிச்சி...! இந்தாங்க பொட்டலம்..." என்ற கிழவி நடுங்கும் கைகளால் அந்தப் பொட்டலத்தைக் கொடுத்துவிட்டு அவன் யோசிப்பதைக் கவனித்தவாறே கிழவி மேலும் சொன்னாள்,

"யாரு கொடுத்தான்னு கேட்டதுக்கு இதை குடுத்தா அவருக்குப் புரியும்னு சொல்லச் சொன்னாங்க..." கிழவி போய் விட்டாள்.

சிங்காரத்திற்கு அந்தப் பொட்டலத்தைப் பிரிக்கும் முன்னரே புரிந்து விட்டது மாலினிதான் அனுப்பியிருக்கிறாள்... ஆயினும் பிரித்துப் பார்த்தான். நினைத்தது போல மாலினிக்கு கொடுத்த சேலையே அது! அவன் முகத்தில் அடித்தது போல் திருப்பி அனுப்பியிருக்கிறாள்.

சிங்காரத்தின் எண்ணங்கள் விரிந்தன. தனக்கும் அவளுக்கும் ஏற்பட்ட விரிசல்கள் விரிவடைந்து கொண்டே போகிறது என்பதை மட்டும் அவனுக்குப் புரிந்துவிட்டது. இது எங்கே போய் நிற்கும் என்பது அவனுக்குப் புரியவில்லை. அந்த நேரத்தில் கிழவன் சொன்ன வார்த்தைகள் அவன் நெஞ்சில் நின்றன. அதே நேரத்தில் கோயிலுக்குள்ளே மாலினி அழுது கொண்டே இருந்தாள்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17

இன்று ஜுலை மாதம் 29 ம் தேதி. இந்த உலகத்திற்கு விடிந்தது. அந்த நாட்டிற்கும் விடிந்தது. அந்த ஊருக்கும் அந்த ஊரிலுள்ள அகதி முகாமிற்கும் விடிந்தது. ஆனால் அங்கிருந்தவர்களுக்கோ இந்த சில நாட்களாக விடியவே இல்லை. வெளி உலகத்தைப் பொறுத்தவரை விடிந்தாலும் அந்த உணர்வு அவர்களுக்கு வரவில்லை. தோட்டத்தில் லயத்தில் படுக்கிறபோதெல்லாம் அவர்கள் 'கோழி' கூவுமுன்னரே எழுந்து விடுவார்கள்... அப்போதெல்லாம் பறவைகளின் இன்ப மொழியும் – கால்நடைகளின் குரலும் அவர்களுக்கு காலைநேர பூபாளமாக ஒலிக்கும்! தேயிலையின் மீது தவழ்ந்து வருகிற காற்றின் அணைப்பு சிலிர்க்கும்! இங்கோ ஒரு சிறையில் பிடிப்பட்டது போல் தோன்றுகிறது அவர்களுக்கு... பழக்கத்தின் அடிமைகளுக்கு இந்தப் புதிய பழக்கம் பெரும் வேதனையாகவும், சோதனையாகவும் தெரிகின்றது போலும்...!

அந்த அகதி முகாமில் பாதிக்கு மேற்பட்டவர்கள் எழும்பிவிட்டார்கள்... கோயில் 'கேட்'டும் வாசல் 'கேட்' மட்டும் திறக்கப்பட்டன. ஊரடங்குச் சட்டத்தின் கெடுகூட ஐந்து மணியோடு முடிந்துவிட்டது. இனி வீதி 'கேட்'டுக்கு வெளியே டீ குடிக்கப் போவார்கள் சிலர். படுக்கையை விட்டு எழுந்ததுமே சிலருக்கு 'டீ' குடிக்க வேண்டும். சிலருக்கு 'பீடி' குடிக்க வேண்டும். அகதி முகாமில் எவன் இதெல்லாம் கொடுக்கின்றான்? அதனால், அதைத் தேடிப் போனார்கள்... வெளியே சில டீக்கடைகள் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள திறந்து வைக்கப்பட்டிருந்தன. வேறு சிலர் ஆற்றுக்கு குளிக்கப் போனார்கள்.... வேறு சிலர் பக்கத்தில் உள்ள 'செட்டிக் கிணற்றுக்கு' குளிக்கப் போனர்கள். வேறு சிலர் தூரத் தொலைவுக்கு 'ரெண்டு'க்குப் போனார்கள்.

மாலினி எழும்பி விட்டாள். அவ்வளவு பெரிய மக்கள் கூட்டத்தில், தான் தனித்து விடப்பட்டவளாக இருந்தாள் அவள். அவளைச் சுற்றி எத்தனையோ பேர் இருந்தும், எவரும் மனம் நெருங்கிப் பேசுவதாகத் தெரியவில்லை. அவளுக்கு ஆதரவு காட்டிய அந்தக் கிழவரும் ஆஸ்பத்திரியில் கிடக்கிறார்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்று வரை மனதாலும், உடலாலும் நெருங்கிக் கிடந்தவன் இன்று உடலளவில் விலகி நின்றாலும் பரவாயில்லை, மனத்தளவில் கூடத் தூர நிற்கின்றானே!

கோயில் கோபுர வாசலில் 'பைப்' படியில் முகம் கழுவி வந்தாள் மாலினி... சொட்டு சொட்டாக தண்ணீர் வடிந்து கொண்டிருந்த அந்தப் பைப்போடு ஏற்கனவே பலர் போராடிக் கொண்டிருந்தார்கள். மாலினி பொறுமையாக நின்று, இரண்டு கையாலும் தண்ணீர் சேர்த்துக் கொண்டு முகம் கழுவினாள். என்னத்தைக் கழுவினாலும் முகம் சோகமாக இருந்தது. அதனை மாற்ற முடியுமா?... உள்ளத்தில் உள்ளதுதானே முகத்தில் தெரியும்!....

கோயில் காரியாலயத்தில் படுத்துக் கிடந்த சிங்காரம் எழும்ப மனமில்லாமல் புரண்டு புரண்டு படுத்தான். கோயிலின் உள்ளே இருந்தவர்கள் விழித்து விட்ட சத்தம் அவன் காதில் விழுந்தது. மெதுவாக எழும்பிய அவன் காரியாலயத்தின் ஒரு ஜன்னலைத் திறந்து பார்த்தான். முகாமில் இருந்தவர்கள் போவதும் வருவதுமாக இருந்தார்கள். படுக்கையைச் சுருட்டி வைத்த சிங்காரம் காரியாலயத்தின் உள்ளே இருக்கிற 'பைப்'பில் முகத்தைக் கழுவி பல் விளக்கி கொப்பளித்தான். பிறகு சட்டையை மாட்டிக் கொண்டு கதவை மூடிவிட்டு வெளியே நடந்தான். வெளியே பிரதான வீதியில் இருந்த பெட்டிக் கடையில் 'டீ' கேட்டான். அகதிகளின் தேவைகளுக்காக உருவான திடீர் கடைகள். மயானத்தருகேயே கடை விரிக்கும் இந்த மனிதர்கள் இங்கே சும்மா இருப்பார்களா? காற்று வீசுகிற போதே தூற்றுகிறார்கள்... தோட்டத்தில் இன்னேரம் டீ கொடுத்திருப்பாள் மாலினி...

அகதி முகாமில் யார் 'டீ' கொடுப்பார்கள்? அவனுக்கு காலையில் 'டீ' முகத்தில்தான் விழிக்க வேண்டும். அப்படி பழகியாகி விட்டது. சிங்காரத்தைப் பார்த்து புன்னகைத்தார் டீக்கடைக்காரர்... 'டீ' வந்தது. 'டீ' கிளாஸை வாயில் வைத்து உறிஞ்சிக் குடித்தான். அப்போது 'சடா'ரென்று மனதில் ஒரு உணர்வு.... மாலினி எப்ப 'டீ' குடிப்பாள்? லயத்தில் அவனுக்கு முன்பே எழும்பி 'டீ' ஊற்றி கொடுத்து விட்டுத்தான் குடிப்பாள். இன்றோ...

அவசர அவசரமாக 'டீ'யைக் குடித்து விட்டு கோயிலுக்குத் திரும்பினான் சிங்காரம்... மாலினியைக் கைப்பிடித்த நாளிலிருந்து அவள் இல்லாமல் எதுவுமே சாப்பிடமாட்டான்... டவுனுக்குப் போகும் போது வாங்குகிற நொறுக்குத் தீனிகளைக் கூட லயத்தில் தான் பங்கு போட்டு சாப்பிடுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளும் அப்படித்தான் இதுவரைக்கும் மாலினி வாய் திறந்து எதையும் கேட்டது இல்லை. மற்ற பெண்களைப் போல் நகைநட்டு, சேலை, சட்டை, பாத்திரம் என்று அவள் பேசியதே இல்லை.

அவனுக்கு மெள்ளமாய் சில ஞாபகங்கள். பக்கத்து காம்பராவில் சின்னையாவும் பார்வதியும் சண்டை பிடிப்பதைப் பார்க்கின்றபோது கல்யாணம் செய்யத்தான் வேண்டுமா?..... என்ற கேள்வி அவனுக்கு வந்தது. சின்ன விஷயத்திற்குக் கூட 'புருஷனும் பெண்சாதியும்' தோட்டமே சிரிக்க சண்டை பிடிப்பார்கள்... பகலெல்லாம் இப்படி சண்டை.. இரவு சத்தமே கேட்காது. ஒரு நாள் டவுனுக்குப் போன சின்னய்யா பார்வதிக்கு சேலை வாங்கி வர மறுந்து விட்டான். அவ்வளவு தான்... இரண்டு பேருக்கும் சண்டை....

"ஒன்யை கால்யாணம் பண்ணிகிட்டு என்ன சொகத்த கண்டேன்...." இது அவள்.

"ஏன் திங்கிறியே! உடுத்திறியே! போதாதா?" அவன் கேட்டான்.

"தின்னா உடுத்தினா போதுமா?"

இப்படியே பேச்சு முற்ற ஒரு கட்டத்தில் அவன் பச்சையாக சொல்லி விட்டான்.

"உன்னோட படுக்கிறதுக்கு பதிலா..... படுக்கலாம்"

அவ்வளவுதான். அந்த ஒரு வார்த்தை துணியை இரண்டாகக் கிழித்தது போலாகிவிட்டது... அவள் கோவித்துக் கொண்டு போய்விட்டாள். பிறகு சமாதானப் பேச்சுகள் நடந்து சில நாட்கள் கழித்துத்தான் அவர்கள் இணைந்தார்கள்.

மாலினி இங்கே என்ன தவறு செய்தாள்?. அவள் சிங்களப் பெண்ணாகப் பிறந்ததைத் தவிர வேறு என்ன வித்தியாசத்தைக் கண்டான்? நேற்றுவரை அவள் உடம்போடு உடம்பாக இருந்த அவன் அந்த அகதி முகாமுக்கு வந்தபின்னர் என்ன பெரிய வித்தியாசத்தைக் கண்டானோ?..

சிங்காரத்தின் நெஞ்சைக் குடைந்தெடுத்தன எண்ணங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை பத்து மணி இருக்கும். கோயில் 'கேட்' அருகே கசமசா என்று ஒரே கூச்சல். காரியாலயத்தை விட்டு வெளியே வந்த சிங்காரம் என்னவென்று பார்த்தான். சுமார் 50 பேர் 'கேட்'டருகே ஒரு வட்டமாக கூடியிருந்தார்கள். சிங்காரம் அவசரமாக அந்தக் கூட்டத்தின் அருகே போனான். கூட்டத்தை விலக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தான். அங்கே தலையிலிருந்து ரத்தம் வழிய ஒருத்தன் நின்று கொண்டிருந்தான். அவன் தலையில் கட்டியிருந்த துணி சிவப்பு நிறமாக இருந்தது.

"வள்ளி மன தோட்டத்திலே பெரிய கலவரம். லயத்த நெருப்பு வைச்சுட்டானுக. ஒரு துரும்பு கூட எடுக்க முடியாம ஆளுக அங்கிட்டும் இங்கிட்டுமாக காட்டுக்குள் ஓடினாங்க. நடக்க முடியாத நாலஞ்சு ஆளுக மாட்டிக்கிட்டாங்க. அவங்கள உசிரோட எரியிற நெருப்புல போட்டுட்டாங்க. கடை முதலாளி மாரிமுத்துவை வெட்டிப் போட்டுட்டாங்க. அவரூட்டு குமரு புள்ளய கெடுத்திட்டானுங்க. என்னையவும் அடிச்சி ரோட்டுல போட்டானுங்க. நான் செத்து போயிட்டேன்னு நெனைச்சவனுக ஏன் மேல பெட்ரோல் ஊத்தி கொளுத்தப்போற நேரம் ரோட்டுல பொலிஸ் ஜீப் வண்டி ஒன்னு வந்திச்சி, அவ்வளவுதான். பெட்ரோல் டின்ன போட்டுட்டு ஓடிட்டானுங்க அதுக்குப் பொறகு போலிஸ்காரங்க என்ன நெனைச்சாங்களோ தெரியல்ல என்ன தூக்கி ஜீப்புல போட்டுகிட்டு போயி, பொலீஸ் ஸ்டேசன்ல இறக்கிவிட்டாங்க. அங்கயிருந்து இப்பதான் வர்ரேன். பொலீஸ்ல பேசிக்கிட்டாங்க கொழும்பு, கண்டி, பதுளை, நுவரெலியாவில எல்லாம் பெரிய கலவரமாம். நேத்து ராத்திரி தமிழ் ஆளுக கடை வீடெல்லாம் எரிச்சிட்டாங்களாம்.. ரொம்ப பேரை கொன்னுட்டாங்களாம். போற போக்க பார்த்தா நாம தப்புவோமோ தெரியல..." அவன் அழுதவாறு சொல்லி முடித்தான். சிங்காரத்தின் உதடுகள் நனைந்து ஒட்டிக் கொண்டன.

"சரி தம்பி! இப்ப மொதல்ல டாக்டர்கிட்ட காட்டி மருந்து போடு.. மத்தத அப்புறம் பார்ப்போம்.. "

ஒரு கிழவன் சமாதானப்படுத்தினான். இளைஞர்கள், நடுத்தர வயதுக்காரர்கள் மௌனியாகி விட்டார்கள். அவர்களால் பேச முடியவில்லை. எப்படி பேசுவது?... சிங்காரத்திற்கு இது முதல் அனுபவம். இதுதான் அவன் சந்தித்த முதல் கலவரம்.. அந்தக் கிழவனுக்கோ இது பழகிப்போன சமாச்சாரம். இதற்கு முன்னர் நடந்த கலவரங்களில் அவன் அகதியாக இருந்திருக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கனவே அவன் வாழ்க்கையே அகதிபோல். சொந்தம், பந்தம், பிள்ளை குட்டி, மனைவி என்று எவருமே இல்லை. வீடுவீடாக சாப்பிடுவான். கோயில்களில் படுத்துக் கொள்வான். ஊரில் நடக்கிற கல்யாண வீடு – சாவு வீடு யாவற்றிலும் அவன் முன் நிற்பான் உழைப்பான். சாப்பிடுவான். சுருக்கமாகச் சொன்னால், சொந்தக்கூரையோ – நிலமோ இல்லாதவன்.

சிங்காரம் மனக்கவலைகள் அழுத்த காரியாலயத்திற்கு போனான். தலையில் அடிபட்டவன் மருந்து கட்டப்போய் அரை மணித்தியாலமிருக்கும். ஒரு லொறி வேகமாக கோயில் மைதானத்தில் வட்டமடித்து வந்து நின்றது. அந்த லொறி நிறைய அகதிகளாகி விட்ட மக்கள்.

சிங்காரம் மறுபடியும் வெளியே வந்து பார்த்தான். கலவரம் குறைந்து விட்டது என்றார்கள். ஆனால், ஆங்காங்கே கலவரம் நடந்திருக்கிறது.........! இல்லையேல், இவர்கள் ஏன் இங்கு வருகிறார்கள்....? அவர்கள் என்ன குற்றம் செய்தார்கள்? என்னத்தைக் கேட்டார்கள்? தங்களின் உழைப்பைச் சுரண்டிச் சுகம் கண்டு வாழ்கிறவர்களுக்கு எதிராகக் குரல் எழுப்ப வேண்டியவர்களான இவர்களே அமைதியாக இருந்தும், அவர்களை இன்று ஆயுதத்தால் தாக்கி அகதிகளாக்கி விட்டதற்கு காரணம் என்ன? எதுவுமே புரியவில்லை அவர்களுக்கு... ஆனால் ஒன்று மட்டும் அவர்களுக்குப் புரிந்தது. தமிழர்களாக இருப்பதும் – தமிழ் பேசுவதும் தான் அவர்கள் செய்த மன்னிக்க முடியாத குற்றம்....

10537

காட்டில் மிருகங்கள் ஒன்றையொன்று அடித்துச் சாப்பிடத்தான் செய்கின்றன. அதே கானகத்தில்தான் எல்லா மிருகங்களும் தங்களுக்கென்று தாயகம் அமைத்து வாழ்ந்து வருகின்றன. ஆனால் இந்த நாடு மட்டும் ஏன் அந்தக் காட்டை விட மோசமாகி விட்டது? வேற்றுமையில் ஒற்றுமை காண்கிற மிருகங்களை விட இந்த மனிதர்கள் மட்டும் ஏன் கேவலமாகி விட்டார்கள்......?

அந்த லொறியிலிருந்து அத்தனை பேரும் இறங்கினார்கள். அவர்களில் பலருக்கு கையில் – தலையில் காயம்... ஒரு யுத்தம் நடந்து முடிந்து அதில் உயிர் தப்பிய மக்களைப் போல்தான் இருந்தார்கள் அவர்கள். ஆனால் இவர்கள் எவரோடும் யுத்தம் செய்யவில்லை. இவர்களின் யுத்தம் மண்ணோடுதான்.. நாட்டை பசுமையாக்கவே அவர்கள் போரிட்டு வந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்காரம் இதயம் குமுறிய நிலையில் காரியாலயத்திற்கு திரும்பினான். அவனுடைய நெஞ்சில் திரும்பத் திரும்ப அந்தக் குரல் ஒலித்தது. 'ஒரே குடும்பத்தில நாலஞ்சு பேரை கெடுத்திட்டானுங்க சிங்கள வெறியனுக...'

அவனுக்கு அப்போது ஒரு துப்பாக்கியை யாரோ கொடுப்பதாகவும், அதைத் தூக்கிக் கொண்டு சுடப் போவதுபோல் ஒரு உணர்வும் வந்தது. அந்த உணர்வு எவ்வளவு நேரம் நிற்கும்? தண்ணீரில் இட்ட உப்பாய் அது கரைந்த போது மாலினியின் முகம் தான் நெஞ்சில் நின்றது.

'வீட்டுக்குள்ள சிங்களத்த வைச்சிகிட்டு வெளிய சிங்களத்த எதுக்கப் போறாராக்கும்......!' என்று யாரோ அவனைப் பார்த்து சிரிப்பது போல் தோன்றிய்து அவனுக்கு.

அவனுடைய எண்ணங்கள் முன்னும் பின்னுமாய் ஓடின..... தன்னால் எதுவும் பேச முடியாதது போல் தோன்றியது அவனுக்கு. மாலினி அவன் மனைவியாக இருக்கும்வரைக்கும் அவனால் என்ன செய்ய முடியும்?

சிங்காரம் காரியாலயத்திலேயே இருந்தான். எங்கும் போக பிடிக்கவில்லை அவனுக்கு. வெளியே போனால் காதில் விழுகிற செய்திகள் படபடப்பை உண்டு பண்ணும். தேவையற்ற எண்ணங்களைக் கோர்க்கும்.

துணிமணிகளை அடுக்குவதில் மும்முரமாய் இருந்தான்.

பகல் இரண்டு மணியிருக்கும்... கோயில் முகாமில் இருக்கிற தற்காலிக ஆஸ்பத்திரியில் இருந்து ஒருத்தர் அவனைத் தேடி வந்தார். "தம்பி! தானே சிங்காரம்?"

"ஆமாம்"

பவ்வியமாக எழுந்து நின்று பதில் சொன்னான் சிங்காரம். அவரின் தோற்றம் மரியாதை கொடுக்கச் சொல்லியது.

"நான் இங்க வேலை செய்யிற டொக்டர். என்ர பேர் பாலா. ஒஸ்பிட்டல்ல இருந்து இப்பதான் வந்தனான். உங்கள பிச்சைத் தாத்தா பார்க்க வேணும் எண்டு சொன்னார். ஒருக்கா போயி அவரை பார்த்திட்டு வாங்கோ......."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பேச்சு மொழி அவரை யாழ்ப்பாணத்தவர் என்று அடையாளம் காட்டியது. அவர் ஒரு டாக்டராக அரசாங்க ஆஸ்பத்திரியில் பணிபுரிகின்றார். அவரையும் இனவெறியர்கள் விடவில்லை. அவரின் வீட்டையும் உடைத்து நொறுக்கி நெருப்பு வைத்து விட்டார்கள்...

"தாத்தாவுக்கு எப்படி இருக்கு டொக்டர்?"

"மருந்து போட்டிருக்கு.... ரெண்டு மூணுநாள் போனால் தான் எதையும் சொல்ல முடியும்...."

சிங்காரம் மௌனமானான் அவன் மனதுக்குள் ஒரு பயம்... அதைப் புரிந்து கொண்ட அந்த டாக்டர் அவனைச் சாந்தப்படுத்தினார்....

"பயப்பட ஒண்டும் இல்ல... போயி பார்த்திட்டு வாங்கோ..."

அஞ்சு மணிக்கு மேல வெளியில கேப்பியூ[1]... எப்படி டொக்டர் ஆஸ்பத்திரிக்கு போரது?"

கவலை தெரிந்தது அவன் கேள்வியில்.

மாலையில் 5 மணி முதல் காலை 5 மணிவரை ஊரடங்கு சட்டம். எப்படி வெயியே போக முடியும்?

டாக்டர் யோசித்தார். பிறகு சொன்னார்....

"ஈவினிங் நாலு மணிக்கு இங்க இருந்து ஒரு ஜீப் ஒஸ்பிட்டலுக்கு போகுது. நீங்களும் அதில போகலாம். அதிலயே திரும்பி வரலாம். நீங்க ஒருக்கா மூனரை மணிக்கு எங்கட இடத்துக்கு வாங்கோ"....

டாக்டர் போனார். மனதால் அவருக்கு நன்றி தெரிவித்தான். அதன்பிறகு அவன் மனசுக்கு இருப்புக் கொள்ளவில்லை. பிச்சைத் தாத்தாவைப் பார்ப்பதிலேயே இருந்தான். மூன்றரை மணிவரை எப்படியோ காலத்தை ஓட்டியவன் உபதலைவரிடம் சொல்லிவிட்டு டாக்டரைப் பார்க்கப் போனான்.

---

1. ஊரடங்குச் சட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியாக நாலுமணிக்கு ஜீப் வந்தது. டாக்டர் சொன்னது போல் அதன் பின்பக்கமாக அவனை ஏற்றி விட்டார். அவனோடு வேறு சிலரும் இருந்தார்கள். அந்த ஜீப் வண்டி அரசாங்க அனுமதிப் பத்திரம் பெறப்பட்டது. எந்த நேரத்திலும் எங்கும் போகலாம். அகதிகளின் தேவைக்காக ஒதுக்கப்பட்டது.

## 18

ஆஸ்பத்திரிக்குப் போன சிங்காரம் பிச்சைக் கிழவனை வார்டில் தேடினான். எந்தக் கட்டிலிலும் அவரைக் காணவில்லை... வார்டு கங்காணியிடம் கேட்டதற்கு வராந்தாவில் போய்ப் பார்க்கும்படி சொன்னான். வராந்தாவைச் சுற்றி சுற்றிப் பார்த்தான்... பாத்ரூமுக்கு போகிற வழியில் ஒரு மூலையில் நிலத்தில் போடப்பட்டிருந்த படுக்கையில் பிச்சைக் கிழவன் கிடந்தான். கண்கள் மூடியே இருந்தன.

கிழவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்த சிங்காரம் அவன் காதில் மெதுவாக, "தாத்தா! நான் சிங்காரம் வந்திருக்கேன்..." என்றான்.

கிழவனின் இமைகள் மெதுவாய் பிரிந்து அடையாளம் கண்டு கொண்டன... அவன் ரொம்ப தளர்ந்து போய்விட்டான். விதி அனுப்பி வைத்த கடைசிக் கடிதத்தின் எழுத்துக்களாக முகத்தில் சுருக்கங்கள். கண்களில் இதுவரை காணாத ஒரு பிரகாசம்... அந்த பிரகாசம்தான் இருக்கக் கூடாதாம்... வயதான கட்டைகள் கண்வழி பார்த்து வாய்வழி சொல்கிற ஞானவார்த்தைகள்...

சிங்காரத்தின் கண்கள் நனைந்திருந்தன... பிச்சைக் கிழவன் சிங்காரத்தின் கைகளைப் பிடித்து தடவியவாறு கேட்டான்... "எப்படி இருக்கே சிங்காரம்?..."

கண்களைத் துடைத்துக் கொண்டே பதில் சொன்னான் அவன்... "ஏதோ இருக்கிரேன்... தாத்தா!" பெரிய துணிக்கட்டு கிழவனின் தலையில் மகுடம் வைத்தது போல் இருந்தது. அதில் இன்னமும் ரத்தம் கசிந்தது. உடம்பில் ஆங்காங்கே பல கட்டுகள்; பிளாஸ்திரிகள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழவன் சன்னமான குரலில் பேசினான்... "சிங்காரம்! நா சொன்னபடி நீ நடக்கவே இல்ல... உன்ன நம்பி வந்தவள ஏம்பா ஒதுக்கி வைக்கிற?..."

தன்னை இந்தப் பிச்சைக் கிழவன் ஏன் வரச் சொன்னான் என்பது புரிந்து விட்டது அவனுக்கு... ஆயினும் தன் சொந்த உணர்வுகளைக் காட்டாது மௌனமாக இருந்தான்...

"உன்னயவே நம்பி, அம்மா, அப்பா சொந்தக்காரங்க, வீடு வாசல் எல்லாத்தையும் விட்டுட்டு அவ வந்தத பத்தி கொஞ்சம் ரோசன பன்னி பார்த்தியா?... இப்ப அவ என்ன குத்தம் செஞ்சா?... அவன் அண்ணன் லயத்துக்கு நெருப்பு வைச்சதுக்காக அவள கோவிக்கிறதில என்ன ஞாயம் இருக்கு?... ஒன்ன நெனைச்சி பாரு!... ஒனக்காக – ஒன்ன கட்டிக்கிறதுக்காக எல்லாத்தையும் விட்டுட்டு, சொல்லப் போனா ஒரு அகதியா ஒனக்கிட்ட ஓடிவந்தவ அவ...! அவள ஒதுக்கலாமா?..." பிச்சைக் கிழவன் மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க ஒரு புராணமே படித்தான்.

முன்பெல்லாம் லயத்தில் குத்து விளக்கேற்றி வைத்து இந்த பிச்சைக கிழவன் பெரிய எழுத்து ராமாயணம் – மகாபாரதம் எல்லாம் வாசித்து அர்த்தம் சொல்வான். தேவாரம் திருவாசகம் கூட அத்துபடி அவனுக்கு... அவன் வாசிக்க வாசிக்க சிங்காரமே கதை கேட்டிருக்கிறான். இந்தக் கிழவனுக்குப் பிறகு அதைச் செய்ய ஆளே இல்லை...

சிங்காரத்தின் காதுகளில் என்றோ பிச்சைக் கிழவன் சொன்ன ராமாயணம் ஒலித்தது... ஒரு பிரமை...

தசரதனின் கட்டளை ஏற்று கைகேயிடம் ஆசி வாங்கிக் கொண்டு கானகம் நோக்கிப் புறப்பட்டான் ராமன்... அவனோடு சீதையும் புறப்பட்டாள்... 'எனக்கு மட்டும்தான் தந்தையின் ஆணை... நீ மாளிகையில் இரு!' என்று ராமன் சொன்னதற்கு 'கணவன் இருக்கும் இடம்தான் மனைவிக்கு சொர்க்கம். இந்த ராமன் இருக்கும் இடம்தான் எனக்கு அயோத்தி' என்று சொல்லியவாறு கல்லிலும், முள்ளிலும் நடந்தாள் சீதை... அதைப் பார்த்து எதற்கும் கலங்காத ராமன் முதன்முறையாக கண்கலங்கினான்...

சிங்காரத்திற்கு அந்த ராமாயண வரிகள் எதையோ சொல்வதைப் போல் இருந்தன... எதுவும் பேசாமல் மௌனமாக நின்றான்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பகல் பன்னென்டு மணியைப் போல மாலினி வந்து அழுதா... சிங்காரம்...! அவள கைவுட்டுராதே! நீ கைவுட்டா பெரிய பாவம்...! பாவம் அவ நல்லா மெலிஞ்சி போயிட்டா... நீ அவள கவனிக்கிரதில்லேன்னு நெனைக்கிறேன். என்னப்பா சொல்ற?... அவள கை வுடமாட்டியே! அதான் எனக்கு வேணும்!... எனக்கு நீ செய்யிர பெரிய ஒதவி..." என்ற பிச்சைக் கிழவன் நிஜத்திற்கும் அழுதுவிட்டான்...

சிங்காரம் மறுபடியும் மௌனம்... கிழவனுக்கு அது சந்தேகத்தைக் கொடுத்தது...

"என்னப்பா பேசாம இருக்க? அவள கைவிட மாட்டியே!"

தாத்தாவுக்கு மூச்சு சத்தமாய் வாங்கியது.

பயந்து போனான் சிங்காரம்... 'இப்போதைக்கு இவரை திருப்தி படுத்த வேண்டும். அதுதான் அவரைக் காப்பாற்றும்...'

"இல்ல தாத்தா! கைவுடமாட்டேன்...!"

யாரை எவரை என்று சொல்லாமல் வெறுமனே 'மொட்டையாக' சொன்னான்.

கிழவனுக்கு அது நிம்மதியைக் கொடுத்தது. சிங்காரம் மாலினியை கைவிடமாட்டான் என்று அவன் நம்பினான்.

"கலவரம் எப்படி இருக்கு?" கிழவன் பொது விஷயத்திற்கு வந்தான்.

சிங்காரம் நடந்ததைச் சொன்னான்... "கலவரம் கொறைஞ்ச மாதிரி இல்ல... இன்னைக்கி காலையில கூட கொஞ்சபேரு அடிப்பட்டு வந்தாங்க. என்ன செய்யிரதுன்னு தெரியல்ல..."

"அப்ப இதுக்கு முடிவே இல்லியா...? தமிழன் சாகிறதுதான் முடிவா?..."

கிழவன் நெஞ்சிலிருந்து விரச்தியுடன் பதில் வந்தது. சிங்காரம் சுற்றும் முற்றும் பார்த்தான். மருந்து நெடியும் பாத்ரூம் நெடியும் கலந்து மூக்கைக் கடித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன் தாத்தா! உங்களுக்கு கட்டில் குடுக்கலியா?"

"வந்த அன்னைக்கி கட்டில் குடுத்தானுக. அப்புறம் யாரோ வந்தோன்ன என்னய கட்டில விட்டு எறக்கி இங்க படுக்க வைச்சிட்டானுக... நாம என்னத்த பேசுறது? வாயில்லா பூச்சிதான் நாங்க...! இந்த நாட்டுல ஒழைக்கிறதுக்கு மட்டும்தான் நாம இருக்கிரோம்! வேற எதுவும் நமக்கு இல்ல..." கிழவன் ஒப்பாரி வைத்தான்.

பொதுவாக அரசாங்க ஆஸ்பத்திரிக்கு போனால் கட்டில் கொடுத்து விடுவார்கள். அப்புறம் வேறு யாராவது வந்ததும் கட்டிலில் 'இருப்பவரை' இறக்கி அவருக்கு கொடுப்பார்கள். ஆனால் வேறு இரண்டு வகையானவர்கள் கட்டிலிலேயே இருப்பார்கள். மற்ற வகையினர் 'கவனிக்க' வேண்டியவர்களைக் கவனிப்பவர்கள்... இந்த மரியாதை எல்லோருக்கும் கிடைக்கும். தமிழனுக்கும் கிடைக்கும்... தமிழன் கொடுக்கிற பணத்திற்கு மொழி உண்டா?...

"வெலாவ யனவா... யன்ட..." (நேரம் போகிறது, போங்க) வெளியில கொலப்பம் விகாட்ட போங்க..."

தமிழும் சிங்களமும் கலந்து சொன்னான் வார்டு கங்காணி... வெள்ளை உடையில் வயிறு மேலே மிதந்தது. பெருத்த தேகம்...

கிழவன் பதறினான்... "நீ போ சிங்காரம்! கங்காணி அய்யா சொல்ரது ஞாயம்தான்... ஆனா நா சொன்னதை மறந்திராதே... மாலினிய கைவுட்டுராதே!..."

சிங்காரத்திற்கு 'சுருக்'கென்றது. பிச்சைக் கிழவன் எதைப் பேசினாலும், கடைசியில் தன் விஷயத்திலேயே இருக்கிறானே...!

சிங்காரம் எதுவும் பேசாது பிச்சைக் கிழவனிடம் "நா வாரேன் தாத்தா!" என்று சொல்லிவிட்டு வார்டை விட்டுப் புறப்பட்டான்.

கோயிலுக்கு வந்தான் சிங்காரம். கோயில் காரியாலயத்தின் முன்னால் கூட்டம் கூடியிருந்தது. அந்தக் கூட்டத்தை விலக்கிக் கொண்டு உள்ளே போனான் அவன். சிங்காரத்தைப் பார்த்ததும் அந்தக் கூட்டத்தில் இருந்த ராமன் ஒப்பாரி வைத்தான்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வா சிங்காரம்! இங்க பாத்தியா? அடிபட்டு கெடக்கிறது யாருன்னு தெரியுதா?"

சிங்காரம் அப்போதுதான் கவனித்தான்... அங்கே அடிபட்டு கிடப்பது எழுத்தாளர் பாலா... அவனுக்கு நன்கு அறிமுகமானவர்... இந்த தோட்டத்து தொழிலாளர்கள் முன்னேற வேண்டும் என்பதற்காக பேனாவைத் தூக்கியவர்... அதற்காக உழைத்தவர்... அந்த வட்டாரத்தில் நன்கு அறியப்பட்டவர்... அவர் எப்படி இங்கே வந்தார்? எப்படி அடிபட்டார்?

எழுத்தாளர் பாலா கண்களைத் திறந்து பார்த்தார்... பிறகு மெல்லிய குரலில் தன் அனுபவத்தை சொல்லத் தொடங்கினார்...

"பத்து நாளைக்கி முந்தி ஒரு வேலைக்காக அனுராதபுரம் போனேன். போன வேல உடனே முடியல்ல... அங்கயே தங்கினேன்... அங்கேயும் கலவரம்... தமிழ் ஆள்களின் வீடு, கடை, லொரி எல்லாத்தையும் நெருப்பு வைச்சான்க. அந்த நேரம் டவுண்ல இருந்தேன். ரெண்டு நாளைக்கி முந்தி கலவரம் குறைஞ்ச மாதிரி இருந்திச்சி.. மாத்தளைக்கு திரும்பலாம்னு பஸ் ஸ்டாண்டுக்கு வந்தேன்... அந்த நேரம் ரோட்டுல நின்று ஒருத்தன் என்ன புடிச்சி நீ தமிழனா? சிங்களவனா? முஸ்லீமா?ன்னு கேட்டான். நான் நல்லா யோச்சிப் பார்த்தேன்... பொய் சொன்னா பிரச்சனை... உள்ளதைச் சொல்லுவோம்னு நான் தமிழன்னு சொன்னேன். ஆனா யாழ்ப்பாண தமிழன் இல்ல... தோட்டத்து தமிழன்னு சொன்னேன்... தோட்டத்து தமிழன்னா விட்டுருவான்னு நெனைச்சேன்... ஆனா அவனோ, 'இந்தா ஒரு தமிழன் அகப்பட்டு விட்டான்... வாங்க...' என்று சத்தம் போட்டுகிட்டு என்னய இழுத்துகிட்டு ஒரு சந்து பக்கமாக போனான்..."

சில விநாடிகள் மௌனமாக இருந்து விட்டு தொடர்ந்தார் பாலா... "அந்த சந்தில ஒரு பத்து பதினைஞ்சு பேர் கூட்டமாக இருந்தானுக. ரெண்டு பேருகிட்ட தடி இருந்திச்சி... நான் நடுவில நின்னேன்... என்னய சுத்தி வட்டமா நின்னாங்க... கம்பு வைச்சிருந்தவன்க என்னய மாறி மாறி அடிச்சானுக! நான் கெஞ்சிப் பார்த்தேன்... அவனுக கேக்கவே இல்ல... வெறி புடிச்சவனுக மாதிரி அடிச்சானுக... என்னால ஒண்ணும் செய்ய முடியல்ல... கடவுள வேண்டிக்கிட்டேன்..."

பாலாவிற்கு மூச்சு லேசாக இளைத்தது. சில நிமிட மௌனத்திற்குப் பிறகு தொடர்ந்தார்... "ஒலகத்தில இருக்கிற தெய்வத்தையெல்லாம் வேண்டிக்கிட்டேன். என்னய பொறுத்தவரைக்கும் என் கதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிஞ்சிருச்சின்னு முடிவே கட்டிட்டேன். அவனுக ரெண்டு மூணு தரம் அடிச்சானுக... நான் அப்படியே கீழே விழுந்தேன்... அதுக்கு மேலயும் அடி விழுந்தா நான் செத்துப் போயிருப்பேன்... ஆனா யார் செய்த புண்ணியமோ அவனுக அடிக்கிறத நிப்பாட்டிட்டானுக... அதுக்கு பிறகு அங்க இருந்து எழும்பி பொலீஸ் ஸ்டேசனுக்கு போனேன்... பொலிஸ் ஸ்டேசன்ல உள்ள விடமாட்டேனுட்டாங்க... சொந்தக்காரங்க வீட்டுக்குப் போகச் சொன்னாங்க. நான் எனக்கு இங்க யாரும் சொந்தக்காரங்க இல்லேன்னு சொன்னேன். அதுக்கு பிறகு வேண்டா வெறுப்பா உள்ள விட்டானுக... உள்ள கொஞ்சதூரம் போயிருப்பேன். இன்னொரு பொலீஸ்காரன் என்ன பார்த்து சிங்களத்தில 'பாகடபட்ட மரல தயனவா' (அரைவாசி கொன்னாச்சி)ன்னு சொன்னான். நான் ஒண்ணுமே பேசல்ல... அப்பறம் மாத்தளைக்கு ஒரு காய்கறி லொரி வந்திச்சி... அதில காய்கறி மூட்டைக்குள்ள ஒளிஞ்சி இருந்து இங்க வந்து சேர்ந்தேன்..."

அனுராதபுரத்தில் வெறியர்களின் தாக்குதலுக்குத் தப்பியது அவனைப் பொறுத்தவரையில் மறுபிறப்பு!

"எனக்கு இப்ப வயது என்ன தெரியுமா?..." என்று அவன் ஒரு கேள்வியை நீட்டினான். எல்லோரும் அவனை வியப்புடன் பார்த்தார்கள்.

"எனக்கு இப்ப வயசு ரெண்டுநாள்தான். அன்னைக்கி செத்திருக்க வேண்டியவன்... ஆனா தப்பிட்டேன்! அதை கணக்கு வைச்சுப் பார்த்தா ரெண்டுநாள்தான் என் வயசு!..."

சிங்காரத்தின் கண்களில் நீர் முட்டியது... பாலாவின் தோள்களைத் தடவிய அவன் "மொதல்ல மருந்து போடுவோம். வாங்க..." என்றான்.

மெல்ல எழுந்து நின்ற பாலாவை கைத்தாங்கலாக, தற்காலிக மருந்தகத்திற்கு அழைத்துப் போனான் சிங்காரம்.

பாலாவிற்கு காலிலும் நெற்றியிலும் கைகளிலும் ஏற்பட்டுள்ள காயத்திற்கு மருந்து போட்டு, ஊசியும் போட்டபோது கூட இருந்த சிங்காரத்தை யாரோ அழைப்பதாக ஒருத்தன் வந்து சொன்னான்...

சிங்காரம் சுந்தரத்திடம் சொல்லிவிட்டு காரியாலயத்திற்கு ஓடினான்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியாலயத்தில் உபதலைவர் இருந்தார். அவர் சொன்ன செய்தி அவனை தலைசுற்ற வைத்தது...

'ஆஸ்பத்திரியில் இருந்த பிச்சைத் தாத்தா இந்த உலகத்தை விட்டுப் போய்விட்டார்...'

# 19

அடுத்த நாள் காலை பத்து மணியைப் போல் ஆஸ்பத்திரி மயானத்தில் சிறுகூட்டம் கூடியிருந்தது. அகதி முகாமிலிருந்து ஒரு வெள்ளை வேட்டி கொண்டு வந்திருந்தான் சிங்காரம்.

சாவுச் செய்தி கேட்டதுமே என்ன செய்வதென்றே தெரியாமல் தவித்த சிங்காரம் கோயிலுக்கு உள்ளே போய் லயத்துக்காரர்களைச் சந்தித்து கிழவன் போய்விட்டதை சொன்னான்... ஒரு கூட்டமே கூடிவிட்டது அங்கே. சிலர் அழுதார்கள்... வேறு சிலரோ துக்கத்தை அடக்கிக் கொண்டு 'கிழவன் நல்ல காலத்தில் போய் விட்டான்... நாங்கதான் இன்னம் சீரழிஞ்சி, சின்னப்பட்டு போகப் போறோம்' என்று புலம்பினார்கள். அந்தக் கூட்டத்தில் அந்தக் கிழவனை ஆஸ்பத்திரி மயானத்திலேயே புதைப்பது என்ற முடிவுக்கு வந்தார்கள்.

அந்த நேரத்தில் மாலினி அங்கே இல்லை; எங்கோ போய்விட்டாள். அவளுக்குச் சொல்ல வேண்டும் என்று சிங்காரம் நினைக்கவே இல்லை.

பிணக் காம்பராவில் கிடத்தியிருந்த கிழவனின் உடலை வெளியே எடுத்து குழிமேட்டில் வைத்தார்கள். தோட்டத்து மக்களின் சார்பாக வெள்ளை வேட்டியை கிழவனின் உடல்மீது போர்த்திவிட்டு குமுறி அழுதான் சிங்காரம்... இனிமேல் கிழவனை எங்கே பார்க்கப் போகிறோம்? ஆயிரம் பேர் பிறந்தாலும் கிழவனைப் போல் ஒருத்தர் இனி பிறக்க முடியுமா என்ன?... அந்தக் கிழவனுக்கு அந்த தோட்டத்தில் இருந்த அத்தனை பேரும் பேரப்பிள்ளைகள்தான் போலும்... அதனால்தான் எல்லோரும் வாய்க்கு வாய் 'தாத்தா' என்பார்கள். அவருடைய சொல்லுக்கு மதிப்பு மட்டுமல்ல...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதப்படாத சட்ட அந்தஸ்து உண்டு. ஒரு பிரச்னையில் அவர் முடிவு சொன்னால் அதுவே முடிவான முடிவாகும்... அதற்கு ஆட்சேபனை கிடையாது.

நேரம் செல்லச் செல்ல ஏனைய லயத்துக்காரர்கள் வந்து கொண்டே இருந்தார்கள்.

ஆஸ்பத்திரி தோட்டி அவர்களை அவசரப்படுத்தினான்.... "நேரம் போவுது... வெரசா ஒங்க வேலய முடிங்க. எனக்கு நெறைய வேல இருக்கு... அடுத்து ஒரு அனாத பொணத்த பொதைக்கணும்..." அவனுடைய வார்த்தைகளுக்கு முன்பே மதுவாடை வெளியே வந்தது.

சிங்காரம் சுற்றும் முற்றும் அந்தக் கூட்டத்தில் மாலினியைத் தேடினான். மாலினி இல்லை. என்ன இருந்தாலும் மாலினிக்குச் சொல்லியிருக்க வேண்டும். நெஞ்சுக்குள் குற்ற உணர்வு நண்டாக ஊர்ந்தது.

கிழவனின் உடலைக் குழிக்குள் இறக்கப் போனபோது ஒப்பாரி சத்தமும், அதனைத் தொடர்ந்து வேறு ஒரு குரலும் வந்தது... "அவசரப்படாதீங்க... மூஞ்சிய பார்க்கணும்..." ராமசாமி சத்தம் போட்டுக் கொண்டே ஓடிவந்தான். அவன் பின்னால் மாலினி...

ராமசாமி சிங்காரத்தை எரித்து விடுவதைப் போன்று பார்த்தான். அதன் அர்த்தம் என்ன என்று அவனுக்குப் புரிந்தது. வேறு வழியின்றி தலைகுனிந்தான் அவன்.

மாலினி பிச்சைக் கிழவனின் முகத்தைப் பார்த்துவிட்டாள். நேற்று உயிரோடு இருந்தவன் இன்றில்லை... நேற்று ஆறுதல் சொன்னவன் இன்று ஊமையாகி விட்டான்... நேற்று கருணையோடு பார்த்தவன் குருடாகிவிட்டான்...

கிழவன் செத்து விட்டான் என்பதை ராமசாமி சொன்னதில் இருந்து அழுது கொண்டே இருந்தாள் மாலினி. அவளை ஆறுதல் படுத்தி ஆஸ்பத்திரிக்கு அழைத்து வந்தான் ராமசாமி.

எல்லோருக்கும் கிழவன் செத்ததை சொன்ன சிங்காரம் தனக்குச் சொல்லவில்லையென்பது 'தன்னை ஒதுக்கி வருகிறான்' என்பதை உறுதிப்படுத்துவதாகவே இருந்தது மாலினிக்கு. 'அவளுக்கு சாவுச் செய்தியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லியிருக்க வேண்டும்... நான் ஏன் அப்படி நடந்து கொண்டேன்' என்பதே சிங்காரத்திற்குப் புரியவில்லை...

பிணத்தைக் குழியில் இறக்கியதும் கூடியிருந்தவர்கள் தங்கள் பங்கிற்கு மண்ணை அள்ளிப் போட்டார்கள். அதன்பின்னர் குழிவெட்டியவன் மண்வெட்டியினால் 'மளமள'வென்று மண்ணை வெட்டிப் போட்டுக் குழியை மூடத் தொடங்கினான். இந்த குழி மூடியதும் இன்னும் ஒரு குழி வெட்ட வேண்டும் என்ற அவசரம் அவனுக்கு...

கோயிலுக்குத் திரும்பியதும் சிங்காரத்திற்கு வேலை காத்திருந்தது. பழைய, புதிய உடுப்புகள் நிறைய வந்திருந்தன. அவைகளை ரகவாரியாக பிரித்து எழுத வேண்டும். கிழவனின் நினைவுகளை நெஞ்சுக்குள் அடக்கிக் கொண்டு தன் வேலையில் இறங்கினான் சிங்காரம்...

மாலினி நொந்து போய் கோயிலின் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தாள். அவள் நினைவும் கிழவனையே சுற்றியது. கிழவன் இருந்தது அவளுக்குத் தைரியத்தைக் கொடுத்திருந்தது. பிரிந்திருக்கிற சிங்காரத்தை தன்னோடு சேர்த்து வைப்பான் என்று நம்பியிருந்தவள் இன்று எந்த நம்பிக்கையும் இல்லாமல் இருந்தாள். ஆஸ்பத்திரி மயானத்திலிருந்து எல்லோரும் ஒருத்தர் பின் ஒருத்தராக நடந்து வந்தார்கள். அப்போதுகூட சிங்காரம் அவளை விட்டு விலகி நிற்பது போல் நடந்து வந்தான். வருகிற வழியில் ஆற்றில் குளித்துவிட்டு கோயிலுக்கு அவர்கள் வந்தபோது முகாமில் பகல் உணவு கொடுத்தார்கள். மற்றவர்கள் கேட்டு வாங்கிச் சாப்பிட்டார்கள். மாலினி பேசாமல் இருந்தாள். பக்கத்தில் இருந்தவர்கள், "இப்ப சாப்பிடலேன்னாலும் பரவாயில்ல... வாங்கி வைம்மா... ராத்திரி சாப்புடலாம்..." என்று சொன்னார்கள். அவள் அசையவில்லை. மனதில் ஏற்பட்டிருந்த துயரம் வெறுப்பாக மாறிப்போய் இருந்தது.

மணி மூன்றை நெருங்கிக் கொண்டிருந்தது. சிங்காரம் காரியாலயத்தில் மும்முரமாக இருந்தான். அவனுக்காக வந்திருந்த சாப்பாட்டு பார்சல் ஆறிப்போய்க் கிடந்தது...

அப்போது ராமசாமி காரியாலயத்தின் உள்ளே நுழைந்தான்... "சிங்காரம்! மாலினி திடீர்னு மயக்கம் போட்டு விழுந்திருச்சி... வாந்தி வேற எடுத்தா..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்காரத்தின் உடல் சாடையாக அவனை அறியாமல் நடுங்கியது. என்ன இருந்தாலும் அவள்... அவள்... மனைவி... மனைவி... நேற்றுவரை அவன் சுகத்திற்காக உடல் கொடுத்தவள்...!

"இப்ப மாலினி எங்க?..." எத்தனையோ நாட்களுக்குப் பின்னர் இன்று தான் அவள் பெயரையே சொன்னான்.

"கல்யாண மண்டபத்து ஆஸ்பத்திரியில..." கல்யாண மண்டபப் பக்கமாக ஓடினான் சிங்காரம். அந்த மண்டபத்தில்தான் தற்காலிகமாக சிகிக்சைக்காக ஒரு ஆஸ்பத்திரி அமைக்கப்பட்டிருந்தது. அகதிகளான தமிழ் டாக்டர்கள், தமிழ் நர்சுகள் அங்கு ஒரு குட்டி ஆஸ்பத்திரியை அமைத்து பணியாற்றினார்கள்.

உள்ளே ஒரு கட்டிலில் மாலினி கிடத்தப்பட்டிருந்தாள். இன்னமும் கண்களை மூடியே இருந்தாள்... ஒரு டாக்டர் சிங்காரத்தை எதிர்ப்பார்ப்பது போல் உட்கார்ந்திருந்தார். சிங்காரம் தயங்கித் தயங்கி அவரிடம் போனான்...

"ஒங்கட வைப்பா...?" டாக்டரின் கேள்வி.

"ஆமாம்" என்றான் பயந்தவாறு சிங்காரம்.

"பயப்பட வேண்டாம்... நல்ல நியூஸ்தான்... ஒங்கட வைப் கர்ப்பமா இருக்காங்க... ஆனால் ஸ்ரென்த் சத்து போதாது... நல்ல சத்தான சாப்பாடு கொடுக்க வேணும்..." என்ற அந்த டாக்டர் ஒரு சிறிய பேப்பர் துண்டை அவனிடம் நீட்டினார்...

"உதுல எழுதியிருக்கிற மருந்து இங்க இல்ல. கடையிலதான் வாங்க வேணும். வாங்கிக் கொண்டு வாங்கோ..."

சிங்காரம் ஒரு நிமிடம் 'கல்மரமாய்' நின்றான். என்ன செய்வதென்றே புரியாமல் தவித்தான். பிறகு தன்னைச் சுதாரித்துக் கொண்டு டாக்டரிடம் பேசினான்... "நான் ஒரு அகதி... எனக்கிட்ட சில்லறைக் காசுகூட இல்ல... எப்புடி மருந்து வாங்கிரது?..."

டாக்டருக்கு அப்போதுதான் அவன் 'அகதி'யென்பதே புரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி... நீங்க போங்கோ... மருந்தை கோயில் மூலம் வாங்கி கொடுக்கிரேரம். ஒண்டுக்கும் யோசிக்க வேண்டாம்..."

அகதியாகிவிட்ட அந்த டாக்டர் ஒரு யாழ்ப்பாணத்தவர்...

நிம்மதி பெருமூச்சு விட்ட சிங்காரம் மாலினியையே பாத்தான்... ஓ!... அவள் இப்போது ஒரு ஜீவனை வயிற்றில் சுமக்கத் தொடங்கியிருக்கிறாள்... அகதிகளாக வருவதற்கு முன் தோட்டத்தில் – லயத்தில் இருவரும் இணைந்ததன் அடையாளம் இப்போது தெரியத் தொடங்கியுள்ளது... 'அவள் விரைவில் தாயாகப் போகிறாள்...' அதனை எண்ணிப் பார்த்த அந்த ஒரு கணத்தில் தன்னை மறந்தவனாகி விட்டான் அவன்... அவன் தகப்பனாகப் போகிறான்... இன்னும் கொஞ்ச நாளில் ஒரு மழலை அவனை அப்பா என்று அழைக்கப் போகிறது... ஓ!... அந்தப் பிஞ்சுக் கன்னத்தில் முத்தமிட்டு – கொஞ்சிக் குலாவி...'

அந்த நேரத்தில் சிங்காரத்தின் உள்ளம் மெள்ள பின்னோக்கி ஓடியது...

கல்யாணம் செய்த புதிது... ஒரு நாள் பக்கத்து தோட்டத்தில் இருக்கிற வேலுராசன் சிங்காரத்தைப் பார்க்க லயத்திற்கே வந்து விட்டான்.

"சிங்காரம்! நாளைக்கி என் வீட்டுக்கு வரணும்..."

"ஏன்...?"

"மகள் பொறந்திருக்கா... முப்பது கும்புடுரோம்..."

கீழே உட்கார்ந்திருந்த சிங்காரம் திடீரென்று எழும்பி, "புள்ள பொறந்திருக்கா? அதுக்குள்ளயா ரொம்ப வேகம்தான் போல..." என்றவன், "ஜனவரி மாசம்தானே கல்யாணம் பன்னின... அப்ப ஜனவரி... பெப்ரவரி... மார்ச்..." என்று கைவிரல்களை நீட்டி மடக்கி எண்ணிப் பார்த்தான், "அட!.. கலியாணம் கட்டி எண்ணிப் பத்து மாசத்துக்குள்ள புள்ள பெத்துட்டியே!".

"என்ன செய்யிரது சிங்காரம்!... கடவுள் குடுத்திட்டான்..." இது வேலுராசன்.

"கடவுள் குடுத்தானா? நீ சும்மா இருந்தா கடவுள் எப்புடி குடுப்பான்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலுராசன் சிரித்தான்.

"சரிநா கட்டாயம் வர்ரேன்... ஆனா ஒண்ணு... இது மொத புள்ள. நல்லா கொண்டாடு. நல்லா வளர்த்து எடு... அடுத்தத அவசரப்பட்டு பெத்துராதே!..." என்ற சிங்காரம், அதே லயத்தில் கடைசிக் காம்பராவில் 'வதவத'வென்று வரிசையாகப் பெத்துப் போட்டுவிட்டு துன்பப்படுகிற மாயாண்டியை நினைத்துக் கொண்டான்.

வேலுராசன் போய்விட்டான்.

சிங்காரம் அவனை லயத்துப் படிக்கட்டுவரை போய் வழியனுப்பிவிட்டு காம்பராவிற்கு வந்தான். மாலினி நின்று கொண்டிருந்தாள்... அவளையே உற்றுப் பார்த்தான் அவன்... அவள் பேசவில்லை... ஆனால் அவளின் புன்கை அவனோடு பேசியது...

சிங்காரம் புன்னகையோடு சொன்னான்... "மாலினி! நீயும் இருக்கிறியே... ராசன் கல்யாணம் செஞ்சு நேத்து மாதிரி இருக்கு... அதுக்குள்ள அவ பொண்டாட்டி புள்ளய பெத்துட்டா... முப்பது வேற கும்பிட போறானாம்... என்னய வரச் சொன்னான்..."

"அதுக்கு நான் என்ன செய்யிரது?" மாலினி 'வெடுக்'கென்று கேட்டாள்.

"ஆமா... ஆமா... நீ என்ன செய்ய? நான்தானே செய்யணும்..." இரட்டை அர்த்ததில் சொன்னான் சிங்காரம்.

"சீ... இப்புடி பச்சையா பேசுறீங்க... நீங்க ரொம்ப மோசம்..." வெட்கிப் போன மாலினியின் குரலும் வெட்கித்தது...

"ஆமாம்... நான் மோசம்தான்... நல்லாதான் இருந்தேன்... ஒன்னய தொட்டேன்... கெட்டுட்டேன்..." என்ற சிங்காரம் பாய்ந்து வந்து அவளைக் கட்டித் தழுவினான். அவள் திமிறினாள்... முடியவில்லை... அவளின் திமிறல் அவனுக்கு ஒரு உத்வேகத்தைக் கொடுத்தது. அடுத்த கணத்தில் அவனுடைய அணைப்பிற்குள் அவள் அடங்கிப் போனாள்...

அன்று இரவு... படுக்கையில் மாலினியின் மேனியில் சாய்ந்தவாறு கேட்டான் அவன்... "ஒனக்கு என்ன புள்ள வேணும்?..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்கு பொம்பள புள்ளதான் வேணும்..."

"எனக்கு ஆம்பள புள்ள வேணும்..."

"அப்ப என்ன செய்யிரது?..."

"சரி உனக்கு ஒண்ணு... எனக்கு ஒண்ணு... ரெண்டு பெத்துக் குடேன்... பிரச்னை தீர்ந்தது..."

அவனுடைய மூக்கைக் கடித்த மாலினி சொன்னாள்... "ஆசயப் பாரேன் ஆசய... ரெண்டுபுள்ள வேணுமாமே!..."

"சரி... சரி... ரெண்டு வேணாம்...! ஒண்ணாவது பெத்துக் குடு..." என்ற சிங்காரம் மாலினியின் உதடுகளை ஈரப்படுத்தத் தொடங்கினான்..

## 20

வாழ்க்கை என்றால் இன்ப துன்பங்கள் மாறிமாறி வரும்... இது மனித வாழ்வின் இயல்பு. இந்த இயல்பில் அடிபட்டுப் போகாமல் தைரியமாக இருப்பவன்தான் மனிதன்... எல்லாவற்றையும் இழந்து கூரையும் நிலமுமே கேள்விக்குறியாக இந்த அகதி முகாமுக்கு வந்துவிட்ட பின்னர் எவ்வாறு இவர்கள் – இந்த அகதிகள் – தைரியமாக இருக்க முடியும்? ஆனால் அவர்கள் இந்த இழப்பிலும் ஏதோ ஒரு நம்பிக்கையில்தான் அங்கு அகதிகளாக இருக்கிறார்கள்.... சிங்காரத்திற்கும் அந்த நம்பிக்கை உண்டு. அந்த நம்பிக்கைதான் அகதிமுகாமிலும் தொண்டாற்ற வைத்திருக்கிறது. ஆனால் இப்போது அவன் ஒருபடி மேலேபோய் பூரிப்பாய் இருக்கின்றான். மாலினி தாயாகப் போகிறாள் என்ற சேதிதான் அவனை மாற்றியிருக்கிறது...

'சிங்காரம் தகப்பனாகப் போகிறான். அவனுக்கும் ஒரு பிள்ளை வரப்போகிறது.' அந்த நினைப்பு மனதுக்குள் குவிந்திருந்த துயரத்தையெல்லாம் மறைத்து, மறக்க வைத்து, புதிய நம்பிக்கையை கொடுத்தது அவனுக்கு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிச்சைக் கிழவனை இழந்த துயரத்தைக்கூட அவன் மறந்தான். இந்த வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் இருப்பதை உணர்ந்தான் அவன்... பழைய உடுப்புகளைக் கழட்டி, புதிய உடுப்புகளை உடுத்திக் கொள்வது போல இந்த துயரத்தையெல்லாம் கழட்டி வைத்துவிட்டு புதிய உற்சாகத்தை தேடிக் கொண்டான் அவன். அந்த உற்சாகம் ஆடம்பரக் கோலம் பூணாது ஒரு நம்பிக்கைக்கு அர்த்தமாய் மிளிர்ந்தது... எதுவும் அற்ற ஏழைகளுக்கு என்ன வேண்டும்?... நம்பிக்கைதான்! இந்த வாழ்க்கையில் ஒரு அர்த்தம் இருக்கிறது என்ற நம்பிக்கை... இந்த உலகில் வாழ முடியும் என்ற நம்பிக்கை... கோயில் காரியாலயத்தில் உற்சாகமாக வேலை செய்தான் சிங்காரம்.

வெளியே இருட்டிப் போயிருந்தது. மணி ஏழுக்கு மேல் இருக்கும். இன்னும் கொஞ்ச நேரத்தில் பள்ளிவாசல் அழைப்பு வந்து விடும்...

"சிங்காரம் அண்ணே!... சிங்காரம் அண்ணே!... ஒடனே வாங்க... ஒரு சங்கதி..." அவசர, அவசரமாய் ஒரு குரல் அழைத்தது.

வெளியே வந்து பார்த்தான். மாடசாமியின் இளைய மகன் நின்று கொண்டிருந்தான். அவன் கால்கள் லேசாக நடுங்குவதைப் பார்த்தான்...

எதற்காக அழைத்தான் என்பதை ஊகிக்குமுன்பே அவனே சொன்னான்... "பாம்புகல் ரோட்டு சந்திக்கடைய எரிச்சி அந்த கடை மொதலாளிய அடிச்சி, குத்தி எரியிற நெருப்பில போட்டுட்டானுகளாம்... அவரூட்டு பொஞ்சாதிய, புள்ளகள கெடுத்திட்டானுகளாம்... அவங்க நாலு பேரையும் கொஞ்ச முந்திதான் இங்க கொண்டாந்தாங்களாம்... எல்லாரும் கல்யாண மண்டப ஆஸ்பத்திரியில இருக்காங்க... அவங்கள ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகப் போறாங்க...". நடுங்கும் குரலில் மாடசாமியின் மகன் அந்த அதிர்ச்சியான செய்தியைச் சொல்லி முடித்தான். அந்த செய்தி அவன் நெஞ்சில் கல்லைத் தூக்கிப் போட்டது போலிருந்தது.

பாம்புக்கல் ரோட்டுச் சந்திக்கடை முதலாளி எல்லோருக்கும் உதவி செய்பவர்... முதலாளி என்றால் பெரிய முதலாளி அல்ல... சிறிய பலசரக்குக் கடை வைத்திருப்பவர்... நியாயமான வர்த்தகம் செய்பவர்... தோட்டத்து மக்களின் கல்யாணம் – கருமாதி என பலவற்றுக்கும் உதவி செய்பவர்... தன் வாழ்க்கையை ஓட்ட வர்த்தகம் செய்த அவர், எந்த தவறும் செய்திருக்க மாட்டாரே! தமிழ் மக்களுக்கு உதவி செய்ததுபோல சிங்கள மக்களுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி செய்தவர். கிராமப்புறத்து சிங்களவர்கள் அவரை 'வத்து மாமா' (தோட்டத்து மாமா) என்று அன்புடன் அழைப்பார்கள்! அவரையா எரித்து விட்டார்கள்...?

ஓ!... இந்த நாட்டில் என்ன நடக்கிறது...?

'பெரும்பான்மை என்னும் ஒரேயொரு மமதை சிறுபான்மை மக்களை அழிக்கத் தூண்டுகிறதோ! அவர்கள் என்னதான் செய்தார்கள்? இந்த மண்ணுக்காக... உழைத்ததைத்தவிர வேறு எதுவும் தெரியாதவர்கள். ஓ!... மண் மாதாவே! உனக்குச் சாதி, சமய, நிற பேதம் தெரியாதாம்... அப்படியானால் இங்கே உழைக்கும் மக்களின் ரத்தக்கரை உன் மீது பட்டுவிட்டதே!... இதை எப்படி அனுமதித்தாய்? நீ கண்களை மூடிவிட்டாயா...?'

"வாங்க போவோம்... உங்கள பார்த்துக்கிட்டு இருக்காங்க..." மீண்டும் அழைத்தான் மாடசாமியின் மகன்.

சிங்காரம் மாடசாமியின் மகனோடு கல்யாண மண்டபத்தில் இருக்கிற தற்காலிக ஆஸ்பத்திரியை நோக்கி ஓடினான். அங்கே அவன் கண்ட காட்சி அவன் நெஞ்சுக்குள் கத்தியால் குத்தியது போலிருந்தது. பாம்புக்கல்ரோட்டு சந்திக்கடை முதலாளியின் மனைவியை கிழித்துப் போட்ட நாராக கீழே படுக்க வைத்திருந்தார்கள். அவளோடு அவளுடைய பெண்பிள்ளைகளும் கிடத்தப்பட்டிருந்தார்கள்... எல்லோரும் மயங்கிய நிலையில் இருந்தார்கள். முதலாளியின் கண்கள் மட்டும் லேசாக அசைந்தன.

சிங்காரம் அங்கே வந்த சிறிது நேரத்திற்குள் டாக்டர்கள் வந்து அவர்களைப் பார்த்து சோதித்தார்கள். நாடித் துடிப்பைக் கண்டறிந்தார்கள். பிறகு ஆஸ்பத்திரியின் உள்ளே கொண்டு போக ஏற்பாடு செய்தார்கள்... தூக்குப் படுக்கை வெளியே வந்தது. தூக்குப் படுக்கையில் வைத்து நால்வரையும் உள்ளே தூக்கிப் போனார்கள் தொண்டர்கள்... அங்கே கூடியிருந்த கூட்டம் கலையத் தொடங்கியது.

சிங்காரம் மனமொடிந்த நிலையில் இருந்தான். சற்றுமுன்னர் அவனுக்குள் இருந்த உற்சாகம், தைரியம் எங்கே போனதோ தெரியவில்லை... வழுக்கு மரத்தில் ஏறஏற சறுக்கி விழுபவனைப் போல் இருந்தது அவன் உணர்வு... பல்வேறு உணர்வுகள் நெஞ்சில் மிதந்தன...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'துப்பாக்கியைத் தூக்கிக் கொண்டு போய் கண்ணுக்கு எதிரே இருக்கிற சிங்கள வெறியர்களைச் சுட்டுத்தள்ள வேண்டும்' போன்ற உணர்வு மீண்டும் அவன் நெஞ்சில் மின்னலாய் வெட்டியது. மிருகங்கள் கூட செய்யாத அக்கிரமம்... தாயையும் மகளையும் கற்பழித்து... அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

சற்றுமுன்னர்தான் இந்த வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் இருப்பதாக நினைத்தான். அதற்குள் இப்படி ஒரு காட்சியா?... இதென்ன மனிதர்கள் வாழும் உலகமா?...

அவன் கண்களில் கிழித்துப் போட்ட நாராய் கிடந்த பாம்புக்கல் ரோட்டு முதலாளி மனைவியும், பிள்ளைகளும்தான் தெரிந்தார்கள்... இது எப்படி நடந்தது?... புத்தர் பெருமானை வணங்குகிற நாட்டிலா இது?...

ஜன்னல் வழியாக சிங்காரத்தின் பார்வை வெளியே விழுந்தது. விடிந்து விட்டதன் அடையாளமாக வெளிச்சம் இலவசமாய் பரவிக் கிடந்தது. இரவெல்லாம் அவனுக்குத் தூக்கமே வரவில்லை. படுக்கையில் புரண்டு புரண்டு படுக்கப் படுக்க நெஞ்சுக்குள் நினைவுகளும் புரண்டு புரண்டு ஓடின...நேற்று இரவு பார்த்த அந்தப் பரிதாபக் காட்சி திரும்பத் திரும்ப கண்களுக்குள்... அவன் மனசு அவனை சித்ரவதை செய்தது. அதைத் தவிர்ப்பதற்காக வெளியே பார்த்தான்...

வெளியே பெரிய கூட்டம் ஆங்காங்கே கூடியிருந்தது. ஆனால் இந்தக் கூட்டத்திற்கும் மாசிமகத் திருவிழாவன்று கூடுகிற கூட்டத்திற்கும் வித்தியாசம் இருந்தது. அந்தக் கூட்டம் அன்னை முத்துமாரியம்மனை தரிசிக்க வந்திருக்கிற கூட்டம்! இந்தக் கூட்டமோ அகதியாக வந்த கூட்டம்.

அந்த அகதிகள் கூட்டத்தையே பார்த்துக் கொண்டிருந்த சிங்காரத்திற்கு, தான் அவர்களிலிருந்து விலகி தனித்து விடப்பட்டவனாக இருப்பது போன்ற ஒரு உணர்வே வந்தது. தன்னை அவர்கள் ஒரு மாதிரியாகப் பார்ப்பது போன்று தோன்றியது அவனுக்கு... இது என்றிலிருந்து தொடங்கியது என்பதை சற்று நினைத்துப் பார்த்தான். மாலினியை என்று மனைவியாக லயத்திற்குக் கூட்டிவந்தானோ அன்றிலிருந்துதான் இந்தப் பார்வை.... அது லயத்தில் இருக்கும்போது பட்டும்படாமலும் தெரிந்தது... இன்றோ வெளிப்படையாகவே தெரிகிறது... இதற்கெல்லாம் காரணம் ஒரு தமிழனான அவன் ஒரு சிங்களத்தியை மனைவியாக்கியதுதான்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலினி அவன் மனைவி என்பதுதான் இன்று பெரிய பிரச்னை... பெரிய கேள்வி... இதற்கு இனி என்ன செய்ய முடியும்?...

"தம்பி சிங்காரம்!..." அவன் காதுகளுக்கு மிக அருகில் இந்தக் குரல் ஒலிக்கவே திரும்பிப் பார்த்தான்.

சின்னாயி கிழவி நின்று கொண்டிருந்தாள். இந்த காலை நேரத்தில் அவளுக்கு என்ன வேலை இங்கே?... ஆனால் ஏதோ ஒரு விவகாரத்திற்குத்தான் வந்திருக்கிறாள் என்பது மட்டும் புரிந்தது அவனுக்கு...

"வாங்க..."

சின்னாயி கிழவி அவனுக்கு மிக அருகில் வந்து காதில் ரகசியம் பேசுவது போல் பேசினாள்... "தம்பி! நான் சொல்ரேனு... கோவிச்சுக்காதே! குத்தமா எடுக்காதே... ஒன் நன்மைக்குத்தான் சொல்ரேன்! மாலினிய – அந்த சிங்களத்திய கட்டப் போயிதான் நீ ரொம்ப கஷ்டப்படுர... சொந்த தாய், தகப்பனை, சொந்தக்காரங்கள பிரிஞ்சி அகதியான நீ இப்ப வீடு, வாசல் எழந்து அகதியாப் போன... என்னைக்கி அவள தொட்டியோ, அன்னைக்கி உனக்கு சனியன் புடிச்சிருச்சி... அவளால நீ மட்டுமல்ல நாங்க எல்லோரும் அகதியா இருக்கிரோம்... நம்ம லயம் எரிஞ்சதுக்கு மாலினி அண்ணன்தான் காரணம்... அவன்தான் நெருப்பு வைச்சான். இன்னமும் நீ அவளை பொஞ்சாதியா வைச்சிருக்கியே! அவள தலை முழுகு... எத்தன தமிழ் புள்ளைகள சிங்கள பயல்க கெடுத்திட்டானுக... கொஞ்ச நேரத்துக்கு முந்தி சந்திக்கடை குடும்பத்த பார்த்தியா? இதையெல்லாம் பார்த்த பொறகும் அவள ஏன் உன் பொஞ்சாதியா வைச்சிருக்கணும்?..."

கிழவிக்கு மூச்சு இளைத்தது... சில நிமிட மௌனத்திற்குப் பின்னர் தொடர்ந்தாள்... "நேத்து ஒன் அம்மா, தங்கச்சி இங்க வந்தாங்க. அவங்க லயத்துக்கு ஒண்ணும் ஆகலயாம்... மகனை பார்க்கலியான்னு ஒன் அம்மாகிட்ட கேட்டேன்.. யாரு என் மவன்? என்னைக்கி அந்த சிங்களத்திய கூட்டிகிட்டு போனானோ அன்னைக்கி என் மவன் செத்துப் போயிட்டானேனு கோபமா சொன்னா... பாத்தியா நீ சிங்களத்திய தொடப் போயி சாதி, சனம், தாயு, புள்ள எல்லாத்தையும் பகைக்க வேண்டி வந்திருச்சி... தாய், தகப்பன் சாபம் பொல்லாதது... நீ அவள தலை முழுகு... எல்லாம் சரியா போகும்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்காரத்தின் முகத்தில் வியர்வைத் துளிகள் அரும்பின...

இப்போது சின்னாயி மிக மெல்லிய குரலில் சொன்னாள்... "அந்தச் சிங்களத்திய கைகழுவுனா யாரு கேக்கப் போறா... இவ போனா இன்னொருத்தி... ஒனக்கு நம்ம சாதி, சனத்திலயே பொண்ணு எடுக்கலாம்... எதுக்கும் யோசிக்காதே!... என்னமோப்பா ஒன் நன்மைக்குத்தான் சொன்னேன்... புத்தியா பொழைச்சிக்க... அப்ப நான் வர்ரேன்..."

எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்த்து விட்டுப் போனாள் கிழவி. இந்தக் கிழவிக்கு மாலினி எதுவுமே செய்யவில்லை. பின் ஏன் இப்படி நஞ்சை கக்கிவிட்டுப் போகிறாள்?... அவள் சிங்களத்தியாய் இருந்ததுதான் அவள் செய்த குற்றமா?... சிங்காரத்திற்காக தாய், தகப்பன், சொந்த சகோதரர்கள், மொழி, கலாசாரம், சொந்தபந்தம் என யாவரையும் – யாவற்றையும் உதறி அவனே உலகம் என்று வந்தாளே...! இன்று அவன் தானே அவளுக்கு எல்லாமே. இவனை விட்டால் அவளுக்கு போக்கிடம் ஏது?...

சிங்காரம் அன்று இரவு படுக்கையில் குழம்பிய எண்ணங்களுடன் தெம்பிழந்து கிடந்தான்...

## 21

காலையில் இருந்து இரவுவரை அந்தக் காரியாலயத்தில் ஒரே இடத்தில் இருந்து கொண்டு செய்கின்ற அந்த வேலை சிங்காரத்திற்குப் பிடிக்கவே இல்லை... இப்போது பார்க்கிற வேலையினால் அவன் அடிக்கடி தனிமைப்படுத்தப்படுகின்றான்... அதனால் அவன் நெஞ்சில் அவ்வப்போது எண்ணங்கள் உரசிக் கொண்டும் – மோதிக் கொண்டும் – விரிந்து கொண்டும் இருக்கின்றன. அந்த எண்ணங்கள் சில அவனை அவ்வப்போது 'கைதியாக்கி' சிறைப்பிடித்து ஆட்டிப் படைக்கின்றன... இந்த தொல்லையில் இருந்து விடுதலை பெறவேண்டுமென்று அவன் தீவிரமாக யோசித்தான். நாலு பேர் இருக்கிற, எப்போதும் இருக்கிற இடத்தில், நாலு பேரோடு சம்பந்தப்பட்ட வேலையில் இருந்தால் தனிமை இருக்காது... வீணான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுகள் உதயமாக வழியில்லை... எனவே இப்போதைய அந்த வேலையில் இருந்து மாறிவிட முடிவான முடிவெடுத்தான்.

கோயில் உபதலைவரை தேடிப் போய் சந்தித்தான். அவரிடம் மனதில் உள்ளதை, உண்மையைச் சொல்லாமல் வேலையில் மாறுதல் வேண்டுமென்று சொன்னான். அவருக்கு இருந்த அவசரத்தில் அவர் எதனையும் மனதுக்கு எடுக்காமல் 'இவனுக்குப் பதில் வேறு எவனைப் போடலாம்' என்று யோசிக்கத் தொடங்கினார்.

அவர் யோசிப்பதைப் புரிந்து கொண்ட சிங்காரம், "நீங்க யோசிக்கிறது புரியுது. இந்த வேலக்கி நம்பிக்கையான ஒருத்தரைத்தான் போடனும்... நான் ஒருத்தரை சொல்றேன்" என்றான். உபதலைவரின் இமைகள் மேல் எழுந்து நின்றன...

"யார்"

"நம்ப எழுத்தாளர் பாலா..."

"ஓ!... பாலாவா... அவரை ஸ்பீக்கர்ல பேசுற வேலைக்கு போட்டிருக்கு... அதுக்கு அவர்தான் சரி..." என்ற உபதலைவர் சிறிது நேரம் யோசித்துப் பார்த்து விட்டு, "சரி தம்பி, நான் வேற யாரையாவது பார்த்து போட்டுக்கிறேன். இனி நீ என்ன செய்ய போற?" என்று கேட்டார்.

"நீங்க தான் சொல்லணும்..."

"சரி சமையல் நடக்கிற பகுதியில் மேற்பார்வை பார்க்கிற மாதிரி இரு... அரிசி, பருப்பு, எண்ணெய் திருட்டு போறதா சொல்றாங்க. கொஞ்சம் கவனமா இருந்து கண்டு புடிக்கணும்... ஆனா யாருக்கும் எதுவும் தெரியக் கூடாது சரியா?..."

அகதிகள் வந்து இருக்கும் இடத்திலும் திருட்டா?... ஊழலா?... அவனால் நம்பமுடியவில்லை... என்ன மனிதர்கள் இவர்கள்...! "சமையல் பகுதியில் வேல நல்லது.... நெறைய பேர் வருவாங்க... நாளைக்கி காலையில இருந்து போரேன்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று இரவு உபதலைவரிடம் காரியாலயத்தில் இதுவரை சேர்ந்தது, கொடுத்தது போக மீதியிருந்த துணிமணிகளைக் காட்டி விட்டு அதற்கான குறிப்பு புத்தகத்தைக் கொடுத்து விட்டான் சிங்காரம்.. ஒரு பெரிய சிறையில் இருந்து விடுதலை அடைந்த உணர்வு அவனுக்கு வந்தது அப்போது...

கல்யாண மண்டபத்திற்குப் பின்பக்கமாக சமையல் மண்டபம் இருந்தது. மண்டபம் என்பதை விட மிகப் பெரிய கொட்டகை என்று சொல்லலாம். ஒரே நேரத்தில் மிகப் பெரிய பத்து அண்டாக்கள் வைக்கக் கூடிய மிகப் பெரிய அடுப்புகள் அங்கே இருந்தன. எல்லா அடுப்புகளும் எரிந்து கொண்டிருந்தன. கொட்டகையின் கூரை வழியாகக் கிளம்பிய புகை, மேகங்களாய் மேல் எழுந்து வான் மேகங்களோடு சேர்ந்திடப் பயணமாகிக் கொண்டிருந்த்து. பகல் சாப்பாடு தயார் ஆகிக் கொண்டிருந்தது. ஒரு பக்கம் காய்களை நறுக்கி வெட்டிக் குவித்துக் கொண்டிருந்தார்கள். வெட்டி முடிக்கப்பட்ட காய்கள் பெரிய வாளிகளில் தண்ணீரில் மிதந்து கொண்டிருந்தன. இன்னொரு பக்கம் பெண்கள் கூட்டமொன்று அரிசியில் கற்களைப் பொறுக்கிக் கொண்டிருந்தது. அடுப்போடு பலபேர் போராடிக் கொண்டிருந்தார்கள். அகதியான சமையல்காரர்கள்தான் இங்கே சமையலை கவனித்தார்கள். இத்தனை நிகழ்வுகளுக்கு மத்தியிலும் கொட்டகையில் ஒரு மூலையில் தொங்கிய ட்ரான்ஸிஸ்டர் ரேடியோ பாடிக் கொண்டிருந்தது. அதை யார்தான் கேட்கிறார்களோ, தெரியவில்லை...? அதை விட பெரிய சத்தம் அங்கே எழுந்து கொண்டிருந்தது. அடுப்பு புகை படிந்து டிரான்ஸிஸ்டரின் நிறம் மங்கிக் கொண்டிருந்தது. சிங்காரத்திற்கு அந்தக் கூட்டத்தோடு சங்கமமாகி விட்டதில் மனதுக்கு நிம்மதியாக தெரிந்தது. இங்கே இருந்தால் தனிமையே வராது. தூங்கும் நேரத்தைத் தவிர ஓய்வே இருக்காது. தினமும் 5000 பேருக்கு இரண்டு நேரச் சாப்பாடு தயாரிப்பது சுலபமான வேலையா என்ன? அங்கே வேலைக்கு குறைவே இல்லை... ஆனால், அவனுக்கு நிரந்தரமான வேலை கிடையாது. பல வேலைகளை குறிப்பாக சமையலுக்குத் தேவையானதை ஸ்டோரில் அடுக்கி வைப்பது, சமையல்காரர்கள் கூப்பிட்ட குரலுக்கு உதவியாய் நிற்பது, காய்களை வெட்டிக் கொடுப்பது, பாத்திரங்களைக் கழுவிக் கொடுப்பது, சமைத்ததை எடுத்துக் கொண்டு ஓடுவது... எல்லாம் அவசரத்திற்குத்தான். இது தவிர உபதலைவர் சொன்னது போல் அவ்வப்போது 'நோட்டம்' பார்த்துக் கொள்வது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்கு அந்த புதிய வேலை பிடித்திருந்தது. புதியபுதிய மனிதர்களைப் பார்த்தான். புதியபுதிய செய்திகளையும் தெரிந்து கொண்டான்.

ஒரு நாள் காலை நேரம்... சூரியனின் வெய்யில் கீழே விழுந்து தரையை சூடாக்குவதற்கு முன்னரே அந்த அடுப்புகள் சூடாகிக் கொண்டிருந்தன. சிங்காரம் சமையல் கட்டில் இருந்தான். பகல் சாப்பாடு தயாராகிக் கொண்டிருந்தது. ஒன்றிரண்டு பேர் வெங்காயத்தை உரித்துக் கொண்டிருந்தார்கள். அதே தொகையினர் அதனை வெட்டிக் கொண்டிருந்தனர். இன்னொரு பக்கம் அரிவாள்மனையில் கத்திரிக்காய் படுவேகமாக வெட்டித் தள்ளப்பட்டுக் கொண்டிருந்தது. இது போக இன்னும் பல பேர் யந்திரமாய் வேலை செய்து கொண்டிருந்தார்கள். சமையல் கட்டுக்கு வெளியே கல்யாண மண்டபத்திற்கு போகிற பாதையில் ஒரு பெரிய கூட்டம் கூடியிருந்தது. என்ன தகராறோ?... சிங்காரம் மெள்ளமாய் அந்தக் கூட்டத்தின் உள்ளே நுழைந்து 'என்ன'வென்று பார்த்தான்.

கன்னங்கரேலென்று புகை படிந்து போயிருந்த ஒரு அண்டா நிறைய பால்... அந்த அண்டா அருகே சில பேர்.... அவர்களைச் சுற்றித்தான் ஒரு கூட்டம். அண்டா அருகே இருந்தவர்கள் ஆவேசமாய் ஒருத்தரை ஒருத்தர் குற்றம் சாட்டி பேசிக் கொண்டிருந்தார்கள். எழுத்தாளர் பாலாவும் அங்கே இருந்தார்... சிங்காரத்தைக் கண்டதுமே மெள்ளமாய் அவன் அருகே வந்து அவனுக்கு மட்டும் கேட்கிறமாதிரி 'அந்தக் கதையை'ச் சொன்னார்.

கல்யாண மண்டபத்தின் மேல் மாடியில் நகர்புற வர்த்தகர்கள், சமூகத்தில் வேறு வகையில் வசதி படைத்தவர்கள் யாவரும் அகதிகளாயும் இருக்கிறார்கள். வீடு வாசலை இழந்து அகதிகளாகியும் 'அந்தஸ்தை' இழக்கத் தயாராயில்லை அவர்கள். கல்யாண மண்டபத்தின் மேல் மாடியை தங்களுக்காக 'ரிசர்வ்' செய்து கொண்டதோடு வேறு எவரும் மேலே வராதபடி பார்த்துக் கொண்டார்கள். வெளியே வெய்யில் கொளுத்திய போதும் கவலைப்படவில்லை அவர்கள். இரவு பகலாக மின் விசிறிகள் ஓடிக் கொண்டிருந்தன. சாப்பாடு விஷயத்திலும் தங்களை தனியாக கவனிக்கச் செய்தார்கள்.... சமைத்து முடிந்ததும் கடவுளுக்கு 'நைவேத்தியம்' படைப்பது போல் அண்டாக்களில் மேலே இருப்பதை அள்ளி எடுத்து வந்து சாப்பிட்ட பின்னர் தான், மற்றவர்களுக்கு சாப்பாடே போகும். அண்டாக்களின் உள்ளே கீழே இருப்பதை அதாவது, அடியில் இருப்பதை மற்ற அகதிகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கத்தான் இந்த நடவடிக்கை... அண்டாவின் அடியில் இருக்கும் சோற்றில் 'கல்' இருக்குமாம்... அதனால் தான் இந்த தந்திரம்... இதுபோல் அவர்களுக்கு மாத்திரம் 'டீ' சப்ளை நடக்கும். வெய்யில் கொளுத்தும்போது ஓரஞ்சு ஜீஸ் வேறு கிடைக்கும். இந்த மேல் மாடி அகதிகளின் நடவடிக்கை மற்ற அகதிகளுக்கு வெறுப்பையே கொடுத்தன. ஆயினும் எவரும் அதற்காக பெரிதாக குரல் எழுப்பவில்லை.... தங்களுக்குள்ளே பேசிக் கொண்டார்கள்.... நியாயத்தை வெளிப்படையாகக் கேட்க யோசித்தார்கள். இந்த கல்யாண மண்டபத்தைக் கட்டவும் கோயிலுக்கு அவ்வப்போது நிதி உதவி செய்பவர்களும், அந்த கோயிலின் பரிபாலன சபை உறுப்பினர்களின் சொந்தக்காரர்களும் அகதிளாக கல்யாண மண்டபத்தில் இருந்ததால் எவருக்கும் வாய் திறக்க துணிவு வரவில்லை. இருந்தாலும் இதற்கெல்லாம் ஒரு முடிவு கட்டுமாப்போல இன்று ஒரு பிரச்சனை பால் உருவத்தில் வெடித்துவிட்டது...

ஒரு பால் பண்ணையில் இருந்து ஒரு பெரிய அண்டா நிறைய பால் வந்தது. அதனை அனைவருக்கும் பங்கிடுவதுதான் முறை, தர்மம்... ஆனால் சில பெரிய புள்ளிகள் அந்தப் பாலை மேல்மாடிக்கு மட்டும் அனுப்ப முடிவு செய்து அதற்கான முயற்சியை மேற்கொண்டார்கள். இதனை துப்பறிந்து விட்டார்கள் ஒரு இளைஞர் கோஷ்டியினர். பால் அண்டா மாடிக்கு போகப் போனபோது தடுத்தி நிறுத்தினார்கள் அந்த இளைஞர்கள்...

"இங்க இருக்கிற எல்லாருமே அகதிகள்தான்! மாடியில இருக்கிறவங்க மட்டும்தான் பால் குடிக்கணுமா?... மத்தவங்க குடிக்கக் கூடாதா? சிங்களவன் அடிச்சி, ஒதைச்சி அகதியாக்கியும் திமிர் போவலியே!"

ஒரு இளைஞன் ஆவேசப்பட்டான். அவன் நகர்ப்புறத்தைச் சார்ந்தவன். அவனை அடிக்கப் போனான் ஒரு மாடிவீட்டு அகதி; கடைக்காரனின் மகன்...

"தோட்டத்தில கெடந்த நாய்கள பாவம்னு நாங்க கட்டுன கோயில்ல தங்க வைச்சா எங்களயே கடிக்க வருதே!" என்று சொல்லி ஒரு தோட்டத்து இளைஞனை அடித்தான். இதனை எவரும் எதிர்பார்க்கவில்லை. அடுத்த அடி எவருக்கும் விழுவதற்குள் எழுத்தாளர் பாலாவும் மற்ற சிலரும் தடுத்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'என்ன பேச்சு பேசிட்டான் அவன்? லயத்தை நெருப்பு வைத்தவர்களைவிட கொடுமையான பெரிய நெருப்பை வைக்கிறானே! தோட்டத்தில கெடந்த நாய்க...' எழுத்தாளர் பாலா மனம் வேதனையடைந்தது... ஒரு சிறு சமூகத்திற்குள்ளேயே இன்னொரு பகுதியினரைப் பற்றி கேவலமான கருத்து இருந்தால் எவ்வாறு முன்னேற முடியும்?.

"தோட்டத்தாளுக இல்லேன்னா நீங்கள்ளாம் சம்பாரிச்சு பங்களா கட்டியிருப்பீங்களா? நாக்கு இருக்குன்னு வரமுற இல்லாம பேச வேணாம். எங்களுக்கும் நாக்கு இருக்கு புரியுதா?..." வேறு ஒருத்தன் கத்தினான். அந்தக் கத்தலில் ஆத்திரம் தெறித்தது.

'இதனை இதற்கு மேல் நீட்டுவது சரியானது அல்ல...' என்ற முடிவுக்கு வந்தார் எழுத்தாளர் பாலா.

"நடந்தத விடுங்க!... சண்டை போட இங்க நாங்க வரல்ல... எல்லாரும் அகதியாத்தான் வந்திருக்கோம்... அமைதியா இருங்க..." அவரின் கணீரென்ற குரலுக்கு எதிர்க்குரல் வரவில்லை.

இதுதான் நடந்த கதை.

"சரி... இந்த பாலை என்ன செய்யிரது?..."

"பாலை முகாமில் இருக்கிற சின்னப் புள்ளங்களுக்கும், புள்ளத்தாச்சி அம்மாக்களுக்கும் குடுக்கலாம்..." என்று திடீரென்று தீர்ப்பளிப்பதுபோல் தன்னையறியாமல் சொல்லி விட்டான் சிங்காரம்.

கூட்டம் அதனை ஆமோதித்தது. கைதட்டியது.

"தம்பி சொன்னது ஞாயம்... இதை முந்தியே செஞ்சிருந்தா இந்த தகராறே வராதே!..." கூட்டம் கலைந்தது.

சிங்காரம் அந்தப் பாலை சமையல் கட்டுக்கு கொண்டு போய் சுடவைத்து, 'வாளி வாளி'யாக தொண்டர்களிடம் கொடுத்து பிள்ளைகளுக்கும், கர்ப்பிணிகளுக்கும் விநியோகித்தான்.

மாலினிக்கும் அழுதழுது கண்கள் சிவந்து விட்டன. தன்னை சிங்காரம் கைவிட்டுவிட்டான் என்ற முடிவுக்கே வந்து விட்டாள்... 'தான் இப்போது ஒரு கர்ப்பிணி என்று தெரிந்தும் அதற்காக எந்த அக்கறையும் காட்டாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறானே அவன்! தாய், தகப்பனை, சொந்த பந்தத்தை இவனுக்காக உதறி இவனே எல்லாம் என்று வந்தேனே! இன்று திரும்பிக்கூட பார்க்கின்றான் இல்லையே...! இனி எங்கே போவேன்?... எப்படி வாழ்வேன்? தற்கொலை செய்து கொண்டால் என்ன! ஆனால்... ஆனால்... வயிற்றில் ஒரு புதிய உயிர் வளர்கிறதே!... எங்களுக்குள் ஏற்பட்ட பிரச்சனைக்காக எந்த பாவமும் செய்யாத அந்த உயிரைக் கொல்வதா?... அதற்காக வாழ வேண்டாமா?...' தனக்குள் எழுந்த வாத பிரதிவாதங்களுக்குப் பின்னரும் என்ன செய்வதென்று தெரியாமல் யோசித்துக் கொண்டே அழுது கொண்டிருந்தாள்.

அந்தக் கோயிலின் ராஜகோபுரத்தின் அருகே நின்று எதிர்ப்பக்கமாகப் பார்த்தால் அந்த மலை அழகாகத் தெரியும். அந்த மலையின் பெயரே அழகமலை. ஒரு ஓவியன் அளவுக்கு அதிகமாக பச்சைவர்ணம் தீட்டியது போன்று அதிகமான பச்சையில் கம்பீரமாய் இருந்தது அந்த சிறிய மலை. அந்த மலையின் இதயப் பகுதியில் இருந்து ஊற்றெடுத்த சிறிய நீர் ஊற்று வெள்ளை நிறத்தில் பாதை போட்டதுபோல் வளைந்து, நெளிந்து அடிவாரம் வரை ஓடியது. அடிவாரத்தில் வயல்கள் இருந்தன. மலையில் இருந்து வருகிற அந்த ஊற்றுநீர் ஆங்காங்கே சிறு அருவியாய் கொட்டி மனிதர்களை குளிக்க வைத்து வயலுக்குள் ஓடி கடைசியாக ஒரு வாய்க்காலாக அந்தக் கோயிலின் ஒரு பக்கமாய் ஓடுகின்றது. நெருப்பாய் வெய்யில் எரித்தாலும் இந்த வாய்க்காலில் கொஞ்ச தண்ணீராவது ஓடும்.

மலையின் அடிவாரத்தில் இருக்கிற வயல்கள் வருடம் மூன்றுமுறை நெல்லைத் தரும் அற்புத வயல்கள்... வயலுக்கும் கோயிலுக்கும் இடையே கறுப்புத்துணி விரித்து வைத்தாற் போன்று மெயின் ரோடு ஓடுகின்றது.

இத்தனை இயற்கை அற்புதங்களையும் ஒரு காமிராவுக்குள் அடக்கி ஒரு 'பிக்சர் போஸ்கார்டாக' ஆக்கினால் ரசிக்க நன்றாக இருக்குமே!.

பகல் சாப்பாடு முடிந்ததும் கிடைத்த ஓய்வில் சிங்காரம் அந்த மலையைப் பார்த்து ரசித்து, எண்ணி வியந்து கொண்டிருந்தான்.

மலையை, கானகத்தை, கடலை, நதியை பார்த்துக் கொண்டே இருக்கலாம். சலிப்பு தட்டாது... இந்த இயற்கையின் அற்புதங்கள் ரசிப்பதில்தான் இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை மாறியதில் கொஞ்சம் உற்சாகமாகவே இருந்தான் அவன். அப்போது அவனைத் தேடிவந்தார் கோயிலின் உபதலைவர்.

"உன்னத்தான் தேடிவந்தேன் தம்பி...!"

சிங்காரத்தின் மனதுக்குள் ஒரு சுழற்சி... 'தன்னை ஏன் தேடிவர வேண்டும்?...'

உபதலைவர் நேரடியாக விஷயத்திற்கு வந்தார்... "பால் விசயத்தில ஞாயமா நடந்துகிட்டீங்க... நான் கேள்விப்பட்டேன். என்ன செய்யிரது தம்பி! பெரிய மனுசங்களா இருக்கிறவங்களுக்கு சின்ன இதயம்... இதையெல்லாம் சமாளிச்சிகிட்டுதான் இங்க இருக்கிரேன். என் சொந்தக்காரங்ககூட கல்யாண மண்டப மேல் மாடியிலதான் இருக்கிறாங்க... அகதியா வந்தும் அந்தஸ்து தேடுராங்க... என்ன செய்யிரது?..."

உபதலைவர் டவுணைச் சேர்ந்தவர்தான். ஆனால் மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்தவர். இந்த உபதலைவர் பதவியே அவரின் நேர்மைக்குக் கிடைத்தபரிசு என்று சொல்லலாம். மக்களிடம் நல்ல செல்வாக்கும், சொல்வாக்கும் உள்ளவர்.

உபதலைவரை மானசீகமாக நன்றியுடன் பார்த்தான் சிங்காரம்.

"சரி தம்பி! புதுவேல உனக்கு காத்திருக்கு... கல்யாண மண்டப வாசல்ல ஒரு தகரக் கொட்டகை ஒதுக்கி, மேஜை, நாற்காலி போட்டிருக்கு... நீ அதில இருந்து அகதியா வந்திருக்கிறவங்க... பேரு, விபரம் எல்லாத்தையும் பதியணும்...! இதை பொறுப்பா செய்யணும்... கவர்மெண்ட், அகதிகள் விபரம் கேட்டிருக்கு... உன்ன மாதிரி மூணு பேரை நியமிச்சிருக்கோம்!"

சிங்காரம் மறுப்புத் தெரிவிக்கவில்லை. புதிய வேலையும் பொருத்தமானது.

"சரிங்க நான் ரெடி..."

"நாளைக்கி காலையில இருந்து புதுவேலய துவக்கு தம்பி! கல்யாண மண்டப கொட்டகையில மேஜை, நாற்காலி, பதிவேடு, பேனா எல்லாம் தயாராக இருக்கு..." உபதலைவர் சொல்லிவிட்டு போய்விட்டார். சிங்காரம் எப்போது விடியும் என்று காத்திருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22

கல்யாண மண்டபத்தின் நுழைவாயிலருகே போடப்பட்டிருந்த தற்காலிக கொட்டகையருகே சிங்காரம் போனபோது அந்தக் கோயிலின் ஒலி பெருக்கி ஒரு அறிவிப்பை கொடுத்தது...

"முத்துமாரியம்மன் கோயிலில் அகதிகளாக வந்திருக்கிறவர்களுக்கு ஒரு அறிவித்தல்... அகதிகளாக வந்திருக்கிறவர்கள் தோட்ட வாரியாக, பகுதி வாரியாக கல்யாண மண்டப வாசலில் போடப்பட்டிருக்கும் கொட்டகையில் போய் தங்கள் விபரங்களை முழுமையாக பதியுமாறு கேட்டுக் கொள்கிறோம். முதலில் இங்கு அகதிகளாக வந்த 'நாலந்தை' தோட்டத்தைச் சேர்ந்தவர்களின் விபரங்களைப் பதியப் போகின்றோம்... எனவே அதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு நாலந்தை தோட்டத்தைச் சேர்ந்த தலைவரை வேண்டுகிறோம். இதனை மறுபடியும் அறிவிக்கின்றேன்..."

அந்தக் குரல் அவனுக்குப் பழக்கமான குரல்... எழுத்தாளர் பாலாவின் குரல்தான் அது... ஒலிபெருக்கி மீண்டும் அந்த அறிவிப்பை அறிவித்தது.

சுமார் அரை மணித்தியாலத்திற்குப் பின்னர், நாலந்தை தோட்டத்து மக்கள் சிங்காரம் இருக்கிற இடத்திற்கு வந்து சேரத் தொடங்கினார்கள். அவர்களை வரிசையாக நிறுத்தினான். சிங்காரத்திற்கு உதவியாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த உதவியாளன்.

சிங்காரம் மேஜையோடு போடப்பட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்தான். அந்த மேஜையில் பதிவேடு, பேனா, பென்சில் என்பன இருந்தன. சிங்காரத்தை இப்போது பார்க்கிறபோது தோட்டத்து சம்பளம்போட உட்கார்ந்திருக்கிற தோட்டத்து துரையின் ஞாபகம்தான் வந்தது.

சிங்காரம் அவசரப்படாமல், ஆனால் சுறுசுறுப்பாக அவர்களின் விபரத்தைக் கேட்டுப் பதியத் தொடங்கினான். நேற்று இது சம்பந்தமாக இரவு கோயில் உபதலைவர் சொல்லித் தந்த சில விஷயங்கள் இன்று ஞாபகமாய் உதவின. ஒரு நாளைக்கு இருபது, முப்பது பக்கங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகதிகளின் பெயர், விபரங்களை பதிந்தான் சிங்காரம். ஒவ்வொரு குடும்பத்தினரையும் தனித்தனியே பார்த்துப் பேசினான். இத்தகைய சந்தர்ப்பம் எவருக்கும் கிடைக்கவில்லை... அனேகமாக ஒரு தொழிற்சங்கத் தலைவருக்குக் கூட கிடைத்திருக்காது.

சிங்காரம் அந்த மேஜையில் உட்கார்ந்த பின்னர்தான் பல விஷயங்களை அனுபவப்பூர்வமாக உணர ஆரம்பித்தான். முதலில் அந்த பொறுப்பை தந்தபோது தனக்குள் யோசித்தவன், இந்த பொறுப்பை சரிவர செய்ய முடியுமா? என்று எண்ணியவன், இப்போது அந்த பொறுப்பு கிடைத்தமைக்காக சந்தோஷப்பட்டான்.... இதுவரை பல கேள்விகளுக்கு கிடைக்காத பதிலை இங்கே கண்டான்.

'தேயிலை, ரப்பர், கொக்கோ தோட்டங்களில் உழைத்த இந்த தொழிலாளர்கள் இன்று அகதிகளாக இருக்கின்றார்கள். இவர்கள் இன்றுமட்டும்தான் அகதிகளா? இல்லை... இவர்கள் எப்போதும் அகதிக்ள் போல்தான் இருந்திருக்கிறார்கள்... இல்லை, அப்படி ஆக்கப்பட்டிருக்கிறார்கள்... லயங்களில் இருக்கிறபோது பார்ப்பதற்கும் இப்போது பார்ப்பதற்கும் என்ன வித்தியாசம்? பெரிய வித்தியாசம் இல்லை... அப்படியானால் இவர்கள் எப்போதும் அகதிகள் தானா?...'

ஆம்! எப்போதும் இவர்கள் நிரந்தர அகதிகள் போல வாழ்ந்திருக்கிறார்கள். நாடு சுதந்திரம் பெற்றதும் பெரும்பான்மை அரசியல்வாதிகளும் ஒரு சில குறுகிய அரசியல்வாதிகளும் இவர்களுக்கு தந்த பெரும் பரிசு... இவர்களை நாடற்றவராக்கியது... அதற்கு சுயநலம் படைத்த சில தமிழ் அரசியல்வாதிகளும் துணை போனதுதான் இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய கொடுமை...[1]

---

1. 1949ல் சிங்களக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி இந்திய வம்சாவழித் தமிழர்களை நாடற்றவராக்கும் கொடூர சட்டம் கொண்டு வந்த போது மந்திரியாய் இருந்த இலங்கைத் தமிழரான ஜி. ஜி. பொன்னம்பலம் இதனை ஆதரித்தார். ஆனால் அந்தச் சட்டத்தை தீர்க்க தரிசனத்துடன் எதிர்த்தார் பின்னாளில் தந்தை செல்வா என்றழைக்கப்பட்ட சா. ஜே. வி. செல்வநாயகம் அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுக்கு இந்த நாடு வகுத்த எல்லையே புதுரகமானது. உலகில் உள்ள அகதிகளுக்கு உடை, உணவு, இருக்க இடம் உழைக்காமல் கிடைக்கிறது. ஆனால் இவர்களுக்கோ அவையெல்லாம் உழைத்தால்தான் கிடைக்கும். டெலிவிசன் வந்துவிட்ட காலத்தில்கூட இவர்களை இன்னமும் விபரம் தெரியாதவர்களாகத்தான் வைத்திருக்கிறார்கள். உலகமே சொந்தமாக்கிக் கொண்ட கல்வி இவர்களுக்கு மட்டும் ஏன் அந்நியமாகிவிட்டது?.

இந்த தொழிலாளர்களை வைத்து மீன் பிடிக்கிற, சுகம் காண்கிற, லாபம் தேடுகிற அரசியல்வாதிகள், தொழிற்சங்கத் தலைவர்கள் இவர்கள் விஷயத்தில் இன்னமும் வாய்ச்சொல் வீரர்களாக இருப்பதற்கு காரணம், கல்வி என்ற கண்ணாடி இவர்களுக்கு இல்லாததுதான்... ஏழைகள், சமுதாயத்தில் தாழ்ந்து கிடப்பவர்கள், சரிநிகர் சமானமாக வரவேண்டுமென்றால் கல்வியைத் துணைக் கொள்ள வேண்டும்... என்பதுதான் மறைக்க முடியாத உண்மை!

அந்த உண்மையை சிங்காரம் இங்கேதான் பரிபூரணமாக உணர்ந்தான். அதனை ஒரு சம்பவம் உணர்த்தியது :

ஒரு குடும்பத்தின் பெயர், விபரம் கேட்டுப் பதிந்தான்...

"பேரு என்னாங்க?..." சிங்காரம் கேட்டான்.

"மாயாண்டிங்க..." பதிலைக் கேட்டுக் கொண்டே எழுதினான் சிங்காரம்.

"வயசு...?"

"அறுபதுக்கு மேல இருக்குங்க..."

"அறுபதுக்கு மேலன்னா... சரியா சொல்லுங்க..."

"சரியா சொல்ரதுக்கு பொறந்த தேதி தெரியாது தம்பி..."

மாயாண்டியைப் பார்த்துக் கொண்டே சிங்காரம் யோசித்தான். பிறந்த தேதி தெரியாமல் பிறந்தவர்களா இவர்கள்?... இல்லை! பிறந்த தேதியை சொல்லிக் கொடுக்காமல், தெரிந்து கொள்ளாமல் வளர்ந்து விட்டார்கள்.

சிங்காரம் ஒரு 'குத்துமதிப்பில்' வயதைக் குறித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எரிஞ்சிபோன பெறுமதியான பொருட்கள்...?"

மாயாண்டி கைவிரித்தவாறு சொன்னான்... "நமக்கிட்ட பெறுமதியான எதுவும் இல்லீங்க... ஆனா சிட்டிசன்சிப் கொப்பி எரிஞ்சி போச்சுங்க... அதான் எனக்கு ஒரே ரோசணை..." அழுதான் மாயாண்டி.

தன் வீட்டுப் பொருட்கள் எரிந்து போனதற்குக் கவலைப்படாதவன் அந்த நாட்டு பிரஜையாக்கப்பட்டதற்கு அத்தாட்சியாக கொடுக்கப்பட்ட வெறும் காகிதம் எரிந்து போனதற்கு அழுகிறானே! ஓ... வெறும் காகிதமா அது?... இல்லை. இந்த நாட்டில் இந்நாட்டுக்காகவே உழைத்து வந்த இனம் நாடற்றவராக ஆக்கப்பட்டபோது அவர்களில் சிலருக்கு மாத்திரம் இந்நாட்டில் வாழ பின்னாளில் வழங்கப்பட்ட ஒரு லைசன்ஸ் – அதற்குப் பெயர் சிட்டிசன்சிப்... அது கிடைக்காதவர்கள் நாடற்றவர்களாக முத்திரை குத்தப்பட்டார்கள்...

மாயாண்டிக்கு ஆறுதல் சொன்னான் சிங்காரம். அவன் ஆறுதல் அவனின் அழுகையை நிறுத்த மட்டுமே பயன்பட்டது.

இதே போன்று இன்னும் ஒரு சம்பவம்...

ஒருத்தரிடம் விபரம் கேட்டபோது சொன்னார்...

"இதெல்லாம் பதிஞ்சி என்னா கெடைக்க போவுது... 1958ல அடிபட்டேன்... 1977லயும் அடிபட்டேன். நஷ்டப்பட்டேன்... அப்பவும் பதிஞ்சேன்... என்னா கெடைச்சிச்சி?..."

அதற்கு சிங்காரம் பதில் சொல்ல முடியாமல் இருந்தான். அந்தக் கேள்விக்குப் பிறகுதான் 'இப்படி பதிவதனால் பின்னாடி நஷ்டஈடு மாதிரி ஏதாவது கொடுப்பார்களா?' என்ற கேள்வியே அவனுக்குள் எழுந்தது. பதில்தான் கிடைக்கவில்லை. "கெடைக்கிதோ இல்லியோ உள்ளதை பதிஞ்சி வைங்க... ஒங்களுக்கு நல்லது!" தூண்டினான் சிங்காரம்.

அப்போதும் அந்த ஆள் தயங்கினான்.

"எல்லாரும் பதியிராங்க... நீங்களும் பதிங்க... குடுத்தா குடுக்கிரான். இல்லேன்னா போரான். இவனுக தருவான்னுங்கதான் நாங்க பார்க்கிரோமா?" அந்த ஆளுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த ஒரு நடுத்தரவயதுக்காரர் 'சூடாக'க் குரல் கொடுத்தார். அதற்குப் பிறகு அந்த ஆள் இறங்கி வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எல்லாரும் சொல்ரீங்க... சரி. பதியிரேன்...!" என்ற அந்த ஆள் விபரங்களைச் சொல்ல, சிங்காரம் வேகமாகப் பதிந்தான்.

இப்படி பல அனுபவங்கள்... அகதிகளை பதிய உட்கார்ந்த முதல் நாளிலேயே பல அனுபவங்கள் அவனுக்கு வந்து சேர்ந்தன... தோட்டத்து மக்களை நாடி பிடித்துப் பார்க்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது போலத்தான் எனக் கருதினான் அவன்.

பகல் உணவிற்குப் பிறகு நாலந்தை தோட்டத்து தொழிலாளர்கள் பெயர், விபரம் பதிந்த பின்னர் கிடைத்த ஓய்வில் எழுந்து நடந்தபோது சிங்காரத்தைத் தேடி மாலினி வந்துவிட்டாள்.

மனது 'திக்'கென்றது. ஏன் வந்தாள்...?

சிங்காரம் எதுவும் பேசாது மௌனமாக அவளையே பார்த்தவாறு நின்றான். அந்தப் பார்வை அவளை முறைப்பதுபோல இருந்தது.

மாலினியின் கண்கள் கலங்கியிருந்தன. முகமெங்கும் சோகம் கப்பிக் கிடந்தது.

சிங்காரம் மெள்ள அவள் அருகே போய், "இங்கெல்லாம் வந்து தொந்தரவு கொடுக்க வேணாம்! இப்ப நான் ஒரு வேல பாரமெடுத்திருக்கிறேன்... அகதிகள் பேரு, விபரம் பதியிரேன்... நீ போயி நம்ம தோட்டத்து ஆள்களோட இரு. நான் இங்கதான் இருக்கிரேன்..." என்று சொல்லிவிட்டு அவளின் பதிலைக்கூட எதிர்பார்க்காமல் நடந்தான்.

மாலினி அழுதுகொண்டே போனாள். சிங்காரம் அவளுடைய அழுகையைப் பற்றிக் கவலைப்படவில்லை. அவன் ஒரு முடிவுக்கு வந்து விட்டான்; மாலினியைக் கைவிடுவதாக அவன் மனமறிய உறுதியாகிவிட்டான். நாட்டின் நிலை சீரானதும் அகதிகள் அவரவர் இடத்திற்குத் திரும்பிப் போவார்கள்... ஆனால் சிங்காரம் மட்டும் தனியாக திரும்பிப் போவான். போவதற்கு முன் மாலினியிடம் 'இனிமேல் என்னோடு வரவேண்டாம்! நான் உனக்கு இனி புருசனில்லை...!' என்று சொல்லிவிடப் போகிறான்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடைய இம்முடிவைப்பற்றி எவர் எதைப் பேசினாலும் அவனுக்குக் கவலையில்லை... 'நமது இனத்தை அடித்து எரித்துக் கொன்று, சொத்தை கொள்ளையடித்து அகதியாக்குகிறபோது அவர்களின் ஒருத்தியைக் கைகழுவி விடுவது என்ன பெரிய குற்றம்?...' என்று நினைக்கத் தொடங்கினான் அவன்.

## 23

தலைக்கு மேலே எவரோ நெருப்பு மூட்டி வைத்ததுபோன்று வெய்யில் கீழே அடித்தது. வெய்யிலுக்குப் பயந்து அகதிகளின் நடமாட்டம் வெளியே குறைந்திருந்தது. ஒரு சிலர் மட்டும் கோயிலின் முன்புறம் உள்ள மைதானத்தில் நின்று கொண்டிருந்தார்கள். வேறு சிலர் குடையுடன் நடமாடிக் கொண்டிருந்தார்கள். சிறிய, பெரிய என விதவிதமான நிறங்களில் குடைகள்... தலைக்கு வெய்யில் அடிக்கக் கூடாதென்றுதான் அந்தக் குடைகள்.

புதிதாக அகதிகள் வருவது குறைந்திருந்தது. இங்கே கோயிலில் இடம் போதவில்லை என்று வேறு இடத்தில் ஒரு பள்ளிக்கூடத்தை அகதி முகாமாக திறந்திருந்தார்கள்.

மாவட்ட அரசாங்க அதிபரின் ஆணைப்படி, அரசு அதிகாரிகள் முகாம்களுக்கு வருவதும் போவதுமாய் இருந்தார்கள். அவர்களுக்கு அகதிகளின் விபரங்கள் அவசரமாய்த் தேவைப்பட்டதால் பதிகின்ற வேலைகள் வேகமாக நடந்து கொண்டிருந்தன. இத்தனை நாளும் இந்த அகதி முகாம் தனிப்பட்டவர்களின் உதவியில்தான் இயங்கி வந்தது. இப்போதுதான் அரசு உதவப் போகிறதாம். அதற்குத்தான் எத்தனை, எத்தனை கேள்விகள்?...

சிங்காரம் இந்த மூன்று நாட்களாக விபரங்களைப் பதிந்தான். இப்படி பதியப்படுகின்ற பதிவேடுகள் அரசு காரியாலயத்திற்கு கொண்டு போகப்பட்டன. சிங்காரத்திற்கு இந்த மூன்று நாட்கள் எப்படித்தான் ஓடியதென்று தெரியவில்லை. அடுத்தடுத்து பார்த்துக் கொண்டிருக்கிற மனித முகங்களில் காலம், நேரம் எல்லாம் மறந்து போய்விட்டது. அதைத்தான் அவன் விரும்பினான். சுயநினைப்பு வராமல் இருக்க இதைவிட வேறு வழியே இல்லை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் பதிகின்ற வேலைக்கு வந்தபிறகுதான் சிங்காரத்திற்கு பல எண்ணங்கள் புரியத் தொடங்கின...

இந்தத் தோட்டத்து தொழிலாளர்களின் அறியாமையை மூலதனமாக்கிக் கொண்டு பல பெரிய புள்ளிகள் சுகத்தை அனுபவித்து வருகிறார்கள். உழைப்பு ஒன்றைத் தவிர வேறு எதுவுமே தெரியாத இவர்களின் உலகம் அந்த பெரிய புள்ளிகள் முடிசூடா மகாராஜாக்களாக உலாவரத் தோதாக இருக்கின்றது. இருபதாம் நூற்றாண்டில் கூட இன்னமும் இவர்களை ஒரு திறந்த வெளிச்சிறைக்குள் வைத்திருப்பதைப் போல் தோட்டங்களில் வைத்து விட்டார்கள்...

சேவல் கூவுவதற்கு முன் மலையேறுகிற இவர்கள் இருட்டியபிறகு லயத்திற்கு வருகிறார்கள். முழு வெளிச்சமும் உழைப்பதிலேயே போய் விடுகிறது. இரவில் சிறிய இடத்தில்தான் படுக்கை. அந்தப் படுக்கையில்தான் தாய், தகப்பன், பிள்ளைகள் யாவரும்... இத்தனை பேருக்கும் மத்தியில் அவர்கள் தூங்கும்போது, தூங்குபவர்கள் விழித்து விடுவார்களே என்ற பயத்தில் மனைவியைக் கொஞ்சி, பகல் முழுக்க பட்ட கஷ்டம் இரவில் மனைவியின் முகத்தில் முகம் பார்க்கிறபோது மறந்து போய்விடுகிறது. இந்தச் சின்ன இடத்தில்தான் 'அந்த' இரவையும் அந்த இரவில் மலரும் உறவையும் முடிக்க வேண்டியுள்ளது. பிறகு என்ன? வண்டிச் சக்கரமாய் சுழலும் வாழ்க்கை... கதை... இரவில் சாப்பாடு... அப்புறம் படுக்கை... தூக்கம்... காலையில் வேலை... இந்த நியதி திரும்பத் திரும்ப சுழல்கின்றது.

இந்த மனிதக் கூட்டம் முன்னேற வேண்டுமானால், ஏனைய மனிதர்களைப் போல் சரிநிகர் சமானமாய் வரவேண்டுமானால் இவர்களின் அறிவுக்கண்கள் திறக்கப்படவேண்டும்... அதுதான் அவர்களை உயர்த்திக் காட்டும்! ஒரு சமூக அந்தஸ்து தேடி வரும்!.

தான் ஓரளவாவது படித்திருந்ததால்தான் இன்று நாற்காலியில் உட்கார முடிந்தது என்பதை அவ்வப்போது நினைத்துப் பார்த்துக் கொண்டான் சிங்காரம்... இன்னமும் சுத்தமாக படித்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்? ஆனால் படிக்கிற காலத்தில் அந்த எண்ணமே இல்லை. ஏன்?...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவோ, அம்மாவோ அவன் படிக்க வேண்டும் என்று வாயால் சொல்லி வந்தார்கள். ஆனால் அவன் நன்றாகப் படிக்க வேண்டும் என்பதில் எந்த அக்கறையும் எடுக்கவில்லை. தாத்தாவுக்கு இருந்த அக்கறை கூட அப்பாவுக்கு இல்லை. ஏன்?...

ஒருநாள் கதை சொல்லும்போது தாத்தா சொன்ன வார்த்தைகள் சிங்காரத்திற்கு நினைவுக்கு அவ்வப்போது வரும்...

"ஏய்! சிங்காரம்... தெனம் இப்புடி கதை கேட்டு, கேட்டு தூங்கிகிட்டு இருந்தா போதுமா? இதெல்லாம் பொழுதுபோக்குக்கு சொல்ர கதை இல்ல... நீ பெரிய மனுசனா வரனும்னு சொல்ர கதை. இந்த தோட்டத்துக்குள்ளே இருந்தா ஒங்கப்பன் மாதிரி, எங்கப்பன் மாதிரி, என்ன மாதிரி புல்லு வெட்டவும், கவ்வாத்து வெட்டவும்தான் போவணும்... ஆனா நல்லா படிச்சா நாலு எழுத்து எழுத, பேச தெரிஞ்சா தோட்டத்தவுட்டு வெளிய, போயி டவுண்ல மத்த ஆளுக மாதிரி மனுசனாகலாம்... படி... நல்லா படி..."

அன்று சிங்காரம் வெறுமனே 'தலை'யாட்டி விட்டுப் போனான். தாத்தாவிடம் கதை கேட்டவன் அதையும் கதை என்று நினைத்தானோ? ஆனால் இப்போது...

சிங்காரம் தோட்டத்து ஸ்கூலில் படித்தான். சராசரியாக மற்ற பிள்ளைகளைவிட தோட்டத்தில் நன்றாகப் படித்தான். ஐந்தாம் வகுப்புவரைதான் தோட்டத்து ஸ்கூலில் உண்டு. ஐந்தாம் வகுப்பில் மூன்றாம் பிள்ளையாக சித்தியடைந்தான். தோட்டத்து ஸ்கூல் மாஸ்டரின் தூண்டுதலில் பக்கத்தில் உள்ள நகர்ப்புற பள்ளியில் சேர்ந்தான். அங்கும் அவன் நன்றாகப் படித்தான். பத்தாம் வகுப்புவரை நன்றாகப் படித்தவன் அரசாங்க பரீட்சை எழுதுவதற்கு முன்னர் ஏனோ ஸ்கூலுக்குப் போகாமலே நின்று விட்டான். அதனைக் கேள்விப்பட்டு தோட்டத்து ஸ்கூல் மாஸ்டர் அவனைக் கூப்பிட்டு புத்திமதி சொன்னார்.

"சிங்காரம்! உங்கட சனங்கள் முன்னேற வேணுமென்டால் உன்ன மாதிரி பொடியன்கள் நல்லா படிக்க வேணும். நான் பிறந்தது யாழ்ப்பாணத்தில குடாநாட்டுல இருக்கிற ஒரு மீன்பிடி கிராமம். எங்க பார்த்தாலும் பனைமரம்தான்... மீன்பிடிக்கிறதுதான் பலருக்குத் தொழில்... வேற சீவியமே இல்ல. ஆனா நா ராப்பகலா படிச்சதுனால இன்டைக்கி உங்களுக்கு மாஸ்டரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிரன் புரியுதோ?... நல்லா படி... படிப்ப விடாதே... படிக்கிரதுக்கு என்னால ஆன உதவி செய்யிரன்... எது வேணுமென்டாலும் தைரியமா கேளு... சரியோ!"

அவர் யாழ்ப்பாணத்திலிருந்து படிப்பித்துக் கொடுக்க வந்தவர். மற்ற ஆசிரியரைப் போல் இல்லாமல் அக்கறையோடு உள்ளவர்.

அவர் சொன்னதுக்காக ஒரு மாதம் படிக்கப்போனான். பிறகு அம்மா நோயில் படுக்க அவளை கவனிக்க தற்காலிகமாக படிப்பை நிறுத்தினான். அம்மா நோயிலிருந்து மீண்டாள்... ஆனால் ஏனோ மீண்டும் ஸ்கூலுக்கு கால் வைக்கவே இல்லை.

தோட்டத்து ஸ்கூல் மாஸ்டர் மறுபடியும் அவனைச் சந்தித்து 'புத்திமதி' சொன்னார். ஆனால் அந்த ஆசிரியர் சொன்னதெல்லாம் தேயிலைத் தோட்டத்தில் ஓடித் திரிந்து பச்சைப்பசேல் தேயிலைச் செடிகளைப் பார்த்துக் கொண்டும் – தேயிலைப் பூக்களின் மணத்தை நுகர்ந்து கொண்டும் – மலைகளில் ஊற்றெடுத்து 'சில்' லென்று முகம் பார்க்கிற கண்ணாடியாய் ஓடுகிற சில்லோடையில் இறங்கி, நடந்து உடம்பை நனைத்துக் கொண்டும் இருந்ததில் மறந்தே போய்விட்டது. இப்படி மறந்தே போனது எத்தனையோ?... தொடர்ந்து படிக்காமல் விட்டது பெரிய தவறு; மன்னிக்க முடியாத குற்றம்... அம்மாவும் அப்பாவும் கொஞ்சம் கண் அசைத்திருந்தால் கல்வி உலகில் இன்னும் நாலைந்து அடி எடுத்து வைத்திருக்கலாம் அவன். ஆனால்...

தன்னைத்தானே நொந்து கொண்டான் சிங்காரம். கண்கள் கலங்கின அவனுக்கு... எவரும் பார்த்து விடுவார்களோ என்று கண்களைத் துடைத்துக் கொண்டான். பிறகு எழுதப் படிக்கத் தெரிந்ததால் தானே இங்கே உட்கார்ந்து எழுத முடிகின்றது என்று தனக்குத்தானே ஆறுதல் அடைந்தான். கலவரம் முடிந்ததும் தோட்டத்திற்கு திரும்பியதும் பிள்ளைகளைப் படிக்க வைக்கச் சொல்லி, லயம் லயமாக ஏறி இறங்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான்...

அன்று இரவு படுக்கையில் விழுந்தபோது மெள்ளமாய் மாலினியின் முகம் சிங்காரத்தின் கண்களில் மிதந்தது... லேசில் மறக்க முடிகின்ற முகமா அது?... நேற்றுவரை அவளோடு ஒன்றாகி உலகிற்கே இவள்தான் என் மனைவியென்று பிரகடனப்படுத்தி, இரவில் அவளின் உடம்போடு உடம்பாக ஒட்டிக் கிடந்தவன் அவன், அவளையா ஒதுக்கப் போகிறான்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாலினியை ஒதுக்கிவிட முடியுமா உன்னால்?..." ஒரு குரல் அவன் நெஞ்சுக்குள்ளேயே கேட்டது. இது இந்த சில நாட்களாக அவனுக்கு இரவில் கேட்கிற ஒரு குரல்...

பகலெல்லாம் விபரங்களைப் பதிவதில் மாலினியின் நினைவு வர வாய்ப்பு இல்லாது போனாலும் இரவில் படுக்கையில் விழுந்ததும் தூங்குவதற்கு முன்னர் இருக்கிற கால இடைவெளியில்தான் இப்போதெல்லாம் ஒரு மனப்போராட்டம் வந்து விடுகிறது அவனுக்கு... அப்போது அவன் நெஞ்சில் ஒலிக்கிற ஒரே குரல் அதுதான்... 'மாலினியை ஒதுக்கிவிட முடியுமா உன்னால்'.

இந்தக் குரலில் அவன் மனசாட்சி விழித்தெழும் என்று எதிர்பார்த்தால் அந்தக் குரலை அடக்கியவாறு வேறு ஒரு குரல் கேட்கிறது... பணத்திற்காக பேசுகிற வக்கீலைப் போல் இந்தக் குரல் அவனுக்குத் தைரியம் கொடுத்தவாறு பேசுகிறது...

'இந்த நாட்டுக்கு மனதாலும் தீங்கு செய்ய நினைக்காத, உழைப்பதைத் தவிர வேறு எதனையும் தெரிந்து வைத்திராத இந்த மக்கள் கூட்டத்தை அடித்து, நொறுக்கி கலவரம் செய்த இந்தப் பெரும்பான்மை இனத்தவரும் ஒரு அறநெறியைப் பின்பற்றுபவர்கள்தானே? அவர்களுக்கும் மனசாட்சி இருக்கத்தானே வேண்டும்? அது இப்போது எங்கே புதையுண்டது? நொண்டி ஆட்டுக்குட்டியின் வேதனை கண்டு மனமிரங்கி அதனைத் தன் தோளில் போட்டுக் கொண்டு நடந்த புத்த பெருமானின் அறநெறி (பெரும்பான்மை சிங்களவர்கள் பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்கள்)யைப் பின்பற்றுவதாக சொல்கிறவர்கள்தானே இந்த அக்கிரமத்தைச் செய்தார்கள்? பெண்களைக் கதறக் கதற கற்பழித்தார்கள். துடிக்கத் துடிக்க வெட்டிக் கொன்றார்கள்... நீ அப்படி எதுவுமே செய்யவில்லையே!... அவளைப் பிடிக்கவில்லை என்று ஒதுங்கப் போகிறாய். இது தவறா? இப்போது இந்த நாட்டில் நடந்து விட்டிருக்கிற பெரிய கொடுமையைப் பார்க்கிறபோது இது ஒன்றும் தவறே இல்லை...!'

அந்தக் குரலில் உற்சாகம் அடைந்தான்; தைரியம் பெற்றான்.... 'இனி எவர் எதை வேண்டுமானாலும் சொல்லட்டும்... மாலினியை ஒதுக்கியது ஒதுக்கியதுதான்...'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்காரம் தனக்குத்தானே ஒரு சமாதானம் செய்து கொண்டு பிரச்சனைகளை மறந்து தூங்க முயற்சித்தபோது மூடிய கண்களுக்குள்ளே மீண்டும் மாலினியின் உருவம்தான் வந்து நின்றது...

## 24

அந்த ஆயிரக்கணக்கான அகதிகளுக்குள் தனித்துவிடப்பட்டவளாக, அகதிகளுக்குள் ஒரு அகதியாக கோயிலின் உள்ளே ஒரு இடத்தில் இருந்தாள் மாலினி... தன்னை சிங்காரம் கைவிட்டு விட்டான் என்பது மட்டும் தெளிவாகப் புரிந்தது அவளுக்கு... அவளும் எத்தனையோ தடவை அவனை நெருங்கி, நெருங்கிப் பார்த்தாள். ஆனால் அவன் விலகி, விலகிப் போகின்றான்... இனி என்ன செய்வது? தன் வீட்டிற்குத் திரும்பிப் போக முடியுமா? தாய், தகப்பன் ஏற்றுக் கொள்வார்களா? இனி எப்படி அவளை ஏற்றுக் கொள்வார்கள்? சிங்காரத்திற்காக இனத்தையே உதறிவிட்டு ஓடி வந்தவள் அல்லவா அவள்...! இனி எங்குதான் போவது? இங்கும் வாழ முடியாது. அங்கும் வாழமுடியாது. என்ன செய்வது? என்ன செய்வதென்றே தெரியாமல், புரியாமல் தவித்தாள் அவள்.

மாலினி தன் நிலையை எண்ணி, எண்ணி நொந்தாள். அவள் முகத்தில் இருள் படிந்திருந்தது. நோயில் விழுந்து எழுந்தவளைப் போல் உடம்பிருந்தது. உள்ளத்தால் தன் வாழ்வைப் பற்றி கவலைப்படுகிற அவள் தன் உடம்பைப் பற்றி கவலைப்படுவதில்லை... நேரத்திற்கு சாப்பிடுவது இல்லை... நிம்மதியான தூக்கம் இல்லை! அவள் என்னதான் செய்வாள்? இந்தப் பெரிய கூட்டத்தில் அவளை நினைப்பவர் யார்? ஆறுதல் சொல்பவர் எவர்?... இருந்த ஒரே ஒரு நம்பிக்கைக் கரம் – பிச்சைக் கிழவன் போய் விட்டான்... அவன் உயிரோடு இருந்தால் தனக்கு நிச்சயம் இந்த நிலை வராது என்று அவள் நம்பினாள்...

தன்னையும் சிங்காரத்தையும் சேர்த்து வைக்க ஒரு கரம் தேவை! அந்தக் கரம்தான் யார்? என்று அவள் அந்தக் கவலையின் ஊடே எண்ணிக் கொண்டிருந்தபோதுதான் அந்த ஒலிபெருக்கியின் குரல் கேட்டது. அது கோயிலில் பொருத்தப்பட்டிருக்கும் நிரந்தரமான ஒலிபெருக்கி... இப்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகதிகளுக்கான செய்திகள் அதில் பேசப்படுகின்றன... உற்றுக் கேட்டாள் அந்தக் குரலை...

"செல்வகந்தை தோட்டத்தில் இருந்து வந்திருக்கிறவர்களுக்கான ஒரு அறிவித்தல்..."

அந்தக் குரலுக்கு உரியவரை மாலினியால் ஞாபகப்படுத்த முடிந்தது... ஆம்! அந்தக் குரலுக்கு உரியவர் அவளுக்குத் தெரிந்த எழுத்தாளர் பாலா...

தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்ட அவளுக்கு மெள்ளமாய் ஒரு நினைவு நெஞ்சில் விழுந்தது...

சிங்காரத்தோடு தனிக் குடித்தனம் வந்து விட்ட புதிது. ஒரு நாள் எழுத்தாளர் பாலா அவர்களைத் தேடி காம்பராவிற்கே வந்திருந்தார்.

"சிங்காரம் எனக்குக்கூட சொல்லாம கல்யாணம் செஞ்சுகிட்ட இல்லே..."

உரிமையோடு சிங்காரத்தை கண்டித்தார் எழுத்தாளர் பாலா...

சிங்காரம் லேசான புன்னகையுடன் நடந்ததைச் சொன்னான்... "எல்லாத்துக்கும் சொல்ற மாதிரியா நம்ம கல்யாணம் நடந்திச்சி... பொலீஸ் கேஸ்னு இல்ல முடிஞ்சிது... அதனால யாருக்குமே சொல்லல்ல... மாலினி வீட்டுலயும் எதிர்ப்பு... நம்ம வீட்டுலயும் எதிர்ப்பு..."

"எனக்கு எல்லா கதையும் தெரியும்... ஆனா நான் அப்ப இந்த ஊர்லயே இல்ல... ஏன் ஜொப் விசயமா கொழும்பு போயிருந்தேன். திரும்பி வந்தோன்ன எல்லாத்தையும் கேள்விப்பட்டேன். ஆனா நான் கவலைப்பட்டேன்! ஏன் தெரியுமா? நான் இங்க இருந்திருந்தா உனக்கு நிறைய ஒதவி செஞ்சிருப்பேன். சரி... ரொம்ப சந்தோசம்... எங்க உன் மனைவியை கூப்பிடு..."

எழுத்தாளர் பாலா காம்பரா வாசலுக்குள் வந்தபோதே மாலினி உள்ளே போய்விட்டாள்.

சிங்காரம் மாலினியைக் கூப்பிட்டான். மாலினி உள்ளே இருந்து வந்தாள். அவளைப் பார்த்ததும் பாலா கொஞ்சம் அசந்து போய்விட்டார். அவள் அழகில் அல்ல... அவளின் மாற்றத்தால்... ஆம்!... அவள் புகுந்த வீட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசாரத்தில் லஷ்மிகரமாக மாறி இருந்தாள். பொட்டு வைத்துப் பூச்சூடி, சேலை கட்டி அசல் ஒரு தமிழ்ப் பெண்ணாக...

கையோடு கொண்டு போயிருந்த ஒரு அன்பளிப்பு பொருளை எழுத்தாளர் பாலா அவளிடம் நீட்டினார். அவர் சிங்காரத்தை ஒரு தடவை பார்த்துவிட்டு அவனிடம் அனுமதி வாங்கிக் கொண்டது போன்று அந்த அன்பளிப்பு பொருளை பெற்றுக் கொண்டு உள்ளே போனாள்...

"சிங்காரம்! நீ கெட்டிக்காரன்... நான் கதைதான் எழுதுரேன். நீ கதைய நெசமாக்கிட்ட... எழுதுறவர்களைவிட நீதான் உசந்தவன்! உன் மனைவி அசல் தமிழச்சிதான்... நீ அவளை சிங்களத்தின்னு சொன்னாலும் யாருக்கும் தெரியாது! ஏதோ ஒரு துணிச்சல்ல கல்யாணம் செஞ்சுட்ட... இனிதான் நீ துணிச்சலா வாழணும். எதிர்நீச்சல் போடணும்... உன்ன நம்பி வந்தவளின் மனம் கோணாம நடந்துக்கணும்... அதுதான் நீ செய்த காரியத்துக்கு அர்த்தமாகும்..." ஒரு 'டீ' மட்டும் குடித்துவிட்டு பாலா போய்விட்டார்.

அன்று இரவு தூங்குவதற்கு முன்னர் எழுத்தாளர் பாலா கொடுத்து விட்டுப் போன பரிசுப் பொருட்களை திரும்பத் திரும்ப பார்த்து மகிழ்ந்தார்கள் சிங்காரமும் மாலினியும்... ஒரு அழகான எவர்சில்வர் குத்துவிளக்கும் அதனோடு ஒரு குங்குமச் சிமிழும் இருந்தது. மாலினி குத்து விளக்கைத் தொட்டுப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள். கைக்கு அடக்கமான சிறிய குத்து விளக்கு... சிங்காரம் குங்குமச்சிமிழை ரசித்துக் கொண்டிருந்தான். பிறகு என்ன நினைத்தானோ குங்குமச் சிமிழின் மூடியைத் திறந்து பார்த்தான். அதனுள்ளே ஒரு காகிதம் சின்னதாக மடித்து வைக்கப்பட்டிருந்தது. அதனைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினான்...

அதில் ஒரு புதுக்கவிதை...

இப்போது நீ ரசிக்கிற
இந்த குத்துவிளக்கு
பேதமற்றது!

அதில் நீ ஏற்றப் போகிற
அந்த ஒளியும் பேதமற்றது...
திரியும் பேதமற்றது – அதற்கு
திசைகளே இல்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்திசையில் ஏற்றினாலும்
எல்லாத் திசையுமே சொந்தம்!

இந்த விளக்கு
இந்தத் திரி
இந்த ஒளி
இவைகள் விரட்டுகிற
இருட்டுக்கும் பேதமில்லை!

ஆனால்
இதனிடையே வாழ்கிற
இந்த மனிதர்கள் மட்டுமே
பேதமாய் போனார்கள்...

உன் புரட்சிக்கு
புதிய முயற்சிக்கு
என் வாழ்த்து....!

இப்படிக்கு,
பாலா

புதுக்கவிதையின் வரிகளைப் படித்து முடித்த சிங்காரம் அதன் அர்த்தத்தில் ஒரு விநாடி தன்னை மறந்து போய் திரும்பி மெள்ள புன்னகைத்தவாறு மாலினியைப் பார்த்தான்...

மாலினியின் கையில் குத்துவிளக்கு இருந்தது...

"என்ன எழுதி இருக்கு?" மாலினி கேட்டாள்.

சிங்காரம் அந்தப் புதுக்கவிதையின் அர்த்தத்தை தனக்குத் தெரிந்த சிங்களத்தில் சொன்னான்...

குத்துவிளக்கைக் கொண்டுபோய் சாமிப்படங்கள் இருக்கும் இடத்தில் வைத்துவிட்டு படுக்கைக்கு வந்தாள் மாலினி. ஏற்கனவே படுக்கையில் இருந்த சிங்காரம் மெள்ள அவளை நெருங்கி அணைத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது மாலினி அவன் காதில் சொன்னாள்... "உங்க நண்பர் பெரிய கவிஞரா இருப்பார் போல இருக்கே! நம்ம ரெண்டு பேருக்காகவே குத்து விளக்கு வாங்கி, அதுக்கா ஒரு கவிதையும் எழுதி இருக்கிறாரே!"

சிங்காரம் ஒரு சிணுங்கலோடு, "அந்த கவிதை இப்ப வேணாம்! நீதான் என் கவிதை" என்றவாறு அவளின் பக்கமாய் நெருங்கினான்.

மறுபடியும் அந்த ஒலிபெருக்கியின் சத்தம் கேட்டு சுயநினைவுக்கு வந்தாள் மாலினி... கோயில் ஒலிபெருக்கியில் எழுத்தாளர் பாலா தொடர்ந்து அறிவித்தல்களைச் சொல்லிக் கொண்டிருந்தார். அப்போது அவள் மனசு சொல்லியது... அந்த எழுத்தாளரைப் பார்த்து நடந்ததைச் சொன்னால் என்ன?...

மாலினிக்கு திடீரென்று ஒரு உற்சாகம் கிளம்பியது. அத்தோடு ஒரு நம்பிக்கை நட்சத்திரம் பூத்தது. எழுத்தாளர் பாலாவைப் பார்த்து பேசக் கிளம்பினாள் அவள்...

## 25

அகதிகளைப் பதிகின்ற வேலையை அன்று தற்காலிகமாக வேறு ஒருத்தருக்குக் கொடுத்துவிட்டு உடல் அலுப்புத் தீர குளித்துவிட்டு, ஒரு கப் 'டீ'யோடு கோயிலின் பின்பக்கம் இருக்கிற மல்லிகைத் தோட்டத்திற்குப் போனான் சிங்காரம். வேறு எங்கு போனாலும் ஒரே சத்தம்... மக்கள் கூட்டம். இப்போதைக்கு அந்த மல்லிகைத் தோட்டத்தில்தான் ஒரு அமைதி நிலவியது. அவனுக்கும் இப்போதைக்கு ஒரு அமைதி தேவைப்பட்டது...

சிங்காரம் அந்த மல்லிகைத் தோட்டத்தின் 'கேட்'டைத் தாண்டி உள்ளே போனபோது மல்லிகைப் பூக்கள் அவனை வரவேற்பது போல் 'வெள்ளை'யாய்ச் சிரித்தன. ஆம்! எங்கே திரும்பினாலும் மல்லிகையின் மணம்... நடைபாதையெல்லாம் வெள்ளைநிற 'வெல்வெட்' துணி விரித்தது போன்று நிலத்தில் கிடந்தன மல்லிகைப் பூக்கள்... சில இடங்களில் பாதங்கள் பட்டு நசுங்கிப் போய் இருந்தன பூக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டத்தில் எந்தப் பக்கம் பார்த்தாலும் சிறுசிறு குடைகளை விரித்து வைத்தது போன்று மல்லிகைச் செடிகள்... அதில் நட்சத்திரங்களைப் போல் கூட்டம் கூட்டமாய் பூத்திருக்கிற பூக்கள்... வேறு நாட்களில் நாளை மலரும் அரும்புகளை மட்டுமே இந்தச் செடிகளில் பார்க்கலாம். அக்காலங்களில் காலையும், மாலையும் செடிகளில் பூக்களை ஆய்ந்து விடுவார்கள். வெளியூர்களுக்கு ரயிலில் பார்சலாக அனுப்ப மொட்டுக்களையும் ஆய்ந்து விடுவார்கள். இன்றோ இச்செடிகளைப் பார்த்தால் அதில் கைவைத்தே பல நாட்கள் ஆகின்றன என்று சொல்லாமல் சொல்லலாம். அகதிகள் வந்ததிலிருந்து கோயிலில் பூஜைகள் நடப்பதில்லை. ஊரில் நல்லது நடப்பதாகவே தெரியவில்லை. கோயில் பண்டாரத்தை இப்போது சந்திக்கிறவர்கள் எல்லாம் இந்தக் கலவரத்தைப் பற்றியே கேட்கிறார்கள். எவரும் பூமாலையைப் பற்றியோ, பூக்களைப் பற்றியோ பேசுவதே இல்லை. எனவே கோயில் பண்டாரம் இந்த மல்லிகைத் தோட்டத்திற்கு வருவதே இல்லை.

அந்த மல்லிகை தோட்டத்தில் மல்லிகைச் செடிகளுக்கிடையே உட்கார்ந்திருக்க மரக்கட்டையில் ஒரு 'பெஞ்ச்' செய்யப்பட்டிருந்தது. சிங்காரம் அந்த 'பெஞ்சில்' உட்கார்ந்து ஒரு பெருமூச்சு விட்டான். பிறகு கையில் இருந்த டீயை உறிஞ்சிக் கொண்டான்.

இன்று காலையில் இருந்து அகதிகளைப் பதிந்ததில் ஓய்வே இல்லை. இன்னும் சில தினங்களில் எல்லா அகதிகளின் விபரத்தையும் பதிந்துவிட வேண்டும்... அரசாங்க உத்தரவு அது. எனவே வழக்கத்தைவிட வேகமாகப் பதிந்துகொண்டு போனதில் நேரம் போனதே தெரியவில்லை. மூன்று மணியைப் போல் ஓய்வு பெறவேண்டும் என்று ஏற்கனவே சொல்லியிருந்தான். சரியாக நாலு மணிக்கு அகதிகள் பதிவதற்கு மாற்று ஆள் வந்ததால் இங்கே வந்து விட்டான். நேற்றே அவன் மனதில் மல்லிகைத் தோட்டத்து பக்கம் வரவேண்டும் என்ற எண்ணம் இருந்தது.

எங்கிருந்தோ வந்த காற்று மல்லிகைப்பூ மணத்தில் குளித்துவிட்டு அவனைத் தழுவிச் சென்றது. அந்த மல்லிகை தோட்டத்தின் ஒரு பக்கம் ஒரு சிறிய நீரோடை ஓடியது. அதன் எதிர்ப்பக்கம் கோயில் வளாகச் சுவர். பின்பக்கம் 'பச்சைப்பசேல்' என வயல்கள்... அங்கிருந்து பார்த்தாலும் அந்த அழகமலை தெரியும். சிங்காரம் பெஞ்சில் உட்கார்ந்தவாறு அந்த மலையைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்துக் கொண்டிருந்தான். நேரம் செல்லச் செல்ல அந்த மலை அவன் கண்களில் இருந்து மறைந்து வேறு ஒரு மலை ஞாபகத்திற்கு வந்தது...

ஆறு மாதத்திற்கு முன்னர் சிங்காரமும், மாலினியும் சிவனொளி பாதமலைக்குப் போயிருந்தார்கள்.

மலைக்குப் புறப்படும்போது மாலினிக்கு ஒரு சிக்கல்.. எந்தச் சேலையை உடுத்துவது? எல்லாச் சிங்களவர்களும் வெள்ளை உடையில்தான் போவார்கள் அந்த மலைக்கு...

ஒரு முடிவுக்கு வரமுடியாத மாலினி சிங்காரத்திடம் கேட்டாள்... "எந்த சீலய கட்டிக்கிரது?..."

சிங்காரம் அவளுடைய பிரச்சனை புரியாமல் புன்னகையோடு சொன்னான்... "உனக்குத்தான் எல்லா சேலயும் நல்லா இருக்குமே!' நீ விரும்புனத கட்டிக்க..."

மாலினிக்கு தர்மசங்கடமாகியது. அவள் கேட்டதன் அர்த்தமே வேறு... ஆனால் அதனை நேரிடையாக சொல்ல முடியாமல் தவித்தாள். பிறகு தயங்கித் தயங்கி சொன்னாள்... "நான் அதுக்குக் கேக்கல்ல... சிறிபாதம் போரதுன்னா வெள்ளையாதான் போவாங்க... நான் வெள்ள சேல உடுத்தலாமா?..."

சிங்காரத்திற்கு அப்போதுதான் அவள் கேட்பதன் அர்த்தமும் தவிப்பும் புரிந்தது. சிங்களவர்கள் கோயிலுக்குப் போனாலும் செத்த வீட்டிற்குப் போனாலும் வெள்ளையாக உடுத்தித்தான் போவார்கள். தமிழர்கள் வெள்ளை நிறத்தை பெண்கள் விஷயத்தில் 'அமங்கலமாக' கருதுவார்கள். அதிலும் ஒரு பெண் வெள்ளை உடையில் இருந்தால் அவளை விதவையாக...

வெள்ளை ஒரு நிறம். ஆனால் இந்த மனிதர்கள் அதில் ஒவ்வொரு விதவிதமான அர்த்தத்தை வகுத்து வைத்திருக்கிறார்கள். மாலினி ஒரு சிங்களப் பெண் என்றாலும் அவள் புகுந்திருப்பது தமிழ் பேசும் சமூகத்தில்...

சில விநாடிகள் யோசித்த சிங்காரம் ஒரு முடிவுக்கு வந்தவனாக சொன்னான்.... "உன் விருப்பப்படியே வெள்ள சேல உடுத்திவா..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலினிக்கு மனதுக்குள் மகிழ்ச்சி கொப்பளித்தது... அவள் வெள்ள சேலை உடுத்தி, வெள்ளை ரவிக்கைப் போட்டு, வெள்ளை நிற பாசிமாலை கழுத்தில் போட்டு, சிங்காரத்தின் முன்னே வந்து நின்றபோது அவன் அசந்துபோய் விட்டான். வந்து நிற்பது மாலினி அல்ல ஒரு வெள்ளைத் தேவதை என்று எண்ணினான். அவளின் வெள்ளைநிறச் சேலை அவனை எங்கோ அழைத்துச் சென்றது.

மெள்ள நகர்ந்த சிங்காரம் மாலினியைக் கட்டிப்பிடிக்கப் போனான்.... பின்வாங்கிய அவள் அப்போது சொன்னாள்... "மலைக்குப் போய்திரும்பும்வரை எல்லா வகையிலும் விரதம் இருக்க வேணும்..."

"எல்லா வ்கையில்னா?..." சிங்காரம் கேட்டான்.

"சாப்பாட்டில் மட்டுமல்ல எல்லா விசயத்திலயும்தான்..." என்று புன்னகைத்தாள் மாலினி.

அன்று பஸ்ஸெடுத்து, ரயில் பிடித்து இருட்டும்போது மலையடிவாரத்திற்குப் போய்விட்டார்கள் அவர்கள். மலையடிவாரத்தில் குளிரத் தொடங்கியது. சிங்களவர்களும் தமிழர்களுமாக ஏராளமான பேர் வரிசையாக மலையேறினார்கள். அவர்களோடு மாலினியும் சிங்காரமும் இணைந்தார்கள்.

அந்த மலைக்கு பல பெயர்கள். தமிழர்கள் சிவனொளி பாதமலை – சிவனடிபாதமலை என்றும் சிங்களவர்கள் ஸ்ரீபாத என்றும் அழைக்கிறார்கள். மலையின் உச்சியில் கல்லினால் ஆன பெரிய பாதங்கள் இரண்டு இருக்கின்றன. அதனை தமிழர்கள் சிவனின் பாதம் என்றும் சிங்களவர்கள் புத்தர் பெருமானின் பாதம் என்றும் சொல்வதோடு – நம்புகிறார்கள். கிறிஸ்தவர்களுக்கு ஆதமின் பாதம் என்பது நம்பிக்கை... தற்போது மலை உச்சியில் ஒரு பௌத்த விகாரை கட்டப்பட்டிருக்கிறது.

இரவோடு இரவாக மலையேறினார்கள். மலையேறுகிற சிங்களவர்கள் 'சாது... சாது...' என்று கோரஸ்ஸாக சொல்லிக் கொண்டே போனார்கள்.

மாலினி முற்றும் முழுதாக ஒரு சிங்களப் பெண்ணாக மலையேறிக் கொண்டிருந்தாள். சிங்காரம் அதனையிட்டு ஒன்றும் நினைக்கவில்லை. தன் தாய், தந்தை, சுற்றம் பிரிந்து அவனோடு வந்து ஒரு தமிழ்ப் பெண்ணாக இருந்த அவள் இன்று இந்த மலையேறும் போது சிங்களப் பெண்ணாக இருக்கட்டுமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையேறும்போது எல்லோரும் ஆங்காங்கே ஓய்வு எடுத்துக் கொண்டார்கள். சிலர் குளிருக்கு இதமாக 'டீ' குடித்தார்கள். சிங்காரம் வழிநெடுக ஓய்வு எடுக்கும் போதெல்லாம் 'டீ' குடித்தான். மாலினி பச்சைத் தண்ணீர்கூட குடிக்காது மலையேறினாள். மலையேறிய பின்னர் வாயை நனைப்பது என்று ஒரு விரதமே இருந்தாள் அவள்.

இரவு முழுக்க மலையேறியவர்கள் விடியும்போது மலை உச்சியில் இருந்தார்கள். மலை உச்சியில் இருந்து சூரியனின் உதயத்தைக் கண்டு மயங்கினார்கள். தங்கப் பிழம்பாய் ஜொலித்தது சூரியன். அதன் அழகை வர்ணிக்க வார்த்தைகளே இல்லை...

மலை உச்சியில் புனிதமான பாதங்களைத் தரிசித்த மாலினி அங்கே தொங்கிக் கொண்டிருந்த 'மணி'யில் ஒரு தடவை அடித்தாள். சிங்காரத்தையும் மணி அடிக்கச் சொன்னாள். மறு தடவை 'மணி' அடிக்கப் போனபோது மாலினி அவனை தடுத்து விட்டாள்...

"ஒரு தடவைக்கு மேல் மணி அடிக்க வேணாம்!..."

"ஏன்...?" புருவங்களில் வியப்பு மேலிடக் கேட்டான் சிங்காரம்.

"ஒரு தடவை வந்ததுக்குதான் ஒருதடவை மணி அடிக்கணும்! ரெண்டு தரம் வந்தா ரெண்டு தரம் அடிக்கணும்..." சிங்காரத்தின் காதில் மட்டும் கேட்கிற மாதிரி சிங்களத்தில் சொன்னாள்.

அப்போது மூன்று தடவை 'மணி' அடித்தார் ஒருவர். கூடியிருந்த கூட்டம் 'சாது, சாது' என்று சத்தம் எழுப்பியது. அவர் மூன்று தடவை மலையேறியிருக்கிறார் என்பதுதான் அதன் அர்த்தம்.

மாலினி சிங்காரத்திடம் சொன்னாள்... "இந்த மலைக்கு மூன்று தடவை வரணும். வந்தா நல்லது..."

"வரலேன்னா...?" சிங்காரத்தின் அந்தக் கேள்வி மாலினியைத் தடுமாற வைத்தது. பதில் சொல்லத் தெரியவில்லை அவளுக்கு. பிறகு சமாளித்தாள்... "அதுக்கு என்ன பதில்னு தெரியல்ல... ஆனா மூணு தடவை வந்தா நல்லதுங்கிரது மட்டும் எனக்குத் தெரியும்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ வர்ரதுன்னா மூணுதடவை என்னா நூறுதடவை வருவேன்..."

மாலினியின் முகத்தில் பரவசம் பொங்கியது.

அடுத்த நாள்... மலையடிவாரத்திற்கு வந்த அவர்கள் ஒரு யாத்ரீகர் மண்டபத்தில் தங்கினார்கள். அன்று இரவும் அங்கே தங்கினார்கள். குளிர் கொஞ்சம் அதிகம்தான். போர்த்திக் கொண்டிருப்பது போதவில்லை. மாலினி போர்த்தியிருக்கும் போர்வையை இழுத்து அதில் நுழையப் போனான் சிங்காரம். மாலினிக்குத் தெரியும்.... இதனை இப்படியே விட்டால் உடம்போடு உடம்பாக ஒட்டிக் கொள்வான்...

போர்வையை இழுத்துப் பிடித்துக் கொண்ட மாலினி "இந்த வெளயாட்டெல்லாம் வீட்டுக்கு போய் வைச்சிக்கலாம்" என்றாள்.

சிங்காரம் பரிதாபமான முகத்தோடு பதிலேதும் பேசாமல் குளிரைத் தாங்கிக் கொண்டே தூங்கிப் போனான்...

"சிங்காரம்! சிங்காரம்!..." மெல்லிசாய் எங்கிருந்தோ ஒரு குரல் ஒலிக்க 'சிவனொளிபாதமலை'யில் இருந்த தன் நினைவுகளை மீட்டுக் கொண்டு அழகமலைக்கு வந்தான்...

யாரோ தன்னைக் கூப்பிடுகிறார்கள் என்பது தெரிந்தது அவனுக்கு. அது யார்... என்று பார்ப்பதற்காக எழுந்து மல்லிகைத் தோட்டத்து 'கேட்'டைப் பார்த்தான். 'கேட்'டருகே எழுத்தாளர் பாலா நின்று கொண்டிருந்தார்.

## 26

தன்னை ஏன் எழுத்தாளர் பாலா தேடி வருகிறார் என்ற கேள்வி மனதுக்குள் விசுவரூபமாய் எழுந்து நிற்க சிங்காரம் அதனை வெளிக்காட்டாமல் அவரை எதிர்கொள்ள மல்லிகைத் தோட்டத்து 'கேட்'டை நோக்கி நடந்தான். அதற்குள் 'கேட்'டைத் தாண்டி வந்து கொண்டிருந்தார் எழுத்தாளர் பாலா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் மரக்கட்டை 'பெஞ்சில்' உட்கார்ந்தார்கள். சில நிமிடங்கள் மௌனமே நிலவியது அங்கே... எழுத்தாளர் பாலா அழகமலையைப் பார்த்துக் கொண்டிருந்தார். மலையும், நதியும், கடலும் பார்க்கப் பார்க்க சலிப்புத் தட்டாத இயற்கையின் அற்புதங்கள்... சிங்காரத்தின் நிலை, தடுமாற்றத்தில் இருந்தது. என்ன செய்வது?... எதைப் பேசுவது?... என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

"சிங்காரம்! உன்ன் தேடித்தான் வர்ரேன்... ஒரு விசயம் பேசணும்..."

'என்ன விசயம்' என்பது போல் இருந்தது சிங்காரத்தின் பார்வை. அவனுக்குப் பக்கத்தில் இருந்த 'டீ' ஆறிக் கிடந்தது. அதனைப் பார்த்தார் எழுத்தாளர் பாலா...

"டீ குடிக்கலியா...?"

"கொஞ்சம் குடிச்சேன்..."

எழுத்தாளர் பாலா ஏன் தன்னைத் தேடி வந்திருக்கிறார் என்று அவனுக்குப் புரியவே இல்லை... ஆனால் அதற்குள் அந்தப் புதிரை விடுவிக்குமாப் போல் பேசத் தொடங்கினார் அவர்...

"சிங்காரம்! நேரடியாகவே பேசுரேன். தப்பா எடுத்துக்க மாட்டேன்னு நெனைக்கிறேன். நீ செய்யிரது கொஞ்சமும் சரியில்ல..." என்ற எழுத்தாளர் பாலா ஒரு விநாடி மௌனமாய் இருந்துவிட்டு அந்த மௌனத்தின் மூலம் சிங்காரத்தின் உள்ளத்தில் பல்வேறு எண்ணங்களைக் கிளறிவிட்ட பின்னர் தொடர்ந்தார்...

"நீ மாலினிய விட்டு ஒதுங்கிப் போற... அது எந்த விதத்திலயும் சரியில்ல... நியாயம் இல்ல... அது உன்னுடைய குடும்ப விவகாரம். ஆனாலும் ஒரு நண்பங்கிற முறையில பேசுரேன். உன்னயே நம்பி வந்த மாலினிய எக்காரணம் கொண்டும் ஒதுக்கக் கூடாது... அவ மனசு நோக நடக்கக் கூடாது... உன்னைய நம்பி வந்த அவள நீ இப்ப ஒதுக்கினா உனக்கும் தமிழ் ஆளுகள அடிக்கிற கலவரக்காரனுக்கும் வித்தியாசம் இல்ல..."

கொஞ்சம் சூடாகவே பேசி விட்டார் எழுத்தாளர் பாலா. பிறகு தானே சாந்தமடைந்த அவர், "ஆமா மாலினிய நீ ஒதுக்கிறதுக்கு என்ன காரணம்?... அதை நான் தெரிஞ்சிக்கலாமா?..." என்று கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்காரம் பதில் பேசவில்லை. அவர் ஏன் தேடி வந்திருக்கிறார் என்பதற்கு பதில் கிடைத்துவிட்டது. அந்த நிமிடத்தில் பாலா பரிசளித்த குத்து விளக்கும், குங்குமச் சிமிழுக்குள் இருந்த புதுக்கவிதையும் ஞாபகத்திற்கு வந்தது. அதிலும் கடைசி வரிகள் ஆணி அடித்தது போன்று நெஞ்சில் நின்றன...

"இந்த விளக்கு
இந்தத் திரி
இந்த ஒளி
இவைகள் விரட்டுகின்ற
இருட்டுக்கும் பேதமில்லை!

ஆனால்
இதனிடையே வாழ்கிற
இந்த மனிதர்கள் மட்டுமே
பேதமாய் போனார்கள்..."

இங்கே பேதமாய்ப் போனது யார்?... சிங்காரத்தின் நெஞ்சுக்குள் எண்ணங்கள் கடல் அலையாய் மேல் எழுந்து நின்றன.

"என்ன காரணம்... சொல்லு சிங்காரம்?" இம்முறை சாந்தமாகவே கேட்டார் பாலா.

ஆனால் மௌனமாகவே இருந்தான் சிங்காரம். அந்த மௌனத்தின்போது தனக்குள் கேட்டுக் கொண்டான்... 'ஆம், நான் ஏன் மாலினியை ஒதுக்கி வைத்திருக்கிறேன்?' அவனைப் பொறுத்தவரையில் ஒரு பதில் அந்தக் கேள்விக்கு இருக்கிறது. ஆனால் அது ஏனோ தெரியவில்லை... வெளியே சொல்கிற மாதிரி இல்லை.. அந்தப் பதிலை எப்படி சொல்வான்?...

பாலாவின் கேள்விக்கு நீண்ட நேரமாக பதில் சொல்லவில்லை சிங்காரம்... அவன் பதில் சொல்லாதது தனக்கு ஒரு வெற்றி – இவனை ஒரு வழிக்கு கொண்டு வரலாம் என்று நம்பினார் பாலா.

"சிங்காரம்! நீ சொல்லாலும் செயலாலும் உயர்ந்திருக்க...! உன்ன உசரமான இடத்தில வைச்சிருக்கேன். சுயமா சிந்திக்கிற... சுயமா சிந்திச்சித்தான் மாலினிய மனைவியாக்கிட்ட...! அப்படியான நீ மாலினி விஷயத்தில் தவறான முடிவெடுத்திராதே... சிந்திச்சிப் பாரு...!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போதும் சிங்காரம் மௌனம்தான்....

மறுபடியும் பாலா பேசினார்... "மாலினிய ஒதுக்கிறதும், சேர்த்துக்கிறதும் உன் சொந்த விஷயம்... ஆனா நான் மனிதங்கிற முறையில் – ஒரு நண்பங்கிற முறையில் உன்னோட பேசினேன். இதுக்கு மேல எந்த முடிவும் எடுக்கிரது உன் முடிவு! ஆனா உங்க ரெண்டுபேர் பிரச்சனையில் நான் உன் பக்கம் இருப்பேன்னு மட்டும் நீ நினைக்காதே! மாலினி சிங்களப் பெண்ணாக இருந்தாலும் அவ பக்கம் நியாயம் இருக்கிரதுனால அவ பக்கம்தான் இருப்பேன்!..." பாலா உறுதியோடு வார்த்தைகளை உதிர்த்தார்.

சிங்காரம் தலை குனிந்தவாறு இருந்தான்.

"சிங்காரம்! இனி உன்ன சந்திச்சா மாலினியோடதான் சந்திப்பேன்..." என்ற பாலா எந்த பதிலுக்கும் காத்திராமல் 'விறுவிறு'வென்று போய்விட்டார்.

சிங்காரம் எதுவும் பேசமுடியாதவனாக இருந்து விட்டான். அவன் நெஞ்சுக்குள் குமுறல்கள்... கரையில் மோதிமோதி திரும்பும் கடல் அலையாய் எண்ணங்கள்... 'மாலினியோடு தான் கோபமாய் இருப்பது பாலாவிற்கு எப்படி தெரியும்?... ஒரு வேளை மாலினி சொல்லியிருப்பாளோ?... பாலா சொன்னவைகள் நியாயமாக இருந்தாலும் அவன் இன்னமும் அவளை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை... தமிழர்களை இங்கே வெட்டிக் கொன்றார்கள் – உயிரோடு எரித்தார்கள் – மானபங்கப்படுத்தினார்கள் – தமிழர் சொத்துக்களை சூறையாடினார்கள்... இந்த 'அக்கிரமங்கள்' பாலாவின் கண்ணில் படவில்லையா? இங்கு இந்த பெரும்பான்மை இனத்தவர் செய்த 'அக்கிரமங்களை'ப் பார்க்கிறபோது நான் என்ன செய்து விட்டேன்? மாலினியை ஒதுக்கி வைத்திருக்கிறேன். இது தவறா? எவரும் செய்துவிடாத குற்றமா என்ன?...'

எங்கிருந்தோ ஒரு தைரியம் மலையில் இருந்து உருண்டு விழுந்த கல்லாக சிங்காரத்திற்கு நெஞ்சுக்குள் விழுந்தது. மாலினியை ஒதுக்கியது ஒதுக்கியதுதான்... அந்த முடிவில் எந்த மாற்றமுமில்லை... இந்த அகதி முகாமில் தனக்குக் கொடுத்த வேலை முடிந்ததும் அந்த அகதி முகாமைவிட்டுப் போய் விடவேண்டும். அதுதான் இப்போதைய பிரச்சனைக்குச் சரியான முடிவு என்று ஒரு முடிவுக்கே வந்தான் அவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிகைத் தோட்டத்தை விட்டு சிங்காரம் வெளியே போனபோது மாலினிமீது கோபம் வந்தது சிங்காரத்திற்கு... எழுத்தாளர் பாலாவிடம் தன்னைப் பற்றிப் புகார் செய்தது அவள்தான். இல்லாவிட்டால் ஒலிபரப்பு வேலையைவிட்டு வருவாரா என்ன?... இதனை இப்படியே விடக்கூடாது... பிச்சைக் கிழவனிடம் ஆஸ்பத்திரிக்குப் போய் சொல்லியிருக்கிறாள், இன்று பாலாவிடம்...

அவனுக்குள் ஒரு ஆவேசம் கிளர்ந்து எழுந்தது... இதற்கு ஒரு முடிவு கட்டவேண்டும்.

கோயிலுக்குள்ளே போய் மாலினியைத் தேடினான் அவன். அரைமணித் தியாலத்திற்குப் பிறகு அவளைக் கண்டுபிடித்தான். பிள்ளையார் கோயிலின் பின்புறத்தில் சுவரோடு சாய்ந்தவாறு உட்கார்ந்திருந்தாள் மாலினி...

அவளருகே போய் "மாலினி" என்றான். அவன் குரலில் அதட்டல் இருந்தது.

மாலினி நிமிர்ந்து பார்த்துவிட்டு மெதுவாக எழுந்து நின்றாள். ஆளே மாறிப் போயிருந்தாள். அவன் அவளுக்கு மட்டும் கேட்கிற குரலில் சொன்னான்... "உனக்கும் எனக்கும் உறவு பிரிந்துவிட்டது. நீ யாரிடம் சொன்னாலும் இனி நாம் சேர்ந்து வாழ முடியாது! என்னைத் தொந்தரவு செய்யாதே!..."

பதிலுக்குக்கூட காத்திராமல் அவன் நடந்தான். மாலினி அழுதாள். அவள் கண்களில் இருந்து கண்ணீர் வரத்தொடங்கியது...

## 27

கீழ்த்திசையில் அந்தக் கதிரவன் பயணத்தைத் தொடங்குவது எப்படித்தான் இந்தப் பறவைகளுக்குத் தெரியுமோ?... அவைகள் தங்கள் மொழியில் இங்கே காலை வாழ்த்துப் பாடிக் கொண்டிருந்தன. காகங்கள் சில அகதி முகாம் அமைந்திருந்த அந்தக் கோயிலைச் சுற்றிப் பறந்தவாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைந்தன. வெள்ளைச் 'சில்க்' துணியால் மூடியிருந்ததைப் போன்று அழகமலையை மூடியிருந்த பனிப்படலம் மெல்ல விலகிக் கொண்டிருந்தது. வீதியில் ஒன்றிரண்டு வாகனங்கள் நகரத் தொடங்கின. சைக்கிள்கள் பல ஓடிக்கொண்டிருந்தன...

கோயில் 'கேட்' திறக்கப்பட்டுவிட்டது. கோயிலுக்குப் பக்கத்தில் உள்ள டீக்கடைகள் திறக்கப்பட்டதற்கான அடையாளமாக வானொலிகள் பாடிக் கொண்டிருந்தன. பாடல்களை வைத்தே கடைக்காரர் என்ன மொழி பேசுவார்? அல்லது என்ன மதம்? என்பதைக் கண்டுபிடித்துவிடலாம். ஒரு கடை வானொலி 'பிரீத்' ஓதிக் கொண்டிருந்தது; அது சிங்களவரின் கடை. மற்ற கடையில் தமிழ்ப்பாடல்... அது முஸ்லீம் அன்பரின் கடை... தமிழர்களுக்கு எதிரான கலவரம் நடக்கிறபோதுகூட தமிழ்ப்பாடலை துணிந்து கேட்பவர்கள் முஸ்லீம்கள். தமிழர்களின் கடைகள், வீடுகள் கலவரத்தினால் எரிக்கப்பட்டதால் நகர வீதிகளில் தமிழ் பேசவே பயந்தார்கள். வழக்கமாக தமிழ் பேசும் மாந்தர்கள் வேட்டி சட்டையில், நெற்றியில் விபூதிப் பட்டையில், குங்குமப் பொட்டில், சந்தனப்பொட்டில் 'கலாசார' தமிழர்களாக இருந்தவர்கள், இப்போது வெறும் நெற்றியோடு பெரும்பான்மை சிங்களவர்கள், முஸ்லீம்கள் அணியும் சாரத்தோடு (கைலி) இருந்தார்கள். எப்போதும் வேட்டி, சட்டையோடு பார்த்தவர்களை இப்போது சாரம், சட்டையோடு பார்க்கிறபோது 'என்னவோ' போலிருக்கிறது...

அகதி முகாமில் அமைதி கலைந்து கொண்டிருந்தது. ஆங்காங்கே பேச்சுக் குரல்கள் எழுந்தன... குழந்தைகளுக்குப் பால் கலக்குவதற்காக 'சுடுதண்ணீருக்கு' அலைந்தார்கள் தாய்மார்கள். சமையல் கட்டில் ஒரு பெரிய அண்டாவில் தண்ணீர் சுட்டுக் கொண்டிருந்தது... சமையல் கட்டைச் சேர்ந்தவர்களுக்கும், தொண்டர்களுக்கும் அந்த சுடுதண்ணீரில் 'டீ' போட்டுக் கொண்டார்கள்... அகதிகளுக்கு காலைச் சாப்பாட்டோடுதான் 'டீ' கிடைக்கும். கையில் சில்லறை உள்ளவர்களுக்கு 'கேட்' தாண்டிப் போனால் 'டீ' கிடைக்கும். அப்படியே ஒரு 'தம்' அடித்துக் கொள்வார்கள். சிலருக்கு 'டீ'யோடு 'தம்' அடித்தால்தான் அன்றைய பொழுதே விடிந்ததுபோல் இருக்கும்...

கோயில் காரியாலயத்தில் படுக்கையில் கிடந்த சிங்காரம், ஜன்னலோரத்தில் போகிறவர்களின் பேச்சுக் குரலால் விழித்துக் கொண்டான்... ஜன்னலோரத்தில்தான் அவனுக்குப் படுக்கை... பலபேர் அங்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்திருந்தார்கள். எல்லோரும் அவனைப் போல் தொண்டர்கள். அவனைத்தவிர மற்ற எல்லோரும் 'அடித்துப் போட்டதைப்'போல் தூங்கிக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவனோ சின்ன சத்தத்திலேயே விழித்துக்கொண்டு விட்டான். இரவில் படுத்தால் உடல்தான் படுக்கையில் கிடக்கிறதே தவிர உள்ளம் 'விழி'த்துக் கொண்டு கிடக்கிறது. மாலினியிடம் 'உனக்கும் எனக்கும் உறவு பிரிந்து விட்டது' என்று வாயால் அடித்துச் சொல்லி விட்டாலும் இந்த உள்ளத்தில் மாத்திரம் ஏனோ இன்னமும் குமுறல்கள், எண்ணங்கள்...! திரும்பத் திரும்ப அவள் உருவமே இரவில் நெஞ்சில் மிதக்கின்றது... 'அசதி'யினால் தூங்குகிற நேரம் தவிர ஏனைய நேரத்தில் இதே பிரச்சனைதான்...

வானம் இப்பொழுது நீலநிறமாகிக் கொண்டிருந்தது. கோடிக்கணக்கான மின்விளக்குகளைத் தோற்கடிக்கும் ஒரே ஒரு விளக்காக சூரியனை கிழக்கில் ஏற்றி வைத்தது இயற்கை... நேரம் ஆகஆக அகதி முகாம் சுறுசுறுப்பாகியது. ஆற்றுக்கும், கிணற்றுக்கும், பீலியடிக்கும் குளிக்கப் போயிருந்த அகதிகள் முகாமுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள்.

கோயில் ஒலிபெருக்கி தன் வேலையைத் துவங்கியது. எழுத்தாளர் பாலா காலை வணக்கம் சொல்லிப் பக்திப் பாடல்களை மெல்லிய சத்தத்தில் ஒலிபரப்பினார்... சிங்காரம் கல்யாண மண்டபத்தருகே இருந்த தற்காலிக கொட்டகைக்கு வந்தான். அவன் அகதிகளைப் பதிவு செய்கிற வேலையைத் தொடங்கப் போகின்றான்.

ஒலிபெருக்கி அகதிகளைப் பதிவு செய்யும்படி கேட்டுக் கொண்டது. சில நிமிடங்களுக்குப் பின்னர் அது 'நாலந்தை தோட்டத்தைச் சேர்ந்தவர்கள், கல்யாண மண்டபத்தருகே இருக்கிற கொட்டகையில் அகதிகளாகப் பதியும்படி' அழைப்பு விடுத்தது...

அந்த ஒலி பெருக்கியின் குரல் சிங்காரத்தின் மனதில் சின்ன நெருடலை உண்டாக்கியது... அது எழுத்தாளர் பாலாவின் குரல்.

மாலினி திரும்பவும் பாலாவைப் போய்ப் பார்த்திருப்பாளா? பார்த்திருந்தால்?...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போதுதான் அவனுக்கு பாலா சொன்னது நினைவுக்கு வந்தது... 'சிங்காரம் உன்ன சந்திச்சா இனி மாலினியோடத்தான் சந்திப்பேன்...'

அப்படியானால் எழுத்தாளர் பாலா இங்கே வரவேமாட்டார். அவர் வரவேண்டுமென்றால் மாலினியோடு சேர்ந்து இருக்க வேண்டும்! அது இந்த ஜென்மத்தில் நடக்காது!...

மாலினி பாலாவைப் போய்ப் பார்த்தாலும் சிங்காரத்திற்குக் கவலையே இல்லை. சிங்காரம் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். மேஜை நிறைய வெள்ளைப் பேப்பர்கள். தலைக்கு மேலே தகரத்தை கூரையாக போட்டிருந்தார்கள். சூரியனின் வெப்பக் கரங்கள் அந்தக் கூரையைச் சூடாக்கின... அதைப்பற்றி அவன் கவலைப்படவில்லை. தோட்டத்தில் நிழலுக்கு கீழேயே அவனுக்கு வேலை...? இந்த வெய்யில், வெட்கை எல்லாம் அவனுக்குப் பழகிப்போன விஷயங்கள்...

சிங்காரம் இருந்த மேஜையைக் குறிவைத்து ஒரு வரிசை நின்றது. அந்த வரிசையை சிங்காரம் எடை போட்டான். குழந்தைகள், வாண்டுகள், கர்ப்பிணிப் பெண்கள், தாயின் இடுப்பைவிட்டு இறங்காத மழலைகள் என குடும்பம், குடும்பமாக நின்று கொண்டிருந்தார்கள். பதிகிற இடத்தில் கைக்குழந்தைகளுக்கு என்ன வேலை? பதிய வேண்டும் என்பதற்காக எல்லோரும் குடும்பமாக நிற்கிறார்கள் போலும்!

நாற்காலியை விட்டு எழுந்த சிங்காரம் அவர்கள் அருகே போனான்... "எல்லாரும் வெய்யில்ல நிக்காதீங்க...! ஒரு குடும்பத்துக்கு ஒருத்தர் வரிசையில நின்னா போதும்! மத்தவங்க பதியிர நேரம் வந்தா போதும்..."

அவன் அப்படிச் சொன்னதும் வரிசையில் இடநெருக்கடி குறைந்தது. குழந்தைகள், வாண்டுகள், கர்ப்பிணிப் பெண்கள் நகர்ந்து போய் விட்டார்கள். இப்போது குடும்பத்திற்கு ஒருத்தரே நின்றார்கள்.

சிங்காரம் பதியத் தொடங்கினான்... அவனுக்குத் துணையாக இன்று ஒரு வயதானவர் இருந்தார். நேரம் ஆகஆக சூரியன் பூமியை நோக்கி விழுந்து கொண்டிருப்பதைப் போன்று வெப்பம்! அடிக்கடி 'தாகமாக இருக்கு தம்பி' என்று சொல்லிவிட்டு அந்த வயதானவர் தண்ணீர் குடித்துவிட்டு அவனுக்கும் கிளாஸில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய பொழுது சூரியன் கோபத்தினால் உடம்பில் வியர்வை பூத்ததோடு ஓடியது. சூரியன் வானில் இருக்கும்வரை பதிந்தான். மின்விளக்குகள் ஏற்றப்பட்டதும் சிங்காரம் பதிவதை நிறுத்தினான்.

கோயில் காரியாலயத்தில் பதிந்ததைக் கொடுத்துவிட்டு அங்கே உள்ள 'பாத்ரூமில்' குளித்து பின் மல்லிகைத் தோட்டத்திற்குப் போனான் சிங்காரம்.

கோயிலை விட்டு வெளியே போகமுடியாது. 'கேட்' மூடப்பட்டது மட்டுமல்ல, ஊரடங்குச் சட்டம் வேறு இருந்தது... வீதி 'வெறிச்'சோடிக் கிடந்தது. எப்போதாவது பொலீஸ், ராணுவ வண்டிகள் மாத்திரம் ரோந்து போய்க் கொண்டிருந்தன... மற்ற நேரங்களில் வீட்டுக்குள்ளே இருக்க முடியாதவர்கள் வீட்டு வாசல் கதவைச் சாடையாகத் திறந்து வைத்துக் கொண்டு, உட்கார்ந்திருப்பார்கள். பொலீஸ் வண்டியைக் கண்டதும் அவசர, அவசரமாய் எழுந்து வீட்டுக்குள்ளே போய் கதவை மூடிக் கொள்வார்கள். இது வழக்கமான காட்சி... வண்டியில் இருக்கும் பொலீஸ் அதைப் பாத்துவிட்டுப் பேசாமல் போவான். சில நேரத்தில் ஆத்திரம் கொள்ளும் போலீஸ்காரன் வண்டியில் இருந்து இறங்கி மூடிக் கொண்ட வீட்டுக் கதவை காலால் உதைத்து கெட்ட வார்த்தைகளால் திட்டிவிட்டுப் போவான்...

மல்லிகைத் தோட்டத்திற்குள்ளே ஆங்காங்கே சிறுசிறு தூண்களில் மின் விளக்குகள் மங்கலாய் எரிந்து கொண்டிருந்தன.

மர பெஞ்சில் உட்கார்ந்த சிங்காரம் கோயிலின் பின்பக்கம் இருந்த மதிற்சுவர் வழியாக இருபக்கமும் ஏணிகள் சாத்தப்பட்டு வெற்றிலை–பாக்கு, பீடி–சிகரெட், டீ வியாபாரம் மும்முரமாக நடந்து கொண்டிருந்ததைப் பார்த்தான். இருக்கிற சில்லறையையும் அகதிகள் காலி செய்து கொண்டிருக்கிறார்கள்.

சமையல் கட்டில் இரவு சாப்பாட்டிற்கான வேலைகள் முடிந்திருந்தாலும் சத்தத்திற்கு குறைவில்லை. பல குரல்கள் ஏககாலத்தில் ஒலித்தன. அகதிகளுக்கு பரிமாறும் வேலைகள் நடந்து கொண்டிருந்தன. எல்லாச் சத்தமும் அடங்க இரவு பன்னிரண்டு ஆகலாம். ஆனால் அதற்குப் பிறகுகூட சில பேச்சுக்குரல் கேட்கவே செய்யும். மல்லிகைத் தோட்டத்தில் மலர்ந்திருக்கிற மலர்களின் நறுமணத்தை மீறி ஒரு நரகல் வாசனை எங்கிருந்தோ காற்றில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்து அவ்வப்போது மிதந்து வந்தது. நேற்று பூக்கள் வாசனை மட்டுமே இருந்தது... ஒரு நாளைக்குள் மாறி விட்டதே!... 'அவசரக்காரர்களின்' அசிங்கத்தால் வந்த வினைதான் அது! அகதிகள் சிலருக்கு அவசரத்திற்கு கழிப்பிடம் கிடைக்காததால் மல்லிகைத் தோட்டத்தின் ஒரு பகுதியே அவர்களுக்கு இப்போது கழிப்பிடமாகி விட்டது. இது போன்ற பெரிய கூட்டத்தில் இது தவிர்க்க முடியாததுதான்... ஒரே நேரத்தில் பலரும் கழிப்பிடம் தேடினால் என்னதான் செய்ய முடியும்...?

அந்த மல்லிகைத் தோட்ட சூழ்நிலையில் இருந்து விடுபட்ட சிங்காரம் மௌனமாக சிந்திக்கத் தொடங்கினான். உடனே நெஞ்சுக்குள் விழுந்த சித்திரம் மாலினியின் உருவம்தான்...!

'இது என்ன பெரிய வேதனையாக இருக்கிறது?... எவளை மறக்க வேண்டும் என்று முயன்று வருகிறோமோ அவளின் நினைவுதானே அவ்வப்போது தலைதூக்குகிறது... இதை தவிர்க்க முடியாதா?... தவிர்க்க வேண்டும் என்று முடிவு கட்டினான் அவன். மாலினியின் உருவத்தை நெஞ்சுக்குள் இருந்து அகற்றினான்...

'அவளைத்தான் கைகழுவ முடிவு செய்தாகி விட்டதே! இன்னமும் அவள் நினைவு ஏன்?'. ஒன்றை மட்டும் அவன் உறுதியாக நம்பினான்... 'அந்த முகாமில் இருக்கிறவரைக்கும் மாலினியின் நினைவு வந்து கொண்டே இருக்கும். அதனைத் தவிர்க்க இயலாது!... இதற்கெல்லாம் ஒரே வழி... அந்த அகதி முகாமைவிட்டு போய்விட வேண்டும்... கலவரம் ஓய்ந்ததும் எவருக்கும் தெரியாமல் கொழும்பு பக்கம் போய்விடலாம்...'

அன்று இரவு படுக்கையில் விழுந்தபோது இரவு பதினொன்றுக்கு மேலாகிவிட்டது... நாள் முழுவதும் வெய்யிலில் இருந்ததில் படுத்ததுமே தூக்கம் வந்து விட்டது... பக்கத்தில் படுத்திருந்தவரின் பயங்கரக் குறட்டை சத்தம்கூட அவனை ஒன்றும் செய்யவில்லை...

அதே நேரத்தில் மாலினி அதே முகாமுக்குள் இருந்தவாறு அழுது கொண்டிருந்தாள். அவளைப் பொறுத்தவரையில் எதிர்காலம் சூனியமாகிவிட்டது தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28

விடிந்து வெகு நேரமாகியும், சூரியனை இன்னும் காணவில்லை... வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. மழைவரும் போல் தெரிந்தது. ஆங்காங்கே கறுத்துப் போன மேகங்கள் வானில் நடமாடிக் கொண்டிருந்தன. வழக்கம்போல் சிங்காரம் பதிகிற வேலையை துவங்கினான். அரசாங்கம் கொடுத்த கெடுமுடிந்து விட்டிருந்தது... அதனால் வேகவேகமாக பதியச் சொல்லி விட்டார்கள்.

காலை பத்துமணியிருக்கும். அகதி முகாமில் பரபரப்பு... புதிதாக அகதிகள் லொறிகளில் திடீரென்று வந்து இறங்கத் தொடங்கினார்கள். அவர்கள் அத்தனை பேரும் ரப்பர் மரத் தோட்டத்தைச் சேர்ந்தவர்கள்...

கலவரம் அடங்கிவிட்டது என்றார்களே! இவர்கள் எப்படி இங்கே வந்தார்கள்?... அப்படியானால் கலவரம் தொடர்கிறதா?...

தன்னோடு இருக்கிற முதியவரை 'என்ன'வென்று போய் பார்த்துவிட்டு வரச் சொன்னான் சிங்காரம். அவரும் மைதானத்திற்குப் போய் பார்த்துவிட்டு பத்து நிமிடத்தில் திரும்பினார்...

"தம்பி!... கலவரம் நின்னு போச்சின்னுதான் எல்லாரும் சொன்னாங்க... அதயும் நாம நம்பினோம்... ஆனா அங்கங்க கலவரம் நடந்திருக்கு... நடக்குது... இன்னைக்கி பல தோட்டத்தில் இருந்து ஆள்க அடிபட்டு வந்திருக்காங்க..."

அந்த வயதானவரின் முகம் வாடிக்கிடந்தது. "வெள்ளக்காரன் காலத்தில ஒரு கலவரம், வெட்டுக்குத்து இருக்கல்ல தம்பி! சொதந்திரத்துக்கு பொறகுதான் எல்லா இடத்திலயும் எங்க பார்த்தாலும் கலவரம். இந்த கறுப்பனுக்கு ராச உத்தியோகம் சரிவராது தம்பி... என் அனுபவத்தில கண்டதை நான் சொல்றேன். என்னைக்கிதான் இதெல்லாம் மாறுமோ தெரியல்ல..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்காரம் சோகமாய் இருந்தான். இந்தக் கலவரம் நிற்காது போலிருக்கிறதே! என்ன செய்வதென்றே தெரியாது தவித்தான் அவன்...

அப்போது அவனைத் தேடிக் கொண்டு அங்கு வந்தார் கோயில் உபதலைவர்... "தம்பி! உங்க வேலய அடிக்கடி மாத்துரேன்னு கோவிக்காதீங்க... நீங்க எந்த வேலயும் நல்லா செய்றீங்க... அதான் உங்கள மாத்திப் போடுரேன்... இப்ப ஒங்களுக்கு வேற இடத்தில வேல தரப் போறேன். இன்னைக்கி அடிபட்டு புதூசா அகதிகள் வந்திருக்காங்க... அவங்க விபரத்த நீங்க அவசரமா பதியணும்... இந்த வேலய இவருக்கிட்ட கொடுங்க!..." என்ற அவர், தன்னோடு கூட்டிவந்த ஒரு இளைஞனிடம் அந்த மேஜையை ஒப்படைத்துவிட்டு சிங்காரத்தைக் கூட்டிக் கொண்டு போனார்...

இருவரும் நடந்து போனார்கள். அந்த வயதானவரும் சிங்காரத்தோடு நடந்தார்.

கோயில் காரியாலயத்தின் அருகே ஒரு மேஜை போடப்பட்டிருந்தது...

"தம்பி! இங்க இருந்து புதூசா வந்த அகதிகள பதிங்க தம்பி... ஒங்களுக்கு எல்லா விபரமும் தெரியும்... நான் புதூசா சொல்லத் தேவையில்ல... பதிங்க தம்பி!..."

சிங்காரத்திற்கு அந்தப் பொறுப்பில் விருப்பம் இருந்தது. புதிதாக வந்திருக்கிற அகதிகளோடு நேரிடையாக பேசலாமே!...

லொறிகளில் இருந்து இறங்கியவர்கள் வரிசையாக நின்று கொண்டிருந்தார்கள்... அனுமார் வாலைப் போல் அந்த வரிசை நீண்டிருந்தது. அதில் அதிகமானோர் கட்டிய துணியோடு வந்திருந்தார்கள். இன்னமும் அவர்கள் முகத்தில் பயம் போகவே இல்லை...

சிங்காரம் வேகமாக விபரங்களைப் பதிந்தான். அவர்களில் பலரின் முறைப்பாடு வீட்டிலிருந்து ஓடிவரும்போது எதனையும் எடுத்து வரமுடியவில்லை என்பதுதான்... மலையேறி தங்களைத் தாக்க மாட்டார்கள் என்ற தைரியத்தில் அவர்கள் எந்த முன்னேற்பாடும் செய்யாமல் இருந்திருக்கிறார்கள்.

அவர்களின் 'படபட'ப்பும், பயமும், 'முணுமுணு'ப்பும் இன்னமும் அடங்கவே இல்லை என்பதை அவர்களைப் பார்க்கும்போதே தெரிந்தது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாசமாப் போனவனுக...! இந்த மாதிரி அக்குறும்பு பன்னிட்டாங்களே... ஒன்னா திண்ணு, ஒன்னா கெடந்து, ஒன்னா இருந்து இந்த மாதிரி செஞ்சிட்டானுகளே!..." அந்தக் கூட்டத்தில் இருந்த ஒரு கிழவி ஒப்பாரியே வைத்தாள்...

சிங்காரம் "யாரு?..." என்று கேட்டான்.

"வேற யாரு தம்பி! நாட்டுல இருந்த சிங்கள ஆளுகதான்..."

சிங்காரத்திற்கு மாலினியின் ஞாபகம்தான் வந்தது...

மாலினியும் ஒரு சிங்களப் பெண்தானே!... அவளும் அந்த 'நாட்டு' ப் பகுதியில் இருந்து வந்தவள்தானே!... இனி மேல் அவளோடு... அதுதான் முடிவாகிவிட்டதே... அவள் யாரோ, அவன் யாரோ! அவன்தான் முடிவான முடிவு எடுத்துவிட்டானே...

பகல் இரண்டு மணியிருக்கும். வெய்யிலை காணவில்லை. சூரியனின் வெளிச்சம் மட்டுமே இருந்தது. குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருந்தது...

சிங்காரம் தன் வேலையில் சுறுசுறுப்பாக இருந்தான். ஆனால் அடிக்கடி கொட்டாவி விட்டான். தூக்கம் வரும் போலிருந்தது. ஆயினும் அதனை அடக்கிக் கொண்டு, பெயர் விபரங்களைப் பதிந்தான். இன்னும் கொஞ்சபேர்தான் இருந்தார்கள்...

இதுவரை இரண்டு லொறிகளில் வந்திருந்த அகதிகளைக் குறிப்பெடுத்துவிட்டான். இப்போது மூன்றாவது லொறி... அதிலும் கொஞ்சபேர்தான் இருந்தார்கள்.

அவன் பெயர், விபரம் கேட்டு பதிகின்றான்... அவன் அருகே ஒரு ஆள் வந்து நிற்கிறான்... "பேரு?..." சிங்காரம்தான் கேட்டான். வந்த பதில் அவனைத் திடுக்கிட வைத்தது.

"பியதாச..."

சிங்காரத்துக்கு அந்தப் பெயரைக் கேட்டதும் வியப்பு...! நெஞ்சுக்குள் சூழ்ந்தது. மீண்டும் பெயரைக் கேட்டான். முன்னால் நின்றவன் அதே பெயரைத்தான் சொன்னான். இன்னமும் அவன் திருப்தி பெறவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பியதாச' ஒரு சிங்களப் பெயர். சிங்களவர்களுக்கு மாத்திரமே வைக்கப்படுகிற பெயர். அப்படியானால் இவன் சிங்களவன்...

தமிழர்களுக்கு எதிராகத்தான் இந்தக் கலவரமே நடந்திருக்கிறது; நடக்கிறது... இந்த முகாமில் இருப்பவர்கள் அத்தனைபேரும் தமிழர்கள்... ஒரு சிங்களவன் ஏன் இந்த அகதி முகாமுக்கு வருகிறான்...?

பெயரைப் பதியாமல் நிமிர்ந்து பார்த்தான் சிங்காரம்...

அவனுடைய பார்வையின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டவனாக அரைகுறை தமிழில் பியதாச பேசினான்... அது அரைகுறைத் தமிழ் அல்ல, சிங்களமும் தமிழும் கலந்த ஒரு வகைத் தமிழ்... "சிங்களவனான நான் ஏன் முகாமுக்கு வந்ததுன்னு தான் நீங்க பார்க்கிரது... நான் வேரகம ரப்பர் தோட்டத்தில தமிழ் ஆளுகளோட லயத்தில இருந்து வேல செய்யிறவன். நான் கல்யாணம் கட்டினது ஒரு தோட்டத்து தமிழ் பொம்பள... பேரு லச்சிமி..."

சிங்காரத்திற்கு அந்த பதில் 'பொட்டில்' அடித்தது போலிருந்தது...

அப்போது பியதாசவுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த லட்சுமி எட்டிப் பார்த்தாள்...

அவனால் நம்ப முடியவில்லை... ரகசியமாய் ஒரு தடவை லட்சுமியைப் பார்த்தான். அவள் தமிழச்சியேதான்...

அவன் எங்கோ ஒரு மலையில் இருந்து நழுவி கீழே விழுந்து கொண்டிருப்பதைப் போன்று உணர்ந்தான். மனதில் இருந்த கோபம், ஆவேசம், வக்கிரம் யாவும் வேகமாய் கரையத் தொடங்கியது...

'சிங்களப் பெண்ணை மணந்தவர்களும் தமிழ்ப் பெண்ணை மணந்தவர்களும் அகதிகளாக வந்திருக்கிறார்கள். கலப்புத் திருமணத்தில் தேசியத்தை உருவாக்கலாம் என்று சொன்னவர்கள் எங்கே?...'

சிங்காரம் தலை குனிந்தவாறு இருந்தான். "நல்ல தாய், தகப்பனுக்குப் பொறந்தவன் இந்த மாதிரி அநியாயம் செய்யிரது இல்ல... இவனுக மனித (மனுசன்) இல்ல... யக்கா (பேய்) யக்கா...!" என்ற பியதாச பின்பக்கமாய் திரும்பி "என்ன கரச்ச வந்தாலும் நம்மள ரெண்டு பேரை பிரிக்க முடியாது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லியா லச்சிமி!..." என்றான். அது சிங்காரத்தைப் பார்த்து விடுக்கப்பட்ட அறைகூவலாய் இருந்தது...

லட்சுமி வெட்கித்து தலை குனிந்தாள். அவள் முகத்தில் ஒரே பிரகாசம்...

பியதாசவின் வீடும் எரிக்கப்பட்டது. பொருட்கள் எல்லாம் எரிந்து போய்விட்டது. அதற்காக அவர்கள் கவலைப்படவில்லை... எந்தக் கலவரம் வந்தாலும், எந்த நெருப்பு எரித்தாலும் எங்கள் உறவைத் துண்டிக்க முடியாது என்று உரத்துச் சொல்கிறார்களே. அந்த தைரியம் அவனை வெட்கப்பட வைத்தது... இத்தனைக்கும் பியதாச ஒரு சிங்களவன். அவன் நினைத்தால் இந்த லட்சுமியை கைவிட்டு சிங்களத்தியைத் தேட முடியும்.. ஆனால் அவன் அதனைச் செய்யவில்லை... 'எந்தக் கலவரமும் எங்களை எதுவும் செய்ய முடியாது என்று சொல்கிறானே...!', அவன் சிங்களவனா?... இல்லை ஒரு மனிதன்...!

பியதாசவை ஏறிட்டுப் பார்க்கத் தயங்கினான். தமிழர்களை அடிக்கிற இந்த சிங்களவர்கள் மத்தியில் இந்த பியதாச ஒரு மனிதன்...! அதற்கு மேல் ஒரு மாமனிதன்...

'அவனுடைய நிழலில் நிற்கக்கூட தனக்குத் தகுதியில்லை...' என்ற நினைப்பு சிங்காரத்தை ஒரு பாரமாய் அழுத்தியது. தன்னை மன்னிக்கக் கோருவதுபோல் அவன் கண்களையே பார்த்தான்...

அன்று மாலை... நாலு பேர் சுற்றி வரஇருந்தும், அதைப் பெரிதுபடுத்தாது சிங்காரம் மாலினியின் கண்ணீர்த் துளிகளைத் துடைத்துவிட்டு அவளை அப்படியே கட்டிப் பிடித்துக்கொண்டான். மாலினிக்கு எதுவுமே புரியவில்லை... வெளியே மழை தூறத் தொடங்கியது...

(முற்றியது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லை தாண்டா அகதிகள்
## – சிறுகதை

"யட்டவத்த தோட்டத்து லயத்தை அடிச்சி, நொறுக்கி, நெருப்பு வைச்சி, லயத்தில இருந்த சாமான், சட்டுமுட்டுகள தூக்கிட்டு போயிட்டானுக. லயத்தில இருந்த ஆளுக, புள்ள குட்டிகளோட காட்டுக்குள்ள ஓடி மறைஞ்சிட்டாங்க... தோட்டத்து தொரை எந்த நடவடிக்கையும் எடுக்கலியாம்... எல்லாம் முடிஞ்சோன்ன தோட்டத்து லொறியிலே ஆள்களை ஏத்தி மாத்தளை மாரியம்மன் கோயில்ல இறக்கி விட்டுட்டுப் போயிட்டாரு. இம்புட்டும் செஞ்சது யார் தெரியுமா?... யட்டவத்த தோட்டத்துக்குப் போற சந்தியில இருக்கிற கடைக்காரன் மகன்தான்!" – மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க ஓடிவந்த வேலு பதறியபடி சொன்னான்...

அவன் சொன்னது அத்தனையும் உண்மை! நடந்ததை நேரில் பார்த்தவன்... கண்கள் பார்த்ததை, வாய் வெளிப்படுத்துகின்றது.

ஒரு வட்டம் போட்டது போல் வேலுவைச் சுற்றி ஒரு கூட்டம்... அதில் சிங்காரம், ஆண்டிக் கிழவன் என்று ஒரே தோட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

"இந்தப் பக்கத்தில் இருந்த ஒரே ஒரு தோட்டத்தையும் எரிச்சிட்டானுகளே! கவருமெண்டும் ஒரு நடவடிக்கையும் எடுக்கல்ல..." இது ஆண்டிக் கிழவனின் அறுபது வருட அனுபவ முத்திரை.

"இதுக்குத்தான்யா இந்தியாவுக்குப் போயிடுவோம்னு சொன்னேன். எவன் கேட்டான்!..." உழைப்பில் தேயிலைக் காட்டுக்கு ஒரு பரம்பரையைத் தியாகம் செய்த பிரதிநிதியின் குரல்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அட நீ ஒண்ணு... ஏதாச்சும் கலவரம்னதும் இந்தியாவுக்குப் போயிருவோம்னு சொல்லுவீங்க, கலவரம் முடிஞ்சோன்ன அதை மறந்திடுவீங்க... ஒரு நெலையான பேச்சு நம்ம ஆளுகளுக்கு இல்ல... அதனாலதான் அடி விழுது" – இது ஒருத்தன்.

"இந்த நாட்டுலதான் எங்க பாட்டன், பூட்டன் ஒழைச்சான்!... தேயிலைத் தாளுக்கு அடியிலதான் அவங்களப் புதைச்சோம்! நாங்க ஏன் இந்த நாட்டை விட்டு போவேனும்?... ஒருத்தரும் போகக் கூடாது..." தன்னை மறந்து சிங்காரம் ஆவேசமாகச் சொன்னான்.

"ஆமாம் இவரு ஏன் இப்படி சொல்ல மாட்டாரு? வீட்டுல சிங்களத்திய வைச்சிட்டு வெளியில வீராப்பா பேசுகிறாராக்கும்.. . இவருக்குத்தான் இந்தியா போகமுடியாது! இந்தியாவில இவனை எவன் ஏத்துக்குவான்?..." சிங்காரத்தைத் தாக்க வேண்டும் என்று காத்திருந்தவனின் தாக்குதல்.

"என்னடா சொன்ன..." என்று சிங்காரம் அவனோடு மோதப் போனபோது, பக்கத்தில் இருந்தவர்கள் குறுக்கிட்டு அந்தச் சண்டையை அப்படியே அடக்கிவிட்டார்கள்.

சிங்காரம் நெஞ்சில் சுமையேறியவனாகத் தலை குனிந்திருந்தான்.

ஆண்டிக் கிழவன் அவனை ஆறுதல் படுத்துவது போலவும், மற்றவர்களுக்குப் பதில் சொல்வது போலவும் பேசினான்... "சிங்காரம் அவளை கட்டிக்கிட்டு ஒரு வருசமாச்சி! இன்னைக்கு அவ சிங்களத்தி மாதிரியா இருக்கா! அந்தக் கதையெல்லாம் இப்ப எதுக்கு?... நடக்கிற வேலைய பாருங்க... ஹூம்... ஆயிரம் கலவரம் வந்தாலும் நம்மாளுக மத்தியில ஒத்துமை வருமாங்கிறது சந்தேகம்..." ஆண்டிக் கிழவன் உள்ளதை நல்லதைச் சொல்லி அந்தப் பேச்சுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கப் பார்த்தான்...

முடியவில்லை... அடுத்த கேள்வி வெடித்துவிட்டது!

"அது சரி தாத்தா! ஏன் சிங்காரத்துக்கு சப்போட் பன்னனும்...? நம்ம லயம் எரிந்ததற்கு அவன்தான் காரணம்...! அவன் சிங்களத்திய கட்டப் போயி அவன் அண்ணன் லயத்துக்கு நெருப்பு வைச்சான்!..." என்று ஒருத்தன் பேச்சை நீட்டப் போனபோது கிழவன் இடைமறித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நம்ம லயம் நீ சொன்னமாதிரி சிங்காரத்தினால எரிஞ்சதுன்னு வைச்சிக்குவோம், அப்படின்னா மத்த லயம் யாரால எரிஞ்சிச்சி?... இது எல்லாம் நம்ம தலையெழுத்தினால நடக்குது. யாரையும் கொறை சொல்லிப் பிரயோசனம் இல்ல... என்னைக்கி வெள்ளைக்காரனை நம்பி இந்தியாவில இருந்து வந்தோமோ... அன்னைல இருந்துதான் இந்தப் பிரச்சனை!... வெள்ளக்காரன் நமக்கு ஒரு முடிவும் காட்டாம சீமைக்குப் போயிட்டான். அந்த நேரமே நாம ஒரு முடிவை வெள்ளக்காரனுக்கிட்ட கேட்டிருந்தா, இன்னைக்கி நாம நிம்மதியா வாழமுடியும். நாங்க இந்தியாவில இருந்து வந்தாலும், இந்த ஊரையே தாய் நாடா நெனச்சோம். சிலோன் பூரா பஸ், ரெயில் ரோடு போட்டது நம்ம ஆளுகதான்... அதில எத்தனையோ பேரு செத்துப் போயிட்டாங்க..."

"சிங்கமலை சொரங்கத்து சுவர்ல போயி பார்த்தா இந்த ரோடு போட்டதில எத்தனை பேர் செத்தாங்கிறது தெரியும்! அப்படி நம்ம ஆள்க உசுரை குடுத்து ஒழைச்ச நாடு இது...! ஏன் இந்த நாட்டை விட்டு நாங்க போவணும்!..."

கிழவன் அதே தோட்டத்தில் பிறந்து, கங்காணியாகி, தலைவராகி இன்று முதிர்ந்து உதிரத் தயாராக இருப்பவர். எவரும் அவருக்குத் தெரியாமல் அங்கே பிறந்ததில்லை, திருமணம் செய்ததில்லை!... அவருக்கு எந்த கட்சியின் மீதோ, சங்கத்தின் மீதோ தனிப்பட்ட பற்றுதல் கிடையாது. ஆனால் அங்கே நடக்கிற எல்லாவற்றிலும் அவர் இருப்பார்.

ஆண்டிக் கிழவன் கேட்ட கேள்விக்கு எவரும் பதில் கொடுக்காததால் அவனே அந்த வாக்குவாதத்தை முடித்து வைத்தான்... "சரி... சரி... போங்க... பேச்ச நீட்ட வேணாம்...! சிங்காரம் நீ யோசிக்காதே... அதெல்லாம் அப்படித்தான்... தைரியமா இரு!"

அந்தக் கூட்டம் மெல்ல கரைந்து போயிற்று... சிங்காரம் ரொம்பவும் சோர்ந்து போய் அகதி முகாமிட்ட கோயிலின் உள்ளே போனான்... அவன் மனம் மழை இல்லாத தேயிலைச் செடியாகக் கருகி விட்டது. தான் சிங்களப் பெண்ணான மாலினியை கல்யாணம் செய்ததை இத்தனை நாளும் நெஞ்சில் அடக்கி வைத்து குத்திக் காட்டிவிட்டான்...! மாலினி சிங்காரத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகோர்த்து ஒரு வருடத்திற்கு மேலாகிவிட்டது... அதை இன்னமும் நினைத்துக் கொண்டிருக்கிறானே!... அதே நேரத்தில் அவன் சொன்னதில் சில உண்மைகள் இருக்கத்தான் செய்கிறது! அன்று அந்த லயத்திற்கு நெருப்பு வைத்தவன் மாலினியின் அண்ணன்தான்... அவன் கையில்தான் தீவட்டி இருந்தது...!

தன்னால்தான் அந்த லயம் எரிந்து விட்டதோ...! அவன் மனம் எங்கோ பள்ளத்தில் விழுந்து கொண்டேயிருந்தது... சடாரென்று ஒரு நினைவு, வெட்டி மறைந்தது...

அவர்கள் காதல் உச்சக் கட்டத்தில் இருந்த காலம்... அந்தக் காதல் விவகாரம் எப்படியோ அப்பா காதில் விழுந்து விட்டது. அவர் அவனிடம் நேரிடையாகவே கேட்டார்... சிங்காரம் யோசித்தான்... இப்போது பொய் சொன்னாலும் பிறகு எப்போதாவது உண்மையை 'கக்க' வேண்டி வரும்! அதனால் நிஜத்தை... ஆம்! சிங்காரம் தான் மாலினியைக் காதலிப்பதாகச் சொன்னான்.

அவ்வளவுதான்... அவர் இதயம் ஸ்டோர் அடுப்பாக கொதித்தது. "இனி எனக்கு மகனில்ல... இனிமே இந்த காம்பராவுல கால் வைக்காதே என் மூஞ்சியில முழிக்காதே!..."

சிங்காரம் மறு பேச்சில்லாமல் அந்த காம்பராவை விட்டுப் போய் துரையிடம் சொல்லி வேறு காம்பராவில் குடியேறி, தன் புதுக்கதையைத் தொடங்கினான்...

அதற்கு அடுத்த வாரம் மாலினியை பக்கத்து டவுன் பொலிஸ் ஸ்டேசனுக்குக் கூட்டிப் போனான் அவன்... அங்கே இருவரும் ஒருவரையொருவர் காதலிப்பதாகவும், திருமணம் செய்ய விரும்புவதாகவும் முறைப்பாடு செய்து கையெழுத்திட்டு வந்தார்கள்...

சாதி, சமயம், மொழி என்ற வட்டத்துக்குள் வட்டம் அடித்து வாழ்ந்த மாலினியின் பெற்றோர்கள், அவருடைய சகோதரர்கள் அந்த தமிழ் இளைஞன் சிங்கள நங்கை திருமணத்தை முறியடிக்க வந்து சட்டத்திற்கு முன்னால் சரணடைந்து போனார்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்காரத்தோடு கை கோர்த்த மாலினியைப் பார்த்து அவளின் அண்ணன் நெருப்பாய் வார்த்தைகளைக் கக்கினான்... "தமிழ் பயலோடயா போற... போ?... உன்னையும் அவனையும் கவனிச்சிக்கிறேன்..." அன்று சொன்னதை இன்று செய்துவிட்டானோ?... சிங்காரத்திற்கு யோசனை யோசனையாக வந்தது.

கல்யாண மண்டபப் பக்கம் போனான். மாலினி கலங்கிய கண்களுடன் அவனருகே வந்து நின்றாள். அவன் மௌனமாக இருந்தான். ஒட்டிப் போயிருந்த அவன் உதடுகள் பிரியவில்லை...

மாலினிக்கு ஒன்றுமே புரியவில்லை... அவன் தோளில் சாய்ந்து அழுதாள்... அவளின் கண்ணீர்த்துளிகள் அவன் மார்பை நனைத்தது. ஆனால் உள் நெஞ்சை அது நனைக்கவில்லையே...!

சிங்காரத்திற்கு மாலினியைப் பார்க்கிற போதெல்லாம் அவளுடைய அண்ணனின் நினைவுதான் வருகிறது. அதனை அவனால் தவிர்க்க முடியவில்லை...

மெல்ல அங்கிருந்து நழுவிக் கூட்டத்தில் கலந்து தேரடிக்கு வந்தான் சிங்காரம்... தேர்க் கூடாரத்தை அவன் எட்டிப் பார்த்தான்... மாசி மகத்தில் ஓடுகிற தேர் அலங்கரிக்காத மணப்பெண்ணாக நின்றது.

ஒரு கணம் நினைவுக்குள் விழுந்து திரும்பினான் அவன். அந்த மைதானம்... அங்கே கலர் கலராய் பூக்கள் பூத்துவிட்டது போன்ற மக்கள் கூட்டம்... அந்த மக்களிடையே காவடி, கரக, பொய்க்கால் குதிரை இன்னும் பல கோஷ்டியினரின் ஆட்டபாட்டங்கள், வானத்தில் எதிரொலிக்கிற மாதிரி முழங்குகிற வாத்தியங்களின் இசை, அலங்கார பல்புகளின் மினுக்கங்கள், அரகரா கோஷங்கள் ஆகியன கவிஞர்கள் சொல்கிற மாதிரி அந்த இடத்தை தேவலோகமாக்கியிருக்கும்! இன்று? ஒ... அந்த மைதானம் அகதி முகாமாகிவிட்டது!...

சிங்காரம் அந்த சித்திரத் தேரில் தொங்குகிற சிறுமணி ஒன்றை அசைத்தான்... அப்போது அதிலிருந்து கிளம்பிய ஓசையில் கிளர்ந்த நினைவு கூடையில் விழுகிற கொழுந்தாக அவன் நெஞ்சில் விழுந்தது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலினியும் சிங்காரமும் அந்த கோயிலுக்கு வந்தபோது அந்தத் தேரைப் பார்த்தார்கள்... அன்று சாதாரண நாள் எவரும் இல்லை... அவன் அந்தத் தேரின் மணியை அசைத்துப் பார்த்தான்... 'கிணிங் கிணிங்' என்று அசைந்து ஒரு இதமான ஓசையைக் கொடுத்தது அந்த மணி... மாலினி தானாக அந்த மணியை அசைக்கப் போனாள்... அவளுக்கு எட்டவில்லை... அப்போது அவன் அவளின் கரத்தைப் பிடித்து இணைத்து, உயர்த்தி அந்த மணியை அசைத்தான்... 'கிணிங் கிணிங்'.

ஓ... என்னமாய் இசைக்கிறது இந்தச் சிறுமணி! அப்போது அவன் சொன்னான்... "நான் தனியா மணி அசைக்கிறதை விட இப்ப வந்த சத்தம் நல்லா இருக்கு! ஏன் மாலினி..." என்று கேட்டான். "ரெண்டு பேருகையும் சேர்ந்திருக்கே... அதனாலதான்...". மாலினி வெட்கித்து அவனுடைய மார்பில் சாய்ந்தாள்... அவன் அவளை அப்படியே கட்டிப் பிடித்து முத்தமிட்டான்...

எவனோ தேர்மணியை அசைக்க அவன் நினைவு அறுந்துவிழுகிறது... சிங்காரம் திரும்பிப் பார்த்தான்... அங்கிருந்தவன் நல்லசாமி... சிங்காரம்! இங்கதான் இருக்கிறியா? ஒன்னய எங்கெங்க தேடுறது? ஒனக்கு தெரியுமா? பாம்புக்கல் ரோட்டு கடை முதலாளிய வெட்டி, கடையில போட்டு எரிச்சிட்டானுக... அவரூட்டு மனிசியையும், புள்ளைகளையும் கெடுத்து தேயிலை தோட்டத்துல போட்டானுகளாம்...

இப்ப அவங்கள கோயிலுக்கு கொண்டாந்திருக்காங்க... சிங்காரம் ஓடினான். அவனுக்கு முன்னால் நல்லசாமி ஓடினான். இருவரும் கோயில் காரியாலயத்திற்குப் போனார்கள்... அங்கே கிழித்துப் போட்ட நாராக படுக்கையில் கிடத்தப்பட்டிருந்தார்கள்... இத்தனை நாளும் காத்து வந்ததை காவு கொடுத்து விட்டதற்கு அடையாளமாக இருந்தன அவர்கள் தேகம்...

அவனுக்கு மயக்கம் வரும்போலிருந்தது... அடுத்த சில நிமிடங்களில் அவர்கள் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டார்கள்... பாம்புக்கல் ரோட்டுக்கடை முதலாளியையா எரித்துவிட்டார்கள்? நேர்மையாக வர்த்தகம் செய்த அவரின் கரங்கள்தான் பலருக்கு அள்ளிக் கொடுத்தன... அவரையா?... ஓ... நாட்டுக்கு என்ன நடந்து விட்டது?... பெரும்பான்மை என்ற ஒரேயொரு மமதை சிறுபான்மை மக்களை அழிக்கத் தூண்டுகிறதோ! இவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னதான் செய்தார்கள்! இந்த மண்ணுக்காக உழைத்ததைத் தவிர வேறு எதுவுமே தெரியாதவர்கள்! உழைப்புக்கேற்ற கூலிக்காக மட்டுமே போராடியவர்கள்! இவர்களுக்கு அகிம்சைதான் ஆயுதம்! இவர்களை ஏன் அடிக்க வேண்டும்? ஓ... மண் மாதாவே! உனக்கு சாதி, சமய, நிற பேதமே தெரியாதாம்... அப்படியானால் இந்த உழைக்கும் மக்களின் ரத்தக் கறை உன்மீது பட்டுள்ளதே... இதனை எப்படி அனுமதித்தாய்?... ஓ... நீ கண்களை மூடிவிட்டாயா?...

சிங்காரம் மனமொடிந்த நிலையில் அந்த அகதி முகாமின் ஒரு பக்கத்தில் ஒதுங்கியிருந்தான்... அவனுக்கு மாலினியைப் பார்க்க வேண்டுமென்ற எண்ணமே வரவில்லை... மாலினி அவனை அகதி முகாமில் தேடிக் கொண்டேயிருந்தாள். சிங்காரம் தன்னை ஒதுக்கி வருகிறான் என்பது அவளுக்கு மெல்லமெல்லப் புரியத் தொடங்கிவிட்டது...

ஒரு பெரிய அண்டாவைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு வந்தது ஒரு கோஷ்டி... உண்மையில் ஒரு அண்டாவைக் குறைந்தது எட்டுப் பேர் தூக்க வேண்டும். ஆனால் அந்த அண்டாவை ஐந்து பேர் தூக்கினார்கள்.

"யாராவது ஓடி வாங்கப்பா... ஒதவி செய்ங்கப்பா..." என்று ஒருவர் கத்தினார். அவர்களைப் பார்த்துக் கொண்டேயிருந்த சிங்காரம் டக்கென்று அந்த கோஷ்டியோடு இணைந்தான்.

"ஒங்க மாதிரி நெறையபேரு வந்து ஒதவி செஞ்சா நல்லா இருக்கும்! எல்லாரும் அகதியா இருந்துகிட்டா யாரு தம்பி தொண்டரா வேலை செய்வா?..." அவர் சொன்னது அவனுக்கு நியாயமாகப் பட்டது. இந்தப் பெரிய கூட்டத்தில் ஓடியாடி வேலை செய்ய நிறையப் பேர்கள் தேவை... அதற்கு சம்பளத்திற்கு ஆள் பிடிக்க முடியாது... இங்கேதான் தொண்டர்களை உருவாக்க வேண்டும்... சிங்காரம் அந்த நிமிடத்தில் இருந்து ஒரு தொண்டராக மாறினான்...

சிங்காரத்திற்கு அந்த அகதி முகாமில் தொண்டராக வேலை செய்வது பிடித்திருந்தது. முகாமில் வேலை இல்லாமல் இருக்க குறிப்பாக, மாலினியின் பார்வையிலிருந்து விலகி நிற்க இந்தத் தொண்டர் வேலை அவனுக்கு உதவியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று பகல் உணவைப் பரிமாறுவதில் சிங்காரமும் மும்முரமாயிருந்தான். அந்த நேரத்தில் சிகிச்சை நிலையத்திலிருந்து ஒலிபெருக்கி அவனை அழைத்தது... வேலையைப் போட்டுவிட்டு என்னவோ ஏதோவென்று பதறியவாறு போனான்.

சிகிச்சை நிலையத்தில் ஆண்டிக் கிழவன் தள்ளுவண்டியில் படுத்திருந்தான். அவன் பயந்து போனான்... ஆண்டிக் கிழவனுக்கு என்ன ஆகிவிட்டது?... சிங்காரம் கையைப் பிடித்துக் கலங்கினான். "நெஞ்சிலே திடீர்னு வலிப்பா... அடிக்கடி வர்ர வலிதான்! ரெண்டு மூணு ஊசிபோட்டா சரியாப் போயிரும்!" தனக்குத்தானே கிழவன் ஆறுதல் சொன்னான்.

"இப்ப கவுருமெண்டு ஆஸ்பத்திரிக்குப் போறேன்... நீ மாலினிய கைவிட்டுராதே!... நேத்து வந்து அழுதா... உன்னய நம்பி தாய், தகப்பனை வுட்டுட்டு வந்திருக்கா... அவளை ஏமாத்திராதே... ஆமா சிங்காரம்! ஏன் அவளை நீ ரெண்டு நாளா பார்க்கல்ல..."

அவன் பொய் சொல்லி சமாளித்தான்... இந்த பொய் எத்தனை பேருக்கு கைகொடுக்கிறது! "இல்ல... தாத்தா! இப்ப நான் இங்கே தொண்டரா வேலை செய்கிறேன். அதனால பார்க்க முடியல்ல..."

"சரிப்பா அவளை கைவிட்டுராதே!"

அடுத்த சில நிமிடங்களில் கிழவனைச் சுமந்துகொண்டு அந்த ஆம்புலன்ஸ் வண்டி ஆஸ்பத்திரிக்கு ஓடியது.

மறுபடியும் ஒலிபெருக்கி அவன் பெயரைச் சொல்லி அழைத்தது. சிங்காரம் பயந்து விட்டான். ஆஸ்பத்திரிக்குப் போன கிழவனுக்கு என்னமும் ஆகிவிட்டதோ!... சிங்காரம் கோயில் காரியாலயத்திற்கு ஓடினான்...

"வாங்க... தம்பி!..."

"உங்களை நம்பி ஒரு முக்கியமான பொறுப்பை கொடுக்கப்போறேன்... இங்கே வந்திருக்கிற, வருகிற அகதிகளை நீங்க பேரு, ஊரு விபரம் கேட்டுப் பதியவேணும்... அதுதான் உங்க வேலை" கோயில் கமிட்டியைச் சேர்ந்தவர் சொன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த சில நிமிடத்தில் வெய்யில் நெருப்பாக கொளுத்திய போதும் கோயில் மைதானத்தில் மேஜை, நாற்காலி போடப்பட்டது. அதில் சிங்காரம் உதவியாளனோடு உட்கார வைக்கப்பட்டான். காலை ஒன்பது மணிக்கு ஆரம்பமாகிற வேலை அந்தி சாயும் வரை நீடித்தது. ஆரம்பத்தில் சிங்காரத்திற்கு சந்தோஷமாக இருந்தது... போகப்போக அந்த நாற்காலி முள்ளாகத் தைக்கத் தொடங்கியது. அப்போதுதான் பெரிய பதவிகள் பார்க்க அழகாக இருந்தாலும் அது முள்ளின் மேல் இருப்பதற்குச் சமம் என்பதை அவன் உணரத் தொடங்கினான். ஒரு நாளைக்கு இருபது பக்கங்கள் பெயர், விபரங்களைப் பதிந்தான். கோயிலின் உள்ளே இருந்தவர்களை தோட்டவாரியாக அழைத்துப் பதிந்தான். அங்கு பெயர் கொடுத்த ஒவ்வொருத்தரையும் பார்த்து வைத்துக் கொண்டான்.

நேற்றுவரை தோட்டங்களில் உழைத்த தொழிலாளர்கள் இன்று அகதிகளாக வந்திருக்கிறார்கள்? இவர்கள் அகதிகளா?... ஓ... எப்போதும் இவர்கள் அகதிகள் போலத்தான் இருக்கிறார்கள்... லயத்தில் பார்ப்பதற்கும் இப்போது பார்ப்பதற்கும் என்ன வித்தியாசம்?... அப்படியானால் அவர்கள் அகதிகள் தானோ! ஆம் எப்போதும் இவர்கள் நிரந்தர அகதிகள்... அவர்களுக்கு இந்த நாடு வகுத்த எல்லையே அகதிகள் வாழ்கிற எல்லைதான்... உலகில் உள்ள அகதிகளுக்கு உடை, உணவு, இடம் உழைக்காமல் கிடைக்கிறது. ஆனால் இவர்களுக்கோ அவைகள் உழைத்தால்தான் கிடைக்கிறது!

டெலிவிசன் வந்துவிட்ட காலத்தில்கூட இவர்கள் இன்னமும் விபரம் தெரியாதவர்களாகத்தான் இருக்கிறார்கள். உலகமே இன்று சொந்தமாக்கிக் கொண்ட கல்வி இவர்களுக்கு மட்டும் ஏன் அந்நியமாகிவிட்டது...?

நேற்று ஒரு சம்பவம்... ஒரு குடும்பத்தைப் பெயர் கேட்டு விபரம் பதிந்தான்...

"பேரு...?"

"முனியாண்டி..."

"வயசு...?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாற்பதுக்கு மேலே இருக்கும்..."

"நாற்பதுக்கு மேலன்னா சரியாய்ச் சொல்லுங்கோ..."

"சரியாச் சொல்லுறதுக்கு பொறந்த வருசந் தெரியாதுங்க..."

அப்புறம் சிங்காரம் முனியாண்டியை பார்த்து, குத்துமதிப்பாக வயதைக் குறித்தான்.

"என்னென்ன எரிஞ்சி போச்சி...?"

"நமக்கிட்ட பெறுமதியானது எதுவும் இல்லங்க... ஆனா சிட்டிசன்சிப் கொப்பி எரிஞ்சிபோச்சுங்க...! அதான் கவலைப்படறேன்..."

சிங்காரத்திற்கு முனியாண்டியைப் பார்த்தபோது பாவமாக இருந்தது. தன் காம்பராவில் இருந்த பொருட்கள் எரிந்ததற்கு கவலைப்படாதவன் அந்த நாட்டுப் பிரஜையாக்கப்பட்ட வெறும் காகிதம் எரிந்ததற்கு அழுகிறானே!... ஓ... வெறும் காகிதமா அது? இல்லை! இந்த நாட்டுக்காக உழைத்து வந்த இனம் நாடற்றவராக ஆக்கப்பட்டபோது அவர்கள் ஒவ்வொருவருக்கும் இந்த நாட்டில் வாழ ஒரு லைசென்ஸ்... அதற்குப் பெயர் சிட்டிசன்சிப். அது கிடைக்காதவர்கள் அகதியாக தாயகத்திற்குத் திருப்பி அனுப்பப்பட்டார்கள்! இரண்டும் கிடைக்காதவர்களோ நாடற்றவர் ஆக்கப்பட்டார்கள்...

அன்று கடைசியாக பெயர், விபரத்தை பதிந்துவிட்டு நிமிர்ந்து பார்த்த போது மாலினிதான் நின்று கொண்டிருந்தாள். மாலினி பெயர் பதியத்தான் வந்திருக்கிறாளோ?... சிங்காரம் எதுவும் பேசாமல் அவளைப் பார்த்தான். அவள் தன் உணர்ச்சிக்கு உருவம் கொடுக்காமல் கண்களால் சாடை காட்டினாள். கண்கள் கலங்கி வந்தன...

சிங்காரம் அவள் அருகே போய், "இங்கெல்லாம் வந்து தொந்தரவு கொடுக்க வேணாம்! இப்ப நான் ஒரு வேலையை பாரமெடுத்திருக்கிறேன்... நீ போயி நம்ம தோட்டத்து ஆளுகளோட இரு! நான் இங்கதான் இருக்கிறேன்..." என்று சொல்லிவிட்டு பதிவேட்டோடு காரியாலயத்திற்குப் போனான்... மாலினி அழுது கொண்டே போனாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலு நாட்களுக்குப் பின்னர் ஒரு நாள்... அன்று என்ன நடந்ததோ தெரியவில்லை, அகதிகள் லொறிகளில் வந்து குவியத் தொடங்கினார்கள். சிங்காரத்திற்கு எதுவும் புரியவில்லை. இனக்கலவரம் நின்றுவிட்டது என்று நினைத்தபோது புதிய அகதிகள் வந்து இறங்கி விட்டார்கள். அந்த மாவட்டத்தின் எல்லையில் இடம் பெற்ற கலவரத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள்தான். அவர்கள் அத்தனைபேரும் ரப்பர் மரத் தோட்டத்தைச் சார்ந்த தொழிலாளர்கள்.

சிங்காரத்துக்கு அன்று வேலை அதிகமாகிவிட்டதுபோல் தெரிகிறது. லொறிகளில் இருந்தவர்களை வரிசையாக நிறுத்தி விபரம் பதிய வைத்தார்கள். கூட்டம் அனுமான் வால்போல் வரிசையாக நின்றிருந்தது. அதில் அதிகமானோர் கட்டிய துணியோடு வந்திறங்கினார்கள். இன்னமும் அவர்கள் முகத்தில் பயம் போகவில்லை...

சிங்காரம் வேகமாக விபரங்களைப் பதிந்தான். அவர்கள் அத்தனை பேரினதும் முறைப்பாடு, எதனையும் எடுத்து வர முடியவில்லை என்பதுதான். மலையேறி தாக்கமாட்டார்கள் என்ற தைரியத்தில் அவர்கள் எந்த ஏற்பாடும் செய்யாமல் இருந்து விட்டார்கள்.

"நாசமாப் போனவனுக... இந்த மாதிரி பன்னிட்டானுகளே!... ஒண்ணா திண்ணு ஒண்ணா கெடந்து, ஒண்ணா இருந்து இந்த மாதிரி செஞ்சானுகளே! அந்தக் கூட்டத்தில் இருந்து ஒரு கிழவி ஒப்பாரி வைத்தாள்..."

"யாரு?..." என்று கேட்டான் சிங்காரம்.

"பக்கத்து நாட்டுல இருந்த சிங்களவனுகதான்..."

சிங்காரத்திற்கு மாலினியின் ஞாபகம் வந்தது. இனிமேல் அவளோடு...

பகல் இரண்டு மணியிருக்கும் சிங்காரத்திற்கு தூக்கம் வரும் போலிருந்தது... ஆனாலும் அவன் அதனை அடக்கி தன் வேலையை கவனித்தான். இன்னும் கொஞ்சப் பேர்கள்தான் இருந்தார்கள். இரண்டு லொறி அகதிகளைக் குறிப்பெடுத்து விட்டான்.

அவன் பெயர், விபரம் பதிகிறான்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பேரு...?"

"பியதாச..."

சிங்காரத்துக்கு வியப்பாக இருந்தது. மறுபடியும் பெயரைக் கேட்டான். அவன் அதே பெயரைத்தான் சொன்னான். அவனுக்குப் புரியவில்லை... பியதாச – ஒரு சிங்களப் பெயர். 'ஒரு சிங்களவன். அவன் ஏன் இந்த அகதி முகாமுக்கு வருகிறான்?...'

பெயரைப் பதியாமல் நிமிர்ந்து பார்த்தான் அவன். அரைகுறை தமிழில் பேசினான்...

"சிங்களவனான நான் ஏன் முகாமுக்கு வந்திருக்கேன்னுதான் நீங்க பார்க்கிறீங்க!... நான் வேரகம ரப்பர் தோட்டத்தில தமிழ் ஆள்களோட லயத்தில இருந்து வேல செய்யிரவன்... நான் கல்யாணம் கட்டியிருக்கிறது ஒரு தோட்டத்து தமிழ்ப் பொம்பள.. பேரு லச்சிமி..."

சிங்காரத்திற்குப் பொட்டில் அடித்தது போலிருந்தது. பியதாசவுக்குப் பக்கத்தில் லட்சுமி நின்று கொண்டிருந்தாள். சிங்களப் பெண்ணை மணந்தவர்களும், தமிழ்ப் பெண்ணை மணந்தவர்களும் அகதிகளாக வந்திருக்கிறார்கள். கலப்புத் திருமணத்தால் தேசியத்தை உருவாக்கலாம் என்று சொன்னவர்கள் எங்கே?...

"நல்ல தாய், தகப்பனுக்கு பொறந்தவனுக இந்த அநியாயம் செய்ய மாட்டானுக! ஆனா இவனுக என்னத்தைப் பண்ணினாலும் எங்க ரெண்டு பேரையும் பிரிக்க முடியாது!..." என்ற பியதாச லட்சுமியைப் பார்த்தான். இருண்டிருக்கிற அவள் முகத்தில் ஒரு பிரகாசம்.

எங்கோ அழைத்துச் செல்வது போன்ற ஓர் உணர்வு அவனுக்கு. பியதாசவை ஏறிட்டுப் பார்க்கத் தயங்கினான். தமிழர்களை அடிக்கிற சிங்களவர்கள் மத்தியில் இந்த பியதாச ஒரு மனிதன். அதற்கு மேல் ஒரு மகாத்மா.

அவனுடைய நிழலில் கூட நிற்கத் தனக்குத் தகுதியில்லை என்ற நினைப்பு அவனுக்கு... தன்னை மன்னிக்கக் கோருவது போல அவன் கண்களைப் பார்த்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று இரவு நாலு பேர் சுற்றிவர இருந்தும் அதைப் பெரிதுபடுத்தாது சிங்காரம் மாலினியின் கண்ணீர்த் துளிகளைத் துடைத்துவிட்டு, அவளை அப்படியே கட்டிப் பிடித்துக் கொண்டான்.

மாலினிக்கு எதுவுமே புரியவில்லை....

✤ ✧ ✤ ✧

- ‘எல்லை தாண்டா அகதிகள்’ என்ற தலைப்பில் நாவல் எழுதியபோது வீரகேசரி – மலையக எழுத்தாளர் மன்றம் நடாத்திய சிறுகதைப் போட்டிக்காக அதனை சிறுகதையாக எழுதினேன். அது போட்டியில் முதல்பரிசினைப் பகிர்ந்துகொண்டது....
- இச்சிறுகதை முதன்முதலில் ‘கொழுந்து’ சஞ்சிகையில் பிரசுரமாகியது. அதனை புலம் பெயர்ந்த நாடுகளில் இருந்துவரும் ‘தேடல்’, ‘தாயகம்’ ஆகிய சஞ்சிகைகள் மறுபிரசுரம் செய்தன.
- தமிழக சஞ்சிகை ‘கணையாழி’ (1991–பெப்ரவரி) தமிழகத்திற்காக மறுபிரசுரம் செய்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னுரை

இலங்கை மலையக மக்களின் – குறிப்பாக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் – வாழ்க்கை வேதனைகள் நிறைந்தது.

"எப்போதும் இவர்கள் நிரந்தர அகதிகள் போல வாழ்ந்திருக்கிறார்கள். நாடு சுதந்திரம் பெற்றதும் பெரும்பான்மை அரசியல்வாதிகளும் ஒருசில குறுகிய அரசியல்வாதிகளும் இவர்களுக்கு தந்த பரிசு இவர்களை நாடற்றவராக்கியது. சில தமிழ் அரசியல்வாதிகளும் துணைபோனதுதான் இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய கொடுமை".

இக்கொடுமைக்கு உள்ளான மக்களின் வாழ்க்கைச் சிக்கல்களையும் சிரமங்களையும், மலையக இலக்கியப் படைப்பாளிகளில் முக்கியமானவர்களில் ஒருவரான மாத்தளை சோமு ஒரு நாவலில் சித்தரித்துக் காட்டுகிறார்.

மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் எப்போதும் அகதிகளாகவே இருந்திருப்பதை மாத்தளை சோமுவின் 'எல்லை தாண்டா அகதிகள்' என்ற இந்த நாவல் உணர்த்துகிறது.

"எப்போதும் அவர்கள் வாழ்க்கைக்கு ஏங்குகிற, வாழத் துடிக்கிற அகதிகள். அவர்களுக்கு இந்த நாடு வகுத்த எல்லையே அகதிகள் வாழ்கிற எல்லைதான். உலகில் உள்ள அகதிகளுக்கு இருக்க இடம், உடுத்த உடை, உண்ண உணவு இலவசமாகக் கிடைக்கிறது. ஆனால் இந்த 'அவர்கள்' உழைத்தால்தான் இடம், உடை, உணவு கிடைக்கிறது". இந்த உண்மை ஒரு கதை மாந்தனின் சிந்தனை வாயிலாகப் புலப்படுத்தப்படுகிறது.

அந்த வாழ்க்கைநிலை கூட தட்டிப்பறிக்கப்பட்டது, இனக் கலவரத்தினால். "பெரும்பான்மை என்னும் ஒரு மமதை சிறுபான்மை மக்களை அழிக்கத் தூண்டுகிறது". இந்த மண்ணுக்காக உழைத்ததைத் தவிர வேறு எதுவும் தெரியாத மக்களை வீடற்றவர்களாக, நாடற்றவர்களாக ஆக்கிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவர்கள் என்ன குற்றம் செய்தார்கள்? என்னத்தைக் கேட்டார்கள்? தங்களின் உழைப்பைச் சுரண்டி சுகம் கண்டு வாழ்கிறவர்களுக்கு எதிராகக் குரல் எழுப்ப வேண்டியவர்களான இவர்களே அமைதியாக இருந்தும், அவர்களை ஆயுதத்தால் தாக்கி அகதிகளாக்கி விட்டதற்குக் காரணம் என்ன?... தமிழர்களாக இருப்பதும், தமிழ் பேசுவதும் தான் அவர்கள் செய்த மன்னிக்க முடியாத குற்றம்".

அமைதியாக, தங்கள் வேலைகளைக் கவனித்துக் கொண்டு வசித்த தோட்டத் தொழிலாளர்கள் சிங்கள வெறியர்களின் தாக்குதலுக்கும் – தீ வைப்பு, கொலை, கற்பழிப்பு முதலிய கொடுமைகளுக்கு – இலக்காகி, உயிர்தப்ப ஓடி ஒளிவதையும், பின்னர் கோயில்களில் அகதிகளாகச் சேர்ந்து பதிவு செய்யப்படுவதையும் இந்த நாவல் விவரிக்கிறது.

இந்த விதமான அரசியல் பின்னணியில், சாதாரண மக்களின் குடும்ப வாழ்க்கை பாதிக்கப்படுவதையும் இந்நாவல் உணர்ச்சிகரமாகப் படம் பிடித்திருக்கிறது.

சிங்காரம் என்ற இளைஞன், நேர்மையும் உழைக்கும் திறனும் கொண்ட தொழிலாளி, மாலினி என்ற சிங்களப் பெண்ணை காதலித்து, பெற்றோர்களின் வெறுப்புக்கும் எதிர்ப்புக்கும் உள்ளாகி, மணம் புரிந்து கொள்கிறான். இருவரும் சந்தோஷமாக வாழ்க்கை நடத்துகிறார்கள். ஆனால், அவர்கள் பகுதி சிங்களவர்களால் தாக்கப்பட்டு, அவர்களும் மற்றும் அனைவரும் வீடிழந்து, பொருள் இழந்து, உயிர்தப்ப ஓட நேரவும் அவனுக்கு சிங்களப் பெண்ணான தன் மனைவி பேரில் பகைமை உணர்வு உண்டாகிறது. நாடு நெடுகிலும் தமிழ் மக்கள் சிங்களவர்களின் வெறிச் செயல்களுக்கு உள்ளாகித் தவிப்பதை அறிய அறிய சிங்காரம் தன் மனைவி மீதான பகைமை உணர்வை வளர்க்கிறான். ஆயினும் அவன் உள்ளத்தில் காதல் நினைவுகளும், தாம்பத்திய உறவின் சந்தோஷ அனுபவங்களும் உளைச்சல் ஏற்படுத்தியவாறு இருக்கின்றன.

சிங்காரத்தின் மன உளைச்சல்களையும் உணர்வுப் போராட்டங்களையும் இந்த நாவல் நன்கு சித்தரிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலினி சிங்களத்தி என்ற காரணத்திற்காக அவளை வெறுத்து ஒதுக்கி, அவளிடமிருந்து பிரிய விரும்புகிற சிங்காரத்துக்கு பிச்சைக் கிழவனும், எழுத்தாளர் பாலாவும் தெளிவு ஏற்படுத்த முயல்கிறார்கள். அவர்கள் முயற்சி பலனளிக்கவில்லை. ஆனால்,

ஒரு சிங்களத் தொழிலாளி தமிழ்ப் பெண் ஒருத்தியை மணம் புரிந்து வாழ்ந்தான் என்பதனால் சிங்கள வெறியர்களால் தாக்கப்பட்டு, அகதியாகி, மனைவியிடம் பாசமும் நேசமும் குறையாது, மகிழ்ச்சியோடு இருப்பதைக் கண்டதும் சிங்காரத்தின் சிந்தனை விழிப்புற்று வேலை செய்கிறது.

'எந்தக் கலவரமும் எங்களை ஒன்றும் செய்யமுடியாது' என்று உறுதியாய் பேசிய அந்தத் தொழிலாளி ஒரு சிங்களவனா? இல்லை, ஒரு மனிதன்! அதற்கு மேல் ஒரு மாமனிதன்!

கலப்பு மணம் மட்டும் இனக்கலவரப் பிரச்சனையை தீர்த்துவிட முடியாது. அப்படி மணம் புரிந்து வாழத் துணிகிறவர்கள் எந்தக் கட்டத்திலும், எந்த நிலையிலும், உண்மையான மனிதர்களாகச் செயல்புரிய வேண்டும். அதுதான் முக்கியம். இதை மாத்தளை சோமு இந்த நாவலின் மூலம் வலியுறுத்துகிறார்.

சிங்களவர்களிலும் நல்லவர்கள் உண்டு. பாதிக்கப்பட்ட நிலையில் நாளோட்டும் தமிழர்கள் மத்தியிலும் சிறுமதியாளர்கள் உண்டு. இதுவும் இந்த நாவலில் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

அகதிகளாக வாழ நேர்ந்த நிலையிலும், அகதிகள் வாழ்கிற இடங்களில் அகதிகளுக்கு உதவப்படுகிற உடைகளிலும் உணவுப் பொருள்களிலும் திருட்டுவேலை பண்ணுகிறவர்களும் இருக்கிறார்கள். ஒரு இனத்தைச் சேர்ந்தவர்களே – ஒரு சிறு சமூகத்திற்குள்ளேயே இன்னொரு பகுதியாரைப் பற்றிக் கேவலமாகக் கருதுவோரும் – தங்களை உயர்ந்தவர்களாக மதித்துக் கொண்டு, மற்றவர்களை இழிவாக எண்ணியும் பேசியும் அவமதிக்கிற போக்கும் காணப்படுகிறது. அகதியாக வந்து அந்தஸ்து தேடுகிறவர்களின் மனப்பண்பை – 'பெரிய மனுசங்களா இருக்கிறவர்களுக்கு சின்ன இதயம்' இருப்பதை – இந்த நாவல் யதார்த்தமாக எடுத்துக் காட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி பலவிதத்திலும் சிறப்பாக அமைந்துள்ள ஒரு நாவலைப் படைத்திருப்பதற்காக மாத்தளை சோமு பாராட்டுதலுக்கு உரியவராகிறார்.

ஏற்கனவே அவர் எழுதியுள்ள 'அந்த உலகத்தில் இந்த மனிதர்கள்' என்ற தனித்தன்மையுள்ள நாவல் நல்ல வரவேற்பையும் பாராட்டுதல்களையும் பெற்றிருக்கிறது. அது ஸ்ரீலங்கா சாகித்திய விருதினையும் பெற்றுள்ளது என்பது மகிழ்ச்சிகரமான விஷயம்.

'எல்லை தாண்டா அகதிகள்' எனும் இந்தப் படைப்பும் நல்ல வரவேற்பையும் பாராட்டுக்களையும் பெறும் என நம்புகிறேன். ஆசிரியருக்கு என் வாழ்த்துக்கள்.

10, வள்ளலார் ஃபிளாட்ஸ்,
புதுத்தெரு, லாயிட்ஸ் ரோடு,
சென்னை – 600 005.

வல்லிக்கண்ணன்

10537.

பொது நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்க்குரல் வெளியீடு



இனத்துவத்தின் உணர்வேயில்லாது போகுமளவுக்கு ஒடுக்கப்பட்டு வாழ்ந்த மக்கள் இனத்துவத்தின் பேராலும் ஒடுக்கப்படும் பொழுது, அவர்கள் செயல்முறைகளிலும், சிந்தனையோட்டத்திலும் ஏற்படும் "உணர்வு" மாற்றங்கள் நாவலில் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளன. அந்த அளவில் இந்த நாவல் மிக முக்கியமான ஒரு சமூக வரலாற்று ஆவணமாகியுள்ளது.

– கார்த்திகேசு சிவத்தம்பி
இலங்கை.

மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் எப்போதும் அகதிகளாகவே இருந்திருப்பதை மாத்தளை சோமுவின் 'எல்லை தாண்டா அகதிகள்' என்ற இந்த நாவல் உணர்த்துகிறது.

கலப்பு மணம் மட்டும் இனக்கலவரப் பிரச்சனையை தீர்த்துவிட முடியாது. அப்படி மணம் புரிந்து வாழத் துணிகிறவர்கள் எந்தக் கட்டத்திலும், எந்த நிலையிலும், உண்மையான மனிதர்களாகச் செயல்புரிய வேண்டும். அதுதான் முக்கியம். இதை மாத்தளை சோமு இந்த நாவலின் மூலம் வலியுறுத்துகிறார்.

அகதியாக வந்து அந்தஸ்து தேடுகிறவர்களின் மனப்பண்பை – 'பெரிய மனுசங்களா இருக்கிறவர்களுக்கு சின்ன இதயம்' இருப்பதை – இந்த நாவல் யதார்த்தமாக எடுத்துக் காட்டுகிறது.

– வல்லிக்கண்ணன்
தமிழ்நாடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org